
என்னுயிர்
நின்னதன்றோ!
உமா பாலகுமார்

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : என்னுயிர் நின்னதன்றோ! |
| ஆசிரியர் | : உமா பாலகுமார் |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 2007 |
| மொழி | : தமிழ் |
| தாளின் தன்மை | : 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 240 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருண் பதிப்பகம்<br>107/8, கொடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.75.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர்<br>சென்னை-18. ☎:94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்<br>சென்னை-14. ☎:28480166 |


# என்னுயிர் நின்னதன்றோ!

# என்னுயிர் நின்னதன்றோ!

## 1

வானில், கை தேர்ந்த ஓவியனின் தூரிகையில் வரையப்பட்ட தங்க ஓவியமாய், முழு நிலவு ஒரு இனிய வாத்சல்யத்துடன் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அதன் பொற் கிரணங்கள் தென்னங் கீற்றுகளின் மேல் மஞ்சள் வர்ணத்தை கசியச் செய்திருக்க, பொன்னிற உலகம் நிச்சலனமாய் உறங்க ஆரம்பித்திருந்த நேரம்!

அந்த நிசப்தத்தைக் கலைத்தபடி, ஒரு உலோகப் பறவை பெரிதான தன் சிறகுகளை விரித்து உரத்த சப்தத்துடன் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

விமானத்திலிருந்து இறங்கியதும் இமிக்ரேஷன் செக் முடிந்து தன்னுடைய பொருட்களை ட்ராலியில் வைத்துத் தள்ளியபடி வந்த சைந்தவிக்குள், பெரும் ஆர்வமும் எதிர்பார்ப்பும் கை கோர்த்திருந்தன.

கிட்டத்தட்ட மூன்று வருடங்களாகப் போகிறது... அவள் தன் உறவுகளைப் பிரிந்து வந்து..!

தன் சொந்த பூமிக்கு வந்திருக்கிறோமென்ற உணர்வே, நெகிழ்ச்சியையும் நிம்மதியையும் தந்தன.

அவளுடைய தந்தை கோபால் இறந்த பிறகும், மனம் தளராமல், கல்லூரியில் புரபசராய்ப் பணியாற்றியபடி, தன்னை உயிராய் வளர்த்த தாய் மல்லிகாவின் நினைவில் மனம் கசிந்து போனது.

தன் தாயின் முகத்தில் நிரந்தரமாய் இடம் பிடித்திருக்கும் அமைதியையும், புன்னகையையும், கனிவையும் வேறு யாரிடமும் அவள் கண்டதில்லை.

அப்படி உயிராய் வளர்த்த தன் தாயை மூன்று வருடத்துக்கு முன்பு பிரியும்போதே தன் உயிரில் பாதியைப் பிரிவது போல் தான் உணர்ந்தாள் அவள்.

ஆனால் மனதில் வேர் விட்டிருந்த ஒரு வைராக்கியம், அவளை வெளிநாட்டில் வேலை கிடைத்ததும் உடனே ஏற்றுக் கொள்ளச் செய்திருந்தது.

இன்று, தன் அம்மாவையும், அன்பான உறவுகளையும் பார்க்கப் போகின்றோம் என்ற நினைவே பேரின்பமாய்!

இத்தனை நாட்கள் மனதிற்குள் அடக்கி வைத்திருந்த பாச வெள்ளம், வேகமாய் கரை உடைக்க ஆரம்பித்தது.

"சவி" என்றபடி ஆவலுடன் ஓடி வந்து அணைத்துக் கொண்ட மல்லிகாவின் விழிகளில், ஆனந்தம் கண்ணீராய் சரம் கோர்த்தது.

அவரை பாசத்துடன் அணைத்தவள், "எப்படிம்மா இருக்கீங்க?" தவிப்புடன் கேட்டாள்.



"நான் நல்லாருக்கேன்... நீ எப்படி இருக்கே? ஏன்டா இப்படி இளைச்சிட்டே...?" வாஞ்சையுடன் அவள் தோளை வருடியபடி கேட்டார்.

"அம்மா!... நான் அப்படியேதான் இருக்கேன்... நீங்க தான் ரொம்ப 'சிலிம்' ஆயிட்டீங்க..!"

"ஏய்... என்ன? காக்கைக் குஞ்சுக்கு தன் அம்மா பொன் காக்காவா?" மெலிதாக நீர்த்திரையிட்ட விழிகளுடன் கிண்டல் செய்தார் மல்லிகா.

"அம்மா... பழமொழி எல்லாம் இப்படி மாத்தாதீங்க... நீங்க தமிழ் புரபசர்ங்கிறதை நான் ஒத்துக்கிறேன்" குறும்புடன் கூறினாள் அவள்.

"அதை விடு... இனிமே என்கூடத் தானே இருப்பே? என்னை விட்டுட்டு எங்கேயும் போகக் கூடாது... ஆமாம் சொல்லிட்டேன்..."

சலுகையுடன் கூறிவிட்டு, அவளை அணைத்தபடி காருக்கு அழைத்து வந்தார் மல்லிகா.

"அம்மா! பாட்டி, மாமா எல்லாரும் எப்படி இருக்காங்க?"

"அங்கே உன் பாட்டி திருவிழாவுக்கு நீ வருவேன்னு எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டுக் காத்திட்டிருக்கிறதா போன் பண்ணினாங்க... உன்னைப் பாக்கணும்னு எல்லாரும் ஏங்கிட்டிருக்காங்க.

"நாளைக்கே நாம கிளம்பறோம்... ஒரு மாசம் அங்கதான் தங்கறோம்.. உனக்குதான் உன் பாட்டி ஊர் ரொம்பப் பிடிச்ச இடமாச்சே..."

ஒரு கணம் தன் கண்களை இறுக மூடித் திறந்த சைந்தவிக்குள், மெலிதாக பழைய ஞாபகங்கள் கரை

உடைக்க முயல, அவசரமாய்த் தடுத்து நிகழ் காலத்திற்கு வந்தாள்.

* * *

வீட்டிற்குச் சென்ற பிறகு, அன்றிரவு முழுவதும் இருவரும் உறங்கவேயில்லை. மூன்று வருடக் கதைகளைப் பேசவே நேரம் சரியாக இருந்தது.

அதிகாலையில் தாயின் மடியில் சரிந்து உறங்க ஆரம்பித்த சைந்தவி, வெகு நேரம் கழித்தே எழுந்தாள்.

மல்லிகாவின் கைமணம் வீட்டையே நிறைத்திருந்தது.

தனிமையே பழக்கமாகி விட்டிருந்த ''டின் ஃபுட்'' கலாசாரத்திலிருந்து விடுபட்டு தாயின் கையால் நல்ல சாப்பாட்டை சுவைக்கப் போகிறோம் என்ற ஆர்வமே நல்ல பசியைத் தூண்டியது.

மெதுவாக நடந்து சென்று ''அம்மா...'' என்று வாஞ்சையுடன் அழைத்தபடி, பின்புறமிருந்து அவளை அணைத்துக் கொண்டாள்.

''நான் பிரஷ் பண்ணிட்டு வந்து உங்க சாப்பாட்டை ஃபுல்லா காலி பண்ணிடறேன் பாருங்க'' உற்சாகத்துடன் கூறிவிட்டுப் பின்புறம் சென்றாள்.

''நீயே பெரிய செஃப்! ஆயிரம் பேர் சாப்பிட மெனு போடறவ... அத மறந்துட்டியா?'' கிண்டல் செய்தார் மல்லிகா.

''என்னதான் இருந்தாலும் எங்கம்மா மாதிரி சமைக்க முடியாதே..?'' செல்லமாகக் கூறிவிட்டு தோட்டத்திற்குச் சென்றபோது, தன்னையறியாமலேயே பார்வை பக்கத்து வீட்டின் மாடிக்குச் சென்றது.



அந்த மாடியறையின் ஜன்னலருகே ஒரு சிறு பெண் குழந்தை நின்றிருந்தாள்.

அவள் நிமிர்ந்து பார்ப்பதைக் கண்டதும், ''அக்கா...'' என்று கையாட்டியபடி அழகாகச் சிரித்தாள்.

''ஹாய்... உன் பேரென்ன...?'' என்றவுடன், ''ஊஹூம்... சொல்ல மாட்டேன்'' மழலையில் கூறிவிட்டு உள்ளே ஓடிவிட்டாள்.

அந்த இடத்தின் வெற்றிடம் ஏனோ முகத்திலறைய, அந்த ஜன்னலைப் பார்க்கும்போதே ஒரு காலத்தில் தான் பரவசப்பட்ட நினைவு!

தலையைக் குலுக்கி, தன் எண்ண ஓட்டத்தைக் கலைத்தவள், மனதில் புதிதாய் குடிபுகுந்த பாரத்துடன் உள்ளே சென்றாள்.

''ஏம்மா... ராது வீட்டிலயும் காலி பண்ணிட்டுப் போயிட்டதா எழுதி இருந்தீங்க... எங்கே போனாங்க..?'' தாயிடம் கேட்டாள்.

''டெல்லிக்குன்னாங்க... அவங்க அண்ணனுக்கு மாத்தலாயிடுச்சு... ராது கல்யாணம் முடிஞ்சவுடனே போயிட்டாங்க...''

அவள் அமெரிக்காவிற்குச் சென்ற மூன்றாவது மாதம் ராதுவிற்குத் திருமணம் என்று தாய் போனில் கூறியது ஞாபகம் வந்தது.

உடனே மனம் பூகம்ப அதிர்வாய் குலுங்கிவிட, ''தெரியும்மா... அவளுக்கு என் விஷஸ் சொல்லிடுங்க'' என்று வீடு மாறுகின்ற அவசரத்தில் தான் கூறியதும் நினைவிற்கு வந்தது.

அதுவரை ஹாஸ்டலில் இருந்தவள், பிறகுதான் தன்னுடைய காலேஜ் மேட் கேதரினுடன் சேர்ந்து வீடு எடுத்துத் தங்கினாள்.

திடீரென்று கேதரினுடைய நினைவுகள் பலமாய் மனதில் மூழ்த்தன.

தன் சோகச் சுமைகளைப் பகிர்ந்து கொண்ட ஒரு நல்ல தோழியை நினைத்தபோது, நெஞ்சம் நெகிழ்ந்து போனது. அவளுக்குப் போன் செய்து பேசவேண்டும் போல் இதயத்திற்குள் ஓர் ஏக்கம் பலமாய்..!

அப்போது டெலிபோன் மணி ஒலித்தது.

வேகமாகச் சென்று எடுத்தால், பாட்டிதான் பேசினார்.

"சவிக்குட்டி... எப்படிடா இருக்கே..? இங்கே திருவிழா ஆரம்பிக்கப் போகுது... நாளைக்குக் காலையில நீ நம்ம ஊருக்கு வரப் போறதை நினைச்சா ஒரே பரபரப்பா இருக்கு... வேலையே ஓடலை..." உற்சாகத்துடன் படபடத்தார்.

"பாட்டி! அமைதியா இருங்க... காலையில நான் வந்துடறேன்.. மாமா மாமி எல்லோரும் எப்படி இருக்காங்க..?"

"நல்லாருக்காங்கடா! நாளைக்கு மாமா ஸ்டேஷனுக்கு வருவான் பாரு... உனக்காக இங்கே எல்லா ஏற்பாடும் செஞ்சிருக்கோம்... வாடா!"

பிறகு மாமா மாமியிடம் பேசிவிட்டு அம்மாவிடம் தந்தபோதுதான், தான் வாங்கி வந்த எதையுமே பிரிக்காததும், சித்தி காஞ்சனாவைப் பற்றி தான் கேட்கவே மறந்து போனதும் நினைவு வந்தது.



அவர் பேசிவிட்டு வைத்ததும், "அம்மா! சித்தி இப்ப கொடைக்கானல்லே தானே இருக்காங்க... திருவிழாவுக்கு வருவாங்களா?" என்று கேட்டாள் ஆர்வத்துடன்.

"தெரியலைடா... அவ ஊர்ப் பக்கமே வரதில்லை. கொடைக்கானல் கான்வென்ட்டுக்கு வேலைக்குப் போறப்ப வந்தவ... அப்புறம் ஒரு தடவைதான் வந்தா... ஆனா போன்லே மட்டும் வாரம் தவறாமப் பேசிடுவா...!"

"ஏம்மா! சித்திக்கு மாமா மேல இருந்த கோபம் இன்னும் தணியலையா?"

"அப்படித்தான் நினைக்கறேன்... உன் பாட்டிதான் ரொம்ப வருத்தப்படுறாங்க... வீட்டுல ஒரே வாரிசான நீயும் இப்படி எங்களை எல்லாம் பிரிஞ்சி வெளிநாட்டுக்கு வேலைக்குப் போயிட்டே.. கடைக்குட்டி... உங்க சித்தி காஞ்சனா! அவளும் வீம்பா இருக்கா... என்ன செய்யறது!" பெருமூச்சுடன் நிறுத்தினார்.

எப்போதாவது போன் செய்து தன்னுடன் பேசும் சித்தியின் நினைவு, மனதில் நிழலாடியது.

அந்தப் பாசத்தின் ஈரம், இன்னும் ஞாபக அடுக்குகளில் உலராமல் ஒட்டிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது.

முட்காடாக இருந்த மனதில், சடசடவென்று முல்லைப் பூக்கள் மடல் விரித்த உணர்வு!

பிறகு, எல்லோருக்கும் வாங்கியிருந்த பொருட்களை எல்லாம் எடுத்து அடுக்கி வைத்தவள், தன் அம்மாவிற்காக வாங்கி வந்தவற்றை அவரிடம் கொடுத்தாள்.

அப்போதுதான் கேதரினுடைய நினைவு வந்தது.

ஊருக்கு வந்தவுடன் அவளுக்குப் போன் செய்ய மறந்த மடத்தனத்தை எண்ணி தன்னையே செல்லமாகக் கடிந்தவள், உடனே போன் செய்து பேசினாள்.

தன் குடும்பத்தினரின் வற்புறுத்தலால், அமெரிக்காவில் இரண்டு வருட காண்ட்ராக்ட் முடிந்ததும், எல்லோரிடமும் விடைபெற்று அவள் புறப்பட்டாள்.

அப்போது அவள் பிரிவைத் தாங்க முடியாமல் கேதரின் அழுதது, போன நிமிடம் நடந்தாற்போல் நினைவிற்கு வந்தது.

காதலும், நட்பும் ஒரு மனிதனின் இறுதி நிமிடம் வரை மறக்க முடியாத இருவித பந்தங்கள் என்பது புரிவதாய்!

ஒரு பெருமூச்சுடன் ஊருக்குப் புறப்படத் தயாரானாள் அவள்.

## 2

அம்பாசமுத்திரத்தில், தர்மாம்பாளின் வீடு, பேத்தி சைந்தவியின் வருகையை எதிர்பார்த்து ஆவலுடன் காத்திருந்தது.

ஒரு மாதமாகப் புத்துணர்வுடன் உலா வருகிறார் தர்மாம்பாள்.

சைந்தவி அவரின் செல்லப் பேத்தி என்பது ஒரு புறமிருந்தாலும், அந்த வீட்டுக்கே ஒரே வாரிசு அவள்தான்!

மூத்தவள் மல்லிகாவிற்குக் குழந்தையாய்... அவள் ஒருத்தி மட்டுமே!



இரண்டாவது மகன் சண்முகத்திற்குக் குழந்தைகள் இல்லை... மூன்றாவது மகள் காஞ்சனா திருமணமே செய்து கொள்ளவில்லை..!

அந்தப் பழங்காலத்து வீட்டை தன் பேத்திக்காகவே வெள்ளையடித்து புதுப்பிக்க ஆரம்பித்தவர், அவள் வந்து தங்கப் போகும் அறையில் ஒரு ஏசியையும் பொருத்தி விட்டார்.

அவளுக்குத் தேவையானவற்றைப் பார்த்துப் பார்த்து வாங்கி வைத்தார் சண்முகம்.

மாமி வளர்மதிக்கும் அவள் செல்லம் என்பதால் ஆவலுடன் அவர்களை வரவேற்கத் தயாரானார் அவர்.

அம்பா சமுத்திரத்தில் இறங்கி பாட்டி வீட்டுக்குக் காரில் செல்லும்போதே, பழைய ஞாபகங்கள் சைந்தவியின் மனதை மயிலிறகாய் வருடின.

சிறு வயதில் விடுமுறையில் வரும் போதெல்லாம் மாமாவுடன் சென்று பொருநை நதிக் கரையில் மணிக் கணக்கில் விளையாடியதும்... அந்த மலைப் படிக்கட்டு களையே இலையாகப் பயன்படுத்தி மக்கள், உணவு உண்ணுவதை வியப்புடன் கவனித்ததும்... அகத்தியர் கோவிலுக்கும், அருவிக்கும் செல்வதென்றால், ஏதோ செவ்வாய் கிரகத்திற்கே போவது போன்று ஒரு உற்சாகத் துள்ளல் வந்ததும், மறக்க முடியவில்லை.

கோவில் திருவிழாவின்போது, அங்குள்ள தோழிகளுடன் ஊரையே வலம் வந்து ராட்டினம் சுற்றியதும், திருவிழா கடைகளில் தோடு, மணி, ரிப்பன், வளையல்கள் என்று வாங்கி அடுக்கியதும், நினைவுகளில் உலா வர வி யோரங்கள் கசிந்தன.

இங்கு கழித்த பால்ய நாட்களைத் திரும்பிப் பார்த்தால்... இப்போது அது மூடப்பட்ட ஒரு சொர்க்கப் பாதையாய்..!

நெற்றியைத் தீண்டி, பட்பட்டென்று உடையும் முடக்கற்றான் காய்களும்... புங்க இலை நாயனங்களி லிருந்து புறப்படும் மெல்லிய இசையும்... மார்கழிப் பனி யில் நனைந்து சிரிக்கும் பூசணிப் பூக்களும்... மறக்க முடியவில்லை.

மனம் இளமைக் காலத்தை எண்ணி ஏங்கியது.

* * *

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டவுடன், தன் வயதை மறந்து ஓடிச் சென்ற தர்மாம்பாள், பேத்தியை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார்.

"ஏன்டா இவ்வளவு இளைச்சிப் போயிட்டே...? முடி யெல்லாம் வெட்டி சின்னதாக்கி... அமெரிக்காவுக்கு ஏத்த மாதிரி மாறிட்டியா..?" குறையாகக் கேட்டார்.

"பாட்டி... அவ்வளவு நீளமான முடியெல்லாம் அங்கே மெயின்டெய்ன் பண்ண முடியாது... போனி டெயில் போட இதுதான் வசதி... ஆனா, நம்ம பண்பாடு, கலாச்சாரம் இதிலெல்லாம் உங்க பேத்தி எப்பவுமே மாற மாட்டா! ஓகேயா பாட்டி?" என்றபடி அவர் கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டாள் சைந்தவி.

ஆவலோடு ஓடிவந்து அவள் கையைப் பிடித்துக் கொண்ட வளர்மதியும், சவியை பெருமையுடன் ரசித்தார்.

அப்போது சண்முகமும் வந்துவிட, "ஏன் மாமா... சித்தி வரலையா?" அவள் கேட்க, உடனே அவருடைய முகம் தர்ம சங்கடத்துடன் இறுகியது.



பிறகு, அனைவருக்கும் பழைய கதைகளைப் பேசி முடிக்கவே நேரம் போதவில்லை.

தான் வாங்கி வந்த பொருட்களை எல்லாம் சவி அவர் களிடம் கொடுத்தபோது, எழுந்து உள்ளே சென்ற வளர் மதி அழகிய சில்க் காட்டன் புடவைகளுடன் வந்தார்.

"இதுல உனக்கு எது பிடிச்சிருக்கோ எடுத்துக்க சவி... மீதி இருக்கறதை நானும் அம்மாவும் எடுத்துக்கறோம்."

தனக்கு மிகவும் பிடித்த பிங்க் நிறத்தில் இருந்த புடவையை எடுத்தவள், "இது, தான் எனக்குப் பிடிச் சிருக்கு மாமி! தேங்க்ஸ்.. எனக்குப் பிடிச்ச கலரை ஞாபகம் வச்சிருந்து செலக்ட் பண்ணியிருக்கீங்க!" பிரியமாகக் கூறினாள்.

"நாளைக்குக் கோவில் திருவிழாவுக்கு இதையே கட்டிக்கடா... நம்ம டெய்லர் கிட்ட குடுத்தா ராத்திரியே பிளவுஸ் தச்சுக் குடுத்துடுவாரு!" பாசத்துடன் கூறினார் பாட்டி.

அப்போது வாசலில் யாரோ வருகின்ற சப்தம் கேட்கத் திரும்பியபோது, அங்கு ஜெகதீசனும் வள்ளியும் வந்து கொண்டிருந்தனர்.

சட்டென்று, சபரீஷின் ஞாபகம் பெரும் தூறலாய் சைந்தவியின் மனதில் விழுந்தது... இதயத்தை சாரலாய் வருட ஆரம்பித்தது!

"வாங்க மாமி" என்று எழுந்தபோது, ஓடி வந்து மல்லி காவை அணைத்துக் கொண்டார் வள்ளி.

இருவரும் பால்ய காலத்திலிருந்தே தோழிகள்!

மல்லிகா திருமணம் முடிந்து சென்னைக்குச் சென்று விட, வள்ளி தன் மாமாவையே மணந்து கொண்டதால், அதே ஊரிலிருந்தாள்.

அதே தெருவில் இருப்பதால் மல்லிகா விடுமுறைக்கு வரும்போதெல்லாம் இருவரும் சந்தித்து பழைய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வார்கள்.

வளர்மதி உள்ளே சென்று எல்லோருக்கும் டிபன் எடுத்து வந்து தந்தாள்.

"என்னம்மா சவி? எங்களை எல்லாம் மறந்துட்டியா?" என்று விசாரித்தார் ஜெகதீசன்.

"எப்படி மாமா உங்களை மறக்க முடியும்..! உங்க எல்லாரையும் அடிக்கடி நினைச்சிப்பேன்."

சிறு முறுவலுடன் கூறிய சைந்தவியின் மனதில், மறக்க முடியாமல் சபரீஷின் நினைவுகள் மையம் கொள்ள ஆரம்பித்தன.

பிறகு, வள்ளி அமெரிக்காவைப் பற்றியும் விசாரிக்க ஆவலுடன் பேசிக் கொண்டிருந்தாள் அவள்!

நீண்ட நேரம் கழித்து அவர்கள் கிளம்பிய மறு நிமிடமே அவளுக்கு தனிமை மிகவும் தேவையாய்!

பெரியவர்கள் பேசிக் கொண்டிருக்கட்டும் என்று பின்புறத் தோட்டத்திற்குச் சென்றபோது, மூச்சு முட்டுவதைப் போல் அவன் ஞாபகங்கள் மனதிற்குள் நிரம்பின.

அவனைப் பார்த்த முதல் நிமிஷம்... ஒரு தேவ நிமிஷமாய்!

நெஞ்சத்துக்குள் ஊடுருவி மெல்லக் கொல்லும் நேசமாய்... காதல் அவளை ஆக்ரமித்தது!



தனக்கெனவே பிறந்தவனை... ஒரு சோகத் தருணத்தில் தான் பிரிந்து சென்ற நிமிடம்... நேற்று நடந்தது போல்...!

ஓசையின்றி, மனதிற்குள் வானவில்லின் வர்ணங்களை வரைய ஆரம்பித்தது... இன்னும் வாடாதிருந்த காதல்!

சின்னக் குழந்தையொன்று, தன் கைக்குள் ஈரச் சதசதப்புடன் பத்திரமாய் பதுக்கி வைத்திருக்கும் மிட்டாய் போல், மனம் அவன் நினைவுகளை ஒளித்து வைத்திருப்பது புரிந்தது.

## 3

முதன் முதலில் அவனைப் பார்த்த நினைவு, அலையாய் பரவியது.

மென் சோகத்துடன் மனதில் புகுந்தன, பழைய ஞாபகங்கள்!

அப்போது, சைந்தவிக்கு பத்தொன்பது வயதிருக்கும்... அவள், சென்னையில் கேட்டரிங் டெக்னாலஜி படித்துக் கொண்டிருந்தாள்.

எந்த நேரமும் இதழ்களிலிருந்து நீங்காத புன்னகையும், குறும்பும் துடுக்குத் தனமும் நிறைந்தவள் அவள்.

சிறு விஷயங்களிலெல்லாம் கூட வாழ்க்கையின் சுவாரசியம் நிறைந்திருப்பதாகக் கூறி எல்லாவற்றையும் ரசனையுடன் ஏற்றுக் கொள்பவள்.

அவளும், பக்கத்து வீட்டு ராதாவும் இணை பிரியாத தோழிகள்!

ராது வேறு ரகம்... மிகவும் அமைதியான சென்சிடிவான பெண்...!

ஒரு நாள் அவளைக் கல்லூரிக்கு அழைத்துச் செல்ல, அவளுடைய வீட்டிற்குச் சென்றிருந்தபோதுதான், சபரீஷை சந்தித்தாள் சவி.

எப்போதும் போல் இயல்பாக "ராது..." என்று அழைத்த படி உள்ளே சென்றபோது, ஹாலில் அமர்ந்திருந்தான் அந்தப் புதிய இளைஞன்!

அவளைக் கண்டதும் அவன் பார்வை கூர்மையாக உரச, சட்டென்று ஒரு விதக் கூச்சம் வந்து அவளைத் தழுவியது.

"சாரி... நான்... ராதாவோட ஃப்ரெண்ட்..." தடுமாறியவள் சமாளிக்கும் முன்பே ராதாவின் அண்ணன் பாலாஜி அங்கு வந்து விட்டான்.

"வாம்மா சவி... ராதுக்கு உடம்பு சரியில்லை... அதான் படுத்திருக்கா... இன்னிக்கு காலேஜுக்கு மட்டம்தான் போலிருக்கு..." என்றான்.

"சரிண்ணா...! நான் அவளைப் போய்ப் பாக்கறேன்" என்று உள்ளே சென்றபோது ராது ஒய்ந்து போய் படுத்திருந்தாள்.

"சாரிடி... இன்னிக்கு டெஸ்ட் வேற இருக்கு... என்னால வர முடியாது... நீ எப்படி தனியா போவே..?" தவிப்புடன் கேட்டாள்.

"அதனால என்னடி? நீ உடம்பைப் பாத்துக்க... நான் போயிட்டு வரேன்..." என்று கிளம்பியவளைத் தடுத்தான் பாலாஜி.



"ஒரு நிமிஷம் சவி... இவன் என் ஃப்ரெண்ட் சபரீஷ்... இவனும் சிவில் இஞ்சினியர்தான்... பெரிய ஃப்ளாட் பிரமோட்டர். இங்கே குடியிருக்க ஒரு வீடு தேடிட்டிருக்கான்" என்று அறிமுகப்படுத்தினான்.

"இவரே ஒரு ஃப்ளாட் ப்ரமோட்டர்கறீங்க..? இவருக்கு வீடு வேணுமா? ஏன்... தான் கட்டின வீட்டிலக் குடியிருக்க அவருக்கே பயமா?" சட்டென்று கேலியாகக் கேட்டு விட்டாள் சவி.

உடனே முகம் இறுகிவிட, விறைப்புடன் நிமிர்ந்தான் அவன்.

"ஒரு நிமிஷம்! உங்க காலேஜ் பக்கத்திலிருக்கிற புது பில்டிங்கூட நாங்க கன்ஸ்ட்ரக்ட் பண்ணினதுதான்... அங்கே ஒரு சாஃப்ட்வேர் கம்பெனி நடக்குது... அதுக்காக அங்கே வந்து நான் குடியிருக்க முடியுமா?.. ம்..?" ஏளனத்துடன் வந்தது அவன் குரல்.

தன் அதிகப்பிரசங்கித்தனம் புரிந்து அமைதியானவள், அவனுக்கு பதிலொன்றும் கூறாமல் "நான் வரேண்ணா! டைம் ஆயிடுச்சி..." என்று கிளம்பினாள்.

"இரும்மா... காலேஜுக்கு லேட்டாயிடுச்சே... தனியா எப்படிப் போவே... நம்ம சபரி காரிலதான் வந்திருக்கான்.. இப்போ, உன் காலேஜுக்குப் பக்கத்துல இருக்கிற அந்த சாஃப்ட்வேர் கம்பெனிக்குத்தான் போறான்... நீயும் அவனோடவே போயிடும்மா!"

"இல்லைண்ணா.... வேணாம்..." பதட்டத்துடன் கூறியவளை ஒரு நொடி சோம்பலான விழிகளால் அளவெடுத்தான் சபரீஷ்.

பிறகு "நான் என்ன... உன்னைக் கடிச்சித் தின்னுடுவேன்னு பயமா! ம்... அவ்வளவு பயம் இருந்தா வேணாம்... இல்லை... இவ்வளவு பர்சனாலிட்டியா இருக்கானே... நம்மளை அறியாம இவன்கிட்ட மயங்கிடுவோமோன்னு தயக்கமா?'' உதடுகளை கேலியாகச் சுழித்தபடிக் கேட்டாள்.

சட்டென்று அவனுக்குள் கோபம் ஊற்றெடுத்தது.

''ம்... எனக்கென்ன பயம்? நான் அவரோடவே போறேன் பாலுண்ணா!'' என்றபடி அவனைப் பின் தொடர்ந்தாள் சவி.

காரில் பின்புறம் ஏறியவளையே வித்தியாசமாகப் பார்த்தவன், பிறகு முன் கதவைத் திறந்து அமர்ந்து காரைச் செலுத்த ஆரம்பித்தான்.

''ம்... பாக்கறவங்களுக்கு என்னமோ நீ இந்தக் காரோட ஓனர் மாதிரியும் என்னைப் பார்த்தா ஏதோ ஒரு டிரைவர் மாதிரியும் தெரியப் போகுது'' குறும்புடன் வந்தது அவன் குரல்.

அவனுக்குப் பதில் கூற விருப்பமின்றி, ஜன்னல் வழியே வெளியே பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

பிறகும் மௌனமாகவே வந்தவள், கல்லூரிக்கு எதிரில் காரை நிறுத்தியவுடன், இறங்கி ''தேங்க்ஸ்'' என்று கூறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் உள்ளே சென்றாள்.

விழிகள் அவள் செல்லும் திசையில் தொடர, அவன் இதழோரம் குறுகுறுப்பாய் ஒரு புன்னகை வந்து, ஏனோ இதமாய் ஒட்டிக் கொண்டது.

* * *



மறுநாள் ராதாவிடம் பேசியபடி பஸ் ஸ்டாப்பிற்கு வந்தபோதுதான், அவனை மீண்டும் சந்தித்தாள் அவள்.

அவர்களருகே சபரீஷ் காரை நிறுத்தியவுடன் ராதா புன்னகையுடன் அருகில் செல்ல, ''கமான்... கெட் இன்'' என்றான் சபரீஷ். ஒரு வசீகரப் புன்னகையுடன்!

உடனே ஆவலுடன் திரும்பி தன்னைப் பார்த்த ராதுவிடம், ''நீ வேணா போ... நான் பஸ்ஸுல போய்க்கறேன்'' தீர்மானமாகக் கூறினாள் சவி.

உடனே ராதுவின் முகம் சுருங்கியது.

''சாரி... நாங்க பஸ்ஸிலேயே போயிடுறோம்...'' என்றாள்.

''உங்களை, நான் என்ன தூக்கியா சுமக்கப் போறேன்... கார் சும்மா தானே போகுது... அதான் கூப்பிட்டேன்'' என்றான் சபரீஷ் சைந்தவியையே ஊடுருவியபடி!

அவனிடம் திரும்பியவள், ''நாங்க எப்படியாவது பஸ்ஸிலே ஏறிப் போயிடுவோம்... ஆனா பாவம். அதோ நிக்கறாங்க பாருங்க, அந்தத் தாத்தாவும் பாட்டியும்.. அவங்களை மாதிரி கஷ்டப்படறவங்களை ஏத்திட்டுப் போனா உதவி செஞ்ச மாதிரியும் இருக்கும்.. ஒரு மனிதாபிமானமாவும் இருக்கும்... அதைச் செய்யலாமே!'' சுழித்த உதடுகளுடன் கூர்மையாகக் கூறினாள்.

அவள் எதிர்பாராத விதமாக சட்டென்று காரிலிருந்து இறங்கினான் அவன்.

''ஓயெஸ்... எப்பவுமே எனக்கு சோஷியல் சர்வீஸ்னா ரொம்பப் பிடிக்கும்... நீங்க சொன்ன மாதிரியே செஞ்சிட்டாப் போச்சு!'' என்றபடி அவர்களிடம் சென்று பேசி, தன் காரில் ஏற்றிக் கொண்டு போய் விட்டான்.

அவளுக்குள் தாங்க முடியாத ஆச்சர்யம்!

தான் கூறியதைக் கேட்டதும் வழிசலாக ஏதாவது கூறிவிட்டு விலகிச் சென்று விடுவானென்று பார்த்தால், கம்பீரமான ஒரு வித நிமிர்வுடன் அவள் கூறியதை ஏற்று அவன் நடந்து கொண்ட விதம் அவளை மிகவும் பாதிப்பதாய்!

"என்டி இப்படி பண்ணினே...? அண்ணாவோட ஃப்ரண்ட்தானே! பேசாம ஏறிப் போயிருந்திருக்கலாம்... இப்பப் பாரு இந்த வேகாத வெயில்லே பஸ்ஸுக்குக் காத்திட்டிருக்க வேண்டியிருக்கு!"

"ஏய்... நீ சும்மா இரு! இவங்களுக்கெல்லாம் இடம் கொடுத்தா அவ்வளவுதான்... அப்புறம் இதே பழக்கமா வெச்சிப்பாங்க... முதல்லயே கட் பண்ணிடணும்." என்றாலும் அவனை நிஜமாகவே மனதிலிருந்து அவளால் ஒதுக்க முடியவில்லை.

திடீரென்று, எதிரே கூட்டமாய் ஒரு ஊர்வலம் வர ஆரம்பித்தது.

நம்மைக் காத்தருளும் கடவுளையே பாதுகாக்க, போலீஸ் பந்தோபஸ்துடன் சென்று கொண்டிருந்த தேர் ஊர்வலம், சவியின் மனதில் சிரிப்பை வரவழைத்தது.

"என்னடி நீயா சிரிச்சிக்கறே?" கேட்ட ராதுவிடம் தன் மனதில் தோன்றியதை அவள் கூற, ராது முறைத்தாள்.

"உன்னைத் திருத்தவே முடியாதுடி" சலிப்புடன் கூறியபடி அவள் திரும்பிக் கொள்ள, திடீரென்று வானம் இருட்ட ஆரம்பித்தது.

வானில் நிறம் மாறிய மேகத்தைக் கண்டவுடன், பாதையோரக் கடைகள் இடம் பெயர ஆரம்பித்தன.



சில நிமிடங்களுக்கு முன்பு நெருப்பாய் காய்ந்த சூரியன், திடீரென்று கார்மேகக் கூட்டத்துக்குள் மறைய, குளிர்ந்த காற்றும், மண் வாசனையும் சுகமாய் நாசியை வருடின.

நிமிடத்துக்கொருமுறை நிறம் மாறும் வானத்தையே அண்ணாந்து பார்த்து ரசித்தபடி, மெலிதாய் தூற ஆரம்பித்த மழைத் துளிகளை உள்ளங்கைகளில் உற்சாகத்துடன் ஏந்த ஆரம்பித்தாள் சைந்தவி!

# 4

அன்று மாலை, அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தான் பாலாஜி.

சவியின் பக்கத்து வீட்டுக்காரர் மனைவி மல்லிகாவின் தோழி என்பதால் அந்த வீட்டு மாடி போர்ஷனை தன் நண்பனுக்குப் பேசி முடிக்க ஏற்பாடு செய்ய வந்திருப்பதாகக் கூறினான்.

நாளைக்குத் தன் நண்பன் சபரீஷை அழைத்து வருவதாகவும், வீட்டைப் பேசி முடித்து வைக்கும்படியும் கூறிவிட்டுக் கிளம்பினான்.

அவன் சென்ற பிறகு, "போச்சுடா... வேலியில போற ஓணானை அப்படின்னு ஏதோ பழமொழி சொல்வாங்க... அம்மா இதிலெல்லாம் நீங்க தலையிடாதீங்க... எனக்கென்னவோ அந்த சபரீஷைப் பார்த்தா ரொம்பத் திமிர் பிடிச்ச ஆளாத் தெரியுது" யோசனையுடன் கூறினாள் அவள்.

"சவி... நமக்கு முன்னே பின்னே தெரியாதவங்களைப் பத்தி அப்படி எல்லாம் பேசக் கூடாது..." கண்டித்தார் மல்லிகா.

"ப்ச்.. போங்கம்மா.. நான் சொன்னா எதையும் கேக்க மாட்டீங்க... ஏன்... அந்த சபரீஷ் ஏதாவது ஹோட்டல்லே தங்க வேண்டியது தானே?"

"அதெல்லாம் நமக்கு எதுக்கு... அது அவங்க இஷ்டம்... அந்தப் பையன் ஹாஸ்டல்லேயே வளர்ந்தவராம்... அம்மா அப்பா ஊரிலே இருக்காங்களாம்... பெரிய விவசாயக் குடும்பமாம்..!

"ஒரு வீடு எடுத்துத் தங்கி சமையலுக்கும் ஆள் போட்டுக்கலாம்னு முடிவெடுத்துருக்காராம்... ஏதோ நம்மால முடிஞ்ச உதவி... அதுக்கு ஏன் நீ இவ்வளவு கோபப் படறே...?"

"இல்லை நாம என்ன வீடு புரோக்கரான்னு யோசிச்சேன்... அதான்."

அவள் கூறி முடிக்கும் முன்பே, "ஒரு வீடு பாத்து முடிச்சிக் குடுக்கனும்னா வீடு புரோக்கராதான் இருக்கனும்கிற அவசியமில்லை... நல்ல ஃப்ரெண்டாக் கூட இருக்கலாம்..." இடைமறித்தது ஒரு கம்பீரக் குரல்!

இருவரும் திரும்பியபோது, அங்கு சபரீஷ் நின்றிருந்தான்.

அருகில் நின்றிருந்த பாலாஜி, தர்ம சங்கடத்துடன் வேகமாக முன்னால் வந்தான்.

"இவன்தான் ஆன்ட்டி சபரீஷ்... என் ஃபிரெண்ட்... இன்னிக்கே வந்துட்டான்" என்று அவரிடம் அறிமுகப் படுத்தினான்.



"ஆன்ட்டி... உங்களை நான் எங்கேயோ பாத்திருக்கேன்... ம்... நீங்க அம்பா சமுத்திரமா?" சபரீஷ் ஆர்வத்துடன் கேட்டான்.

"ஆமாம்... நீங்களும் அந்த ஊரா... என்னை எப்படித் தெரியும்..." யோசனையுடன் கேட்டார் மல்லிகா.

"நான்... எங்கப்பா பேரு ஜகதீசன்... அம்மா வள்ளி... அவங்களோட, ஒரு போட்டோவுல நீங்களும் இருந்ததா ஞாபகம்!"

"நீ... வள்ளியோட பையனா? சின்ன வயசுலப் பாத்தது... ரொம்ப ரொம்ப சந்தோஷமா இருக்கு... நானும் உங்கம்மாவும் ரொம்ப க்ளோஸ் ப்ரெண்ட்ஸ்... நீ ஹாஸ்டல்லேயே இருந்ததாலே, ஊருக்கு வரப்பகூட நான் உன்னைப் பாத்ததில்லை."

தங்கள் ஊரிலிருந்து வந்திருக்கும் ஒருவனை... அதுவும் தன் தோழியின் மகனைக் கண்டதும், மிகவும் நெகிழ்ந்து போய்ப் பேசிக் கொண்டிருந்தார் மல்லிகா.

அதைக் கண்டு, தோளை அலட்சியமாகக் குலுக்கிய படி எழுந்து சென்ற சவியையே யோசனையுடன் தொடர்ந்தன, சபரீஷின் விழிகள்!

* * *

பிறகு, அவன் அவர்களின் பக்கத்து வீட்டிற்கே குடி வந்துவிட, சவி அவனை அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகள் ஏற்பட ஆரம்பித்தன.

கல்லூரி செல்லும்போதும், ராதுவின் வீட்டிலும், அடிக்கடி தென்பட ஆரம்பித்தான் அவன்.

நாட்கள் மாதங்களாகி விரைய ஒரு நாள் ராதுவுடன் படித்துக் கொண்டிருந்தாள் சவி.

அப்போது அங்கு வந்த பாலாஜி மிகவும் சோர்வாகத் தெரிந்தான்.

"என்னணா, ரொம்ப டல்லாத் தெரியறே?"

ராது விசாரித்தபோது "வழியில ஒரு ஆக்சிடெண்ட்மா" என்றான் அவன் மெல்லிய குரலில்!

"யாருக்குண்ணா!" பதறி எழுந்தவர்களை அமைதிப் படுத்தியவன், "யாரோ ஒரு லாரிக்காரன் ஒரு ஆளை அடிச்சிட்டுப் போயிட்டான்... ரோட்டில எல்லாரும் வேடிக்கை பாத்துட்டிருந்தாங்க.. எனக்கு என்ன பண்றதுன்னே புரியலை... கண்ணுக்கு முன்னாடி நடந்த அந்த கோரத்தைப் பார்த்து அதிர்ச்சியா நின்னுட்டேன்...

"அப்பதான் நம்ம சபரி வந்தான்... உடனே அவரைத் தன் கார்லே தூக்கிப் போட்டுட்டு என்னையும் ஏத்திக்கிட்டு ஹாஸ்பிடல்லே போய் அட்மிட் பண்ணினான். அப்புறம் அவருக்கு உடனே ரத்தம் தேவையா இருந்தது... அதிர்ஷ்ட வசமா எங்க ரெண்டு பேரு ரத்தமுமே அந்த பேஷண்ட்டோட மாட்ச் ஆச்சு! ரெண்டு பேருமே குடுத்தோம்.

"அவன் எப்பவுமே இப்படித்தான்! யாராவது கஷ்டப் பட்டா அவனால தாங்க முடியாது. டயர்டா இருக்கு! ஏதாவது சாப்பிடக் குடு ராது..." என்று கூறிவிட்டு உள்ளே சென்றான் அவன்.

மறுகணமே, சபரீஷின் முகம் அவள் கண் முன் வந்தது.

அன்று அவள் கிண்டல் செய்தபோதும், காரில் அந்த வயதான தம்பதியினரை வேறு வழியின்றி ஏற்றிச்



சென்றபோதும், அவனைப் பற்றி ஏளனமாக எண்ணிய மனது, இன்று அவனுடைய மனிதாபிமானத்தால் நெகிழ்ந்து போனது.

"என்னடி... இப்ப என்ன சொல்றே சபரீஷைப் பத்தி...! அன்னிக்கு நான் சொன்னவுடனேயே அண்ணா சொன்னாரு... அவருக்கு மத்தவங்களுக்கு உதவுற குணம் அதிகம்னு... மனிதாபிமானம், கருணைங்கிற விஷயத்துக்கு எல்லாம் அவர்கிட்டதான் அர்த்தம் தெரிஞ்சுக்கணும்னு! ஹி இஸ் எ ஹெவன் லைக் பர்ஸன் தெரியுமா? உன் கிண்டல் கேலியெல்லாம் இனிமே நிறுத்திக்கோ!"

"சரிம்மா மகாராணி! நீங்க போய் பாலுண்ணாவைக் கவனிங்க... நான் படிக்கிறேன்" என்றபடி யோசனையிலாழ்ந்தாள் அவள்.

தான் அவனைப் பற்றி கணித்தது தவறோ என்று முதன் முதலாகத் தோன்ற ஆரம்பித்தது.

* * *

பிறகு வந்த நாட்களில், அவன் இரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவனாக ஆகிப் போனான்.

ஆனால், அவனுக்கும் தனக்குமிடையே ஏதோ ஒரு பனிப் போரை... மெல்லிய இரும்புத் திரையை உணர்ந்தாள் சவி.

அவன் மூலமாக அடிக்கடி தன் தோழியிடம் பேச ஆரம்பித்தார் மல்லிகா.

ஞாயிறு மதியம், அவள் வீட்டிலிருந்தோ, அல்லது ராதுவின் வீட்டிலிருந்தோ அவனுக்கு மதிய சாப்பாடு சென்று விடும்.

சைந்தவிக்குத் தான், தன் தாய் அவனிடம் காட்டுகின்ற பரிவும் அக்கறையும் பெரும் பொறாமையைத் தூண்டு வதாய்!

ஒரு நாள் மூன்று பேரும் பேசிக் கொண்டிருந்தபோது, இலகுவான கேலியுடன் அவன் கேட்டு விட்டான்.

"ஏன் ஆன்ட்டி... அங்கிள் ரொம்பக் கோபக்காரரா?" மெதுவாக விசாரித்தான்.

டி.வி.யில் ஆழ்ந்திருந்த சவி திரும்பி அவனைப் பார்த்தபோது, அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தெரிய வில்லை.

"ஆமாம்பா... ஏன் கேக்கறே?" மல்லிகா இயல்பாகக் கேட்டார்.

"சும்மாதான் ஆன்ட்டி... எப்பவுமே பசங்களுக்கு, அப்பா இல்லைன்னா அம்மாவோட குணம் தானே வரும்... நீங்க ரொம்பப் பொறுமையானவங்களா, மென்மையான வங்களாத் தெரியறீங்க... அதான் கேட்டேன்" என்றபோது அவன் உதட்டோரம் குறும்பாய் துடித்து கண்ணோரங்கள் கேலியில் சுருங்கின.

அதைக் கண்டதும் முகம் சுருங்கிவிட எழுந்த சைந்தவி, வேகமாகத் தன் அறைக்குள் சென்று விட்டாள்.

இருவருக்குமிடையே நடந்த அந்த மௌனப் போரை அறியாத மல்லிகா, சுவாரசியமாகத் தங்கள் ஊரைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்.

ஜன்னல் வழியே இரவு வானத்தை அவள் நோக்கிய போது, வெண் பூக்களுக்கு சிறகு கட்டிப் பறக்கச் செய் ததைப் போல், வானில் மேகங்கள் மிதந்து கொண் டிருந்தன.



தொடுவானம் என்பது பூமியைத் தொட்டுக் கொண்டே இருப்பது போல் ஒருவித மாயையை ஏற்படுத்தும்... ஆனால் தொடாது!

அதைப் போல், அவன் நினைவுகள் அவளைத் தீண்டி யும் தீண்டாமலும் இம்சை செய்தன.

சுடும் நிலவாய், அவள் முகம் தகித்தது.

## 5

அறைக்குள் வந்த பிறகும் தனிமையில் மனதின் ஜ்வாலைகள் அடங்க மறுத்தன.

தன்னை அவன் மறைமுகமாகக் கேலி செய்தது, சுள்ளென்று ஒரு கோபத்தை வரவழைத்தது.

பிறகு அவன் சென்றவுடன் தாயிடம் வந்தவள், "ம்மா... எப்பப் பார்த்தாலும் அந்த சபரீஷ் இங்கே வராரு... என்னால நிம்மதியா டி.வி. பாக்கவே முடியறதில்லை... சே!" என்றபடி தொப்பென்று சோபாவில் அமர்ந்தாள்.

"சாரி... இனிமே நீங்க டி.வி. பாக்கறதை நான் டிஸ்டர்ப் பண்ண மாட்டேன்..." பின்புறம் சபரீஷின் ஆழ்ந்த குரல் சிறு கோபம் கலந்து ஒலித்தது.

வேகமாக எழுந்தவள் தர்மசங்கடத்துடன் பேச முயலும் போதே, "ஆன்ட்டி... அம்மா உங்களுக்கும் ஒரு லெட்டர் போட்டிருந்தாங்க... அதக் குடுக்க மறந்துட்டேன்... இந்தாங்க..." என்றவன் விருட்டென்று வெளியேறி விட் டான்.

கோபமாகத் திரும்பிய மல்லிகா, "நான் உனக்கு ரொம்பச் செல்லம் குடுத்து கெடுத்துட்டேன்னு நினைக்கிறேன் சவி! வீட்டுக்கு ஒரே குழந்தைன்னு எல்லாருமே தப்பு பண்ணிட்டோம்... வீட்டுக்கு வந்தவங்க கிட்ட எப்படி நடந்துக்கணும்கிற சாதாரண மேனர்ஸ் கூட உனக்குத் தெரியலையே?" வருத்தத்துடன் கடிந்துவிட்டு வேகமாக உள்ளே சென்றார்.

அவள் மனதிற்குள், எதுவோ இறுகப் பிசைவதுபோல்!

இதுவரை, தான் இதுபோல் யாரிடமும் நடந்து கொண்டதில்லை என்ற உண்மை மனதில் உரைக்க "சாரிம்மா..." என்று அவரிடம் முணுமுணுத்துவிட்டுப் பின்புறம் சென்றாள்.

தோட்டத்தில் துணி துவைக்கும் கல் மீது அமர்ந்து வானத்தை நிமிர்ந்து பார்த்தபோது, பக்கத்து வீட்டு மாடி ஜன்னலில் வெளிச்சம் தெரிந்தது.

தான் ஏன் இப்படி நடந்து கொள்கிறோம் என்ற கேள்விக்கு பதில் தெரியாமல் அமர்ந்திருந்தபோதுதான், யாரோ உற்றுப் பார்க்கின்ற உணர்வு ஏற்பட்டது.

மெல்ல நிமிர்ந்தால், ஜன்னல் வழியே அவளையே ஊடுருவிக் கொண்டிருந்தான் சபரீஷ்.

அவள் தன்னைப் பார்ப்பதைக் கண்டதும், கேலியாக நெற்றியில் கை வைத்து ஒரு சல்யூட் வைத்துவிட்டு விலகிப் போனான்.

நெஞ்சம் போர்க்களமாயிருந்தது..!

தனக்குள்ளேயே சென்று பார்த்ததில், பல விநோத உணர்வுகள் தலை தூக்குவது புரிந்தது.



அந்தக் குறும்பு பார்வையினால் இதயக் கரையில் எழுந்த தவிப்பலைகள், வெகு நேரம் அடங்க மறுத்தன!

உள்ளுக்குள்... குறுகுறுப்பாய், உணர்வுகளின் கண்ணாமூச்சி ஆட்டம்!

சட்டென்று தலையைக் குலுக்கிவிட்டு உள்ளே வந்தாள் அவள்.

* * *

அடுத்த வாரம் ஊரிலிருந்து வரப் போவதாக சபரீஷின் தாய் வள்ளி கடிதம் எழுதியிருந்தார்.

அந்த வாரக் கடைசியில், அனைவரும் குடும்பத்துடன் எங்காவது சென்று வரலாமா என்று கேட்டிருந்தார்.

பிறகு போனில் பேசிய சபரீஷ், மகாபலிபுரத்திற்குச் சென்று தங்கிவிட்டு, கடற்கரைக்குப் போகலாமென்று திட்டமிட்டிருப்பதாகக் கூறினான்.

மல்லிகா எல்லாவற்றையும் அவளிடம் கூறியபோது, "நான் வரலைம்மா... அது உங்க ஃப்ரெண்ட் சர்க்கிள்... நீங்க போயிட்டு வாங்க..." உதடுகளைச் சுழித்தபடி வீம்புடன் கூறிவிட்டு சவி உள்ளே சென்று விட்டாள்.

தன் மகளின் புதிய போக்கும் மாற்றமும் புரியாமல் திகைத்து நின்றார் மல்லிகா!

எங்காவது வெளியில் செல்ல வேண்டுமென்றால் குதித்துக் கொண்டு கிளம்புபவள் அவள்தான்...

இன்று ஏன் இப்படி என்று அலை பாய்ந்த மனதை அடக்கி, அவளை விட்டுத்தான் பிடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார் மல்லிகா.

அந்த வாரத்தில் ஒரு நாள் பஸ் ஸ்டிரைக் என்பதால், அவளும் ராதுவும் ஆட்டோவில் வந்து கொண்டிருந்தனர்.

திடீரென்று வேகமாக எதிரில் வந்த ஒரு ஆட்டோ பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த ஒரு பெண்ணருகில் நின்றுவிட, உள்ளே அமர்ந்திருந்த ரௌடிகளில் ஒருவன் அவளுடைய துப்பட்டாவைப் பிடித்து இழுத்து வம்பு செய்ய ஆரம்பித்தான்.

பதைப்புடன் ஆட்டோவைவிட்டு இறங்கி அந்தப் பெண்ணிற்கு உதவி செய்ய முயன்ற சவியை இழுத்துப் பிடித்து அமர்த்தி விட்டாள் ராது.

அருகில் நின்றிருந்த ஒருவர்கூட உதவி செய்ய முன் வராதபோது அந்த ஆட்டோ கிளம்ப, துப்பட்டாவை அவன் இழுத்ததினால் கழுத்தில் சுருக்கிட்டு அந்தப் பெண் தரையில் அலங்கோலமாய் விழுந்தாள்.

சட்டென்று ஆட்டோ கிளம்பிவிட, அந்தப் பெண் கரடுமுரடான தார்ச்சாலையில் இழுத்துச் செல்லப்பட, அனைவரின் இதயமும் ஒரு கணம் இயக்கத்தை நிறுத் தியது... படபடப்பாய் அந்தப் பெண்ணின் நிலை கண்டு தவித்தது.

"டிரைவர்... நீங்க ஆட்டோவை எடுங்க... இல்லைன்னா இவ ஏதாவது ஆபத்தில மாட்டிப்பா..." தவிப்புடன் வேகமாகக் கூறினாள் ராது.

"ஏய்... என்னை விடு... கண்ணுக்கு முன்னாடி நம்மை மாதிரி ஒரு பொண்ணுக்கு இப்படி ஒரு அநியாயம் நடக்குது... அதப் பாத்துட்டு சும்மாப் போகச் சொல்றியா?" சினத்துடன் படபடத்தாள் சவி.

"சவி! சொன்னாப் புரிஞ்சிக்க மாட்டியா? இத்தனை பேர் பாத்துட்டு சும்மா தானே இருக்காங்க... அதிலயும்



எத்தனை ஆம்பிளைங்க இருக்காங்க... அவங்கல்லாம் ரௌடிங்க... அவங்களை எதுத்தா நமக்கும் இதே கதி தான்... நமக்காகவும் யாரும் வர மாட்டாங்க...

"டிரைவர்... நீங்க கிளம்புங்க..." பயத்துடனும், உறுதியாகவும் வந்தது ராதுவின் குரல்!

அவர்களுடைய ஆட்டோவும் எதிர்த் திசையில் வேகமாய்க் காற்றைக் கிழித்துச் செல்ல, குலுங்கி அழ ஆரம்பித்தாள் சைந்தவி.

கண் முன்னால் இப்படி ஒரு அநியாயம் நடந்தும் அதை எதிர்க்க முடியவில்லையே என்ற பரிதவிப்பு அவளைப் பலமாய்த் தாக்கியது... தன் மேலேயே வெறுப்பு வந்தது..!

மலர்களை மொட்டிலேயே கருகச் செய்யும் கொடுமையா ஈவ் டீசிங் என்பது... இதுவே தங்களுடைய சகோதரி என்றால் இப்படிச் செய்ய அந்த அயோக்கியனுக்கு மனம் வருமா...? பூப்போன்ற அந்தச் சிறு பெண்ணை அப்படித் தரதரவென்று இழுத்துச் செல்ல எப்படித் துணிந்தான் அவன்!

மனதிற்குள் பல கேள்விகள் பூதாகரமாக எழுந்து அவளை வதைக்க ஆரம்பித்தன.

வீட்டிற்கு வந்ததுமே தன் தாயிடம் எல்லாவற்றையும் கூறி அழுதவளுக்கு, அன்றிரவே காய்ச்சல் வந்து விட்டது...

மாத்திரை போட்டுக் கொண்டு படுத்தவளுக்கு இரவெல்லாம் அதே நினைவுகள்.. தீக்கனவுகள்!

பதைப்புடன் அலறியபடி எழுந்து அவள் அமர்ந்த போது, மனதிற்குள் என்றுமில்லாது புதிதாய் ஒரு பயம் தாக்க கதவைத் திறந்து ஓடி வந்தார் மல்லிகா.

அலைப்புறுதலுடன் தெரிந்த மகளை ஆறுதல் படுத்தியவர், அவளுடைய அறையிலேயே உறங்கி விட்டார்.

அன்றிரவு முழுவதும், சவியால் இயல்பாக உறங்கவே முடியவில்லை.

அந்தப் பெண்ணிற்கு நிகழ்ந்த கொடூர வெறியாட்டம் அவள் மனக் கண்ணில் நிழற் படமாய்... நெருப்புப் பந்தாய்... பலமாய் ஆழ்மன வெளியை தகிக்கச் செய்தன.

அந்த கோரக் கனவுகளின் பாதிப்பால் நிலை குலைந்து அலற ஆரம்பித்தாள் அவள்.

சட்டென்று விழிப்பு வந்து எழுந்தபோது, இதயம் சிறகாய்ப் படபடத்தது.

உடனே பதறி எழுந்து அமர்ந்த மல்லிகா, அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டார்... தோளில் சாய்த்து சமாதானப்படுத்தினார்.

பிறகு, மெதுவாக அலைப்புறுதல் குறைந்து உறங்க ஆரம்பித்தாள், அவள்!

எந்த ஒரு தவறுக்கும், தண்டனையைக் கடுமையாக்கினால்தான் குற்றங்கள் குறையுமோ என்றெண்ணியபடி உறக்கத்தைத் தழுவினார் மல்லிகா.

## 6

காலையில் வெகு நேரம் கழித்து விழித்தபோதும், நேற்றைய நினைவுகள் அவளைப் பெரிதும் அலைக்கழித்தன.



அன்று, சவி கல்லூரிக்குச் செல்லவில்லை.

காபி அருந்தியபடி டி.வி.யின் முன் அமர்ந்திருந்த போது, ஈவ் டீசிங்கிற்கு ஆளான அந்தப் பெண் ஐ.சி.யு.வில் உயிருக்குப் போராடியபடி இருப்பதாகவும், சம்பந்தப்பட்ட ஆட்களைத் தேடி வருவதாகவும் செய்தியில் கூறினர்.

நெஞ்சம் முழுவதும் சொல்லொணாத வேதனையில் தீயாய் தகித்தது.

மனதை மாற்றிக் கொள்ள எண்ணி, செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றலாமென்று முன்புறத் தோட்டத்திற்கு வந்தாள் சவி.

அப்போதுதான் பக்கத்து வீட்டில் போலீஸ் ஜீப் ஒன்று நின்றிருப்பது தெரிந்தது.

உள்ளே வந்த வேலைக்காரி, ''எம்மா! நேத்து ஒரு காலேஜ் பொண்ணை சாகடிக்கப் பாத்தாங்களாமே... அது பத்தி விசாரிக்க போலீஸ் வந்திருக்கு... நம்ம பக்கத்து வீட்டு சபரி தம்பிய விசாரிக்கறாங்க...'' கிசுகிசுவென்று கூறினாள்.

''அவரை ஏன்... நான் தான் அந்த ரவுடிகளைப் பாத்தேனே...'' என்றவள், தான் நைட்டி அணிந்திருப்பதைக் கூட உணராமல் வேகமாக அவனுடைய வீட்டிற்கு ஓடினாள்.

சபரீஷிடம் பேசியபடி வெளியே வந்த இன்ஸ்பெக்டரிடம், ''சார்... நான் அந்த ரௌடிகளை, அயோக்கியன்களைப் பாத்தேன்... என்னால அவங்களை அடையாளம் காட்ட முடியும்... இவர் எந்தத் தப்பும் பண்ணலை...'' தவிப்புடன் கூறினாள்.

உடனே புன்னகைத்தவர், "நீங்க தப்பா புரிஞ்சுக்கிட்டீங்க! இவரை நாங்க சந்தேகப்பட்டு விசாரிக்க வரலை... நேத்து அந்தப் பொண்ணைப் பத்திச் சொல்லி, அந்த ஆட்டோவோட நம்பரை நோட் பண்ணி அவனுங்களைப் பிடிச்சிக் குடுத்ததே இவர்தான்! அது சம்பந்தமா கோர்ட்டுல சாட்சி சொல்ல வர வேண்டியிருக்கும்னு சொல்லத் தான் நான் வந்தேன்... பரவாயில்லை... இப்ப இன்னொரு சாட்சியும் கிடைக்கும் போலருக்கே..." மகிழ்ச்சியுடன் சபீஷிடம் திரும்பினார் அவர்.

உடனே அவன் முகம் இறுகியது.

"வேண்டாம் சார்! அவ சின்னப் பொண்ணு! நாங்க பேமிலி ஃப்ரெண்ட்ஸ்... அவ இதுல இன்வால்வ் ஆக வேணாம்... நான் அதை விரும்பலை... உங்களுக்கு என்னோட 'விட்நெஸ்' மட்டும் போதும்னு நான் நினைக்கிறேன்..." சபீஷ் உறுதியான குரலில் கூறினான்.

"இல்லை... எனக்கும் ஒரு இந்தியப் பிரஜைங்கிற முறையில நாட்டுல நடக்கிற தப்பை எதிர்த்துக் கேக்கற உரிமை இருக்கு... நானும் சொல்லுவேன்" வீம்பாகக் கூறினாள் சவி.

"சரி! எங்களுக்கு ஒரு விட்னஸ் வேணும்... அது சீக்கிரமே கிடைச்சாச்சு... உங்களுக்குள்ளே பேசி ஒரு முடிவு பண்ணுங்க..." என்றபடி இன்ஸ்பெக்டர் விடை பெற்றுச் சென்றார்.

அவளருகில் வந்தவன், "ஏய்... என்ன நினைச்சிட்டிருக்கே உன் மனசுல! அவன் பெரிய தொழிலதிபரோட மகன்... ரொம்ப செல்வாக்கானவன்... அவனை எதிர்த்து நீ கோர்ட்டுக்கு வரப் போறியா? பெரிய ஜான்சி ராணின்னு



நினைப்பா! நான் அதை அனுமதிக்க மாட்டேன்..." அடிக்குரலில் சீறினான்.

"நீங்க என்ன என்னை அனுமதிக்கறது..! என்னைக் கண்ட்ரோல் பண்ண நீங்க யாரு... நான் என்ன வேணும்னா செய்வேன்... என்னைத் தடுக்கறதுக்கு உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது...!"

"எனக்கு உரிமை கிடையாதா? என் உரிமையோட அளவு என்னன்னு கூடிய சீக்கிரமே உனக்குத் தெரிய வரும்... அப்போ ஆடிப் போயிடுவே... தெரியுமா?"

"நான் ஒண்ணும் பயப்பட மாட்டேன்... ஆடிப் போகவும் மாட்டேன்..!"

"ஓஹோ! அப்ப தைரியமா நேத்தே போய் போலீசுக்குச் சொல்லியிருக்க வேண்டியது தானே?"

அவன் கேள்வியில் சட்டென்று துவண்டாள் அவள்.

"அதையும் உங்க ஃப்ரெண்டோட தங்கை.. என் தோழி இருக்காளே... ராதுன்னு ஒரு வீராங்கனை... அவ தான் தடுத்தா!" எனும்போதே பதட்டத்துடன் ஓடி வந்தார் மல்லிகா.

"என்னப்பா... போலீஸ் வந்துட்டுப் போகுது... இவளும் நீயும் சண்டை போட்டுக்கறீங்க... என்ன ப்ரச்னை?" பயத்துடன் கேட்டார்.

"ஒண்ணுமில்லை ஆன்ட்டி... நேத்து நடந்த ஈவ் டீசிங் கேஸுல நான் தான் ஐ விட்னஸ்... அதப்பத்தி பேசத் தான் போலீஸ் வந்தாங்க. உடனே இவ என்னைக் காப்பாத்த வர மாதிரி ஓடி வந்து, அதுக்கு நானும் ஒரு சாட்சிங்கறா ஆன்ட்டி! பொண்ணுங்க இதிலே தலையிடக் கூடாதுன்னா என்கிட்ட ஆர்க்யூ பண்றா!"

அந்த நேரத்திலும், 'வாங்க போங்க' என்ற மரியாதை தேய்ந்து கட்டெறும்பாகி, 'அவள் இவள்' என்ற வார்த்தை களாக மாறியதை, கூர்மையுடன் கவனித்தாள் சவி.

மனதில் சுள்ளென்று கோபம் வந்தது.

அதை வெளிப்படுத்தும் முன்பே "சவி... சபரி சொல்ற தில என்ன தப்பு? இதிலெல்லாம் நீ தலையிடாதே... என் தம்பி நீங்களே வலியப் போய் ஆபத்தைத் தேடிக்கறீங்க? எனக்கு பயமா இருக்கு!" என்றார் மல்லிகா.

"இல்லை ஆன்ட்டி! கண் முன்னால நடக்கற அநியா யத்தை என்னால பாத்துக்கிட்டு சும்மா இருக்க முடியாது! நான் எப்படியாவது சமாளிச்சிப்பேன்... இவ இதில தலையிடறதை தான் என்னால அனுமதிக்க முடியாது" தீர்மானமாகக் கூறினான் அவன்.

"ஆமாம்... ஆணுக்கு ஒரு நியதி.. பெண்ணுக்கு ஒரு ரூல்ஸு போட்டு எங்களை அடிமையா வச்சிடுங்க... சே" என்றபடி செல்பவளையே ரசனையுடன் தொடர்ந்தன சபரீஷின் விழிகள்!

"ஏன் ஆன்ட்டி... இவ மட்டும் இப்படி..? ராது... மத்த பொண்ணுங்கள்லாம் எவ்வளவு சாஃப்ட்டா மென்மை யோட இருக்காங்க..." செல்லமாகச் சலித்தபடி கூறினான்.

சட்டென்று திரும்பியவள், "ம்... பெருமாள் மாடு மாதிரி மத்தவங்க என்ன சொன்னாலும் தலையாட்டிக்கிட்டு ஊமை மாதிரி இருக்கறதுதான் பெண்மைக்கு அடை யாளம்னா, சத்தியமா என்னால அப்படி இருக்க முடியாது!" கூர்மையாகக் கூறிவிட்டு தலையைச் சிலுப்பியபடி சென்றுவிட்டாள் சவி.



வேகமாக அவளைத் தொடர்ந்து வந்தார் மல்லிகா.

"காலேஜில எத்தனை பொண்ணுங்களை சமாளிக் கறேன்... என்னால உன் ஒருத்திய அடக்க முடியலை யேடி!" சலுகையுடன் சலித்துக் கொண்டார்.

"முடியாதும்மா... ஏன்னா நான் உங்க செல்லப் பொண் ணாச்சே!"

வாஞ்சையுடன் கழுத்தைக் கட்டிக் கொண்டவளை இழுத்து அணைத்துக் கொண்டவர், "இரு... இரு! உன்னை அடக்கவும், ஒருத்தன் வரத்தான் போறான்" குறும்புடன் கூறினார்.

"ஏம்மா! உங்க மாப்பிள்ளைய மரியாதையே இல்லாம அவன்... இவன்கிறீங்க.. அவனுக்குக் கொஞ்சமாவது மரியாதை குடுங்கம்மா! பாவம்!"

குறுகுறுத்த விழிகளுடன், தாடையைப் பிடித்துக் கொஞ்சிவிட்டு குளிக்கச் சென்றாள் அவள்.

* * *

பிறகு யோசித்தபோது, சபரீஷின் செயல்கள் தனக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதை அவளால் உணர முடிந்தது.

எந்த நேரத்திலும் தன் கம்பீரத்தை இழக்காத ஒருவித நிமிர்வும், மனிதாபிமானமும், பிறருக்கு உதவும் குண மும், உள்ளவனென்பது தெரிந்தது.

மல்லிகாவிடமும், பாலாஜியிடமும் அவன் பேசுவதை கவனித்ததில் நல்ல திறமையும் ஆழமான சிந்தனை களும் நிறைய வாசிக்கும் ஆர்வமும், அவனிடம் நிறைந் திருப்பதும் புரிந்தன.

"தானாக இருந்து, தனக்கு உண்மையாய் நடந்து, தன்னிடம் பரிபூர்ண நம்பிக்கை கொண்டு மனித நேயத் துடன் வாழ்பவனே உண்மையான மனிதன்!"

'ஆஸ்கார் ஒயில்டின்' பழமொழிதான் உடனே நினை வுக்கு வந்தது... சபரீஷை நினைத்தால்!

எவ்வளவு அற்புதமான ஒரு மனிதன் அவன்!

பெரிய பணக்காரனோடு மோதுகிறோம் என்று தெரிந்தும், ஒரு குடிமகனாகத் தன் கடமையைச் செய்து, அந்த இளம் பெண்ணின் மரணத்திற்குக் காரணமானவனை போலீ ஸில் ஒப்படைத்தானே..!

யாரோ ஒருவர்தானே எப்படியோ போகிறார் என்று விடாமல், அடிபட்டுக் கிடந்தவரை மருத்துவமனையில் சேர்த்து முதலுதவி செய்து தன் ரத்தத்தையும் தானமாய் தந்தானே... இந்த மனித நேயத்தை என்னவென்று பாராட்ட முடியும்..?

இத்தனை உயரிய குணங்களுடன் இருக்கின்ற ஒரு வனைத் தான் ஏன் வெறுக்கிறோம் என்ற கேள்வி எழுந்தது.

ஆனால் அந்தத் தேடலின் விளைவால் அன்றுதான் ஒரு பெரிய உண்மையே அவளுக்கு தெரிந்தது... தன் உள்ளமும் புரிந்தது!

முதன் முதலாக ஒரு ஆண் மகன் தனக்குள் ஒரு நண்பனாக.. அதற்கும் மேல் ஒரு இணையாக பரிணாமம் கொள்ள ஆரம்பித்திருப்பதை, நம்ப இயலாமல் தவித்தது நெஞ்சம்!

அவனைப் பற்றிய தேடல் ஒரு வீரியத்துடன் ஆக்கிர மிக்க, அவனுக்கு ஒரு கஷ்டம் என்றவுடனே பதறி ஓடிய தன் நிலை, இப்போதுதான் அவளுக்குப் புரிவதாய்...!



முதன் முதலாக, காதல் தேரின் வடம் பிடித்து, இதயம் மானசீகமாக இழுக்க ஆரம்பித்திருந்தது. மனம், கவிதை களின் இழை கோர்த்து, மொழி புரியா உணர்வில் தத் தளித்தது.

ஆனால் தன் மனதை அடக்கப் பெரும்பாடு பட்டாள் சவி... அன்று முழுவதும் தன் அறையிலேயே தனிமைத் தவமிருந்தாள்!

நேற்றைய பாதிப்பும், இன்றைய அலைப்புறுதலும், அவளைச் சோர்வடையச் செய்திருப்பதாக நினைத்த மல்லிகாவிற்கு, மகளின் உண்மை நிலை புரியவில்லை.

ஆனால், விழிகளின் அனுமதியின்றியே கனவுகளுக் குள் அவன் வரவு தெரிய திணறிப் போனாள் சைந்தவி!

மின்னல் சங்கிலியாய் தோரணம் விரித்தன... அவன் நினைவுகள்!

எவரிடமும் பகிர்ந்து கொள்ள விரும்பாத தன் நேசத்தைப் பற்றியும்... வெளியில் போடும் வேஷத்தைப் பற்றியும், பலப்பல எண்ணித் தத்தளித்தது மனது!

## 7

மறுநாளிலிருந்து கல்லூரிக்குச் செல்ல ஆரம்பித்த சவியிடம், பெரும் மாற்றம் தெரிவதாய்!

எதற்கெடுத்தாலும் எதிர்வாதம் செய்யும் அவள் குணம் மாறி இருந்ததை, ராதுவே ஆச்சர்யத்துடன் உணர்ந்தாள்.

"என்னடி... என்னவோ போல இருக்கே? அன்னிக்கு நடந்த அந்த ஈவ் டீசிங் சம்பவத்துல இருந்து நீ ரொம்ப மாறிட்டே... அந்தப் பொண்ணு வேற நேத்து இறந்து போனது உன்னை ரொம்ப பாதிச்சிடுச்சின்னு நினைக்கிறேன்... என்னாலயும் அதை மறக்கவே முடியலை... நினைச்சாலே பயமா இருக்கு..." சிறு நடுக்கத்துடன் கூறினாள்.

ஒரு பெருமூச்சுடன் திரும்பியவள் "ஆமா ராது... நான் ரொம்ப மாறிட்டேன் இல்லே... மனசு அந்தப் பொண்ண நினைச்சு ஊமையா அழுதாலும், இப்பல்லாம் எதையும் வெளிக் காட்டாம இருக்கப் பழகிட்டேன்... அம்மா வேற பயந்து போயிட்டாங்க..." அக்கறையுடன் கூறினாள் சவி.

"நான் அதனாலதான் உடனே கண்ணை மூடிக்கிட்டேன்.. அதை எல்லாம் பாக்கற தைரியம் எனக்கில்லை... அதோட உன்னை மாதிரி அதையே நினைச்சிட்டிருந்தேன்னா எனக்குப் பைத்தியம் புடிச்சிடும்... என்னால அந்தத் தோல்வியையும் கலபத்துல ஏத்துக்க முடியாது!"

"ம்... என்னாலயே தாங்கிக்க முடியலை... ஏன் இப்படி... எதனால மனுஷங்க மனசுல இவ்வளவு வக்ரம்னு பதறிப் போகுது..!"

"அந்த விஷயத்துல சபரீஷை நாம ரொம்பப் பாராட்டணும்... தைரியமா அந்தப் பெரிய மனுஷனை எதிர்த்து மாட்ட வச்சதே பெரிய விஷயம்தானே! ஆனா நீ அதை ஒத்துக்க மாட்டியே..!" எப்போதும் போல் கேட்டாள் ராது.

மௌனமாக இருந்த சவி, தன் மனதிற்குள் முகிழ்த்திருந்த காதலை தனக்குள் வைத்துக் காப்பாற்ற எண்ணி அந்த நிமிடம் வார்த்தை தொலைத்துப் பரிதவித்தாள்.



"சபரீஷ்...!" இதயம் மென்மையாக உச்சரித்தது... அவன் பெயரை!

யாருக்கு வாய்த்திருக்க முடியும், அப்படியொரு தன்னலமற்ற தூய உள்ளம்!

அன்று நீ மட்டும் இல்லையென்றால் அந்த மனிதரின் உயிர் என்னவாகியிருக்கும்? அந்தப் பெண்ணின் மரணம் கூட மனசாட்சியின்றி கொன்றவனை மறந்திருக்குமே..?

இன்று அந்தக் கொடியவன் உன்னால் அல்லவா சிறைக்குள் இருக்கிறான்..! இப்படி ஊடுருவும் சமுதாயப் புல்லுருவிகளை அழிக்க எங்கிருந்து புறப்பட்டு வந்தாய் நீ? இதயம் உருகியது.

பெரும் மாற்றம் வந்திருந்தது அவள் மனதில்... சிலிர்ப்பான இனிய மாற்றம்!

* * *

அந்த வாரமே ஊரிலிருந்து வள்ளியும் ஜெகதீசனும் வந்துவிட, இரு குடும்பமும் கலகலப்பாய்க் கை கோர்த்தன.

ஆனால், அன்று சவியின் வார்த்தைகளுக்குப் பிறகு சபரீஷ் அவர்களின் வீட்டிற்கே வருவதில்லை.

வந்தாலும், வாசலிலேயே நின்று பேசிவிட்டு செல்லத் தொடங்கியிருந்தான்.

ஏனோ, சவிக்குள்தான் பெரும் குற்ற உணர்வும் படபடப்பும் நிறைந்திருந்தன.

இப்போதெல்லாம், அவனுடைய புறக்கணிப்பும் பாரா முகமும் கண்டு மனதில் ஏதோ ஒரு வெற்றிடம் வந்திருந்தது.

அந்த வாரக் கடைசியில் அனைவரும் மகாபலிபுரத்திற்குச் சென்றபோது, பாலாஜியும் ராதுவும் உடன் வந்திருந்தனர்.

ஒரே வயதுடையவர்கள் என்பதால் நான்கு பேரும் சேர்ந்து அந்த இடத்தைச் சுற்றி வந்தபோது, கடற்கரைக் கோயிலின் அழகும் அமைதியும் அவளை வெகுவாகக் கவர்ந்தன.

ஐந்து கல் ரதங்கள் ஒரே கல்லினில் செதுக்கப்பட்டு, திரௌபதி உட்பட பஞ்ச பாண்டவர்களின் பெயர்களைத் தாங்கி கம்பீரமாகக் காட்சியளித்தது.

அர்ச்சுனனின் தபசுப் பாறையும் கிருஷ்ண மண்டபமும் பிரமிக்க வைத்தன.

குடவரைக் கோயில்களில் மகிஷாசுர மர்த்தினி கோவிலும் விஷ்ணு கோவிலும் சிறப்பாக வடிவமைக்கப் பட்டிருந்தன.

மகிஷாசுர மர்த்தினி கோயிலில் பெண் கடவுள், எருமைத் தலையைக் கொண்ட அசுரனுடன் போர் புரியும் காட்சி, தத்ரூபமாகவும் கோபத் தன்மையுடனும் செதுக்கப் பட்டிருந்தன.

அதைக் கண்டதும் இதழோரம் குறும்பும் கேலியுமாகத் திரும்பினான் சபரீஷ்.

"எம்மா... அங்கே விஷ்ணு கோவில்லே அவர் எவ்வளவு அமைதியா பொறுமையா அனந்த சயனத்தில் இருக்காரு... ஏன் இந்தப் பொண்ணுங்களுக்கு மட்டும் இவ்வளவு கோபம்?"

அவளையே ஓரக் கண்ணால் பார்த்தபடி கூர்மையுடன் கேட்டான் சபரீஷ்.



"எம்ப்பா... இவ்வளவு ரௌத்ரமா நீ எந்தப் பொண்ணைப் பாத்தே..?" வள்ளி புரியாமல் கேட்க, நமட்டுச் சிரிப்புடன் தலை குனிந்தாள் ராது.

அவன் தன்னைப் பற்றித்தான் கூறுகிறான் என்பதை உணர்ந்த சவி, முகம் சுருங்க மௌனமாகத் திரும்பிக் கொண்டாள்.

பிறகு... அனைவரும் போட்டோவிற்கு போஸ் கொடுத்தபோது, அவளருகில் வந்து நின்றவன், மெதுவாக அவள் காதோரம் குனிந்தான்... கிசுகிசுப்பாய் பேசினான்!

"எனக்கு மட்டும்தான் தெரியும் நீ அழகான பிசாசுன்னு... இப்படி முகத்தை உம்முனு தூக்கி வச்சிருந்தா அப்புறம் போட்டோவைப் பாக்கப் போற இந்த ஊருக்கே அது தெரிஞ்சுடும்... கொஞ்சம் சிரி..." சிரிக்காமல் கூறினான்.

அவனுடைய கேலியில் சட்டென்று மனதிற்குள் ஒரு பூ மலர்ந்து விட கன்னம் அழகாகக் குழிய வசீகரமாகப் புன்னகைத்தாள் அவள்.

அந்த நிமிடம், அவளுடைய கன்னக் குழியில் புதைந்து விடத் துடித்தது சபரீஷின் மனது!

முதன் முதலாக அவளைப் பார்ப்பதுபோல் விழிகளில் ரசனையுடன் வருடினான் அவன்.

நல்ல உயரமாக, செதுக்கிய தந்தச் சிற்பம்போல், இடை வரை நீண்ட கூந்தலோடு கம்பீரமாக நிற்பவளை, இதயத்துக்குள் உடனே புகைப்படமாய் பதித்துக் கொண்டது மனது.

"இத்தனை நாட்கள் எங்கிருந்தாய் பெண்ணே... எனக்காகவே பிறந்து... எங்கேயோ வளர்ந்து இன்று என்

உயிரிலும் உணர்விலும் கலந்து என்னைப் பெரும் சக்தியாக ஆட்டி வைக்கிறாயே...?" மனதிற்குள் மறுகினான்.

அன்று முழுவதும், அவளுடைய முகமும் புன்னகையுமே ஏனோ அவனுக்குள் மையம் கொள்வதாய்...!

பிறகு கடற்கரைக்குச் சென்று திரும்பியபோது, சவியின் மனமும் லேசாகியிருந்தது.

* * *

மறு வாரமே, சபரீஷின் அப்பாவும் அம்மாவும் ஊருக்குத் திரும்பி விட, பரீட்சை நேரமென்பதால், அதில் ஆழ்ந்து போனாள் சவி.

பிறகு தேர்வுகள் முடிந்து ஊருக்குக் கிளம்பும் நாளும் வந்தது.

இந்த முறை அவளுடன் ராதுவும் அம்பாசமுத்திரத்திற்குக் கிளம்பினாள்.

மூவரும் ரயிலில் கிளம்பியபோது, வழியனுப்ப வந்திருந்த சபரீஷின் முகமும் விழிகளும் ஏதோ ஒரு வித எதிர்பார்ப்பில் பளபளத்தன.

இப்போதெல்லாம் மாடியறை ஜன்னலில் அவன் உருவம் தெரிந்தாலே, மனம் வெட்கத்தைத் துணைக் கழைக்க, உடனே உள்ளே ஓடி விடுவது வாடிக்கையாகி இருப்பது நினைவு வருவதாய்..!

பிறகு பாலாஜியும் சபரியும் கையசைத்து விடை கொடுக்க, ரயிலும் அவள் மனதைப் போலவே ஒரு பெருமூச்சுடன் நகர்ந்தது.

அந்த நிமிடம் முதல், இரு உயிரைச் சுமந்தது மனது... அவன் உயிரையும் சேர்த்து!



சமுதாய வேடர்கள் உட்புகாத காதல் வனத்தில்... அவனைப் பிரிந்து சிறகிழந்த பறவையாய் பயணிக்க ஆரம்பித்தாள் அவள்.

நாம் விரும்பாவிட்டாலும், செல்லமாய் விடைபெற்று மேகத்துக்குள் ஒளிகின்ற நிலவைப் போல், அவள் முகம் மறைவதை, ஒருவித இயலாமையுடன் தொடர்ந்தன, சபரீஷின் விழிகள்!

## 8

அம்பாசமுத்திரத்திற்குச் சென்றவுடன், பாட்டி, சித்தி, மாமா, மாமி எனப் பொழுது இறக்கை கட்டிப் பறந்தது.

கோவிலுக்குச் செல்வதும், மாமாவுடைய ஓடுகள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கும், மொத்த விலையில் மர வியாபாரம் நடக்கின்ற கடைக்கும் சென்று வருவதும் என நேரம் விரைந்து சென்றது.

ஆனாலும், அத்தியாவசிய யுத்தமாய் காதல் மட்டும் மனதில் முரசு கொட்டிக் கொண்டே இருந்தது.

மறுநாள் காலையில், சபரீஷும் பாலாஜியும் வருவதாகப் போன் செய்திருந்தனர்.

இரண்டு நாட்களில் ஊருக்குக் கிளம்ப வேண்டும் என்றும், ராதுவைத் தயாராக இருக்கும்படியும் பாலாஜி கூறியது, நினைவு வந்தது.

அன்று காலையில் போன் ஒலித்ததும், யாரோ என்ற நினைவில் எடுத்து இயல்பாக "ஹலோ..." என்றாள் அவள்.

ஒரு நொடி அமைதிக்குப் பிறகு "ஹாய்... நான் உன் சபரீஷ் பேசறேன்..." குறும்பு கசிந்து வழிந்தது அவன் குரலில்!

சட்டென்று இதயம் குலுங்கிவிட, அப்போது அருகில் வந்த ராதுவிடம் போனைக் கொடுத்து விட்டு ஓடி விட்டாள் அவள்.

பிறகு ராது கூறியபோதுதான், அவர்கள் ஊருக்கு வருவது தெரிந்தது.

மனதிற்குள் ரகசியமாய் பூட்டியிருந்த காதலை, யாரிடமாவது கூறிவிட வேண்டும் போல் நெஞ்சம் தவித்தது.

அன்று மாலையில் ராதுவும் அவளும் கோவிலுக்குச் சென்றிருந்தனர்.

"உன் தகுதியை நீயே உரக்கச் சொல்... பிறருக்காகக் காத்திருக்காதே.." என்ற ஜூலியஸ் சீசரின் மந்திரச் சொல் அந்த நிமிடம் நினைவு வந்தது.

தன் காதலை அந்த நதிக்கரையில் உரக்கச் சொல்ல வேண்டும் போல், ஒரு வேகமும் ஆவலும் அவளுக்குள் எழுந்தன.

கோவிலுக்குச் சென்று சாமி தரிசனம் முடிந்த பிறகு, பிரகாரத்தில் அமர்ந்து இருவரும் பேச ஆரம்பித்தனர்.

தன் காதலைச் சொல்லிவிட வேண்டும் என்று அவள் ஆரம்பிக்கும் முன்பே "நான் உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்டி சவி!" என்று தயக்கத்துடன் ஆரம்பித்தாள் ராது.

"என்ன விஷயம் ராது...?"



"இதை நீ எப்படி எடுத்துப்பேன்னு தெரியலை... ஏன்னா உனக்கு இந்தக் காதல், நேசம் இதிலெல்லாம் சுத்தமா நம்பிக்கை இல்லைன்னு எனக்குத் தெரியும்!.. இதைக் கேட்டா நீ எப்படி என்னைக் கேலி செய்யப் போறியோன்னு பயமா இருக்கு..." என்றாள்.

அவள் கூறியதைக் கேட்டதும், இதயத்திற்குள் ஒரு குறுகுறுப்பு வந்து போக, ஆர்வத்துடன் அவளை நோக்கினாள் சவி.

"நான் ஒருத்தரை உயிராக் காதலிக்கறேன் சவி! அவர் மட்டும் எனக்குக் கிடைக்கலைன்னா நான் தற்கொலை கூடப் பண்ணிப்பேன்... நீதான் எப்படியாவது எங்களைச் சேர்த்து வைக்கணும்... உனக்கும் அவருக்கும் எப்பவுமே ஆகாதுதான்..! ஆனாலும், அவங்க அப்பா, அம்மா நீ சொன்னாக் கேப்பாங்க" தலை குனிந்தபடி கூறினாள்.

"ஏன்... பெயர் கிடையாதா உன் அவருக்கு..?" சவி கிண்டலாகக் கேட்டாள்.

"ம்... சபரீஷ்..." மெல்லிய குரலில் கூறிவிட்டுக் கண்களை வெட்கத்துடன் மூடிக் கொண்டாள் ராது.

* * *

இமைக்கும் பொழுதில் சவியின் இதயம் நொறுங்கியது...

தான் சொல்ல நினைத்ததை தன் தோழியும் சொல்வாளென்று அவள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

உள்ளுக்குள் ஒடிந்து போய் அழும்போது, வெளியில் முகத்தை வெற்றுப் புன்னகையால் தேக்க முடியவில்லை.

சட்டென்று விழிகள் நிறைந்துவிட, வேறு புறம் திரும்பிக் கொண்டாள் அவள்.

அதைத் தவறாக யூகித்த ராது "எனக்குத் தெரியும்... உனக்கு இதெல்லாம் பிடிக்காதுன்னு... ப்ளீஸ்... எனக்காக இந்த உதவியை நீ செய்வேதானே?" கலக்கத்துடன் கேட்டாள்.

"ம்... நான் முயற்சி பண்றேன்... நீ வீட்டுக்குக் கிளம்பு... இங்கே என் பழைய ஃப்ரெண்ட் ஒருத்தி இருக்கா!.. அவளைப் பாத்துட்டு வரேன்னு அம்மாகிட்ட சொல்லு..!" கூறிவிட்டு வேகமாக எழுந்தாள் சவி.

மறு நொடியே மடியிலிருந்த அர்ச்சனைப் பொருட்கள் அலங்கோலமாய்த் தரையில் சிதறின.

"என்னடி இது? ஆரம்பமே அபசகுனமா இருக்கு..!"

பதறிய ராதுவை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு, பக்கத்திலிருந்த ஆற்றங்கரை மண்டபத்திற்குச் சென்றாள்.

அந்த நிமிடம், தனிமை அவளுக்குத் தேவையான ஒன்றாய்..!

நட்பின் யாசகக் குரலுக்காக, காதல் வேள்வியைக் காவு கொடுக்க முடியாதென்பது புரிந்தாலும், மனம் ராதுவுக்காகவும், தனக்காகவும் பெரிதும் பரிதவித்தது...

சட்டென்று கூட்டுப் புழுவாய் இறுகிவிட்ட மனமும் உடலும் தைரியச் சிறகுகளை வளர்க்க முயற்சி செய்ய ஆரம்பித்தன...!

வெகு நேரம் குழப்பத்தின் பிடியில் யோசித்தபடி இதயம் கனக்க அழுதபடி அமர்ந்திருந்தவளை, சட்டென்று ஒலித்த இடியோசை கலைத்தது.



நிமிர்ந்தால், எங்கும் பரவித் தெரிந்த இருட்டும், பலமாய்க் கொட்டிய மழையுமே அவளுக்குத் துணையிருந்தன...

திடீரென்று ஒரு காரின் ஹெட்லைட் வெளிச்சம் அவள் மீது படர்ந்தது.

உடல் ஒரு முறை அதிர்ந்து குலுங்கியது...! வேகமாக எழுந்தாள்.

சண்முகம் காரிலிருந்து இறங்கி ஓடி வந்தார்.

அவருடைய குரல், எங்கோ தூரத்திலிருந்து ஒலிப்பது போல் கேட்டது...

பழைய நினைவுகள் கலைய விதிர்த்துப் போய் நிமிர்ந்த போது, எதிரில் மாமாவே நின்றிருந்தார்.

கடந்த காலச் சுவடுகளின் பதிவுகள், சட்டென்று காற்றில் கலையும் மேகமாய்க் கலைந்தன..!

காதல் நினைவுகள்... தூரத்திலிருந்து கானல் நீராய் பளபளத்து அவளை வாட்ட ஆரம்பித்தன.

சோக ஞாபகங்களிலிருந்து, கலைந்து நிமிர்ந்தாள் அவள்.

வெகு நேரமாய்... தான் கடந்த காலத்தில் சஞ்சரித்திருந்தது மெதுவாக உறைத்தது.

சபரீஷின் தாய், தந்தையின் வரவும்... இந்த ஊரும்... அவளுடைய காதல் அத்தியாயத்தையும், சபரீஷின் நினைவுச் சரங்களையும், மீண்டும் மனக்கண்ணில் நிழற்படமாய் தொகுத்தது புரிந்தது.

தலையைக் குலுக்கி நிகழ்காலத்திற்கு வந்தாள் அவள்.

# 9

சைந்தவியின் எதிரே, சண்முகம் நின்றிருந்தார்.

''மாமா...'' அவள் மெதுவாக அழைத்தபோது, அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டார் அவர்.

''என்னடா... பழைய ஞாபகமா? அதை நீ இன்னும் மறக்கலையா? ஒரு கெட்ட கனவா நினைச்சு மறந்துடுடா!'' என்றார் பிசிறடித்த குரலில்!

பிறகு மெதுவாக எழுந்து உள்ளே வந்தபோது, கடந்த கால ஞாபகங்களின் அடையாளங்கள் மனதில் துருப் பிடித்துப் போயிருந்தன.

அன்றிரவும் உறக்கம் வர மறுக்க, சபரீஷின் நினைவுகளை மீண்டும் பிடிவாதமாக வருட ஆரம்பித்தது மனது..! மூன்று வருடங்கள் பின்னோக்கிச் சென்றது!

* * *

அன்றிரவு மழையில் நனைந்ததிலும், உணர்வுகளின் ஒய்ச்சலாலும் மறுநாளே அவளுக்கு கடுமையான காய்ச்சல் வந்து விட்டது.

காலையில் ஊருக்கு வந்து விட்ட சபரீஷை எதிர் கொள்ளவே மனமின்றி, சுருண்டு படுத்திருந்தாள் அவள்.

சென்னைக்குச் செல்வதற்கு முன், தன் அறையிலேயே தனிமைத் தவமிருந்தவளைக் காண வந்தான் சபரீஷ்.

''என் சவி... என்னை ஏன் இப்படித் தவிக்க விடறே? நான் உன்னை என் உயிரா விரும்பறது உனக்குப் புரி



யலையா? இல்லை புரிஞ்சிட்டே என்னை வதைக்கிறியா?'' பெரும் தவிப்புடன் கேட்டான்.

ஒரு வேகத்துடன் நிமிர்ந்தவள், ''சாரி... நான் என்னிக்காவது உங்களை விரும்பறேன்னு சொல்லி இருக்கேனா!'' கேட்டு விட்டாள்.

ஆனால் அதற்கு மேல் அவன் முகம் பார்த்து அவளால் பேச முடியவில்லை.

''அப்போ... உன் கண் பேசின வார்த்தைகள்... உன் முகம் அழகா வெளிப்படுத்தின வெட்கம்... ஊருக்கு வர அன்னிக்கு உன் முகத்தில தெரிஞ்ச தவிப்பு... எல்லாமே பொய்ங்கிறியா?'' இடியென வந்தது அவன் குரல்!

''ஆமாம்... எனக்குள்ளே அது மாதிரி எந்த எண்ணமும் இல்லை... காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்ம்பாங்க! அது மாதிரி நீங்களே நினைச்சிட்டா அதுக்கு நானா பொறுப்பு?''

ஆனால், இதயத்தின் அடி ஆழத்திலிருந்து பீறிட்டு வந்தன... வேதனையும் துக்கமும்!

''பொய் சொல்லாதே... என் முகத்தைப் பாத்துப் பேசு... உண்மை, தானா வரும்! நீ என்னை விரும்பலை?'' மிருகமாய் உறுமினான் சபரீஷ்.

''இல்லை! உங்களை ராதுதான் விரும்பறா!'' கூறி விட்டுத் தன் கண்ணீரை மறைத்துக் குனிந்து கொண்டாள்.

''ராதுவா... நல்ல ஜோக்... என்ன... இது மாதிரி சொல்லி என்கிட்ட இருந்து தப்பிக்கப் பாக்கறயா!''

''இல்லை... அவ உங்களை தன் உயிருக்கும் மேலா காதலிக்கிறா! உங்க தூண்டுதல் இல்லாம அவ விரும்பியிருப்பான்னு என்னை நம்பச் சொல்றீங்களா?''

"ஓ..! சந்தேகம் அந்த அளவு போயாச்சா..? இன்னொரு பெண்ணைப் பத்தியே ஆவலா விசாரிச்சி அவனைப் பத்தியே பேசறவனை, விரும்பறது முட்டாள்தனம்! உன் ஃப்ரெண்ட் அதச் செஞ்சிருந்தா, அதுக்கு நான் பொறுப்பாளியாக முடியாது!" எரிதழலாய் வந்தது அவன் குரல்.

தன்னை அவன் விரும்புகிறான் என்பதை அறிந்ததுமே பரவசத்தில் துடித்த மனது, இப்போது அவனை ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தது.

"நானும்... மனசார விரும்பாம... உங்க வற்புறுத்தலுக்காக உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது..!"

"ஏய்..." வேகமாக அவள் தோளை உலுக்கித் திருப்பியவனின் முகம் தீக் கனலாய்..!

அவனை ஏறிட்டும் பார்க்க முடியாமல் தலை குனிந்தவள், "இதுதான் என் முடிவு... ப்ளீஸ்... என்னை வற்புறுத்தாதீங்க... அதே மாதிரி இன்னொரு ரிக்வெஸ்ட்...! ராதுவைக் கல்யாணம் செஞ்சுக்கங்க... அவ வாழ்க்கையாவது நல்லபடியா நிம்மதியா அமையணும்... அதுலதான் எனக்கு சந்தோஷமே! ப்ளீஸ்... என்னைத் தொடாதீங்க..." என்றபடி வேகமாக விலக முயன்றாள்.

"சே..." என்றபடி அவளை உதறிவிட்டு, கோபத்துடன் வெளியில் சென்றான் சபரீஷ்.

* * *

அன்றிரவு ஊருக்குக் கிளம்பும்வரை அவன் திரும்பி வரவுமில்லை... அவளைப் பார்க்கவுமில்லை!



ராதுவும் பாலாஜியும் அவனுடன் கிளம்பிச் செல்ல, ஒரு வாரக் காய்ச்சலுக்குப் பிறகு உடல்நிலை தேறி எழுந்தாலும் சோர்ந்திருந்தாள் சவி.

அவளுடைய குறும்பும், துடுக்குத்தனமும், சளசள வென்ற பேச்சுக்களும் இப்போதெல்லாம் குறைந்திருந்தன.

எதையோ பறிகொடுத்தாற்போல், ஓய்ந்து போய் விட்டத்தை வெறித்தபடியே அமர்ந்திருப்பது வழக்கமாயிற்று.

காய்ச்சலின் வேகம் அவளைச் சோர்வடையச் செய்திருப்பதாக அனைவரும் நினைக்க, அவள் மனதில் புதைந்திருந்த ரகசியம், மாமா ஒருவருக்கு மட்டுமே தெரிந்தது.

காதலோடு சேர்ந்து இளகியது அவள் மனது... உள்ளுக்குள்ளே அதன் வலியும் வேதனையும்கூட சுகமாகப் பரவின!

தனக்குள்ளே இருக்கும் தன்னோடு பேசி, சூன்யத்தை வெறித்து அங்கும் அவன் முகம் தேடி அலைந்தது.

ஒரு மாதம் கழித்து பரீட்சை ரிசல்ட் வந்தபோது, கல்லூரியிலேயே முதல் மாணவியாகத் தேறி இருந்தாள் அவள்!

ஏனோ சென்னைக்குச் செல்லவே பிடிக்கவில்லை என்றாலும், மார்க் லிஸ்ட் வாங்குவதற்காக அவள் ஊருக்குச் சென்றாக வேண்டியிருந்தது.

மல்லிகாவும் உடன் கிளம்ப, சென்னைக்கு வந்த பிறகுதான் தெரிந்தது... சபரீஷ் வேறு புது வீடு வாங்கிக் கொண்டு அங்கு குடித்தனம் சென்று விட்ட விஷயம்!

அப்போதுதான் ஒரு நல்ல செய்தியைக் கூறினார், அவனுடைய பிரின்ஸிபல்!

"சைந்தவி...! நீ யு.எஸ்.லே ஒரு கோர்ஸுக்கு அப்ளை பண்ணி இருந்தே இல்லியா? அது கிடைச்சிருக்கு... அங்கே ஒரு வருஷ கோர்ஸ்! அப்புறம் இங்கே வரதா இருந்தா வரலாம்... இல்லை அங்கேயே பெரிய ஸ்டார் ஓட்டல்லே 'செஃப்' ஆக இருக்கலாம்" என்றார் மகிழ்ச்சியுடன்.

அவள் மனதிற்கு இப்போது பெரும் மாற்றம் தேவையாய்...

உடனே ஒத்துக் கொண்டவள், மல்லிகாவிடம் கூறிய போது அவர் பதறி விட்டார்.

"என்னடி! இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடறே... உன்னை தனியா அங்கே அனுப்பி வச்சிட்டு என்னால எப்படி இங்கே நிம்மதியா இருக்க முடியும்? நான் எப்படி உன்னைப் பிரிஞ்சி இருப்பேன்... அதெல்லாம் முடியாது... நீ இங்கேயே படி!" என்றவர், தன் தம்பி சண்முகத்தை உடனே வரவழைத்து விட்டார்.

ஆனால், அவருக்கோ சவியின் மனம் புரிந்திருந்ததால், அக்காவிற்கு எடுத்துக் கூறி, அவரைச் சம்மதிக்க வைத்து விட்டார்.

"என்னக்கா! இந்தக் காலத்துல இப்படிப் பேசறே... அதுவும் நீ ஒரு புரபசர்... சவி போய் வெளிநாட்டில படிச்சிட்டுத்தான் வரட்டுமே! ஒரு வருஷம் நிமிஷமா ஓடிடும்! அவ ஆசையை நாம ஏன் கெடுக்கணும்... அதுலதான் அவளுக்கு நிம்மதியும் சந்தோஷமும் கிடைக்கும்னா ஒத்துக்கலாமே...!"



பலவிதமாகப் பேசி, அவர் மனதைக் கரைத்து விட்டார்.

பிறகு, பாஸ்போர்ட் விசா எல்லாவற்றையும் ஏற்பாடு செய்தபோது, கடைசியாக ஒருமுறை சபரீஷை சந்தித்தாள் சவி.

* * *

அன்று, ஊருக்குச் செல்வதற்காக தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு, சூப்பர் மார்க்கெட்டிலிருந்து வெளியே வந்தபோது, காரை நிறுத்திவிட்டு எதிரில் வந்து கொண்டிருந்தான் அவன்.

இருவருக்குமிடையே முன்பு ஜனித்திருந்த மெல்லிய புரிதல், இப்போது தொலைந்து போயிருப்பதை அவளால் உணர முடிந்தது.

அவளுக்குள் சூல் கொண்டிருந்த வார்த்தைகளை ஜனிக்க விடாமல் செய்தன... அவனுடைய ஒற்றைப் பார்வையில் தெரிந்த கோபமும், தீவிரமும்!

அவளருகில் வந்தவுடன் அவளுடைய கையை இரும்பாய்ப் பிடித்து நிறுத்தினான் அவன்.

"ஹலோ... என்ன...! ஃபாரின் போகப் போறதாக் கேள்விப் பட்டேன்..." என்றான் உணர்ச்சிகளைத் தொலைத்த குரலில்!

"ம்... இதுதான் இப்போதைய சூழ்நிலைக்குச் சரின்னு எனக்குத் தோணுது... எனக்கும் ஒரு மாற்றம் தேவையா இருக்கு!"

"ஓஹோ! மத்தவங்க இதயத்தை ஒடிச்சிப் போடறவங்களுக்கும் ஒரு மனசு இருக்கு... அதுக்கும் ஒரு மாற்றம் தேவையாயிருக்குன்னு நினைச்சா... வேடிக்கையாத்தான்

இருக்கு... எனிவே ஹேப்பி ஜர்னி! ஆனா ஒண்ணு... நான் காத்திட்டிருப்பேன்...''

திக்கென்று நிமிர்ந்தவள், ''சாரி... எனக்காக யாரும் காத்திருக்க வேணாம்'' என்றாள் உறுதியான குரலில்.

''ஏன்...? உன் லைஃப் பார்ட்னரை அமெரிக்காவிலேயே தேர்ந்தெடுத்துடப் போறியா!'' நக்கலாகக் கேட்டான் அவன்.

ஒரு வலிமை வாய்ந்த புயலுக்குப் பின் வரும் அமைதியைப் போல், அவனுடைய கேள்விக்கு அவளின் மௌனமே பதிலாய்!

அவள் தர்மசங்கடத்துடன் தலை குனிந்தபோது, ''நான் நினைச்சதை சாதிக்கிறவன்... இந்த ஜென்மத்துல எனக்கு மனைவின்னா அது நீதான்! அதை யாராலயும் மாத்த முடியாது...'' அடிக்குரலில் சீறினான் அவன்.

''அதையும் பார்ப்போம்...''

அவள் கூறும்போதே ''சபரி... நீ எங்கேடா இங்கே?'' ஒரு ஆண் குரல் இடை மறித்தது.

சலிப்புடன் திரும்பியவனுடைய முகம் மெல்ல மலர்ந்தது.

''சும்மா ஷாப்பிங் வந்தேன்டா..!'' என்றவன் அவளிடம் திரும்பி ''இவன் துரை... என்னோட காலேஜ் மேட்... இப்ப என் பார்ட்னர்! நாங்க ரெண்டு பேரும் சேர்ந்துதான் ஃப்ளாட் ப்ரமோட் பண்றோம்...'' என்று அறிமுகப்படுத்தினான்.

பிறகு 'இவங்க சைந்தவி! எங்க ஃபேமிலி ஃப்ரெண்ட்...'' என்றபோது அவனும் நட்புடன் கை நீட்ட, அவளும் பற்றிக் குலுக்கினாள்.



''சரி... நாம கிளம்பலாமா?'' கோபத்துடன் வந்த சபரீஷின் குரல் அவளுக்கு எதையோ உணர்த்துவதாய்!

பிறகு அனைவரிடமும் விடைபெற்று வெளிநாட்டிற்குச் சென்றவள், ஒரு வருடப் படிப்பை முடித்து அங்கேயே ஒரு ஸ்டார் ஹோட்டலில் வேலைக்குச் சேர்ந்து விட்டாள்.

அப்படிப் படிக்கும்போது அறிமுகமானவள்தான் கேதரின்.

ஆரம்பத்திலிருந்தே இருவருக்கும் இடையில் ஆழமான ஒரு நட்பு இழையோட ஆரம்பிக்க, இருவரும் ஒன்றாக வீடு எடுத்துத் தங்கியிருந்தனர்.

இப்போது, அவளைப் பிரிந்து தான் மிகவும் கஷ்டப் படுவதாக கேதரின் ஈமெயில் கொடுத்திருக்கிறாள்.

இந்தியக் கலாச்சாரத்தில் மிகவும் நாட்டமுள்ளவள் அவள்!

அவளும் இந்தியப் பெண்தான் என்றாலும், அவளுடைய தாய் தந்தையின் காலத்திலேயே அங்கு போய் செட்டில் ஆனது... அவர்களுடைய குடும்பம்!

அவளுடைய உறவினர்கள் இன்றும் தமிழ்நாட்டில் இருப்பதாகக் கூறுபவள், இந்தியாவிற்கு வர வேண்டும் என்று மிகவும் ஆசைப்படுவாள்...

எப்படியாவது இந்த வருடக் கடைசிக்குள் தமிழ்நாட்டிற்கு வர முயற்சிப்பதாக நேற்று ஈமெயில் அனுப்பியிருந்தாள்.

மேலே விடாது சுற்றிக் கொண்டிருந்தாலும், ஒரு நேரத்தில் தரையில் இறங்கும் விமானமாய் சவியின் நினைவுகள் சட்டென்று தரையிறங்கின.

ஒரு பெருமூச்சுடன் அப்படியே உறங்கிப் போனாள் அவள்!

மூன்று வருடங்களுக்கு முன் நடந்திருந்தாலும்... சற்று முன் நடந்த முக்கியமான நிகழ்வைப் போல்... சபரீஷின் நினைவுகள் அவளைப் பெரிதும் சலனப்படுத்தியிருந்தன.

மறந்து விட்டோமென்று நினைத்திருந்த முதல் காதல், ஆலமரமாய் செழித்து வளர்ந்து வேர்பிடித்திருப்பதை, ஒரு வித இயலாமையுடன் இன்று தான் உணரத் தொடங்கியிருந்தாள் அவள்.

## 10

மறுநாள், அதிகாலைப் பொழுது நிர்மலமாய்ப் புலர்ந்தது.

விழித்தவுடனேயே சோம்பலாய் சபரீஷின் நினைவுகளை உள்ளே புக அனுமதித்தது.

நிமிடங்கள், அவன் நினைவுகளுடன் இதமாய்க் கை கோர்த்தன.

அன்று மாலையில் அனைவரும் கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பும்போது, மல்லிகா அவளையும் அழைத்துக் கொண்டு வள்ளியின் வீட்டிற்குச் சென்றார்.

உள்ளே நுழைந்தவுடனே கேட்ட குழந்தையின் சப்தம், சவிக்குள் ஏனோ மெலிதாய்த் தாக்க, யோசனையுடன் உள்ளே சென்றாள் அவள்.

ஹாலில் ஒரு சிறு குழந்தையுடன் விளையாடிக் கொண்டிருந்தார் ஜெகதீசன்.



அவர்களைக் கண்டதும், ''வள்ளி! இங்க யார் வந்திருக்காங்கன்னு பாரு... வாங்க... வாங்க...'' என்று உற்சாகத்துடன் வரவேற்றார்.

பிறகு அங்கு வந்த வள்ளியும், ''வாடி மல்லிகா! வாம்மா சவி! மதியம்தான் சபரி ஊரிலே இருந்து வந்தான்... குழந்தையையும் அழைச்சிட்டு வந்திருக்கான்... நானே இவளைத் தூக்கிட்டு வந்து உன்கிட்ட காண்பிக்கணும்னு இருந்தேன்'' புன்னகையுடன் கூறினார்.

தான் வெளிநாட்டிற்குப் போன பிறகு, ராதுவிற்குத் திருமணம் என்று அம்மா கூறியது நினைவில் வந்தது.

அப்போது மகிழ்ந்தாலும் சபரீஷின் நினைவில் பெரிதும் உடைந்து போனாள் அவள்.

இன்று அவன் குழந்தையைப் பார்க்க நேரிட்ட போதோ, மணல் வெளியாக வறண்டு போனது மனது.

அப்படியே ராதுவின் சாயலில் இருந்த குழந்தையை அவளால் ஒதுக்கவும் முடியவில்லை. இளமைக் கால நட்பின் சுவடுகளை மறக்கவும் முடியவில்லை.

அவளை மெதுவாகத் தூக்கி மடியில் வைத்து விளையாடியபடி, ''இவ பேரென்ன ஆண்ட்டி?'' ஆவலுடன் கேட்டாள்.

'''இனியா'ம்மா! எங்கே... இனிமையா இருக்க வேண்டிய சின்ன வயசில இப்படி அம்மாவை இழந்துட்டு நிக்குதே!''

அவர் வேதனையுடன் கூறியதும், புலன்கள் சட்டென்று உறைந்துவிட, மொழி புரியாதவளைப் போல் திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சவி.

"ஆன்ட்டி..? நீங்க என்ன சொல்றீங்க?" தவிப்புடன் கேட்டான்.

"உனக்குத் தெரியாதா? ராது இறந்து போய் எட்டு மாச மாகுது... இவளுக்கு மூணு மாசமா இருக்கும்போதே அவ ஒரு ஆக்சிடெண்ட்டுல இறந்து போயிட்டா! அப்புறம் கொஞ்ச நாள், இனியா ராதுவோட அம்மா வீட்டிலதான் வளர்ந்தா... இப்ப அவங்கம்மாவுக்கும் ரொம்ப உடம்பு முடியலை... பாலாஜி வேற கல்யாணம் முடிஞ்சி டெல்லிக்குப் போயிட்டான்... அவனுக்கும் குழந்தை இருக்கு... அதனால சபரியே அவளைத் தூக்கிட்டு வந்துட்டான்" என்றார்.

சவிக்குள், புயலடித்து ஓய்ந்தது போலிருந்தது.

மனதிற்குள் ராதுவின் இழப்பு பலமாய்த் தாக்க, எதிர்பாராத இந்தச் செய்தி அவளுக்குள் பெரும் வேதனையையும், துக்கத்தையும் கிளர்ந்தெழச் செய்தன.

இதயம் முரசாய் துடிக்க, விழிகள் கரைந்தன. மெல்ல மெல்ல இமைகள் கனக்க ஆரம்பித்து, கண்ணீர் சரமாய் கன்னங்களில் இறங்கிற்று!

"ராது..." இதழ்கள் தழுதழுக்க, உடைந்து போய் அமர்ந்திருந்தவளிடமிருந்து குழந்தையை வாங்கினார் மல்லிகா.

"நான்தான் உனக்குச் சொல்லலை... மூணு வருஷம் கழிச்சி வந்திருக்கே! ஏன் வந்தவுடனே கெட்ட செய்தி சொல்லணும்னு மறைச்சிட்டேன்..." மெதுவாகக் கூறினார்.

மனதிற்குள் கனமாய் ஒரு இரும்பு குண்டு மையம் கொள்ள, கண்கள் கசிய நிமிர்ந்தபோது, எதிரில் சபரீஷ் நின்றிருந்தான். கருங்கல் சிற்பமாய் அவன் உருவம்!

* * *



மூன்று வருடத்திற்கு முன்பு எப்போதும் உற்சாகத்தின் மறு வடிவமாய் இருப்பவன், இன்று ஏனோ இறுகிப்போய் தெரிந்தான்.

அவளைக் கண்டதும், அவன் விழிகளில் சிறு மின்னல் பூத்தாற் போல்...

ஆனால் அது உடனே மறைந்துவிட, சிறு முறுவலுடன் அவர்களை வரவேற்றான்.

அவளைக் கண்டதும் மனதிற்குள் சட்டென்று ஒரு பூ மலர்ந்து அவனறியாமலே மணம் பரப்பியது... மென்மையாய் இதயம் வருடியது!

தன்னிடமிருந்த நேசத்தை எல்லாம், தன் இதய தேவதைக்காக அர்ப்பணித்துவிட்டு, இன்று வறண்டுபோய் தான் காத்திருப்பது புரிந்தது.

உடனே அவளுடன் தனிமையில் பேச வேண்டும் போலிருந்தது.

ஆற்றின் கரை உடைக்கும் வெள்ளமாய்... மனக்கரை உடைத்தது, காதல்!

ஆனால், ஊடலின் உயிரெழுத்தாய் மாறி இருந்தது இதயம்!

"என்னப்பா சபரீஷ்... எங்களை எல்லாம் மறந்திட்டியா! எப்படி இருக்கே.. பாத்து ரொம்ப நாளாச்சு?" மல்லிகா விசாரித்தார்.

"ஹூம்... உங்க எல்லாரையும் என்னால மறக்கவே முடியாது ஆன்ட்டி! எப்படி இருக்கீங்க?"

"நல்லா இருக்கேன்ப்பா! இப்ப சவி வந்துட்டாளா... ரொம்பத் தெம்பா இருக்கேன்..."

''அவங்க... திரும்பவும் அமெரிக்காவுக்குப் போகலையா?'' ஒரு விலகல் தன்மை தெரிந்தது அவன் குரலில்!

''இல்லைப்பா! நாங்கதான் போக வேண்டாம்னுட் டோம்... எங்க குடும்பத்துக்குன்னு இருக்கறவளே இவ ஒருத்தி தானே... இவளை அங்கே தனியா விட்டுட்டு இங்கே வயத்துல நெருப்பைக் கட்டிக்கிட்டு என்னால இருக்க முடியலை... அதான் வர சொல்லிட்டோம்...''

''ம்... மத்தவங்க நெஞ்சிலே தணலை வாரிக் கொட்டிட்டுப் போறதுதான் இவளுக்கு கை வந்த கலையாச்சே...'' மெதுவாக முணுமுணுத்தான் அவன்.

புரியாமல், ''என்னப்பா..?'' என்றவரிடம், ''நீங்க பேசிட் டிருங்க ஆன்ட்டி... நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வந்திடறேன்'' கூறிவிட்டு அவளைத் திரும்பியும் பார்க்காமல் விருட்டென்று வெளியில் சென்றான் அவன்.

ஆனால்... மனமெங்கும் சவியே நிறைந்திருந்தாள்.

''நான்தான் அவளைத் தவறாக புரிந்து கொண்டு காத்திருக்கிறேனோ! என்னைப் போலவே நீயும் சிந்தனை செய் என்று எதிர்பார்ப்பது கூட ஒரு வகையில் அடக்கு முறையின் வெளிப்பாடோ?''

புரியாத புதிராய், அவன் மனதில் கேள்விகள் வந்தன.

தன் காதலை புறக்கணிக்கும் உரிமையை யார் அவ ளுக்குத் தந்ததென்ற கோபம்... பெரு நெருப்பாய்...!

* * *

சவியின் மனமோ, இரண்டாகப் பிளப்பதுபோல் வலிக்க ஆரம்பித்தது.



''நான் ஒன்று நினைத்தால், வாழ்க்கை வேறு விதமான கோணத்தில் பயணிப்பது புரிந்தது.

அந்தக் குழந்தையைப் பார்த்தால் பரிதாபமாய்..!

சிறு வயதில் தாயிடமிருந்து கிடைக்க வேண்டிய அன்பும் அனுசரணையும் பறிக்கப் படுவது எவ்வளவு கொடுமை என்று எண்ணும்போதே, இனியா மீது இனம் புரியாத ஒரு பாசம் சுரந்தது.

'இவ்வளவு சீக்கிரம் இறப்பதற்கா, அவ்வளவு வீம்பாய் சபரீஷை நீ அடையத் துடித்தாய்' என்ற கேள்வி பூதாகர மாய்..!

அந்தக் குழந்தையை அள்ளி எடுத்து மார்போடு அணைக்க, அது எதுவோ புரிந்தாற்போல் ''ங்கா'' என்றது.

அந்த நிமிடம் தனக்கும் அவளுக்குமிடையே கண் ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு பாசம் இழையோடுவதை உணர்ந்தாள் சவி.

ராதுவின் ஞாபகம், மனதை வேதனையுடன் நிறைத்தது.

சபரீஷும் அப்போது சவியைப் பற்றியே எண்ணியபடி நடந்து கொண்டிருந்தான்.

இரவு நேர மெல்லிய வெளிச்சம், வீதியெங்கும் மெலி தாய்ப் பரவியிருந்தது.

வான் வெளியில் விரவித் தெரிந்த புல்வெளியாய் நட்சத்திரங்கள் சிதறிக் கிடந்தன.

இன்றுவரை, அவளுக்காகத் தான் காத்திருப்பது நினைவு வந்தது.

சக மனிதர்களிடம் நிஜமான ப்ரியமும் அக்கறையும் உடையவனை வாழ்க்கையைப் பற்றிய நம்பிக்கைகளும்

லட்சியங்களும் அதிகமாகக் கொண்டவளை... சுதந்திரமாய் சிந்திப்பவளை... சமுதாய அக்கறை மிகுந்தவளை... தீராத உற்சாகமும் உத்வேகமும் நிறைந்தவளை... சுலபத்தில் மறக்க முடியவில்லை.

அவளால் மட்டுமே, தன் வாழ்க்கையை முழுமையாக்க முடியுமென்று தோன்றியது.

# 11

அன்றிரவு சபரீஷுக்கும் இயல்பாக உறங்கவே முடியவில்லை...

உறக்கத்தின் வரவின்றி இதயம் வெகுவாய் அலைபாய்ந்தது.

சவியைப் பார்த்தவுடன் மீண்டும் பழைய ஞாபகங்கள் மனதில் துளிர்க்க ஆரம்பித்தன.

காதல், தன் மனதில் வரைந்த வடு, இன்னும் அழியாமலிருப்பது புரிந்தது.

தான் அவளை விரும்பியதும், உணர்வுகளில் இனிமை பரவ மலர்ச்சியுடன் அவளுக்காக ஏங்கிக் காத்திருந்ததும்... ஞாபகம் வந்தன.

திடீரென்று ராது அவனை நேசிப்பதை அறிந்ததும், மன உளைச்சலுக்கு ஆளாகி சவிக்கு உடல்நிலை சரியின்றி போனதும்... அவனை வைராக்யமாக மறுத்ததும்... பிறகு வெளிநாட்டிற்கு வேலைக்குச் சென்றதும்... போவதற்கு முன் ராதுவை மணந்து கொள்ளச் சொல்லி அவன்



வற்புறுத்தியதும்... தன் கோப மறுப்பும்... எல்லாம் கனவு போல் மனக் கண்ணில் உலா வந்தன.

பிறகு... இந்த மூன்று வருட காலத்திற்குள் எவ்வளவோ நடந்து விட்டதை எண்ணிப் பெருமூச்சுடன் படுத்திருந்தான் சபரீஷ்.

வெளியே இனியா அழும் ஓசையும் வள்ளி அவளைச் சமாதானப்படுத்துவதும் கேட்டது.

மனம் ஒரு முடிவிற்கு வந்திருந்தது.

வெகு நாட்களுக்குப் பிறகு முதன் முறையாக நிம்மதியுடன் உறங்க ஆரம்பித்தான் அவன்.

மறு நாளைய விடியல், அவளுடைய சுகமான நினைவுகளுடன் புலர்ந்தது.

* * *

அன்று மாலை, கோவிலுக்குச் சென்றிருந்தபோது வள்ளியே அவனிடம் ஆரம்பித்தார்.

"சபரி... நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைச்சிக்க மாட்டியே? மனுஷனாப் பிறந்த ஒவ்வொருத்தருக்கும் ஒரு துணை கட்டாயம் வேணும்! நாம அழும்போது அழ... சிரிக்கும்போது ஆனந்தப்பட... கஷ்டத்துல இருக்கும் போது சாஞ்சுக்க ஒரு தோள் வேணும்... ஏன்ப்பா உன் மனசை நீ மாத்திக்கக் கூடாதா? இப்படியே இருந்திட முடியாதே!"

அவரிடமிருந்து நெகிழ்ச்சியும் கனிவுமாய் வார்த்தைகள் வந்தன.

"உனக்குன்னு ஒருத்தி வேணும்பா... அது ஏன் நம்ம சவியா இருக்கக் கூடாது? நான் முன்னாடியே மனசுல நினைச்சிருந்தது தான்... அவ ஃபாரின் போயிட்டா! அப்புறம் என்னென்னவோ நடந்து போச்சு! இப்பவாவது நான் சொல்றதக் கேளுப்பா!"

ஒரு தாயின் பரிதவிப்பும், கரிசனமும் அவர் வார்த்தைகளில் நிறைந்திருக்க, சட்டென்று நெகிழ்ந்தது சபரீஷின் மனது!

இதுவரை அவர் தன்னிடம் எதுவுமே கேட்டதில்லை என்பதும் ஞாபகம் வந்தது.

தனக்கும், தாய் மடியாய் ஸ்வீகரித்து தன்னை அமைதிப் படுத்த சவியின் துணை கட்டாயம் வேண்டுமென்பதையும், அந்த நிமிடம் உறுதியாய் உணர்ந்தான் அவன்.

ஒரு முடிவுடன் "சரிம்மா... அவளுக்கு விருப்பமிருக்கான்னு கேளுங்க.. எனக்கு எந்த அப்ஜெக்‌ஷனும் இல்லை...! ஆனா அதுக்காக ஒரு லிஸ்ட் போட்டுப் பொண்ணு பாக்க ஆரம்பிச்சிடாதீங்க... சவின்னா மட்டும்தான் எனக்கு ஓ.கே. புரியுதா?" ஆழ்ந்த குரலில் கூறினான்.

அந்த நிமிடம், தன் சந்தேகம் ஊர்ஜிதப்படுவதை ஒரு விதக் குறுகுறுப்புடன் வள்ளி உணர்ந்தார்.

சபரீஷ், சவியை விரும்பி இருப்பானோவென்ற அவருடைய கணிப்பு, இன்று உறுதிப் பட்டது.

உடனே கிளம்பி அவன் மனம் மாறுவதற்குள், மல்லிகாவின் வீட்டிற்குச் சென்றார் வள்ளி.

அங்கு சைந்தவி வீட்டில் இல்லாதது, அவருக்கு பெரும் வசதியாக இருந்தது...



அவரை வரவேற்ற மல்லிகா, பாட்டியும் பேத்தியும் ஒரு உறவினரின் வீட்டுக் கொலுவிற்குச் சென்றிருப்பதாகக் கூறினார்.

வள்ளி மெதுவாக ஆரம்பித்தார்.

"மல்லிகா... நான் நேரிடையாகவே கேக்கறேன்... சவியை சபரிக்குக் கல்யாணம் செய்யலாம்னு நானும் எங்க வீட்டுக்காரரும் ஆசைப்படறோம்... உன் முடிவும் சவியோட விருப்பமும் தெரியணும்... சண்முகத்துகிட்டயும், அம்மாவோடயும் கலந்து பேசி உங்க முடிவைச் சொல்லு!" தயக்கத்துடன் முடித்தார்.

உடனே மகிழ்ச்சியுடன் அவருடைய கையைப் பிடித்துக் கொண்டார் மல்லிகா.

"வள்ளி! ரொம்ப சந்தோஷம்! நானும் முன்னாடியே மனசில முடிச்சுப் போட்டு வச்சிருந்த ஒரு விஷயம் தான் இது... நீயும் கேக்கலை... சபரீஷுக்கும் எதுவும் இன்ட்ரஸ்ட் இருக்கற மாதிரித் தெரியலை... இவங்க ரெண்டு பேரும் எப்பப் பாரு சண்டை போட்டுட்டே இருப்பாங்களா! நானும் விட்டுட்டேன்... ஆனா கல்யாணம்னாலே சவி ஓடறாளே... நான் அவகிட்ட பேசிப் பாக்கறேன்" என்றபடி டிபன் காபி கொடுத்து தோழியை அனுப்பி வைத்தார்.

* * *

அன்றிரவு, மொட்டை மாடியில் அமர்ந்து சாப்பிட்டபடி குடும்பத்தினர் அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

அன்பும், பாசமும் இழையோட அவர்களின் அரட்டை அரங்கம் பல விஷயங்களில் சென்று களை கட்ட ஆரம்பித்தது.

ஆனால், அன்று மல்லிகா மட்டும் ஏனோ அமைதி யாகவே இருந்தாள்.

"என்னண்ணி! இன்னிக்கு வழக்கத்துக்கு மாறா ரொம்ப அமைதியா இருக்கீங்க? உடம்பு ஏதும் சரியில்லையா?" அக்கறையுடன் விசாரித்தாள் வளர்மதி.

ஏதோ கனவிலிருந்து விழிப்பவரைப் போல் நிமிர்ந்தார் அவர்.

"ம்.. ஒண்ணுமில்லை மதி! நம்ம சவியைப் பத்தி தான் யோசிச்சிட்டிருந்தேன். இவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி முடிச்சிட்டா, நான் நிம்மதியா இருப்பேன்... இருபத்து மூணு வயசாகுது... இன்னும் பிடி குடுக்க மாட்டேன்றா! இப்ப கல்யாணம் பண்ணிக்கிட்டா தானே, குழந்தை குட்டின்னு லைஃப்லே செட்டிலாக முடியும்... ஏம்மா நீங்களாவது சொல்லக் கூடாதா?" ஆதங்கத்துடன் கேட்டார்.

"நானே இது பத்தி என் பேத்திகிட்டே இன்னிக்குத் தான் பேசினேன். அவ இன்னொரு வருஷம் போகட்டும் கிறா! என்ன பண்றது! நம்ம காலம் மாதிரியா! இப்ப பொண்ணுங்க ரொம்ப சுதந்திரமா இருக்காங்க... தெளிவும் தீர்க்கமுமா முடிவெடுக்கறாங்க.. அவளுக்கு ஒரு வருஷம் டைம் கொடுப்போம்! அதுக்கு மேல காத்திருக்க வேண்டாம்.. அப்புறம், நாம எல்லோரும் சேர்ந்து முடிவெடுத்துடலாம்! என்ன சண்முகம்... நான் சொல்றது சரிதானே!" கேட்டார் தர்மாம்பாள்.

பலத்த யோசனையுடன், சரியென்று தலையாட்டினார் அவர்.



"இப்ப வந்திருக்கறது நல்ல சம்பந்தம்... அத விட முடியாது. நம்ம வள்ளிதான் சபரீஷுக்கு சவியை கேக்கறா! இதை முடிச்சிடணும்கறது என் அபிப்பிராயம்... நீங்க எல்லோரும் என்ன சொல்றீங்க?"

சட்டென்று நிமிர்ந்த சவியின் விழிகளில், மெல்லிய நீர்ப்படலம்!

"சாரிம்மா... எனக்கு இப்ப கல்யாணம் வேணாம்... ப்ளீஸ்! அவங்ககிட்ட சொல்லிடுங்க..." தீர்மானமாகக் கூறிவிட்டு, எழுந்து வேகமாகக் கீழே சென்று விட்டாள் அவள்.

"பாத்தீங்களாம்மா உங்க பேத்திய... இப்படித்தான் நான் சொல்ற பேச்சே கேக்கறதில்லை... தான் நினைச்சதுதான் நடக்கணும்கிற பிடிவாதம்... இவளை எப்படி மாத்தறது... இவளோட எதிர்காலத்தை நினைச்சா எனக்கு ரொம்ப பயமா இருக்கு..."

அவருடைய கண்களில் கண்ணீர் குளம் கட்டியது.

"சரிம்மா... அவளை விட்டுத்தான் பிடிக்கணும்... நான் பேசறேன்" என்றார் சண்முகம் யோசனையுடன்!

பிறகு, அவர் தனிமையில் அவளிடம் எவ்வளவோ கூறியும் சவி ஒத்துக் கொள்ள மறுத்து விட்டாள்.

அன்றிரவின் தனிமையில், தலையணையில் முகம் புதைத்து யோசித்தபோது அவள் மனம் பாலையாய் வறண்டிருந்தது.

வாழ்க்கையில் திருமணம் என்கிற ஒரு அற்புதமான தருணத்தை தான் இழந்து விட்டது... விரக்தியுடனும் வேதனையுடனும் முகத்தில் அறைந்தது.

# 12

மறுநாள்.. அவளுக்கு கொடைக்கானலில் இருந்து ஒரு இன்டர்வியூவிற்கான கடிதம் வந்திருந்தது.

அன்றையக் கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த தர்மாம்பாள், சைந்தவியின் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருப்பதைக் கண்டவுடன், அவளை அழைத்தார்.

அந்தக் கடிதத்தைக் கண்டவுடன் சவியிடம் ஒரு துள்ளலும் புத்துணர்ச்சியும் வந்தன.

பிரித்துப் படித்தவள், "பாட்டி... ஐ யம் சோ ஹேப்பி! காஞ்சனா சித்தி கிட்ட 'ஈமெயில்'ல என் ரெசயூமை அனுப்பியிருந்தேன்... கொடைக்கானல்லே ஒரு ஸ்டார் ஓட்டல்லேருந்து இன்டர்வியூ லெட்டர் வந்திருக்கு... இது மட்டும் கிடைச்சிடுச்சின்னா, அப்புறம் நானும் காஞ்சனா சித்தி கூடவே போய்த் தங்கிடுவேன்..." மகிழ்ச்சியுடன் கூறினாள்.

அதைக் கேட்டபடி வந்த மல்லிகா, "ஆமாம்... அவ ஒருத்தி அம்மா பேச்சையும் கேக்காம கல்யாணமும் பண்ணிக்காம, பழைய காதலனையே நினைச்சிட்டுப் பிடிவாதமா இருக்கா... அது பத்தாது! நீயும் அவளோடவே போய் இருந்து எங்களைப் புரிஞ்சுக்காம நடந்துக்கறேன்றே... அப்படித்தானே!" கோபத்துடன் கேட்டார்.

"அம்மா! எனக்குத்தான் ஒரு வருஷம் டைம் குடுத்திருக்கீங்க இல்லே... அதுக்குள்ளே எவ்வளவோ மாற



லாமே..! என்னை வாழ்த்தி அனுப்பி வைங்களேன்... ப்ளீஸ்!"

ஓரக் கண்ணால் சண்முகத்தையே பார்த்தபடி கூறினாள்.

"அக்கா... சவி சொல்றதும் சரிதான்... இத்தனை நாள் பொறுத்தோம்... இந்த ஒரு வருஷம் பாப்போம்! அதுக்கப்புறம் நானே ஒரு நல்ல மாப்பிள்ளையாப் பாத்து அவளுக்கு ஜாம் ஜாம்னு கல்யாணத்தை முடிச்சி வைக்கிறேன்" என்றார்.

"ம்... மாமாவும் மருமகளும் பேசி வச்சிட்டு ப்ளான் பண்ணிட்டீங்க.. சரி...!"

அரை மனதோடு அவளைக் கொடைக்கானலுக்கு அனுப்ப ஒத்துக் கொண்டார் மல்லிகா.

* * *

அன்று மாலையே, ஆர்வத்துடன் திருமண முடிவைத் தெரிந்துகொள்ள வந்த வள்ளி, இதை அறிந்ததும் ஓய்ந்து போனார்.

"சபரி மனசார கல்யாணத்துக்கு சரின்னு சொன்னது... சவியை மணக்க மட்டும்தான்... இப்ப நான் அவன்கிட்ட எப்படிப் பேசுவேன்..?"

தவிப்புடனும் பெரும் அலைப்புறுதலுடனும் கூறிவிட்டு அவர் சென்றபோது மல்லிகாவிற்குப் பரிதாபமாய்... மகளின் மேல் கடும் கோபம்கூட வந்தது!

சவி, ஊருக்குக் கிளம்பும் நாளும் வந்தது.

கொடைக்கானலுக்குக் கிளம்புவதற்கு முதல் நாள் கோவிலுக்குப் போய்விட்டு வள்ளியின் வீட்டிற்குச் சென்றபோது, சபரீஷ் சென்னைக்குச் சென்றிருந்தான்.

தூளியில் இனியா தூங்கிக் கொண்டிருக்க, இனி அவளைத் தாங்களே வளர்க்கப் போவதாக ஜெகதீசன் கூறினார்.

சவியிடம், "இனியா இருக்காளே... அவளை வளர்க்கற பொறுப்பை வேற நாம சுமக்கணுமேன்னு நீ பயப்பட வேண்டாம்மா... சபரிக்கு நிறைய பிசினஸ்.. ஊர் ஊரா சுத்திட்டிருப்பான்... அதனால இவளை நாங்களே வளர்க்கறதா முடிவு பண்ணியிருக்கோம்... உன்னோட இந்த முடிவுக்கு இனியாதான் காரணம்னா, அத நீ மறு பரிசீலனை செய்யலாம். அவளால உன் எதிர்கால வாழ்க்கைக்கு எந்தத் தொந்தரவும் இருக்காது" சோர்வுடன் கூறினார்.

மெதுவாக அந்தத் தூளியை விலக்கி, இனியாவை வாஞ்சையுடன் முத்தமிட்டாள் சவி.

"சரி... அங்கிள்... நீங்க என்னைத் தப்பா புரிஞ்சிட்டிருக்கீங்க... எனக்கு குழந்தைங்கன்னா ரொம்பப் பிடிக்கும்.. அவங்க, இறைவன் மனுஷனுக்குத் தந்த பரிசு.. என் மறுப்புக்கு சத்தியமா இவ காரணமில்லை. இன்னும் கல்யாணம்கிற ஒரு கமிட்மெண்ட்டுக்கு என் மனசு ரெடியாகலை..! ப்ளீஸ்.. என்னைப் புரிஞ்சிக்கங்க!" சிறு வேதனையுடன் கூறிவிட்டு வெளியேறினாள்.

"பாத்தீங்களா அண்ணா? எப்ப கேட்டாலும் இப்படித் தான்... நாங்க எல்லாரும் இப்படியா இருந்தோம்..."

"அதெல்லாம் அந்தக் காலம் மல்லிகா! இப்ப இருக்கற ஜெனரேஷனே வேற... விட்டுத்தான் பிடிக்கணும்!" தேறுதல் கூறி அனுப்பி வைத்தார் ஜெகதீசன்.

* * *



அந்தப் பாசக் கூட்டிலிருந்து தனிப் பறவையாய் அவள் விடைபெறும் நாளும் வந்தது.

பேருந்தில் சென்று மலைமகளின் மடியில் சண்முகத்தின் துணையுடன் இறங்கினாள் அவள்.

கொடைக்கானல்! இயற்கை அழகைத் தன் மடியில் ரம்யமாய் சுமந்திருக்கும் அந்தப் பசுமை பூமியில் கால் வைத்தபோது, சவியின் மனம் பெரும் உற்சாகமாய்...!

பிறகு ஒரு வாடகைக் காரைப் பிடித்து இருவரும் காஞ்சனாவின் வீட்டிற்குச் சென்றனர்.

வெகு நாட்களுக்குப் பிறகு, அவள் மனதிலும் கவிதை வந்தது.

மனதில் புதைந்திருந்த கற்பனை இழைகள், கவிதையாய் நெய்யப்பட்டு வெளி வந்தன.

பாரதியின் காணி நிலம் வேண்டும்போல், தானும் கல்லூரி காலத்தில் ஒரு கனவு பூமி வேண்டிக் கவிதை எழுதியது அந்த நிமிடம் நினைவு வந்தது.

சபரீஷைத் தன் மனம் கவர்ந்த மன்னவனாய் வரித்து, அதில் தீட்டியிருந்த வரிகள்... இன்று கனவு நேசமாய்!

**கனவு பூமி வேண்டும்!**
**கனவு பூமியாய்...**
**மலைமகளின்**
**மடி வேண்டும்!**
**மாந்தர் தம் கைப்படாத**
**அழகிய மலர்களுடன்...**
**அம்மலர்களின் செவிகளில்**
**காதல் வேதம் ஓதும்**
**வண்ணத்துப் பூச்சிகளுடன்...**

எங்கிருந்தோ
தேவகானமிசைக்கும்
பறவைகளுடன்...
மனிதத் தடங்களற்ற
மவுனத்துடன்...
ஒரு கனவு பூமி வேண்டும்!!
அங்கே...
மெல்லிய பனி படர்ந்த
தென்னிய ஏரிக் கரையில்...
மென் காற்று நிறைந்த
மூங்கில் குடில் ஒன்று
வேண்டும்!
தூரத்தே தொடர்களாய்...
மலைமகள்
அரணாய் நிற்க...
அதன் நடுவே
சிரித்துச் சிதறும்
அருவிப் பெண்ணும்
வேண்டும்!
வேண்டாம் உணவு!
செவிக்கு உணவாய்...
மென்மையான
செந்தமிழ்ப் பாடல்கள்
வேண்டும்!
வேண்டாம் கனவு!



விழிகளின் கனவாய்...
பாரதியின்
புதையல் கவிதைகள்
வேண்டும்!
இரவிலதை வாசிக்க...
முழு நிலவுடன்
மெழுகுவர்த்திகளும்!
இதயத்தை வாசிக்க...
என்
மனம் கவர்ந்த
மன்னவனும்!

கல்லூரியில் படிக்கும்போது இந்தக் கவிதை எழுதி அந்த வருடத்திற்கான முதல் பரிசு வாங்கியது நினைவு வர, தன் கனவு பூமிக்கே வந்துவிட்ட ஒரு உணர்வு கிளர்ந்தெழுந்தது.

சட்டென்று எண்ணங்கள் கலைய, புதிதாக வேலையை ஏற்றுக் கொள்ளப் போகும் மகிழ்ச்சியும், வெகு நாட்கள் கழித்து காஞ்சனா சித்தியைப் பார்க்கப் போகும் ஆவலும் சேர்ந்து, அவளைப் பரபரக்கச் செய்தன.

அவள் 'செல்'லில் தகவல் தெரிவித்திருந்ததால் வாசலிலேயே காத்திருந்த காஞ்சனா, ஓடி வந்து அவளை அணைத்துக் கொண்டார்.

காரிலிருந்து இறங்கியதுமே, முப்பத்து மூன்று வயதிலும் இளமை தொலையாமல் இருபத்தைந்து வயது பெண்ணைப் போல் நின்றிருந்த சித்தியைப் பார்த்த சவிக்கு, பிரமிப்பாய்!

"சித்தி... நீங்க மாறவே இல்லை... அப்படியே இருக்கீங்க... அதுவும் பத்து வருஷமா..?" என்றபடி அவர் தோளில் செல்லமாகச் சாய்ந்து கொண்டாள்.

"ஆனா நீ மாறிட்டே சவி! எவ்வளவு அழகான முடி உனக்கு... இப்படி தோள் வரைக்கும் வெட்டி விட்டுட்டிருக்கியே..."

சலுகையுடன் கேட்டுவிட்டு முன்னுச்சியில் முத்தமிட்டார்.

அப்போது, காரின் மறுபுறமிருந்து இறங்கிச் சாமான்களை எடுத்து வைக்கும்படி டிரைவரை ஏவிக் கொண்டிருந்த சண்முகத்தைக் கண்டதும், அவர் முகம் சட்டென்று இறுகியது.

பிறகு உள்ளே வந்த சண்முகம், குற்ற உணர்வுடன் காஞ்சனாவின் கையைப் பிடித்துக் கொண்டார்.

"என்னை மன்னிச்சிடு காஞ்சனா! அப்போ ஏதோ ஒரு வீம்பு மனசில.. உன் காதலுக்கு ஒத்துக்காம எதிர்த்து நின்று உன்னை தனி மரமா நிக்க வச்சிட்டேன். நீயும் ஊருக்கு வரதே இல்லை... என் மனசு குற்ற உணர்ச்சியால கொஞ்சம் கொஞ்சமா செத்துட்டிருக்கு... நான் வேணா அவர் எங்க இருக்காருன்னு தேடிக் கண்டு பிடிச்சி உங்களைச் சேத்து வைக்கட்டுமா?" தழுதழுத்த குரலில் கேட்டார்.

சட்டென்று அவருடைய பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக் கொண்டார் காஞ்சனா.

"வேண்டாம்.. இப்ப அவர் எங்கே இருக்காருன்னே எனக்குத் தெரியாது.. அவரை ஆள் வைச்சி அடிச்சிப்



போட்டுட்டு.. என் தங்கச்சி பக்கம் திரும்பினா கொன்னுடுவேன்னு மிரட்டி அனுப்பினதுக்கு அப்புறம் எனக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.. அதனால தானே நான் யாருடைய துணையும் வேணாம்னு இங்கே வந்து தனிமைத் தவமிருக்கேன்.. அத யாரும் கெடுக்க வேண்டாம்.. பத்து வருஷமாச்சு.. இப்ப அவர் எங்கேயாவது யாரையாவது கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியா இருப்பாரு... அதக் கெடுக்க வேணாம்... அதோட என்னையும் இப்படியே விட்டுடுங்க..."

"அம்மாவும், நானும் உனக்கு எதிரிங்க இல்லை காஞ்சனா! நீ நல்லா இருக்கணும்னு நினைச்சி நாங்க செஞ்சது எதிர் மறையா ஆயிடுச்சி! இன்னும் எங்களை எதிரியாவேதான் பாக்கிறியாம்மா?" குற்றவுணர்வுடன் தழுதழுத்தது சண்முகத்தின் குரல்!

"இல்லை."

"எங்களை மன்னிக்கவே மாட்டியா?"

"ஹூம்! மன்னிப்புங்கறது பல விஷயங்களை வெளியே தெரியாம புதைக்கிற ஒரு ஆயுதம்... இல்லை? ஓ.கே.! உங்களை மன்னிச்சிட்டேன்! நான் எப்பவுமே அநாவசியமா மத்தவங்களைத் துன்புறுத்தறதில்லை... அதனால தப்பிச்சீங்க!"

கசந்த குரலில் கூறிவிட்டுத் திரும்பி, சவியிடம் அவளுடைய அமெரிக்க வாழ்க்கையைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தார் காஞ்சனா.

சித்தியின் வாழ்க்கையில் ஏதோ ஒரு வித காதல் தோல்வி இருப்பது தெரிந்திருந்தாலும், இந்தத் திருப்பத்தை அவள் எதிர்பார்க்கவில்லை.

ஒரு நாள் அவரிடம் இதைப் பற்றிக் கேட்க வேண்டு மென்ற தீர்மானத்துடன் தன் அமெரிக்க வாழ்க்கையைப் பற்றிக் கூற ஆரம்பித்தபோது. அதில் கேதரினும் தவ றாமல் இடம் பிடித்தாள்.

பிறகு, சண்முகம் கனத்த இதயத்துடன் விடைபெற்று ஊருக்குச் சென்று விட்டார்.

அன்றைய பொழுது முழுவதும் அவர்களுக்கே சொந்த மான ஒன்றாய்... ஒரு கூட்டுப் பறவைகளாய், இருவரும் பழைய ஞாபகத்தில் சிறகடித்தனர்.

கடந்த கால வானம், அவர்களைச் சுகமாய் உள்வாங்கிக் கொண்டது.

## 13

மறுநாள் நடந்த நேர்முகத் தேர்வில் அவள் உடனே தேர்வு செய்யப்பட்டாள்.

மறு வாரமே வேலையில் சேரும்படி ஆர்டர் தரப்பட, மனம் சட்டென்று லேசானது போல் ஒரு உணர்வு!

திரும்பி வரும்போது அந்த ஹோட்டலின் பிரம்மாண் டமும், மலை மகளின் சிரசில் கம்பீரமாய் வீற்றிருக்கும் கிரீடம் போன்று நேர்த்தியான அழகுடன் மிளிர்ந்த அந்தக் கட்டடத்தின் எழிலும், மனதை வெகுவாய்க் கவர்ந்தன.

வாசலிலேயே அவளை ஆவலுடன் வரவேற்ற காஞ்ச னாவிடம், அந்த நல்ல செய்தியைக் கூறினாள்.



பிறகு "ஏன் சித்தி... இன்னிக்கு ஸ்கூலுக்குப் போகலை... நான் தான் ஒரு செட் சாவிய எடுத்துட்டுப் போயிட் டேனே!" ஆர்வத்துடன் வினவினாள்.

"இப்ப குவார்டர்லி லீவுடா... பேப்பர் கரெக்ஷன்தான் செய்யறேன்... இன்னிக்கு அதுவும் முடிஞ்சிடும்... ரெண்டு நாள் உன்னோட ஜாலியா ஊர் சுத்தறதுதான் இப்போதைய ப்ளான்! அதுவும் நீ முக்கியமான வருஷம் வந்திருக்கே... இந்த வருஷம் குறிஞ்சிப்பூ பூக்கற வருஷம்... ஊரே குறிஞ்சியால மலர்ந்து நீல தேவதையா சிரிச்சிட்டிருக்கு... எல்லாம் சுத்திப் பாக்கலாம்!

"உனக்காக, நாளையிலிருந்து இரண்டு நாள் ட்யூஷன் பிள்ளைகளுக்குக் கூட லீவு விட்டிருக்கேன்" உற்சாகத் துடன் கூறினார்.

அன்றிரவு பாட்டி வீட்டிற்குப் போன் செய்து அனை வரிடமும் பேசிவிட்டு வைத்தபோது, மனம் ஏனோ குற்ற உணர்வில் தவித்தது.

பிறகு ப்ரௌசிங் செண்டருக்கு சென்று கேதரினுடன் 'நெட் சாட்' செய்துவிட்டுத் திரும்பி வரும்போது, குளிரில் சவியின் இரு கன்னங்களிலும் இளம் சிவப்பு ரோஜாக்கள் பூத்திருந்தன.

அந்த நீண்ட தார்ச்சாலையில் சாரலாய் வருடிய பனிப் பொழிதலை ரசித்தபடியே நடந்து வந்தபோது, இருவ ரிடமும் மௌனமே மொழியாய்..!

மறுநாள், காலையிலேயே இருவரும் கிளம்பி விட்டனர்.

முதலில் குறிஞ்சி ஆண்டவர் கோவிலுக்குச் சென்றனர்.

பிறகு அங்கிருந்து செல்லும் வழியில் மலையிலிருந்து பார்த்தபோது, கீழே பள்ளத் தாக்கில் அழகிய நீலநிறப் பட்டாய் விரிந்திருந்த குறிஞ்சிப் பூக்களின் அழகை ரசித்தபடி ஏரிக்குச் சென்றனர்.

போட்டிங் சென்று விட்டுத் திரும்பி வந்து ஒரு உணவகத்தில் சாப்பிட்டுவிட்டு 'கோக்கர்ஸ் வாக்'கில் நடந்தபடி இயற்கையை ரசித்தனர்.

கீழே விரிந்து தெரிந்த பள்ளத்தாக்கின் பசுமையும் மலைகளின்மேல் செல்லமாய் சயனித்திருந்த மேகங்களின் அழகும் மெய் சிலிர்க்கச் செய்தன.

மலை சார்ந்த குறிஞ்சி நிலப் பரப்பிற்கு, மனதிலுள்ள கவலைகளை எல்லாம் களையச் செய்து இதயத்தை இதமாக்கும் வித்தை தெரிந்திருந்தது.

உடலும் மனமும் இலவம் பஞ்சாய் லேசாகி, மனதிற்குள் வண்ணச் சிறகுகள் முளைத்து விண்ணில் பறக்க வேண்டும் போன்ற ஒரு சுகமான உணர்வு வந்தது.

அங்கிருந்து பில்லர் ராக் சென்று பார்த்துவிட்டு வீட்டிற்கு வரும் போதே இதமாய் குளிரில் சில்லிட்டிருந்த கைகளைத் தேய்த்துக் கன்னத்தில் வைத்துச் சிலிர்த்தாள் சவி.

"இன்னிக்கு நைட் வெளியே "பார்ன் ஃபயர்" எரிய விட்டுக் கொஞ்ச நேரம் உக்காந்திருக்கலாமா சித்தி?" ஆவலுடன் கேட்டாள்.

"ம்... நம்ம எட்வர்ட்டை விட்டு ரெடி பண்ணச் சொல்லலாம்" என்றவர், பக்கத்திலிருந்த வாட்ச்மேன் வீட்டிற்குச் சென்று அவரை அழைத்து வந்தார்.



பிறகு சாப்பிட்டுவிட்டு குளிரை விரட்டும் விதமாகச் சிவப்புக் கொடி காண்பித்துப் போராடியபடி கனிந்து கொண்டிருந்த நெருப்பின் எதிரே இருவரும் அமர்ந்தனர்.

சிறிது நேரம் இரவுப் பூச்சிகளின் ரீங்காரம் மட்டுமே கேட்க, காற்றுடன் சோம்பலாய் ரகசியம் பேசிக் கொண்டிருந்த ஊசியிலை மரத்தின் 'உஸ்' என்ற சப்தத்தை ரசித்தபடி அமர்ந்திருந்தாள் சவி!

பிறகு திடீரென்று நிமிர்ந்தவள், "சித்தி... உங்க காதல்... அது எங்கே ஆரம்பிச்சி எப்படி... ஏன் முடிஞ்சதுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா! நான் ஏதும் தப்பாக் கேட்கலையே?" கண்களில் ஆர்வத்துடன் கேட்டாள்.

இதழோரம் ஒரு வறண்ட புன்னகையுடன் நிமிர்ந்தார் காஞ்சனா.

"தப்பு ஒண்ணும் இல்லை... ஆனா அதத் தெரிஞ்சு இப்ப ஒண்ணும் ஆகப் போறதில்லையேன்னு யோசிக்கிறேன்" என்றார்.

"ப்ளீஸ் சித்தி..."

ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவர், "அது பத்து வருஷத்துக்கு முந்தின கதை சவி! அப்ப நான் திருநெல்வேலியில டீச்சரா சேர்ந்திருந்த புதுசு... என் கூட வேலை பாத்த சேவியரை நான் மனசார விரும்பினேன்... அவரும் அப்படித்தான்.. மூணு வருஷமா தொடர்ந்த எங்க காதல், எங்க ஸ்கூல்லே அரசல் புரசலாத் தெரிய ஆரம்பிச்சது...

ஒரு நாள் அது எங்க அண்ணனுக்கும் தெரிஞ்சிடுச்சி... உடனே அவருக்கு மதம் பிடிச்சிடுச்சி.. சேவியர் வேற 'மதம்'கிற மதம்தான்!

"மதங்கள் எப்பவுமே காதலுக்குத் தடையா இல்லை... மதம் பிடித்த மனுஷங்கதான் அதுக்குக் கொள்ளி வைக்கறாங்கன்னு நான் தாமதமாத்தான் புரிஞ்சிக்கிட்டேன்...

"அவர் கிறிஸ்டியனாச்சே.. இதை எப்படி வீட்டில ஒத்துப்பாங்கன்ற பயத்தோட, மெதுவா அம்மாகிட்டப் பேசி முதல்லே புரிய வச்சப்புறம் அண்ணன்கிட்ட சொல்லலாம்னு நினைச்சப்பதான், ஒரு நண்பர் அண்ணன்கிட்ட எங்க காதலைப் பத்தி சொல்லிட்டாரு... எங்க காதலுக்கு பதிலா எங்க குடும்பமே எதிர்த்து நின்னுச்சு!

"காற்றுக்குத் தடை விதிக்க முடியுமா... அது போலத் தான் காதலும்...! ரெண்டையுமே கண்ணால பாக்க முடியாது.. உணரத்தான் முடியும்!

"எங்க காதலும் தடை தாண்டி யுத்தம் நடந்துச்சு... நான் பிடிவாதமா இருந்தேன்..."

"உங்க மாமாவுக்கு ஜாதிப் பிரச்னை கண்ணை மறைச்சது... ஊர் என்ன பேசும்... நாம ஊரிலே பெரிய மனுஷனாச்சேன்ற பயம் வந்தது! தங்கையோட சந்தோஷமும், எதிர்காலமும் கானல் நீரா மறைஞ்சு போச்சு!

"ஒரு நாள் சேவியரை அடிச்சிப் போட்டுட்டு, அவங்க குடும்பத்தையே மிரட்டிட்டு வந்துட்டாங்க.. அண்ணனோட ஆளுங்க!

"என்னை வீட்டிலேயே சிறை வைச்சாங்க... அப்புறம் தான் தெரிஞ்சது.. சேவியரோட குடும்பமே அந்த ஊரை விட்டுட்டு காலி பண்ணிட்டுப் போயிட்ட விஷயம்!

"அந்த நிமிஷமே நான் ஒரு முடிவெடுத்தேன்!



"இனிமே என் வாழ்க்கையில கல்யாணம்கிற ஒரு விஷயமே கிடையாது..

"அவர் நினைவிலேயே வாழ்ந்திடலாம்னு தீர்மானமாத் தனியா இருக்கேன்...

"இதுதான், நான் உங்க பாட்டிக்கும் மாமாவுக்கும் தந்த தண்டனை!

"புயலுக்கும், மழைக்கும், வெயிலுக்கும் தாக்குப் பிடிச்சி நின்னு காய்ச்சிப்போன மரம் தானே வைரம் பாய்ஞ்ச கட்டையாகுது... அதே மாதிரி என்னை உறுதியாக்கினதும், எனக்கு வந்த சோதனைகள்தான்!

"நம்மைச் சுத்தியிருக்கறவங்களுடைய வீண் பேச்சுக்கும் சொல்லடிகளுக்கும் பயப்படுற ஒரு பெண்ணா நான் இருக்க விரும்பலை.. என் முடிவுல நான் உறுதியா இருந்தேன்...

"என்னடா இவ தனியா இருக்காளே... எத்தனை நாள் இருந்திடுவான்னு ஏளனமாய் பார்த்த சமூகத்தோட பார்வை எல்லாம் கூட, இப்ப மாறி இருக்கு... என்னோட பிடிவாதமான சில கொள்கைகளாலே, இதை சாதிக்க முடிஞ்சிருக்கு..!"

எங்கோ பார்த்தபடி முடித்தபோது, அவர் விழிகளும் தீக்கங்குகளாய் சிவந்து ஜொலித்தன.

அவரின் விழியோரம் கசிந்த நீரைத் துடைத்தவளுக்கு, அவருடைய ஆழ் மனதின் சோகத்தையும் இதுபோல் துடைக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்ற ஏக்கம் பெரிதாய்!

அப்படியே அவர் தோளில் சாய்ந்து, வெகு நேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள் அவள்.

பிறகு இருவரும் உறங்கச் சென்றபோது, மணி பதினொன்று என்றது கடிகாரம்.

மனதிற்குள் இனம் புரியாத வேதனை உலுக்கி எடுக்க, உறங்க ஆரம்பித்தாள், அவள்.

* * *

அன்றிரவு, பலத்த இடி மின்னலுடன் பெய்த மழை அவளுக்குள் நடுக்கமாய்ப் பரவி, பெரும் அலறலுடன் விழித்தெழச் செய்தது.

நல்ல வேளையாக மறு அறையிலிருந்ததால், காஞ்சனாவிற்கு அந்த சப்தம் கேட்கவில்லை.

அவரும் தன் மன பாரத்தை எல்லாம் கொட்டிவிட்ட நிம்மதியில், ஆழ்ந்த உறக்கத்திலிருந்தார்.

வெகு நேரம் உறக்கம் வராமல் புரண்டிருந்த சவி, அலைப்புறுதல் குறைந்து மெதுவாக உறங்க ஆரம்பித்தாள்.

மனிதனுக்கு உறக்கம் கூட இரு நிலைதான் சில சமயங்களில்... விழிகள் உறக்கத்தைத் தழுவினாலும், மனம் உறங்க மறுக்கும் நிலை!

இன்று அதையும் மீறி ஒய்ந்து போய் உறங்கியவளை, விடியல் உசுப்பி எழுப்பியது.

விடிகாலைப் பனியில் நனைந்த புல்வெளி, பசுமையுடன் ஒளிர்ந்தது.

தோட்டத்து மலர்கள் அனைத்தும், அவள் கூந்தல் சேரவே இதழ் விரித்தாற்போல் மலர ஆரம்பித்தன.



# 14

சைந்தவி வெளியே வந்து பார்த்தபோது, குளித்து முடித்துப் புத்துணர்ச்சியுடன் சிறு பெண் போல் அமர்ந்திருந்தார் காஞ்சனா.

''சவி... லேட்டாத் தானே தூங்கினே... அதான் எழுப்ப வேண்டாம்னு எனக்கு மட்டும் காபி கலந்து எடுத்துட்டு வந்தேன்... இரு உனக்கும் எடுத்துட்டு வரேன்.''

அவர் எழுந்தபோது, அவரின் உற்சாகம் அவளையும் தொற்றிக் கொண்டது.

''ஒரு நிமிஷம் சித்தி... ப்ரஷ் பண்ணிட்டு உடனே வரேன்.. தோட்டத்துல உக்காந்து காபி குடிக்கலாமா?'' உற்சாகத்துடன் கேட்டாள்.

பிறகு இருவரும் தோட்டத்திலிருந்த பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஓய்வாக காபி அருந்தியபோது, அந்தத் தருணமே மிக இனிமையாய்..!

சுற்றிலும் பார்வையைப் பதித்தபோது, வானுக்கு ஒட்டடை அடிக்கும் ஊசியிலை மரங்களும்... மரங்களுக்கு நிழல் கொடுப்பது போல் அதன் மேல் அமர்ந்திருக்கும் மேகங்களும்... விடியலுக்கு ஒளி கொடுக்க சோம்பலாய் கண் விழிக்க ஆரம்பித்திருந்த சூரியனும்... நரம்புகளின் நலம் விசாரிக்க வருடிச் செல்லும் குளிர்ந்த காற்றின் ஈரமும், சிலிர்க்கச் செய்தன.

காஞ்சனாவிடம் திரும்பியவள், ''சித்தி... நேத்து நைட் ரொம்ப நேரம் ஆச்சு... எனக்குத் தூக்கமே வரலை...

ரொம்பக் கஷ்டமா இருந்தது... நீங்க அப்புறம் அவரை.. அந்த சேவியர் அங்கிளைத் தேடவே இல்லியா?'' தவிப்புடன் கேட்டாள்.

''எங்கே போய்த் தேடறது சவி? ஒரு வேளை அவருக்குக் கல்யாணமாகி ஒரு குடும்பம் இருந்தா, அந்தக் குடும்பத்தோட நிம்மதியை நான் ஏன் கெடுக்கணும்?'' என்னை மாதிரியே அவரும் கல்யாணம் பண்ணிக்காம காத்திருப்பாருங்கறது நிச்சயமில்லையே...?''

''இதே மாதிரி அவரும் நினைச்சிருந்தா...?''

''தெரியலை சவி... அப்படியே இருந்தாலும் அவருக்குத் தெரிஞ்சிருக்குமே... நம்ம பேமிலி இன்னும் அதே ஊரில தானே இருக்கு... நம்மைப் பத்தி விசாரிக்கிறது சுலபமாச்சே...''

சவிக்கு, அதுவும் சரியென்றே பட்டது.

சிறிது நேர யோசனைக்குப் பிறகு, ''ஏன் சித்தி? ஒரு ஆண், திருமணத்துக்கு அப்புறம் தன் காதல் அத்தியாயத்தை தைரியமாச் சொல்லலாம்... ஆனா பெண்ணுக்கு அந்த சுதந்திரம் இல்லையே... அது ஏன்? இது ஆணாதிக்க சமுதாயம்கிறதினாலயா? 'யு.எஸ்.லே சிடி'யில 'ஆட்டோகிராஃப்' சினிமா பாத்தேன். ரொம்பப் பிடிச்சிருந்தது... அழகான கவிதைத் தொகுப்பு மாதிரி இருந்தது... ஆனா மனசில முள்ளா ஒரு கேள்வி..! இதையே ஒரு பெண் தன் வாழ்க்கைப் பதிவைப் பகிர்ந்துக்கற மாதிரி எடுக்க முடியுமா?'' ஆதங்கத்துடன் கேட்டாள்.

''ம்... நீ சொல்றது ரொம்ப கரெக்ட் சவி! அப்படி ஒரு முயற்சி செஞ்சா, உடனே அந்தப் பெண்ணைப்பத்தி தவறான ஒரு முத்திரையைக் குத்திடுவாங்க... நீயும்



என்னை மாதிரியே தான் யோசிக்கிறே! நம்ம சமுதாயத்துல எப்பவுமே பெண்களுக்கு கருத்து சுதந்திரம் கொடுக்கப்படறதில்லை... எந்த ஒரு விஷயமும் ஆண்களின் பார்வையிலேயே, அவங்களுக்கு சாதகமாகத்தான் பாக்கப்படுது!''

''ஆமாம் சித்தி! சின்ன வயசுலயிருந்தே, நீ பெண்... இப்படித்தான் இருக்கணும்கிற அடக்கு முறையும்... செல்ஃப் ஒபீனியனே இல்லாம வளர்க்கப்படறதும், இன்னிக்கு வரைக்கும் நடந்திட்டுதானே இருக்கு! எப்பவுமே இந்த சமுதாயம், ஒரு ஆணுக்குத்தான் முக்கியத்துவம் தந்திருக்கு!'' சிறு வருத்தத்துடன் சவி கூற, காஞ்சனா அதை ஆமோதித்தார்.

''அது ஏன்னு தெரியலை... புராண காலத்திலேயிருந்து அப்படித்தான்! இதே கண்ணகி... மதுரையை எரிச்சதுக்குப் பதிலா, கோவலனை திருத்தியிருக்கலாம்..! நளாயினி தன் புருஷனை தாசி வீட்டுக்குத் தூக்கிட்டுப் போக மறுத்திருக்கலாம்! சீதை கூட, தன் கற்பை மெய்ப்பிக்க, தீக்குளிக்காம இருந்திருக்கலாம்...! தன் மனைவியை அடகு வைக்கறதுக்கு பதிலா, அரிச்சந்திரன் ஒரு பொய்யே சொல்லியிருக்கலாம்..! இப்படி நிறையத் தோணுது! ஆனா இதெல்லாம் செய்யாததாலேதான் அவங்களைக் கற்புக்கரசிகளா, சரித்திர நாயகர்களா வடிச்சிருக்காங்க...!'' ஒரு பெருமூச்சுடன் நிறுத்தினார்.

''சித்தி... நீங்க லீவுக்குக் கூட ஊருக்கு வரதில்லையாமே? இங்கே தனியா என்ன செய்வீங்க? ரெண்டு மாசம் வெகேஷன் டைம்லே போரடிக்காதா?'' சவி ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஊஹூம்... இப்ப ஈவினிங் மட்டும் ட்யூஷன் எடுக்கற மாதிரி, இந்த மலை ஜாதிப் பிள்ளைகளுக்கு முழு நேரமும் பாடம் சொல்லித் தருவேன்... அதைத் தவிர, தையல், கைவேலை, கிராஃப்ட் ஒர்க் இதெல்லாம் கத்துக் குடுப்பேன்... எல்லாருமே ஆர்வமா கத்துப்பாங்க! இங்கே இருக்கற மலை ஜாதி மக்கள் எவ்வளவு அற்புதமானவங்க தெரியுமா? மனசுலே கல்மிஷமே இல்லாம, கரெப்ஷனோட சுவடே பதியாத நல்ல மனுஷங்க. இந்த மலை மாதிரியே, இவங்க மனசும் ரொம்ப உயர்ந்தது அப்படின்னு நான் அடிக்கடி நினைச்சிப்பேன்!...

"நாம எப்போ தப்பு செய்வோம்னு கண் கொத்திப் பாம்பா கவனிச்சு, குத்தம் சொல்ற சமூகமில்லை இது! மனசுல மாசில்லாத மனிதர்கள்! எனக்கும் இவங்களுக்கு ஏதாவது செய்யணும்கிற ஆர்வம்... அதான் இந்த ஊரை விட்டுப் போக எனக்குப் பிடிக்கறதில்லை" நெகிழ்ச்சியுடன் கூறினார் காஞ்சனா.

* * *

அன்றும், இருவருமாகக் கிளம்பி ஊர் சுற்றிப் பார்த்தனர்.

மறுநாள் காலையிலிருந்து பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்து விட்டார் காஞ்சனா.

அந்த வாரக் கடைசியில், ஓட்டலில் வேலைக்குச் சேர்ந்த சைந்தவிக்கு அந்த வேலை மிகவும் பிடித்துப் போனது. தலைமை 'செஃப்'க்கு அசிஸ்டெண்ட்டாக அங்கு பணியாற்ற ஆரம்பித்தாள் அவள்.

காலை டிபனை காஞ்சனாவும் அவளுமாக அவசரமாகச் செய்து சாப்பிட்டு விட்டுக் கிளம்புவார்கள்... மதியம் வேலை செய்யும் இடத்திலேயே சாப்பிட்டு விடுவார்கள்.



பிறகு, மாலையில் ட்யூஷன் எடுத்து முடித்துவிட்டு பேசிக்கொண்டே மெதுவாகச் சமைக்க, அவர்களுக்கிடையே ஆழமான ஒரு தோழமை உருவாக ஆரம்பித்திருந்தது.

அவர் பள்ளியில் நடந்தவற்றைப் பற்றிக் கூற, சவி ஓட்டலில் கண்ட சுவையான நிகழ்வுகளை விவரிக்க அங்கு இனிமையான ஒரு சூழல் நிலவும்!

இருவருக்குமிடையே, சித்தி, மகளென்று இல்லாமல் ஒரு அன்யோன்யமும் நெருக்கமும் பலமாய் ஆட்படுத்தியிருந்தன.

ஞாயிற்றுக்கிழமைகளில் ஊருக்குப் போன் செய்து பேசுவதையும் கேதரினுடன் நெட்டில் சாட் செய்வதையும் வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள் சவி.

மாலையில் ட்யூஷனுக்கு வரும் பிள்ளைகளுக்கு, சவி ஆங்கிலம் கற்றுத் தர ஆரம்பிக்க, அந்தப் பிள்ளைகளும் அக்கா.. அக்காவென்று பாசத்துடன் அவளிடமும் ஒட்டிக் கொண்டன.

காஞ்சனாவிடம் ஒருவித பயத்துடனும் மரியாதையுடனுமிருந்தவர்கள் அவளிடம் ஒரு சகோதர வாஞ்சையுடன் பழக ஆரம்பித்தனர்.

ஒரு நாள் ட்யூஷன் முடிந்து சமைக்கும்போது என்றும் போல், "சித்தி.. இன்னிக்கு சரியான ஜோக்! என்கூட வேலை பார்க்கிற பிரபாகரைப் பத்திச் சொல்லி இருக்கேன் இல்லை.. எங்க ஹோட்டல்லே அவர்தானே மேனேஜர்...

"இன்னிக்கு, அவர் என்கிட்ட வந்து தனியா பேசணும்னாரு... என்னன்னு கேட்டா, அவர் என்னை விரும்பறா

ராம்... எனக்கு ஒரு நிமிஷம் என்ன செய்யறதுன்னே தெரியலை..

"உடனே நான் வேற ஒருத்தரை விரும்பறேன்னு பொய் சொல்லி அவர்கிட்ட இருந்து தப்பிச்சிட்டேன்... அப்ப அவர் முகம் போன போக்கைப் பாக்கணுமே!" என்று கூறிச் சிரித்தாள்.

சட்டென்று அருகில் வந்து அவள் தோளில் கை வைத்து அழுத்தினார் காஞ்சனா.

"சவி... இந்த சிரிப்புக்குப் பின்னாடி ஏதோ ஒரு சோகம் இருக்கிறது எனக்குப் புரியுது... ஏன்னா மனசுக்குள்ளே காயப்பட்டப்ப, நானும் இப்படித்தான் சிரிச்சி என் சோகங்களை அதிலே கரைச்சிருக்கேன். ஏன்டா கல்யாணமே வேண்டாம்கிறே? நீ யாரையாவது காதலிச்சியா?" மெல்லிய குரலில் கேட்டார்.

சட்டென்று இதயம் குலுங்கிவிட, அவள் உடலெங்கும் ஒரு வித வெப்பம் விரவிப் பரவியது.

"இல்லை சித்தி... அப்படி எதுவும் இல்லை... கல்யாணத்துக்கு இன்னும் என் மனசு ரெடியாகலை... அதான்" என்றாள் மெதுவாக.

ஆனால் மறுநாள் முழுவதும் சவி தொட்டாற்சுருங்கியாகவே இருந்ததால், பிறகு காஞ்சனா அவளிடம் இதைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்து விட்டார்.

* * *

ஒரு நாள் மதியம் சமையலை மேற்பார்வை செய்து கொண்டிருந்தபோது, சவியைத் தேடி வந்தான் மேனேஜர் பிரபாகரன்.



"மிஸ் சைந்தவி! இன்னிக்கு நம்ம பாஸ் ஊரிலிருந்து வரார். மெனு ஸ்பெஷலா நல்லா இருக்கணும்."

"ம்.. நம்ம எம்டி இங்கேதானே இருக்காரு.. ஊரிலேருந்து வரதா சொல்றீங்க?" திகைப்புடன் கேட்டாள் அவள்.

"நம்ம ஹோட்டல்லே ஈஷ்வர் சாரும் நம்ம செல்வா சாரும் பார்ட்னர்ஸ்.. அவரும் ஒரு டைரக்டர்தான்.. சென்னையிலிருந்து வரார்.. இனிமே இங்கேயேதான் இருக்கப் போறாருன்னு பேசிக்கறாங்க..."

"ஓ.. சரி.. முன்னாடியே சொன்னதுக்குத் தேங்க்ஸ்... எப்பவும் போல ஸ்பெஷல் மெனுதான் ரெடி பண்ணியிருக்கேன்..." சிறு முறுவலுடன் கூறினாள்.

அவன் தன்னை விரும்பியதாகக் கூறி, அதைத் தான் மறுத்தும், இயல்பாக நடந்து கொள்பவன் மீது ஒரு வித மரியாதை வந்திருந்தது.

மதியம் எல்லா அறைகளுக்கும் ரூம் சர்வீஸ் முறையில் உணவு அனுப்பப்பட்டு விட்டதா என்று விசாரித்து விட்டு, சாப்பிடுவதற்காக ரெஸ்டாரெண்டிற்குச் சென்றாள் சவி.

சாப்பிட்டுவிட்டுத் திரும்பி வரும்போது, "ஹலோ மிஸ் சைந்தவி... மீட் மிஸ்டர் சபரீஷ்வர்... இந்த ஹோட்டலோட இன்னொரு மேனேஜிங் டைரக்டர்..." என்று தன் நண்பனை செல்வா அவளுக்கு அறிமுகப்படுத்தினான்.

பெயரைக் கேட்டதுமே விதிர்த்து நிமிர்ந்தவளின் பாதங்கள், பளிங்குத் தரையில் பலமாக வேர்ப் பிடித்தன.

"ஈஷ்வர்! இவங்கதான் நம்ம ஹோட்டல்ல புதுசா ஜாயின் பண்ணியிருக்கற 'செஃப்' சைந்தவி! ஃபாரின்ல படிச்சிட்டு வந்திருக்காங்க."

அவன் கூறும்போதே, சோம்பலாய் இடுங்கிய விழிகளால் அவளையே ஊடுருவியவன், ''ஹாய் சவி... எப்படி இருக்கே?'' ஆழமான குரலில் கேட்டான்.

''ஈஸ்வர்... உனக்கு இவங்களை..'' என்றவனிடம், ''ம்.. நல்லாத் தெரியும்.. எங்கம்மாவோட க்ளோஸ் ஃப்ரெண்ட் தான் சவியோட அம்மா... ஒரே ஊர் வேற.. அதனால நல்லாத் தெரியும்...'' உதடுகளை கேலியாகச் சுழித்தபடி கூறினான்.

உடனே, ''நான் வரேன் சார்...'' என்றபடி சட்டென்று விலகியவளையே, யோசனையுடன் தொடர்ந்தன, அவன் விழிகள்!

அந்த அல்ட்ரா மாடர்ன் சமையலறைக்குள் வந்த பிறகும் இதயம் படபடக்க, சபரீஷின் வரவு அவளைப் பெரிதும் அலைப்புறச் செய்வதாய்!

ஒரு மாதமாக அமைதியுடன் செல்ல ஆரம்பித்திருந்த வாழ்க்கையில், கல் விழுந்த குளமாய் அதிர்வலைகள்!

பழைய ஞாபகங்கள் தன்னைப் பந்தாட ஆரம்பிப்பதை, ஒருவித இயலாமையுடன் உணர்ந்து கொண்டாள் சவி.

அவனைக் கண்டதும், பொங்கி வரும் ஆர்ட்டீஷியன் ஊற்றாய் உள் உணர்வுகள் கரை புரண்டு எழுவதை அவளாலேயே தவிர்க்க முடியவில்லை.

## 15

அன்று முழுவதும் சைந்தவி பெரும் சஞ்சலத்துடனிருக்க, சபரீஷ் அவளிருந்த பக்கம்கூட வரவில்லை.



வீட்டிற்குக் கிளம்பும்போது வழியில் எதிர்ப்பட்டான் பிரபாகர்.

''என்ன...! எம்டியப் பாத்தீங்களா? ஈஸ்வர் சார் இங்கே தான் ப்ராஜக்ட் ஆரம்பிக்கப் போறாராம்.. நம்ம ஹோட்டல் கூட அவர் கட்டினதுதான்... ரொம்ப நல்லவர்.. நல்லா மரியாதையாப் பழகுவாரு'' என்றான்.

''ம்... பாத்தேன்... நான் வரேன் சார்...'' என்றபடி வேகமாகக் கிளம்பினாள் சைந்தவி.

மனதிற்குள், அவனைத் தன்னால் ஒதுக்க முடியுமா வென்ற பயக்குமிழ்கள்!

வீட்டிற்குச் சென்றபோது, வாசலில் புதிதாய் ஒரு ஹோண்டா சிட்டி கார் நின்றிருந்தது.

யாராக இருக்கும் என்ற யோசனையுடன் உள்ளே நுழைந்தால், அங்கு சபரீஷ் இயல்பாக அமர்ந்து காபி குடித்தபடி காஞ்சனாவிடம் பேசிக் கொண்டிருந்தான்.

வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்பதுதான் முறை என்பதால், ''வாங்க சார்..'' என்றாள் அவள் மெல்லிய குரலில்!

சட்டென்று திரும்பிப் பார்த்தவனின் விழிகள், அவளுடைய 'சார்..' என்ற வார்த்தையில், சினத்துடன் பளபளத்தன.

''சவி... நீ சொல்லவேயில்லியே... நம்ம சபரீஷ்தான் உங்க ஹோட்டலோட 'எம்டி'யாமே... இப்பதான் தம்பி எல்லாத்தையும் சொன்னாரு!'' என்றார் காஞ்சனா.

எல்லாம் என்றால் எதுவரை கூறியிருப்பான் என்ற சந்தேகத்துடன், ''எனக்கே இன்னிக்குதான் தெரியும் சித்தி... ஒரு நிமிஷம்... நான் போய் முகம் கழுவிட்டு

வந்திட்றேன்'' என்று முணுமுணுத்துவிட்டு உள்ளே சென்றான்.

பிறகு வேண்டுமென்றே மெதுவாகத் தயாராகி, பின்புற வெராந்தாவில் படித்துக் கொண்டிருந்த மலைஜாதிப் பிள்ளைகள் படிப்பதையே கவனித்தபடி, சிறிது நேரம் அமர்ந்திருந்தாள்.

அவர்கள் எழுதியவற்றை வாங்கித் திருத்தியபோது தான் ஏனோ கேட்க வேண்டுமென்று தோன்றியது.

"நீங்க எல்லாரும் பள்ளியிலதானே படிக்கறீங்க? ஏன்.. அங்கே நல்லா சொல்லித் தர மாட்டாங்களா?'' ஆர்வத்துடன் விசாரித்தாள்.

''அங்கே ஒரே ஒரு டீச்சர்தான் இருக்காங்க.. நாங்க நிறையப் பிள்ளைங்க இருக்கோம் அக்கா! அதனால அவங்கிட்ட சந்தேகம் கேட்கறதோ, புரியலை.. திரும்பவும் சொல்லித் தாங்கன்னு சொல்றதோ முடியாது... அதனாலதான் காஞ்சனா டீச்சர்கிட்ட கத்துக்கிறோம்... இப்ப நல்ல மார்க் வாங்குறோம்'' கோரஸாகக் கூறினார்கள்.

வாழ்க்கையில் கல்வி என்பது எவ்வளவு தலையாய ஒன்று.. அதற்காக அரசாங்கம் இன்னும் சிறிது முயற்சியெடுத்து, இது போன்ற மலை ஜாதியினருக்கு கல்விக் கண் திறந்தால் நன்றாக இருக்குமே என்று நினைக்கும் போதே ஒரு சீனப் பழமொழி ஞாபகம் வந்தது.

"ஒரு வருடப் பலனுக்கு நெல்லை நடுங்கள்..

முப்பது வருடப் பலனுக்கு மரங்களை நடுங்கள்..

நூறாண்டுப் பலனுக்கு கல்வியைக் கொடுங்கள்...''

எவ்வளவு அற்புதமான வரிகள் என்று சிலிர்த்தது இதயம்!

* * *



பிறகு வெகு நேரம் கழித்து ஹாலுக்கு வந்தபோதும், அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

சுடிதாருக்கு மாறி சிறு பெண் போல் வந்தவளையே ஒரு கணம் இமை கொட்டாமல் ரசித்தவன், ''நான் இவளை அழைச்சிட்டுப் போறதிலே உங்களுக்கு ஒன்னும் அப்ஜெக்ஷன் இல்லியே...?'' காஞ்சனாவிடம் கேட்டான்.

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை... நீங்க அழைச்சிட்டுப் போங்க...'' என்றார் அவர்.

''எனக்கு ஒரு கோடி அப்ஜெக்ஷன் இருக்கிறது'' என்று கத்த வேண்டும்போல் தோன்றிய உணர்வை அடக்கிய படி, ''என்ன விஷயம் சார்...?'' மெதுவாகக் கேட்டாள்.

''ம்... பிசினஸ்தான். அதைத் தவிர பேச நமக்குள்ளே வேற ஏதாவது இருக்கா என்ன...?'' குறும்புடன் அவன் கேட்க, ஏன் கேட்டோம் என்ற உணர்வுடன் அவனைப் பின் தொடர்ந்தாள் சவி.

காரில் சிறிது தூரம் சென்றவுடன், அவன் ஒரு காட்டேஜுக்குள் காரை செலுத்தினான்.

''இது எங்க கம்பெனி கெஸ்ட் ஹவுஸ்.. பிசினஸ் விஷயமா நான் என்ன பேசணும்னாலும் இங்கேதான் வருவேன்'' என்று நிறுத்தினான்.

பிறகு உள்ளே சென்றதும் அவளை அமர வைத்தவன், தங்களுடைய ஹோட்டலைப் பற்றிப் பேச ஆரம்பித்தான்.

''சவி! நம்ம ஹோட்டல்லே கஸ்டமர் அட்ராக்ஷனுக்கு காரணமே நம்ம 'ஃபுட்'டோட குவாலிட்டிதான்! சைனீஸ், சவுத் இண்டியன், நார்த் இண்டியன், காண்டினண்டல்

இப்படி எல்லாவிதமான உணவுக்குமே பெயர் போனது நம்ம ஹோட்டல். அந்தக் குவாலிட்டியை அப்படியே மெயின்டெயின் பண்ணனும்... கொஞ்சம்கூடக் குறைய விடக்கூடாது... அதுக்கு உன்னாலான ஒத்துழைப்பை, முயற்சியை நீ எடுத்துப்பேன்னு நான் எதிர்பார்க்கறேன்... நம்பறேன்... இந்தா அதுக்கான டீடெயில்ஸ்'' என்றான் ஆழமான குரலில்!

''நிச்சயமா சார்... ஐ வில் ட்ரை மை பெஸ்ட்...'' ஃபைலை வாங்கியபடி கூறினாள் சவி.

இதுவரை தங்களுடைய கஸ்டமர் சர்வீஸ், மெனு, ரெஸ்டாரெண்ட் சர்வீஸ் பற்றியெல்லாம் கருமமே கண்ணாக அவளிடம் பொறுமையாகக் கலந்துரையாடிய போது, அவனுடைய வெற்றிக்கான ரகசியம் அவளுக்குப் புரிந்தது..!

திடீரென்று ''ஓ.கே.! நாம கிளம்பலாம்.. அதுக்கு முன்னாடி ஒரேயொரு பர்சனல் கேள்வி..?'' என்றவனுடைய முகம் தீவிரமாக இருந்தது.

மெதுவாக விழியுயர்த்தியவளுக்குள், அவன் பார்வை ஆழமாய் ஊடுருவியது.

''நீ.. இன்னும் என்னையேதான் நினைச்சிட்டிருக்கே.. இல்லை.. அதுல எந்த மாற்றமும் இல்லையே..?'' மென் குரலில் கேட்டான்.

மனம் விதிர்த்துவிட, இதயம் பதில் கண்ணிகளை சரம் தொடுத்தாலும், வார்த்தை வராமல் மனதில் யாரோ சாட்டை கொண்டு அடித்ததுபோல ஒரு வலி வந்தது.

நீண்ட நாட்கள் முன்பே, தன் மனதிலிருந்து விலகிச் சென்று விட்டதாக அவள் நினைத்திருந்த சபரீஷின்



நினைவுகள், அழகிய கவிதைத் தொகுப்பைப் போல் உள்ளேயே ஒளிந்திருந்தன.

உதடுகள் வார்த்தைகளுக்கு வழி விடாமல் சத்யாக்கிரகம் செய்ய, வேகமாக எழுந்தவள் உடனே அங்கிருந்து வெளியேறினாள்.

அவளைத் தொடர்ந்து வந்தவன், ''எதையுமே அரை குறையா விட்டுட்டுப் போறதே பழக்கமாயிடுச்சி இல்லையா? மூணு வருஷத்துக்கு முன்னாடி... உன் லைஃப்... இப்ப உன் வேலை சம்பந்தமான ஃபைல்ஸ்... ம்...'' நக்கலாகக் கேட்டான்.

உடனே திரும்பி, அந்த ஃபைலை அவசரமாக எடுத்துக் கொண்டு அவள் வெளியே வந்தபோது, காரை ஸ்டார்ட் செய்துவிட்டுக் காத்திருந்தான் அவன்.

மனது, மழை வரும் வானம் போல் சோக மூட்டமாக இருந்தது.

திரும்பி வரும்போது இருவருமே பேசவில்லை... சபரீஷும் அமைதியாகவே வர, சவிக்குதான் தர்ம சங்கடமாய்...!

* * *

எப்போது வீடு வருமென்று காத்திருந்தவள் குதித்து இறங்கி கார்க் கதவை மூட, அவனுடைய இதழோரம் சிறு விரக்திப் புன்னகை ஒன்று வந்து போனது.

போன மாதம், அம்பாசமுத்திரத்தில் அவளுடைய பதிலுக்காக தான் காத்திருந்ததும், தன்னை மணக்க அவள் மறுத்து விட்டதை அம்மா கூறியதும், இதயத்தில் யாரோ சூட்டுக்கோலால் இழுத்ததைப் போன்ற ஒரு வலி வந்ததையும்... இன்று வேதனையுடன் நினைவு கூர்ந்தது மனது!

அதே வலியுடன் திரும்பியவன், வேகமாகக் காரை ஓட்டிச் சென்றான்.

கண்ணோரம் நீர்த்திரையிட அவன் செல்வதையே பார்த்திருந்தவள் மெதுவாக உள்ளே வந்தாள்.

"வாடா... ஏன் ரொம்ப டல்லா இருக்கே..?" அக்கறையுடன் விசாரித்தார் காஞ்சனா.

"ஒன்னுமில்லை சித்தி... லேசா தலைவலி அதான்! கொஞ்ச நேரம் படுத்திருந்தா சரியாயிடும்!"

மெல்லிய குரலில் கூறிவிட்டு உள்ளே சென்று அறைக் கதவைச் சாத்திக் கொண்டவளையே யோசனையுடன் கவனித்தார் அவர்.

அவளிடம் ஏதோ ஒரு மர்ம முடிச்சு அவிழாமல் சிறைப் பட்டிருக்குமோவென்று அவர் மனதிலும் ஒரு சந்தேகம் எழுந்தது.

இது பற்றி யாரிடமாவது பேச வேண்டுமென்று தோன்ற, ஒரு முடிவுக்கு வந்தார் அவர்.

* * *

அந்த வாரமே, அங்கு ஒரு வீடு பார்த்து பால் காய்ச்சி விட்டு, சபரீஷ் அதில் வசிக்க ஆரம்பித்தான்.

நாட்கள் விரைந்து செல்லும் மேகமாய்க் கடந்தன.

மறு மாதமே, வள்ளியும் ஜெகதீசனும் குழந்தையுடன் கொடைக்கானலுக்கு வந்தனர்.

இப்போதெல்லாம் சபரீஷ் பெரும்பாலும் ஹோட்டலிற்கு வருவதில்லை.



அவனுக்குக் கட்டிட வேலைகள் நடக்கும் 'சைட்'டிலேயே பொழுது சரியாக இருந்தது. எப்போதாவது ஒரு முறை தான் அங்கு வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் அவன்.

ஒரு நாள், அவளை 'எம்டி' அழைப்பதாக பிரபாகர் கூறினான்.

அவள் 'எம்டி'யின் அறைக்குச் சென்றபோது, அங்கு செல்வா இல்லை... சபரீஷ்தான் அமர்ந்திருந்தான்.

அவனைக் கண்டதும், அப்படியே பனிச் சிற்பமாய் உறைந்து நின்று விட்டவளைக் கூரிய பார்வையுடன் உட்காரச் சொன்னான்.

"அம்மாவும் அப்பாவும் ஊரிலிருந்து வந்திருக்காங்க... இனியாவும் தான்! அவங்க உன்னைப் பாக்கணுமாம்! வரச் சொன்னாங்க..."

உணர்ச்சியற்ற குரலில் கூறிவிட்டு 'நீ போகலாம்' என்று கூறுவதைப் போல் பழையபடி ஃபைலில் ஆழ்ந்து விட்டான்.

பிறகு அங்கு நிற்க மனமின்றி வேகமாக வெளியே வந்தவள், அன்றே வேலை முடிந்தவுடன் அவனுடைய வீட்டிற்குச் செல்ல முடிவெடுத்தாள்.

மனதிற்குள் பழைய ஞாபகங்கள், முல்லைச் சரங்களாய் கோர்க்கப்பட்டு மணம் பரப்பின.

ஆனால் அதையும் முழுமையாக நுகர விடாமல் தடுத்தன... ஆழ் மனவெளியின் அலைப்புறுதலும், அனுபவங்கள் தந்த வலிகளும்! எல்லாவற்றையும் மீறி, பழகிய பாசமும், மறையாதிருந்த காதலும் அவளை அங்கு அழைத்துச் சென்றன.

இனியாவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலும் பெரிதாய்!

சவி, உணர்வுகளின் ஊஞ்சலாட்டத்துடன் சபரீஷின் வீட்டிற்குச் சென்றாள்.

## 16

வள்ளியும் ஜெகதீசனும் அவளை ஆவலுடன் வரவேற்க, மழலைப் புன்னகையுடன் தாவிய குழந்தையை, அன்புடன் தூக்கிக் கொண்டாள் சவி.

''எப்ப ஆன்ட்டி வந்தீங்க? பாஸ் இன்னிக்குத்தான் சொன்னாரு! ஊரிலே பாட்டி, மாமா, மாமி எல்லாரும் எப்படி இருக்காங்க?'' ஆவலுடன் விசாரித்தாள்.

''எல்லாரும் நல்லாருக்காங்கம்மா... இங்கே சீசன் நல்லா இருக்குன்னு சபிதான் எங்களை வரவழைச்சான்.. இன்னிக்குதான் வந்தோம்.. உனக்கு இந்த வேலை பிடிச்சிருக்கா?''

''ம்.. ரொம்பப் பிடிச்சிருக்கு ஆன்ட்டி! அதோட ரொம்ப நாள் கழிச்சி சித்தியோட இருக்கறது மனசுக்கு இதமா நல்லாருக்கு...''

''இவளைக் கொஞ்சம் பாத்துக்கறியா சவி? நான் போய் காபி டிபன் எடுத்துட்டு வரேன்... இன்னிக்குதானே வந்தோம்... நாளைக்குத்தான் எல்லாத்துக்கும் ஆள் வருவாங்களாம்...'' சிறு புன்னகையுடன் கேட்டார் வள்ளி.



''ஒரு நிமிஷம் ஆன்ட்டி! நான் செய்யறேன்.. நீங்க இவளை வச்சிக்கங்க!''

''உனக்கு ஏம்மா சிரமம்... வேண்டாம்... உனக்குப் புரியாது!'' வள்ளி தடுத்தார்.

''சவிக்குத் தெரியாதா? பெரிய ஸ்டார் ஓட்டலுக்கு செஃப் அவ... உன்னை மாதிரி நினைச்சியா? ரெண்டு பேருக்கு சமையல் பண்றதே பெரிய விஷயமாப் பேசுவே!'' மனைவியைக் கிண்டல் செய்தார் ஜெகதீசன்.

பிறகு அவளே சமையலறைக்குச் சென்று, பஜ்ஜி செய்து காபியும் போட்டு ப்ளாஸ்கில் எடுத்து வந்து கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தபோது, சபரீஷின் கார் வரும் சப்தம் கேட்டது.

வேகமாக எழுந்து ''சரிம்மா... நான் கிளம்பறேன்... நீங்க சாப்பிடுங்க...''

அவசரமாகக் கிளம்பினாள் சவி.

அதற்குள் உள்ளே வந்த சபரீஷ் ''என்னம்மா வந்த அன்னிக்கே ஸ்பெஷலா... பஜ்ஜி வாசனை கொடைக் கானலையே தூக்குது!'' என்றபடி இயல்பாக தட்டிலிருந்து எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

''நான் செய்யலைப்பா... சவிதான்...'' அவள் கண் களாலேயே கெஞ்சியும் கூறிவிட்டார்.

''ஓ... நம்ம ஹோட்டல்லே சமைக்கறது பத்தாதுன்னு இங்கே வேற வந்து 'குக்கிங் ஜாபா?' எனிவே... தேங்க்ஸ்... இது மாதிரி பஜ்ஜி கிடைச்சா வாழ்நாள் முழுக்க சாப்பிட லாம்...''

குறும்புடன் கூறிவிட்டு கண் சிமிட்டியவன் அவளையே குறுகுறுப்புடன் பார்த்துச் சிரித்தான்.

சட்டென்று தாங்க முடியாமல் "நான் வரேன் ஆன்ட்டி... பை இனியா..." என்றபடி வேகமாக வெளியேறி, மலைப்பாதையில் மெதுவாக நடக்க ஆரம்பித்தாள்.

ஆனால், சபரீஷின் பசுமையான சிரிப்பு ஈரப்பசையோடு இன்னும் மனதில் உலராமல் ஒட்டி இருந்தது.

தன்னால் அவனை வெறுக்க முடியாதென்று சத்தியமாகப் புரிந்தது.

வாழ்க்கையில் என்ன முடிவெடுப்பதென்று புரியாமல் தவிக்கும் நிலை, சில சமயங்களில் ஒவ்வொரு மனிதனுக்கும் வரும்.. இன்று அந்த நிலையிலிருந்தாள் சவி.

தினமும் அவன் பார்வையில் பட்டபடியே இருப்பதும்... பேச்சும் சிரிப்புமாய் அவன் சீண்டும் போதும்... என்றாவது ஒரு நாள் உடலும் மனமும் தன்னிலை இழந்து விட்டால் என்ன செய்வதென்ற பயம் கிளர்ந்தெழுவதாய்...!

ஒழுங்கற்ற இசையாய் இதயம் அடித்துக் கொள்ள, சத்குரு ஜக்கி வாசுதேவின் வரிகள்தான் உடனே நினைவிற்கு வந்தன.

"சிறைப்படுத்தும் கதவுதானே விடுதலைக்கும் வாசல்? நீ கைதியா... சுதந்திரமானவனா? கதவின் எந்தப் பக்கம் நிற்பதென்ற தீர்ப்பை, நீ அல்லவா எழுத வேண்டும்...?"

எவ்வளவு சத்தியமான வரிகளென்று தோன்றியது.

* * *

நினைக்குள் மூழ்கிய யோசனையுடன் நடந்து கொண்டிருந்தவளை, உரசினாற் போல் வந்து நின்றது, ஒரு கார்.



திடுக்கிட்டு நகர்ந்து நிமிர்ந்தபோது, சபரீஷ்தான் அதில் அமர்ந்திருந்தான்.

"வா... நான் உன்னை வீட்டிலே ட்ராப் பண்றேன்... தனியாப் போக வேணாம்."

"இல்லை.. நான் போயிடுவேன்" வீம்பாக அவள் முன்னே சென்றாள்.

"சவி... இப்பதான் காஞ்சனா ஆன்ட்டி போன் பண்ணினாங்க... உன்னைக் காணோமேன்னு பயந்துட்டாங்களாம்! வீட்டுக்கு ஒரு போன் பண்ணியிருக்கக் கூடாது?" உரிமையுடன் கடிந்தபடி இறங்கி கார் கதவைத் திறந்து விட்டான்.

வேறு வழியின்றி ஏறி அமர்ந்தவளிடம், "நான் உன்கிட்ட ஒரு கேள்வி கேட்டேன். அதுக்கு நீ இன்னும் பதில் தரவேயில்லைன்னு ஞாபகம்!" என்றான் ஆழ்ந்த குரலில்.

அவள் பதைப்புடன் நிமிர்ந்தால், "ஏன் ஆன்ட்டிக்கு போன் பண்ணலைன்னு கேட்டேன்... அதுக்கு ஏன் இப்படித் தூக்கிப் போடுது உனக்கு? என்கிட்ட பயமா? உன்னையறியாமலேயே என் மேல இருக்கற காதலாலே என்கிட்ட இளகிடுவோம்னு பயம்... இல்லை...?" கேலியாகக் கேட்டான்.

"இல்லை... எனக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்யும்போது நான் இப்படித்தான் டென்ஷனா இருப்பேன்.. அது என் நேச்சர்..! அது என்னைப் பத்தி அறியாதவங்களுக்குப் புரியாது..!"

"யாரு.. எனக்கு... எனக்கு உன்னைப் பத்தித் தெரியாதா? ஹும்... இந்த உலகத்துலயே உன்னைப் பத்தி நல்லாப் புரிஞ்சிக்கிட்ட ஆள்னு பார்த்தா, அது நான் ஒருத்தன் தான்!"

சட்டென்று திரும்பியவள் சீற்றத்துடன் கேட்டாள்... "ஓஹோ! என்னைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும்?" என்று!

உடனே அவன் முகத்தில், கண்களில், செவ்வரியோடிய சீற்றம்!

"ம்... நம்ப வச்சுக் கழுத்தறுக்கறவ நீன்னு எனக்கு நல்லாத் தெரியும்... காதலிக்கற மாதிரி நடிச்சி, ஏமாத்துற ஒரு 'விட்ச்'ன்னு தெரியும்..." அவனும் அடிக்குரலில் கர்ஜித்தான்.

இதயம் வேகமாக படபடக்க ஆரம்பிக்க, அவளுடைய மேலுதட்டில் சன்னமாய் வியர்வைத் துளிகள் அரும்ப ஆரம்பித்தன.

"காரை நிறுத்துங்க... ஒரு சூனியக்காரியோட பயணம் செய்யற கொடுமையான ஒரு அனுபவம் உங்களுக்கு வேணாம்.." அவள் கோபமாக கார்க் கதவைத் திறக்க முயன்றாள்.

உதடுகள் துடித்து, கைகள் மெலிதாய் நடுங்க, அவளுடைய பதட்டமும் பயமும், அவனுக்குள் சிரிப்பை வரவழைத்தன.

"கார்க் கதவோட கண்ட்ரோல் ஸ்விட்ச் என்கிட்ட இருக்கு... ஹூம்... இது மாதிரி, மனுஷங்களுக்கும் ஒரு கண்ட்ரோல் ஸ்விட்ச் இருந்தா ரொம்ப நல்லாருக்கும்.. அப்புறம் என்னவோ சொன்னியே சூனியக்காரின்னு..! என்ன பண்றது? காதல் வர்றப்ப சூனியக்காரியா, தேவதையான்னு பாத்து இண்டர்வியூ பண்ணிட்டா வருது... வந்தப்புறம்தானே தெரியுது! பரவாயில்லை! நான்தானே அதனாலே பாதிக்கப்படப் போறது.. அட்ஜஸ்ட் பண்



ணிக்கிறேன்.. என்ன, டூயட் பாடும்போது அழகான சூனியக்காரியேன்னு பாடிக்க வேண்டியதுதான்..."

மௌனச் சிரிப்பில் அவன் உடல் குலுங்க, அதே நேரம் சவியின் பொறுமை எல்லை மீற ஆரம்பித்திருந்தது.

"ப்ளீஸ்... ஸ்டாப் இட்" அடிக் குரலில் சீறினாள் அவள்.

"இப்ப கதவைத் திறக்கலைன்னா கண்ணாடி ஜன்னலை உடைச்சி சத்தம் போடுவேன்..." என்றாள் உறுதியுடன்.

"ஏய்... சவி.. இப்ப என்ன நடந்துடுச்சி... ஏன் இவ்வளவு உணர்ச்சி வசப்படறே?"

மென்மையாக... ஆனால் அழுத்தமாகக் கேட்டான் சபரீஷ்.

"நான் பேசாம வரணும்னா, நீங்களும் அமைதியா வரணும்... நீங்க இப்படிப் பேசறது எனக்குப் பிடிக்கலை" சட்டென்று கூறிவிட்டாள்.

உடனே அவன் முகம் இறுகிவிட, அந்த நொடியிலிருந்து அவன் அவளிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

"வாழ்க்கை ஒரு போர்க்களம்.. அதில் நம்பிக்கையும் பொறுமையுமே ஆயுதங்கள்.." எங்கோ படித்தது, அவனுக்கு அந்த நிமிடம் நினைவு வந்தது.

வீட்டில் அவளை இறக்கி விட்டவன், தானும் இறங்கிக் காரை லாக் செய்ய, வாசலிலேயே காத்திருந்தார் காஞ்சனா.

"ஏன் சவி? ஒரு போன் பண்ணியிருந்தா நான் பயந்திருக்க மாட்டேனே...!" ஆதங்கத்துடன் கேட்டார்.

"இல்லை சித்தி... கிளம்பறதுக்கு முன்னாடி ஹோட்டல்லேருந்து ட்ரை பண்ணினேன்... ரிங் போயிட்டே இருந்தது... அதான்."

"ஓ... நான் இன்னிக்குக் கொஞ்சம் லேட்டா வந்தேன்... பசங்கல்லாம் வெயிட் பண்ணிட்டிருந்தாங்க! அப்பவும் நீ வரலையா? பயமாயிருந்தது! வாங்க சபரி" என்று வரவேற்றார்.

பிறகு அவர்களிருவரும் கொடைக்கானலைப் பற்றியும், ஊரைப் பற்றியும் பழைய கதைகளையும் பேசுவதில் ஆழ்ந்துவிட, சவிக்குத்தான் தனிமையாய்..!

மெதுவாக எழுந்து பின்புறம் சென்று இருள் கவிந்திருந்த தூரத்து மலைத் தொடரை வெறித்தபோது, மேகங்களை இமையாக்கி விழிமூடி இருந்தது நிலவு!

* * *

அன்று ஒரு நாள் ராது தன் காதலைத் தன்னிடம் சொன்ன போதும், அதற்குப் பிறகு நிகழ்ந்த உணர்வுப் போராட்டத்திலும், தான் இரவு முழுவதும் அழுதது இன்று போல் நினைவிற்கு வந்தது.

அன்றே, கண்ணீர்க் கறையோடு தன் காதல் கனவுகளும் கரைந்துபோனது புரிந்தது.

தனிமை... யோசனைக்கு அவசியமான ஒரு வியூகமாய்..!

எதையோ எண்ணி திடீரென்று உடல் சிலிர்த்தது.. நெஞ்சம் கனத்துப் போனது.

மௌனத்தை மரணிக்கச் செய்கின்ற சப்த உச்சாடனங்களாய், கிசு கிசுப்பாய் பேசி வருடிய காற்றும், சில் வண்டுகளின் ரீங்காரமும் காற்றில் மிதந்து வந்தன.



"சவி! ஏன்டா இங்கே வந்து பனியில... அதுவும் தனியா நின்னுட்டிருக்கே... சபரீஷ் கிளம்பிட்டாரு... உன்கிட்ட சொல்லச் சொன்னாரு!"

காஞ்சனாவின் குரலால் அவளின் ஏகாந்தம் கலைக்கப்பட, மெதுவாகத் திரும்பினாள்.

சவியின் விழிகள் நீரில் பளபளக்க, உடனே பதறிப் போனார் அவர்.

"ஏன்டா... அம்மா ஞாபகம் வந்துடுச்சா?" பரிவுடன் அவள் தோளை வருடியபடிக் கேட்டார்.

"இல்லை..." என்று அவள் தலையசைத்ததும், "சரி வா.. கொஞ்ச நேரம் என் மடியிலப் படுத்துக்க... எல்லாம் சரியாயிடும்" என்று அழைத்துச் சென்றார்.

உள்ளே சென்று அவர் மடியில் தலை சாய்த்ததும், இதமாய்த் தலையைப் பிடித்து அவர் நீவிவிட, உடலுக்குள் புகுந்திருந்த வெப்பம் மெதுவாகக் குறைந்து உணர்வுகள் இயல்பு நிலைக்குத் திரும்ப ஆரம்பித்தன.

இதயம், தன் சோகத்தையும் வேதனைகளையும், தற்காலிகமாகத் தள்ளுபடி செய்தது.

ஏதோ ஒரு இனம் புரியாத மோன நிலையில் ஆழ்ந்து சிறு குழந்தை போல் உறங்க ஆரம்பித்தாள் அவள்!

ஆனால் அவளையே ஆராய்ச்சியுடன் நோக்கிக் கொண்டிருந்த காஞ்சனாவின் உதடுகள் செல்லமாய்ச் சுழித்தன.

இந்த அழகு முகம் எவ்வளவு ரகசியங்களை அடக்கியிருக்கிறதோவென்ற வியப்புடன், விழிகள் இடுங்கின.

# 17

மறுநாள் சைந்தவி ஹோட்டலுக்குச் சென்றதும், 'எம்டி' அழைப்பதாக ஒரு ஆள் வந்து கூறினான்.

அவள் 'எம்டி'யின் அறைக்குச் சென்றபோது, செல்வா தான் அங்கு அமர்ந்திருந்தான்.

''வாங்க மிஸ் சைந்தவி! இந்தாங்க.. இந்த செல்போன் உங்களுக்குத் தான்... நம்ம ஹோட்டல் ஸ்டாஃப்களிலே முக்கியமானவங்களுக்கு இப்படித் தர்றது வழக்கம்... வந்தவுடனே செஞ்சிருக்கணும்.. மறந்துட்டேன்! நம்பர், சிம் கார்டு எல்லாமே அதுல இருக்கு... ஆல் தி பெஸ்ட்...'' என்றபடி அந்த போனைக் கொடுத்தான்.

நேற்று, தான் வரத் தாமதமானதால் சித்தி பயந்து போனதை எண்ணி, சபரீஷ் தான் இதைச் செய்யத் தூண்டியிருக்க வேண்டும் என்பது புரிந்துவிட, மனம் அவனை உடனே மெச்சியது.

நெஞ்சக் கூட்டிற்குள், கலங்கிய தண்ணீர்ப் பரப்பாய் அவன் ஞாபகங்கள்.

ஆனால், அந்த வாரம் முழுவதும் அவன் ஹோட்டல் பக்கமே வரவில்லை..!

வாரக் கடைசியில் ஓய்வாகத் தலை உயர்த்தியபடி அவள் அமர்ந்திருந்தபோதுதான், வள்ளியிடமிருந்து போன் வந்தது.



''ஹலோ... சவிதானே... நாங்க நாளைக்கு ஊருக்குப் போறோம்மா.. நீ இன்னிக்கு சாயந்திரம் நம்ம வீட்டுக்கு வந்துட்டுப் போறியா!'' ஆவலுடன் கேட்டார்.

அங்கு சபரீஷும் இருப்பானோ என்ற தயக்கத்துடன் அவள் பதில் சொல்வதற்குள், ''சபரி சென்னைக்குப் போயிருக்கான்... நாளைக்குக் காலையிலதான் வராம்மா.. நீயாவது வரியா?'' என்றார்.

''ம்.. நான் வரேன் ஆன்ட்டி'' என்றவள் அன்று மாலையில் சீக்கிரமே கிளம்பிச் சென்றாள்.

வள்ளியையும் ஜெகதீசனையும் பற்றி எண்ணும்போதே இனம் புரியாத பாசம் சுரந்தது.

அவள் போனபோது இனியா தூங்கிக் கொண்டிருந் தாள்.

டிபன் காபி சாப்பிட்ட பிறகு, ''நாம ரெண்டு பேரும் அப்படியே சும்மா வாக்கிங் போயிட்டு வரலாமா? குழந்தை எழுந்தா மாமா பாத்துப்பாங்க...'' வள்ளி கேட்க, அவளும் சரியென்றாள்.

இருவரும் பேசியபடி மெதுவாக நடந்து, அருகிலிருந்த சிறு பார்க்கிற்குச் சென்று அமர்ந்தனர்.

சிறிது நேரம் மௌனமாக அமர்ந்திருந்தவர் ''ஏன் சவி... நீ சபரியைப் பத்தி என்ன நினைக்கிறே..!'' திடீரென்று கேட்டார்.

தூக்கி வாரிப் போடத் திரும்பியவள், ''ஏம்மா இப்படிக் கேக்கறீங்க.. அவர் எனக்கு பாஸ்... அவ்வளவுதான்!'' மெதுவாகக் கூறினாள்.

ஒரு பெருமூச்சுடன் ''எனக்கு எல்லாம் தெரியும்மா... நீ அவனை விரும்பினது... அவனும் உன்னை நேசிச்சது...

அப்புறம் ராதுவுக்காக நீ அவனைப் புறக்கணிச்சிட்டு சபரியின் போனது எல்லாமே. எனக்கு இப்பதான் கொஞ்ச நாள் முன்னாடிதான் தெரியும்..." யோசனையுடன் சொன்னவர் அவளிடம் திரும்பினார்.

"இதுநாள் வரைக்கும் உன்னையே நினைச்சிட்டிருக்கறவனை, நீ ஏம்மா மறுக்கறே?" வேதனையுடன் கேட்டார்.

அவள் தலை குனிந்தபடி மௌனமாக இருந்தாள்.

மனம் சொல்லொணாத் தவிப்பில் அலை பாய்ந்தது... மத்தளமாய் முரசு கொட்டித் துடித்தது!

"நீ போனப்புறம் என்னவெல்லாம் நடந்தது தெரியுமா?" என்றபடி பழைய நினைவுகளை அவளுடன் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார் அவர்.

நினைவுக் குளத்தில் எண்ண அலைகள் வேகமாகப் பரவின.

* * *

சைந்தவி வெளிநாட்டிற்குச் சென்ற மறு வாரமே, சபரீஷ் பாலாஜியிடம் எல்லா உண்மைகளையும் கூறிவிட்டான்.

அதைக் கேட்ட பாலாஜிக்கோ, பெரும் அதிர்ச்சி!

நேரே வீட்டிற்குச் சென்று தன் தங்கையை வார்த்தைகளால் விளாசி எடுத்து விட்டான்.

"என்டி... உனக்கு அறிவில்லை..? உன் தோழியும் அவனும் உயிரா விரும்பறாங்க.. அது தெரியாம நீ அவனைத் தான் காதலிக்கிறேன்னு சொல்லி இருக்கே.. இப்ப பாரு.. சவி அவனை மறுத்துட்டு உனக்காக அவனைத் தியாகம்



செஞ்சிட்டு வெளிநாட்டுக்குப் போயிட்டா... நீ விரும்பினே, சரி.. அவன் உன்னை விரும்பறானான்னு தெரிஞ்சிக்க வேணாம்! என்ன பைத்தியக்காரத்தனம்டி பண்ணி வச்சிருக்கே!"

அவனுடைய வார்த்தைகள் தீயாய் தாக்க, நொறுங்கிப் போனாள் ராது.

தன்னையறியாமலே தான் சவிக்கு செய்து விட்ட துரோகம் மனதிலறைய, அன்றிரவே விஷம் சாப்பிட்டு விட்டாள்.

உடனே வெளியில் தெரியாமல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, இரண்டு நாளைய போராட்டத்திற்குப் பிறகு காப்பாற்றப்பட்டவள், ஒடிந்து போனாள்...

சபரீஷுக்கும் குற்றவுணர்வு வாட்ட, அப்போதுதான் ஆபத்பாந்தவனாய் பாலாஜியுடனும் சபரியுடனும் படித்த நண்பன் துரை கை கொடுத்தான்.

ராதுவின் விஷயத்தைக் கேள்விப்பட்டுப் பதறியவன், அப்போதுதான் தன் மனதை சபரீஷிடமும் பாலாஜியிடமும் வெளிப்படுத்தினான்.

"நான் ராதுவை மனசார விரும்பறேன் சபரி... எப்படிச் சொல்றது... நண்பனோட தங்கையாச்சேன்னு ஒரு தவிப்பு... அதான் வெளியில சொல்லலை..." தயக்கத்துடன் கூறினான்.

அருகில் வியப்புடன் வேடிக்கை பார்த்திருந்த பாலாஜியிடம் திரும்பினான்.

"சாரிடா... தப்பா நினைச்சுக்காதே... ரெண்டு வருஷமா என் மனசுக்குள்ளேயே வச்சு மருகிட்டிருக்கற ஒரு தலைக்

காதல் இது... தப்பான எண்ணத்தோட நம்ம தங்கச்சியப் பாத்திருக்கானேன்னு என்னைக் கேவலமா நினைச்சிடாதேடா..."

அவனுடைய கையைப் பிடித்தபடி கெஞ்சினான்.

அந்த நிமிடம், பாலாஜிக்குள் பெரும் நிம்மதி..!

தன்னுடைய தங்கையை மனதார விரும்புபவன்... அவனுடைய ரகசியங்களை அறிந்தவன்... நல்லவன்... தனக்கு நண்பனாகக் கிடைத்ததில் பெருமை மட்டுமே வந்தது.

உணர்ச்சிப் பெருக்குடன் அவனைத் தழுவிக் கொண்டவன், "துரை! ராது உனக்குத் தான்டா..." உடனே ஒப்புதல் தந்தான்.

பிறகு வீட்டிற்கு வந்து தன் நண்பனைப் பற்றி அவன் கூறியபோது, முதலில் ராது பிடிவாதமாக மறுத்தாள்.

பாலாஜி அவளிடம் பொறுமையாகப் பேசினான்.

"நாம விரும்பறவங்களைக் கல்யாணம் பண்ணிக்கறதைவிட நம்மை விரும்பறவங்களை திருமணம் செஞ்சுக்கிறதுதான் புத்திசாலித்தனம் ராது... அப்பதான் வாழ்க்கை இன்னும் சந்தோஷமா இருக்கும்... துரை உன்னை அன்பா பாத்துப்பான்... கண்ணுல வெச்சுத் தாங்குவான்... சபரி அப்படி இல்லை.... அவன் உன்னை விரும்பலை... அவன் சவிக்காகக் காத்திட்டிருக்கான்... இன்னொரு பெண்ணுக்காக உருகுறவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நீ நிம்மதியா வாழ்ந்துட முடியுமா... வாழ்க்கை முழுக்க உறுத்திட்டே இருக்கும்... ஒத்துக்க ராது!" என்றபோதும் மௌனமாகவே அமர்ந்திருந்தாள் அவள்.



பிறகு வந்த நாட்களில் பலப்பல விதமாக அவன் பேசிய விதமும், அவனுடைய அம்மாவின் அறிவுரைகளாலும் நிஜத்தின் நிதர்சனம் புரிந்தது ராதுவிற்கு!

கல்லும் கரையும் என்பதுபோல் மெதுவாகத் தன் வீம்பையும் பிடிவாதத்தையும் மாற்றிக் கொள்ள ஆரம்பித்தவள், கடைசியாகத் திருமணத்திற்குச் சம்மதித்தாள்.

வள்ளி பேசிக் கொண்டே செல்ல, சவியின் விழிகள் வியப்பில் விரிந்து நம்ப முடியாத கனவொன்று உருக் கொண்டதைப் போல், நிலை குத்தி நின்றன.

* * *

அந்த நிமிடம் அவள் உலகமே அசைவின்றிப் போனது.

மெல்ல வீசிய காற்றும், மேகங்களும், மரங்களும் இயங்காமல் நின்றதைப் போல் ஒரு உணர்வு!

அவளால் எதையுமே நம்ப முடியவில்லை...

வள்ளியின் குரல் அவளை நினைவுலகிற்கு மீட்டது.. அவர் கூறுவதை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தாள் அவள்!

ராது, துரையின் திருமணம் நன்றாக, விமரிசையாக நடந்தது. சபரியே மாப்பிள்ளைத் தோழனாக இருந்தான்.

சென்னையில் கட்டிட வேலைகளைத் துரை பார்த்துக் கொள்ள, கொடைக்கானல் ஹோட்டலில் பார்ட்னராகி அதையும் கவனித்தபடி, அங்கும் அடுக்குமாடிக் கட்டடங்களைக் கட்ட ஆரம்பித்தான் சபரீஷ்.

அப்போதுதான் கருவுற்றாள் ராது.

குடும்பத்தினர் அவளை அன்பாகத் தாங்க, பாலாஜிக்குத் திருமணம் முடிந்து, அவனும் வேலை கிடைத்து டெல்லிக்குச் சென்று விட்டான்.

ராதுவுக்கும் டெல்லியிலேயே பிரசவம் நடந்தது... இனியா பிறந்தாள்.

வாழ்க்கை இனிமையாய்ச் செல்ல, மூன்றாவது மாதம் அவளை அழைத்துச் செல்ல துரை டெல்லிக்கு வந்த போது, அனைவரும் உற்சாகமாக ஊர் சுற்றிப் பார்த்தனர்.

அப்போது ரிஷிகேஷ் போய்விட்டுத் திரும்பும் வழியில் நடந்த விபத்தில் முன்புறம் அமர்ந்திருந்த ராதுவிற்கு தலையில் பலமாக அடிபட்டு அந்த இடத்திலேயே இறந்து விட்டாள்.

துரை பைத்தியம் பிடித்தவன் போலானான்... அந்தக் குழந்தையைப் பார்த்தாலே ஏனோ வெறுப்பு வந்தது...

அதை ஒரு நாள் கூடத் தூக்கிக் கொஞ்சியதில்லை... பித்துப் பிடித்தவன் போல் அமர்ந்திருப்பவன், திடீரென்று ஒரு நாள் சொல்லாமல் கொள்ளாமல் ஊரை விட்டுச் சென்றவன்தான்! திரும்பவே இல்லை...

பிறகு பாலாஜிக்கும் குழந்தை பிறந்து விட, ராதுவின் தாய் இனியாவை வளர்க்க ஆரம்பித்தார்.

இப்போது அவருக்கும் இதயக் கோளாறு வந்து உடல் நிலை சரியில்லாது போய் விடவே, நண்பனுக்காக குழந் தையை வளர்க்கும் பொறுப்பைத் தானே, ஏற்று, அந்தக் குழந்தையை முறைப்படி தத்தெடுத்து விட்டான் சபரீஷ்...!

அவனுக்கும் வாழ்க்கையில் ஏதோ ஒரு பிடிப்பு தேவை யாய்!

வள்ளியின் குரலில், அவனுடைய எண்ண அலைகள் ஓய்ந்தன.

"அவனால குழந்தையைத் தனியே வளர்க்க முடியாதுன்னு தான் நாங்க வளர்க்கிறோம்... வயசான காலத்துல இனியா



எங்களுக்கு ஒரு நல்ல துணையா இருப்பா.. துரை இப்ப எங்க இருக்கான்னே தெரியலை பாவம்!"

ஒரு பெருமூச்சுடன் வள்ளி முடித்தபோது, திடீரென்று சுனாமி அலைகள் சீறலாய் எழுந்து தன்னைத் தூக்கிப் போட்டதைப் போல் திக்கு முக்காடிப் போனாள் சவி.

எதிர்பாராத இந்தச் செய்தியால் மிகவும் நிலை குலைந்து போயிருந்தது மனது!

தான் ஒன்று நினைத்திருக்க, காலம் வேறு விதமாய் பயணித்திருப்பது புரிவதாய்!

ஆனால், பல உன்னதக் காதல்கள்... கல்லறைக் காவியங் களாகவே முடிந்திருப்பதை எண்ணி ஏனோ மனம் சோர்ந்து போனது.

## 18

தான் வெளிநாட்டிற்குச் சென்ற பிறகு இவ்வளவு நடந்திருக்குமென்று அவள் சத்தியமாக எதிர்பார்த்திருக்க வில்லை.

'பாஸ்டனில் படித்துக் கொண்டிருந்தபோது, ஹாஸ்ட லிலிருந்து மாறி கேதரினுடன் வீடு எடுத்துத் தங்கிய நேரம் ராதுவின் கல்யாணப் பத்திரிகை வந்திருக்க வேண்டு மென்று தோன்றியது...

மல்லிகா, ராதுவிற்கு திருமணம் என்று போனில் கூறியதுமே, அதைப் பற்றி அறிய விருப்பமின்றி சபரீஷின் நினைவுகள் தடை செய்ய, தன் வாழ்த்துக்களை

தெரிவித்து விடச் சொல்லிவிட்டு உடனே போனை வைத்தது நினைவு வந்தது.

“சவி... இவ்வளவு நடந்தப்புறம்கூட அவன் உன்னையே நினைச்சிட்டிருக்கான்மா... இந்த தடவை நீ அவனைக் கல்யாணம் பண்ணிக்க மறுத்தே பாரு... அன்னிக்கு ராத்திரிதான் அம்பாசமுத்திரத்துல எல்லா உண்மையையும் சபரி என்கிட்ட சொன்னான்.. அதனால தான் நான் இங்கே வந்தேன்... எப்படியாவது பேசி உன் மனசை மாத்தணும்னு நினைச்சேன்... இப்ப உன் முடிவு தான் தெரியணும்... நீ ஏன் மாட்டேன்றே.. அதையாவது அவன் கிட்ட சொல்லலாமே?

“எனக்கு ரொம்ப ஆச்சர்யம்... சபரீஷ், எப்பவுமே தான் ஒன்னு நினைச்சா அதை அடையாம விடவே மாட்டான். சின்ன வயசுல இருந்தே அவன் சுபாவம் அப்படித்தான்! ஆனா அவனோட ஆசைகள் என்னிக்குமே ரொம்ப நியாயமானதாத்தான் இருக்கும்...

“தான் ஹாஸ்டல்லேதான் தங்கிப் படிப்பேன்னதாகட்டும்... தனக்குண்டான மேற்படிப்பை தானே தேர்ந்தெடுத்ததாகட்டும்... ஹோட்டல் பிசினஸ்லே இறங்கணும்னு நினைச்சி அதுக்காகப் படிச்சதாகட்டும்... எதிலயும் இறங்கிட்டான்னா, அந்த இலக்கை அடையற வரைக்கும் ஓயமாட்டான்...

“ஆனா உன் விஷயத்துலதான் அவன் முதன் முதலா தோத்துப் போன ஒரு உணர்வோட பேசுனதை நான் பார்த்தேன்... ஒரு அம்மாவா எனக்கு அப்பப்பா... ரொம்பக் கஷ்டமா இருந்தது...”

மெலிதாய் நீர்ப்படலத்தை சுமந்த விழிகளோடு அவர் நிறுத்தியபோது, அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.



சபரீஷுக்கு திருமணமாகவில்லை என்று தெரிந்தவுடனே நெஞ்சிலிருந்த பாதி பாரம் இறங்கியது! மீதியை மனம் வலுக்கட்டாயமாகச் சுமந்தது...

வேகமாக நிமிர்ந்தவள், “நான் சபரீஷ்கிட்டப் பேசறேன் ஆன்ட்டி... நீங்க போங்க... கூடிய சீக்கிரமே ஒரு நல்ல முடிவா அவரு சொல்லுவாரு...” சிறு புன்னகையுடன் கூறினாள்.

“தேங்க்ஸ் சவி! இதை மட்டும் செஞ்சிட்டேன்னா நான் நிம்மதியா இருப்பேன்” நெகிழ்ச்சியுடன் கூறினார்.

பிறகு இருவரும் மௌனமாக அவரவர் யோசனைகளுடன் வீடு திரும்பினர்.

சபரீஷை நினைத்தால் பெருமையாய்... தான் கூறிய வார்த்தைகளை நம்பாமல் காதலை மட்டுமே நம்பிக் காத்திருந்த அவனுடைய நேசம் எவ்வளவு வலிமையானதென்று புரிவதாய்..!

மனதிற்குள் ஒரு ஈரப் படலமாய்... கவிதைத் தொகுப்பாய்... மென் பனிக் காற்றாய்... அவனே நிறைந்திருந்தான்.

* * *

மறுநாளே அவர்கள் கிளம்பிச் செல்ல, வாழ்க்கை தடங்கலில்லாத தேரோட்டமாய்ச் சென்றது.

அருகிலிருந்து கவனித்ததில், காஞ்சனாவின் பொறுமையும் அமைதியும் சவிக்குள் பெரும் ஆச்சர்யத்தை விளைவித்தன.

இவ்வளவு பிரச்சனைகள், தோல்விகளை வாழ்க்கையில் சந்தித்திருந்தாலும், அவரிடம் தெரிந்த பக்குவமும், அமைதியும் பெரும் பிரமிப்பைத் தந்தன.

தன்னால் சத்தியமாக இப்படி இருக்க முடியாதென்பது புரிந்தது! அதை மனதில் வைத்துக் கொள்ளாமல், ஒரு நாள் கேட்டே விட்டாள்.

"இவ்வளவு நடந்தும், எப்படி சித்தி உங்களால இப்படி அமைதியா இருக்க முடியுது?" வியப்புடன் கேட்டாள்.

"ம்... பொதுவா ஒவ்வொரு மனுஷனுக்கும் ஆத்ம பலம் வேணும் சவி! அளவான ஆசைகள்... குறைவான தேவைகள்... இயல்பான மன நிறைவு... நிறையப் பெருந் தன்மை. கலபத்துல திருப்தியடையற ஒரு மனசு... சின்னச் சின்ன சந்தோஷங்களைக் கூட ரசிச்சு அனுபவிக்கிற குணம்... இதையெல்லாம் வளர்த்துக்கிட்டோம்னா வாழ்க்கையில எல்லாருமே நிம்மதியா இருக்கலாம்....!" சிறு முறுவலுடன் கூறினார்.

"பட்... அந்தப் பக்குவம் எல்லாருக்கும் வராதே சித்தி!"

"ம்... வரவழைச்சிக்கணும் சவிம்மா! சுய பச்சாதாபத் திலயும், வேதனையிலயும் மனசு சோர்வடையறபோதெல் லாம், ஃபீனிக்ஸ் பறவையா உயிர்த்தெழுந்து நம்பிக்கையை யும் தைரியத்தையும் சேகரிச்சு நிமிர்ந்து நிற்கப் பழகிக் கணும்! எனக்கு இதெல்லாம் பழகிடுச்சு!"

"ஏன் சித்தி! உங்களுக்கும் எல்லாரை மாதிரியும் இயல்பான குடும்ப வாழ்க்கை வாழணும்னு மனசில ஏக்கம் வந்ததில்லையா?"

"ஹும்...நீ இப்படி கேக்கிறப்ப எங்கேயோ படிச்சது தான் ஞாபகம் வருது... மத்தவங்களோட எப்பவுமே நம்ம வாழ்க்கைய ஒப்பிட்டுப் பார்க்கவே கூடாது! ஒப்பிடல் நரகம்... ஒப்பிடாத வாழ்க்கை சொர்க்கம்!



"மத்தவங்களோட கம்ப்பேர் பண்ணும்போது சுயபச்சா தபம், பொறாமை, கோபம் எல்லாமே வர வாய்ப்பிருக்கு! அதத் தவிர்க்கறதுதான் நல்லது... நாம எப்படி இருக் கோம்கிறதுதான் முக்கியம்" தெளிவாகக் கூறினார்.

"நான் உங்ககிட்ட நிறைய கத்துக்கணும் சித்தி... முதல்லே உங்க பொறுமையைக் கத்துக்கணும்" கூறி விட்டு சலுகையுடன் அவர் தோளில் சாய்ந்து கொண்டாள் சவி.

***

அந்த ஞாயிறன்னு, வந்த ஈ மெயிலில் அடுத்த மாதம் இந்தியாவிற்கு வருவதாகக் கூறி இருந்தாள் கேதரின்.

சவியின் மனம் சிறகு கட்டிப் பறந்தது. தோழியின் வரவை ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்தாள் அவள்.

அதைப் பற்றி காஞ்சனாவிடம் கூறியபோது, அவளும் இங்கேயே வந்து தங்கிக் கொள்ளட்டும் என்று ஆர்வத் துடன் கூறினார் அவர்.

நாட்கள் விரைய, அந்த வாரத்தில் ஒரு நாள் செல்லில் அவளை அழைத்தான் சபரீஷ்!

அவள் எடுத்ததும், "சவி! அம்மா இன்னிக்கு போன் பண்ணியிருந்தாங்க... நீ ஏதோ என்கிட்டப் பேசணும்னு சொன்னியாம்... என்கிட்டயிருந்து ஒரு நல்ல முடிவு வரும்னு காத்திருக்கறதா சொன்னாங்க... எனக்கு என்ன சொல்றதுன்னே புரியலை...! ஏன் என்கிட்டே நீ அதைப் பத்தி எதுவுமே பேசலை...?

"நான் உன்னை உடனே மீட் பண்ணனும்... எங்கே வரது...? ஹோட்டல்லே வேணாம்... அன்னிக்கு ஒரு

கெஸ்ட் ஹவுசிற்கு போனோமே... அங்கே போலாமா?" அவனுடன் கேட்டபோது அவளும் ஒரு முடிவிற்கு வந்திருந்தாள்.

"சரி... நானே வரேன்..." என்று போனை வைத்தவளுக்குள், உணர்வுகள் ராட்டினமாய் சுற்ற ஆரம்பித்தன.

அவள் கெஸ்ட் ஹவுசை சென்றடைந்தபோது, சபரீஷ் அவளுக்காக அங்கு காத்திருந்தான்.

மனதிற்குள் பெரும் பிரளயம் மையம் கொண்டிருக்க, அவள் இதயத்திற்குள்... திடீரென்று ஒரு இலையுதிர் காலம்!

எண்ணங்களின் பசுமை தொலைந்துபோய், நெஞ்சம் பாலையாக வறண்டிருந்தது.

"என்ன சவி? எதுவுமே பேச மாட்டேன்கிறே?"

அங்கு நிலவிய அவஸ்தையான மௌனத்தைக் கலைத்தபடி சபரீஷ் கேட்டான்.

மனதில் ஒருவிதத் தீர்மானத்துடன் நிமிர்ந்தவள், "மூணு வருஷத்துக்கு முன்னாடி நீங்க அம்பாசமுத்திரத்துக்கு வந்து என்கிட்ட முதன்முதலா உங்க காதலைப் பத்தி சொன்னப்ப நான் மறுத்தேனே... அதுக்கு முதல் நாள் என்ன நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமா சபரீஷ்?" சோர்வுடன் கேட்டாள்.

"தெரியும்... ராது உன் கிட்ட என்னை விரும்பறதா சொல்லி இருக்கா... நீ உடனே உன் ஃப்ரெண்டுக்காக தன் காதலைத் தியாகம் செஞ்சிட்டு என்னோட காதலை ஏத்துக்க மறுத்தே!"

"இல்லை... நானும் ராதுவும் கோவிலுக்கு போனதும் உங்களைப் பத்தி ராது சொன்ன வரைக்கும்தான் எல்



லாருக்கும் தெரியும்... அப்புறம் அந்த ஆற்றங்கரை மண்டபத்துல என் வாழ்க்கையே சிதைஞ்சு போனது எங்க மாமாவைத் தவிர வேற யாருக்குமே தெரியாது!"

பார்வை எங்கோ மலை முகட்டில் பதிந்திருக்க, அவள் கூறக் கூற அவன் மனதில் காட்சிகள் விரிந்தன.

வெகு நாட்களாய் அவள் மனதில் அடைந்து கிடந்த வேதனையான நிகழ்வுகள் வார்த்தைக் கங்குகளாய் சிதற ஆரம்பித்தன.

# 19

அன்று ராது, சபரீஷை விரும்புவதாகக் கூற அதிர்ச்சியிலிருந்து மீளாமல், சைந்தவி வெகு நேரம் சிலையாய் உறைந்து அமர்ந்திருந்தாள்.

காதலா... நட்பா என்ற போராட்டத்தில் மனம் காதலின் பக்கம் சாய, சிறு கனவுகளுக்குக் கூட வர்ணம் பூசி சிறகு கட்டிப் பறக்க வைத்திருந்த காதல், இறுதியில் வென்று விட்டது.

யாருக்காகவென்றாலும் சபரீஷை தன்னால்விட்டுக் கொடுக்க முடியாதென்பது உறுதியாகப் புரிவதாய்!

அவனை நேசத்துடன் சுமந்த இதயத்திற்கு, வேறு ஒருவரும் நிறைவை அளிக்க முடியாதென்பதையும், இதயக் கருவறையில் அவனை சுமப்பதே ஒரு பேரின்பமாகவும் உணர்ந்தாள் சவி.

நட்புக்காக, காதலை அடகு வைக்க முடியாதென்பது தீர்மானமாகத் தெரிந்தது.

காதலை அடக்கி வைக்க வைக்க, அது அடங்காமல் பொங்கும் காட்டாறாய் வெளிப்படுவது, காதலின் பேரச் குணங்களில் ஒன்று!

இப்போது அது விசுவரூபமெடுத்து மனதில் பெரும் உறுதியை ஏற்படுத்த, சட்டென்று அவளுக்குள் விரவிப் பரவிய குளிர்ச்சியும், பலமாய் வீசிய மழைச் சாரலும் அவளைப் பதறி விழிக்கச் செய்தன!

பதைப்புடன் எழுந்தபோது, நன்றாக இருட்டி, மழை பெய்ய ஆரம்பித்திருந்தது!

எதிரே தெரிந்த காரின் ஹெட்லைட் வெளிச்சம் சிறிது தைரியத்தைத் தர, அவர்களிடம் 'லிஃப்ட்' கேட்கலா மென்று எழுந்தபோது, அந்தக் கார் அவளருகே வந்து நின்றது!

சிறு முறுவலுடன் லிஃப்டிற்காக கை அசைத்தாள் அவள்.

அப்போது, அதிலிருந்து தடதடவென்று வேகமாக இறங்கி வந்த மூவருமே நன்றாகக் குடித்திருப்பது, அவர்களுடைய நடையின் தள்ளாட்டத்திலும், அவர் களிடமிருந்து வீசிய துர்நாற்றத்திலும் தெரிந்தது.

என்ன செய்வதென்று புரியாமல் அவள் மழையில் இறங்கி வேகமாக நடக்க முற்பட்டவுடனேயே, அவளைப் பிடித்து இழுத்தான் ஒருவன்!

நிலைமை சரியில்லை என்பதை உணர்ந்து அவனிட மிருந்து தப்புவதற்காக வேகமாக ஓடியவளை, காரின் மறுபுறமிருந்து வந்தவன் தடுத்தான்.



எங்கிருந்துதான் அவளுக்கு தைரியம் வந்ததோ, அவன் கையைப் பிடித்து ஆழமாகக் கடித்துவிட்டு அவள் ஓட, அவனுடைய வெறி இன்னும் அதிகமானது.

"ஏய்... அவளைப் பிடிடா?" அவன் குரல் கொடுக்க, மற்றொருவன் ஓடிச் சென்று அவள் பின்னலைப் பிடித்து இழுத்து அவளுடைய ஓட்டத்தை தன் காலால் தடுக்க, தொப்பென்று சரிந்து மண்ணில் விழுந்தாள் சவி.

வானம் நீர்த் தூறலால் அவளை மூழ்கடித்து, உடைகள் ஒட்டி பளீரென்ற மின்னலில் அங்கங்களை வெளிச்ச மிட்டுக் காட்ட.... காம இச்சைகளும் மோகமும் நிறைந்த விழிகளுடன் அவளைப் பிடித்து திமிறத் திமிற மண்ட பத்திற்கு இழுத்து வந்தான் ஒருவன்.

மனிதாபிமானத்தையும் கருணையையும் குழி தோண்டிப் புதைத்துவிட்டு... அங்கு காமமும் குரோதமும் ஜெயித்தன.

பிறகு அவன் அவளைப் பிடித்துத் தள்ளி அழுத்திக் கொள்ள, மற்றொரு மிருகம் தன் இச்சையைத் தீர்த்துக் கொண்டது.

தெரு நாய்களின் மறு பிறவிகளாய் இரண்டு முரடர் களும் அவளைக் கசக்கி முகர, தன்னைக் காப்பாற்ற அவள் எவ்வளவோ குரல் கொடுத்தும், மழையின் சப்தத்திலும், இடியின் ஓங்காரத்திலும், அது கரைந்து போனது.

அந்த ஓநாய்களிடமிருந்து தப்பிக்க எண்ணி அவனைத் தள்ளிவிட்டு அவள் ஓட எத்தனிக்க, இன்னொரு ஆண் அவளை குறையாட முயற்சிக்க, அவள் ஓய்ந்து போய் மயக்கமுறும் நிலைக்கு வந்தபோதுதான், ஒரு காரின் ஹெட் லைட் வெளிச்சம் அவர்கள் மீது பாய்ந்தது.

உடனே பயந்துபோய் எழுந்து ஓடியவர்கள், தங்கள் சுமோவைக் கிளப்பித் திருப்பி கண்மண் தெரியாத வேகத்தில் ஓட்டிச் சென்றனர்.

காரிலிருந்து இறங்கி ஓடி வந்த சண்முகம், அவ ளிருந்த நிலையைக் கண்டதும் பதறிவிட்டார்.

தாயின் அரவணைப்புக் கூட்டுக்குள்ளிருந்து வெளிச்சத் திற்கு வந்து, பறக்க ஆரம்பித்திருந்த சிறு தேன் சிட்டின் அழகிய சிறகுகளைப் பிய்த்தெறிந்து அவள் உணர்வு களுக்கு தீ வைத்துக் கருக்கியதை, பெரும் வேதனை யுடன் உணர்ந்தார்.

உடனே தலையிலடித்துக் கொண்டு அழ ஆரம்பித் தவர், அவளைத் தூக்கிச் சென்று காரில் படுக்க வைத்து விட்டு, ஒரு வெறியுடன் அந்த சுமோவை பின்தொடர்ந்து காரை விரட்டிச் சென்றார்.

அப்போதுதான் மெயின் ரோடின் திருப்பத்தில் அந்தக் கோரக் காட்சியை இருவருமே கண்டனர்.

எதிரில் வந்த லாரியுடன் நேருக்கு நேர் மோதியதில் அப்பளமாக நொறுங்கி இருந்தது அந்தக் கார்.

அவள் தடுமாறி எழுந்து அமர்ந்தபோது, "உன் விஷ யத்துல கடவுள் அவனுங்களுக்கு உடனே தண்டனை குடுத்துட்டாருடா செல்லம்..." என்று அவளைக் கட்டிப் பிடித்து அழ ஆரம்பித்தார் சண்முகம்.

பிறகு சுமோவின் அருகில் சென்று பார்த்தபோது, முன்புறம் அமர்ந்திருந்த இருவரும் சிதைந்து கூழாகி இருந்தனர்.

பின்புறமிருந்தவனும், அந்த இடத்திலேயே இறந்திருந்தான்.



போக்குவரத்து ஸ்தம்பித்து, கூட்டம் கூட ஆரம்பித் ததும், ஓடி வந்து காரில் ஏறியவர் "சவி..." என்று அவளை அணைத்துக் கொண்டு கதற ஆரம்பித்தார்.

சிறிது நேரம் கழித்து சுய நினைவுக்கு வந்தவர், தான் கொண்டு வந்திருந்த சுடிதாரை அவளிடம் தந்து அணிந்து கொள்ளும்படிக் கூறிவிட்டு, மழையிலேயே வெளியில் காவலிருந்தார்.

துண்டால் வாயை மூடினாலும், அடக்க முடியாத ஆழ்ந்த விம்மல் அவரிடமிருந்து வெளிப்பட்டது.

அவள் காரிலேயே உடை மாற்றியதும் அந்தத் துணிகளை வாங்கித் தூர எறிந்தார்.

"சவிம்மா! இது மாதிரி உடையில பட்ட சேறா நினைச்சி, நீயும் அந்த அசிங்கமான நினைவுகளை மனசுலருந்து தூக்கிப் போட்டுக் கழுவிடணும்... இது ஒரு விபத்துடா... விபத்துக்கப்புறம் நாம ட்ரீட்மெண்ட் பண்ணி சரியாயிட றோம் இல்லையா? அது மாதிரிதான் நினைச்சிக்கணும்... சரியா?

"இது நம்ம ரெண்டு பேரோட இருக்கட்டும்! வேற யாருக்கும் தெரியக்கூடாது!" என்றபடி அவளுடைய தலையைப் பாசத்துடன் வருடிவிட்டு, காரை எடுத்தார்.

எதையுமே உணரும் நிலையில், அன்று சவி இல்லை.

உணர்வுகள் மரத்துப் போயிருக்க, இதயம் சுக்கல் சுக்கலாக நொறுங்கி இருந்தது...

தைரியமும் துடுக்குமாக சுற்றித் திரிந்த அவளின் இயல்பே, அந்த ஓரிரவில் மாறிப் போனது.

மிருந்த மென்மையும், பலவீனமுமாகப் பிறந்த குழந்தை போல் இதயம் மிருதுவாகி விட்டிருந்தது.

தோல்வி, சுடுசொல், முகச் சுளிப்பு தாங்காத சென்சிடிவான பெண்ணாக ஒரே நாளில் மாறிப் போயிருந்தவளிடம், இயல்பான உற்சாகமும் துள்ளலும் மரித்துப் போயிருந்தன.

குழப்பம், அச்சம், வேதனை என்று எதிர்மறை உணர்வுகள் மனதிற்குள் சூழ, மிகப் பெரிய கேள்விக் குறியும் இருட்டுமாய் கண்முன் விரிந்தது எதிர்காலம்!

வீட்டிற்குச் சென்றதுமே அவளுக்கு கடுமையான காய்ச்சல் வர, மருந்தைக் கொடுத்து அவளை உறங்க வைத்த பிறகு, தர்மாம்பாள் மகனிடம் வந்தார்.

"ஏம்ப்பா... நீ போயிட்டு வர இவ்வளவு நேரமாயிடுச்சி?" பதட்டத்துடன் விசாரித்தார்.

"அம்மா! நான் போனப்ப மண்டபத்துல சவி இல்லை... எல்லைக் காளியம்மனோட கர்ப்பகிருகத்துல இருந்திருப்பா போலருக்கு.. நான் நேரா போயிட்டேன்... அப்புறம் பாத்தா மெயின் ரோடுல ஒரு ஆக்சிடெண்ட்.... எவனோ வெளியூர்க்காரன் வந்த சுமோ லாரியில மோதி ஆளுங்க ஸ்பாட்டிலேயே அவுட்! அதைப் பாத்துட்டு திரும்பி வந்தா நம்ம சவி நடந்து போயிட்டுருக்கா!

"மழையில வழுக்கிக் கீழே விழுந்து துணியெல்லாம் சேறு...! நல்ல வேளை, அவளுக்காக நான் புதுசா டவுன்லேருந்து வாங்கிட்டு வந்த சுடிதார் செட் ஒண்ணு காரிலேயே இருந்தது. அதை எடுத்துக் குடுத்து காருக்குள்ளேயே துணி மாத்திக்கச் சொல்லிட்டு அந்த அழுக்குத் துணியை தூக்கிப் போட்டுட்டு வந்துட்டேன்... வரும் போதே சவிக்கு நல்ல காய்ச்சல்... மழையில நனைஞ்சா ஒத்துக்குமா? அவளைத் தொந்தரவு செய்யாதீங்க... பாவம் பயந்துட்டா குழந்தை!" என்றபடி குளிக்கச் சென்றார்.



அன்றிரவு முழுவதும் தூக்கத்தில் அரற்றுவதும், துர்சொப்பனங்களின் விளைவால் அலறியபடி எழுந்து அமர்வதுமாக இருந்தவளை, வளர்மதியும் மல்லிகாவும் அணைத்து ஆறுதல் படுத்தி உறங்க வைத்தனர்.

***

மறுநாள் காலையிலேயே டாக்டரை வரவழைத்துப் பார்த்தபோது, அதிகப்படியான அலைச்சலாலும், ஓய்ச்சலாலும் அவளுக்குக் காய்ச்சல் வந்திருப்பதாகவும் ஒரு வாரம் ஓய்வெடுத்தால் சரியாகிவிடுமென்றும் அவர் கூறினார்.

பகலில், ராது அவளுக்குத் துணையாய் இருந்து யுடிகோலன் நனைத்த துணியை நெற்றியில் பற்றுப் போட்டபடி இருந்தாள்.

ஒரு வாரம் கழித்தே அவளால் சிறிதாவது தன் இயல்பு நிலைக்குத் திரும்ப முடிந்தாலும், மறுநாளே மனம் ஒரு முடிவுக்கு வந்திருந்தது.

தன்னால் இனிமேல் ஒருவருக்கு மனைவியாய் வாழ்வது முடியாத காரியமென்பதும், தன்னுடைய உணர்வுகளை அந்த மிருகங்கள் மரணிக்கச் செய்து விட்டதும் புரிந்தன.

ஆண், திருமணம், இல்லறம் என்ற நினைவே ஒரு கொடூரமான... அச்சமூட்டும் ஒன்றாக மாறிவிட்டதையும் அவள் தெளிவாக உணர்ந்தாள்.

அதனாலேயே ராதுவை மணந்து கொள்ளச் சொல்லி சபரியை வற்புறுத்தினாள்.

ஆனால் சபரீஷைப் பற்றி நினைத்தாலே நெஞ்சுக்குள் வேதனையும் விரக்தியும் சூழ்ந்தன.

ஒரே நாளில் ஓய்ந்து போயிருந்தாள் சவி!

வாடிய பூச்சரத்தை கூந்தலிலிருந்து களைந்து எறிவதைப் போல், கலபத்தில் அந்தக் கொடிய நினைவுகளை ஒதுக்க முடியவில்லை!

அந்த இளம் மனது கிழித்துக் கூறாக்கப்பட்டிருக்க, இளமைக் கனவுகள், லட்சியங்கள் அனைத்தும் சிதைக்கப் பட்டிருந்தன.

அனுபவங்களின் வலித் தடங்கள், மனதில் ரணமாய் இன்றும் பரவி இருப்பதற்கு சாட்சியாய், முகத்தை மூடி அழத் தொடங்கினாள் சவி!

எழுதப்படாத சட்டங்களில் ஒன்றுதானோ இது...? பெண்களை... மெல்லிய மலரைப் போன்ற மென்மையானவர்களை... ஆண்மையின் உடல் பலத்தால் வென்று, சாவின் நுனி வரை அவர்களை அழைத்துச் சென்று துவம்சம் செய்வது...?

கசப்பான அனுபவங்கள் ஏற்படுத்திய காயத்தடங்கள் ஆறாமல்... அடி முதல் நுனி வரை தன்னைக் கூறு போட்டுக் கிழித்து ரணகளமாக்கி, ஜீவனற்றவளாய் மாற்றி விட்ட அந்தத் துயர சம்பவத்தின் நினைவுகளிலிருந்து மீண்டு வர இயலாமல், துடிக்க ஆரம்பித்தாள் அவள்.

## 20

சைந்தவி கூறியதைக் கேட்டதும், முகத்தில் எரிதழலை வாரிக் கொட்டியதைப் போன்ற வலியுடன் செயலிழந்து நின்றிருந்தான் சபரீஷ்.



சவியிடமிருந்து, இத்தகைய அதிர்ச்சி தரும் ஒரு சம்பவத்தை அவன் சத்தியமாக எதிர்பார்த்திருக்கவில்லை. ஒரு அழகிய ஓவியம், ஒரு மழைக்கால இரவில், பாழ் மண்டபத்தில், மிருகங்களின் கோரப்பிடியில் சிக்குண்டு சிதைந்த ஒரு தோற்றம் மனதில் வந்தது.

மெதுவாக அவளருகில் சென்றவன், அப்படியே அவளைத் தன்மீது ஒரு பூவைப்போல் சாத்திக் கொண்டான்.

உனக்கு ஏதாவதொன்று ஆகிவிட்டால், நான் சுக்கு நூறாய் சிதறிவிடுவேன் என்ற தவிப்பும், வேதனையும் அதில் தெரிந்தன.

இதயம் ரத்தக் கண்ணீர் வடித்தது...

இந்த அற்புதமான பூவைக் கசக்க அந்த முரடர்களுக்கு எப்படி மனது வந்ததென்று எண்ணியதுமே, மனம் ரணமாய் வலித்தது.... திடீரென்று தொண்டையை அடைத்தது... நெஞ்சுக்குள் இனம்புரியா ஒரு வலி எழுந்து 'ஓ'வென்று கதற வேண்டும் போல...!

சவியின் மனதிலிருந்த புதிர் முடிச்சு அவிழ்ந்ததில், இழப்பின் வலி கனமாய் உணரப்பட்டு, இவ்வளவு நாட்கள் ஆழ் மனதில் உறைந்திருந்த வேதனைகள் மேலே வந்திருந்தன.

வெகு நேரம் அவன் மார்பில் முகம் புதைத்து அழுதவள், ஒரு கணத்தில் மெதுவாகத் தன் நிலை புரிந்து விலகினாள்.

அப்போதுதான், தன்னுடைய மனக் கடலில் நங்கூரம் பாய்ச்சியிருந்த தன்னம்பிக்கையும், தைரியமும் எங்கோ தொலைந்து போயிருப்பதை ஒரு வித வலியுடன் உணர்ந்தாள் அவள்.

தன் சுயத்தை தொலைத்த அவலம் முகத்திலறைய, தன் நேசத்துக்குரியவனிடம் எல்லாவற்றையும் கூறியும், தாங்க இயலாத பயத்தின் வீச்சு தன்னைத் தகர்ப்பதை அவளால் உணர முடிந்தது.

உள்ளூர ஒரு வித நடுக்கத்துடன் நிமிர்ந்தபோது, அவன் முகம் இறுகிக் கண்கள் சிவந்திருந்தன.

விழிகளில் தெரிந்த நீர்க்கசிவு, அவன் மனதிற்குள் அழுவதை உணர்த்தின.

அவன் இதயம் உடைந்து சுக்கல் சுக்கலாக சிதறி இருந்தது.

சில நேரங்களில் மனித வாழ்க்கை மர்மங்கள் நிறைந்த ஒரு புதிராய் ஆகிவிடுவது புரிந்தது.

மலைப் பாதைகளில் திடீரென்று சரிவாய் இறங்கும் பள்ளத்தாக்குகளைப் போல்... புதர்களுக்குள் ஒளிந்திருக்கும் கொடிய மிருகங்களைப் போல், கண்ணுக்குத் தெரியாத பல திகில் சம்பவங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதையும் அன்று தான் உணர்ந்தான்.

அவள் தன்னைப் பார்ப்பதை உணர்ந்ததும், மனதை திடப்படுத்தி ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தான் சபரீஷ்.

உனக்கு நானிருக்கிறேன் என்பது போன்ற அவன் பார்வையும், அழுந்திய உதடுகளில் ஜனித்த ஆறுதல் புன்னகையும், ஓசையற்ற தேறுதல் சொற்களாய் சவியை வருடின.

மனம் இரண்டாகப் பிளப்பதுபோல் வலிக்க ஆரம்பிக்க, சூனியத்தை வெறிக்க ஆரம்பித்தாள் அவள்.



''நான் வரேன் சபரீஷ்... இப்ப புரிஞ்சிக்கிட்டீங்களா நான் ஏன் உங்களை மறுத்துட்டுப் போனேன்னு...? அப்போ ராதுவோட விருப்பம் ஒரு காரணம்னாலும், இப்பவும் என்னால ஒத்துக்க முடியாததுக்கு என்ன காரணம்னு உங்களுக்குத் தெரியணும்னுதான் இந்த உண்மையை உங்ககிட்ட சொன்னேன்... நான் எல்லாத்தையும் இழந்தவ... எது மேலயும் நம்பிக்கை இல்லாதவ... எதுக்கும் குடுத்து வைக்காதவ!

''வள்ளி ஆன்ட்டி வருத்தப்பட்டாங்க... நீங்க கல்யாணத்துக்கு ஒத்துக்காததுல அவங்களுக்கு ரொம்பக் கவலை! இனிமேலாவது... அவங்க நிம்மதிக்காகவாவது அவங்க பாக்கற பொண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கங்க... ப்ளீஸ்...'' மெலிந்த குரலில் இறைஞ்சியவள் வெளியே செல்லத் திரும்பினாள்.

''சவி... ஒரு நிமிஷம்...! என் மனசு என்ன... நிமிஷத்துக்கொரு தடவை நிறம் மாறும்னு நீ நினைச்சியா? என்னால எதையும் மறக்கவும் முடியாது... மனசை மாத்திக்கவும் முடியாது!

''என்னைப் பொறுத்த வரைக்கும் இந்த ஜென்மத்துல எனக்கு மனைவின்னு ஒருத்தி வரதா இருந்தா, அது நீயா மட்டும்தான் இருக்க முடியும்... இல்லைன்னா கடைசி வரைக்கும் நான் இப்படியே இருந்துடுவேன்... அதனால தான் இனியாவை வளர்க்கவே நான் முடிவெடுத்தேன்...

''இப்ப நீ சொன்ன பாரு... அதைக் கேட்டதுக்கப்புறம்தான், எனக்கு உன் மேல் இருந்த காதல் இன்னும் பல மடங்கு அதிகமாயிடுச்சு! இது மானுடக் கடமையா.... காதல் தந்த பொறுப்பா... இல்லை உனக்காக நான் ஏங்கித் துடிக்கிற தவிப்பா... தெரியலை...

"என்னால உன்னை எதுக்காகவும் எந்தக் காலத்துலயும்... விட்டுத் தர முடியாது சவி! என்னைப் பொறுத்த வரைக் கும் நீ என்னோட ப்யூரிட்டன்... புனிதமானவ...! நான் உனக்காக எவ்வளவு நாளானாலும் காத்திருப்பேன்..." கடும் உறுதியாக, உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினான்.

"இல்லை... என்னால யாரையும் கல்யாணம் பண் ணிக்க முடியாது... அதுவும் உங்களை... நிச்சயமா முடி யாது...! வாழ்நாள் முழுக்க மனசில உங்களுக்கு துரோகம் பண்ணின மாதிரி எனக்குள்ளே உறுத்திக்கிட்டே இருக் கும்..." முகத்தை மூடியபடி குலுங்கி அழ ஆரம்பித்தாள் சவி.

அவளை வேகமாக அணைத்து சமாதானப்படுத்தி னான் அவன். பருந்துகளிடமிருந்து குஞ்சுகளைக் காக்கும் தாய்ப்பறவையின் வேகம் தெரிந்தது அந்த செயலில்! அவளை எந்த விதத்திலும் காயப்பட விடக்கூடாதென்ற உறுதியும்... பரிவும்... வேதனையும் அவனுக்குள் விரவிப் பரவின.

"சவி! எனக்கு ஒரு நல்ல தோழியா... இருக்க சம்மதமா? நீ அழுதா என்னால தாங்க முடியாது... நான் இனிமே இதைப் பத்தி பேசவே மாட்டேன்... ஆனா பழையபடி, நீ என் கூட ஒரு நல்ல ஃப்ரெண்டா இருக்கணும்... ஓகே!" மென்குரலில் கேட்டான்.

சட்டென்று அவளுடைய உடல் மெலிதாக அதிர்ந்து நடுங்கியது.

அலைப்புறுதலுடன் நிமிர்ந்தவள், மெதுவாக "ம்... சரி!" என்றாள் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்!

"அதையே கொஞ்சம் சிரிச்சிட்டே சொன்னா இன்னும் நல்லாருக்கும்..."



இதமாக கேலியுடன் அவன் கூற, சிறு முறுவல் படர்ந்தது அவளுடைய இதழ்களில்!

"ம்... சியர் அப் மை லவ்...! இப்பதான் நீ என்னோட பழைய சவி... ஆனா இன்னும் நிறைய மாறணும்! அந்தப் பழைய துறுதுறுப்பும், என் கூட வார்த்தைக்கு வார்த்தை எதிர்வாதம் செய்யற சவியும் தான் எனக்கு வேணும்!" ஏக்கத்துடன் கூறினான்.

அவளுடைய இதழ்களில், மெலிதாய் ஒரு விரக்திப் புன்னகை பரவியது.

"சரி சபரீஷ்... போஸ்ட் மார்ட்டம் முடிஞ்ச பிறகு அந்த உடல் எழுந்து சிரிக்குமா என்ன?" சட்டென்று கலங்கிய விழிகளுடன் கேட்டாள்.

ஒரு கணம் ஆடிப் போனான் அவன்.

"சவி... தைரியத்தை மட்டும் எந்த நேரத்திலயும் ஒருத்தர் இழக்கவே கூடாது! மனசு 'வீக்'கானா உடம்பும் 'வீக்' ஆயிடும்... எப்பவுமே மனசைத் தெம்பா தைரியமா வெச்சிக்கணும்... நான் ஒண்ணு சொன்னா தப்பா நினைச் சிக்க மாட்டியே?" பீடிகையுடன் தயக்கமான குரலில் கேட்டான்.

என்னவென்பது போல் ஏறிட்டவளிடம், "ஒரு சைக் யாட்ரிஸ்ட் கிட்ட கவுன்சிலிங் பண்ணலாமா?" மெது வாகக் கேட்டான்.

உடனே, அவள் தன்னை ஏதாவது தப்பாக நினைத்து விடுவாளோ என்ற பயமும், அவனை ஆக்கிரமித்தது.

ஆனால் ஒரு பெருமூச்சுடன் நிமிர்ந்தவள், "ம்... அதெல்லாம் யு.எஸ்லேயே பண்ணிக்கிட்டேன்... அத

னாலதான் இந்த அளவு இருக்கேன்... ஆனா அப்படியும் என்னை மீறி சில சமயங்களிலே ரொம்ப பாதிக்கப்பட்டுடுவேன்... அந்தக் கொடுமையான நினைவுகள் ரணமாத் தாக்கி உருக்குலைச்சுடும்... இப்போ பழகிடுச்சி... முன்னே இருந்ததுக்கு இப்ப எவ்வளவோ பெட்டர்...'' என்றாள் சோர்ந்த குரலில்.

''அப்புறம் என்ன சவி... எதுக்குத் தயங்கறே? நான் உன்னை எதுக்குமே தொந்தரவு செய்ய மாட்டேன்... சே...'' தன்னையறியாமல் கேட்டுவிட்டு சட்டென்று தலையைக் குலுக்கிக் கொண்டான் அவன்.

''ஓகே... இனிமே நாம... ஃப்ரெண்ட்ஸ்...'' அவன் விரல்கள் எதிர்பார்ப்புடன் நீண்டன.

ஒரு கணம் தயங்கினாலும், மறு நொடியே தன் கையை அவன் கரத்திற்குள் பதித்தாள் சவி.

அதை மெதுவாக அழுத்தியவன் ''இனிமே உனக்கு எந்தக் கஷ்டம்னாலும் நான் துணை இருக்கேன் சவி... ஒரு உயிர் நண்பனா! ஓகே'' என்ற போது அவளுடைய விழிகள் மெல்லக் கசிந்தன.

"காலம் செல்லச் செல்ல இளகுவது, காதல்... ஆனால் காலம் செல்லச் செல்ல வலுவடைவது, நல்ல நட்பு!

''நம் கண்ணீரைத் துடைப்பவனை விட, நாம் கண்ணீர் விடாமல் பார்த்துக் கொள்பவனே உற்ற நண்பன்!''

எப்போதோ படித்த ஒரு கவிஞரின் வரிகள், அந்த நிமிடம் நினைவிற்கு வந்தன.



# 21

மறு நாளிலிருந்து, தினமும் காலையில் வீட்டிற்கே வந்து சவியைக் காரில் அழைத்துச் செல்ல ஆரம்பித்தான் சபரீஷ்!

அவனுடைய 'சைட்', ஹோட்டலைத் தாண்டி இருந்ததால் அவளை அங்கு இறக்கி விடுபவன், பிறகு செல்வாவிடமும் பேசிவிட்டு வேலை நடக்குமிடத்திற்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டான்.

முதல் நாள், கார் வந்து நின்றவுடனே வாசலுக்கு வந்து எட்டிப் பார்த்தாள் அவள்.

''குட் மார்னிங் சவி... கிளம்பலாமா?'' குறும்பாகக் கேட்டான் அவன்.

ஒன்றும் புரியாமல் விழித்தபடி ''எங்கே...!'' என்றவளிடம், ''ஐ யம் அட் யுவர் சர்வீஸ் மேடம்!'' சிறுமுறுவலுடன் கூறினான்.

''நான் ஆட்டோல போயிடுவேன் சபரீஷ்... உங்களுக்கு எதுக்கு வீண் சிரமம்?''

''எனக்கு என்ன சிரமம்...? அப்படினெல்லாம் ஃபார்மலா சொல்வேன்னு எதிர்பார்த்தா... சாரி! நீ என்னோடக் கிளம்பி வரே... இட்ஸ் மை ஆர்டர்... அவ்வளவுதான்!''

வேண்டுமென்றே முகத்தைத் தீவிரமாக வைத்திருந்தாலும், விழிகள் சிரித்து அவனுடைய இதமான கேலியை உணர்த்தின.

"ஓகே பாஸ்!" என்று புன்னகைத்தபடி வீட்டைப் பூட்டிக் கொண்டு வந்து, காரில் முன்புறம் ஏறியவனுக்குள், அவன் பார்வையும், பேச்சும் பெரும் இதமாய்...!

அவளிடம் பழைய உற்சாகம் சிறிதளவு மீண்டு வந்து, பெரும் பலத்தையும் சிறு உயிர்ப்பையும் கைவசப்படுத்தின.

பிறகு மாலையிலும் எப்படியாவது ஹோட்டலுக்கு வந்து அவளை அழைத்துச் செல்ல ஆரம்பித்தான் அவன்...

இதுவே வழக்கமாகி விட, "யாராவது தப்பா நினைச்சா என்ன பண்றது சபரீஷ்...? எனக்கென்னவோ பயமா இருக்கு... மத்த ஸ்டாஃப்ஸ் எல்லாம் என்ன நினைப்பாங்க?" ஒரு நாள் குற்றவுணர்வுடன் கேட்டு விட்டாள் சவி.

"சவி... நீயா இது...? மத்தவங்க என்ன நினைச்சாலும் அதைப் பத்தி கவலையே படக் கூடாது... நாம உண்மையா இருக்கோமாங்கறதுதான் முக்கியம்னு சொல்வேன்னு....?" சட்டென்று உதட்டைக் கடித்து நிறுத்தினான்.

"அது உங்களுக்கு எப்படி...?" இழுத்தபோது, "நான்... ராதுகிட்ட உன்னைப் பத்தி அடிக்கடி விசாரிப்பேன்... கேஷுவலாத்தான்! அப்ப இது மாதிரி நிறைய விஷயங்கள்... உன்னோட உணர்வுகள்... எல்லாமே தெரிய வந்தது...!" யோசனையுடன் கூறினான்.

"ஓ..." என்றவளுக்குள், பழைய நினைவுகளின் பதிவுகள்!

உடனே ராதுவின் முடிவை எண்ணி, மனதிற்குள் சிறு வலி பரவியது.

சட்டென்று இறுக்கமாகிவிட்டவளையே, கீழ்க் கண்ணால் நோக்கியவனுக்கு அவளுடைய உணர்வுகள் புரிந்தன.



இப்போதெல்லாம் தான் மிகவும் பலவீனப்பட்டிருப்பது சவிக்கும் புரிவதாய்...!

பிறகு யோசனையுடன் வந்த இருவருமே, வீடு வரும் வரை எதுவுமே பேசவில்லை.

அவளைத் தொடர்ந்து உள்ளே வந்தவனை, காஞ்சனா ஆவலுடன் வரவேற்றார்.

"வாங்க சபரீஷ்... என்ன... இன்னிக்கு மழைதான் வரப் போகுது... ரெண்டு பேரும் ஒத்துமையா சிரிச்சிட்டே வரீங்க...?" சவியையே கூர்ந்தபடி கிண்டலாகக் கேட்டார்.

"சித்தி...!" ஒற்றை விரலைக் காட்டி அவள் சலுகையுடன் எச்சரித்தாள்.

"சரி... சரி... உனக்கு கேத்தரின் கிட்ட இருந்து போன் வந்தது... அடுத்த வாரமே கிளம்பி வராளாம்... இண்டியா டூரிலே முதல்லே உன்னைத்தான் வந்து பாக்கப்போறாளாம்... நைட் திரும்பப் போன் பண்றேன்னா...!" மகிழ்ச்சியுடன் கூறிவிட்டு உள்ளே சென்றார்.

"ஓ... தேங்க் காட்...!" அவள் கண்களை இறுக மூடியபடிக் கூறினாள். "சவி...! உனக்கு ரொம்ப குளோஸ் ஃப்ரெண்டா கேதரின்?" கூர்மையுடன் கேட்டான் சபரீஷ்.

"ம்... ரொம்ப...! ராதுவை விட ரொம்ப நெருக்கம்... என்னைப் பத்தின எல்லா விஷயமும் அவளுக்கு மட்டும் தான் தெரியும்... என்னை கௌன்சிலிங்குக்கு கூப்பிட்டுட்டுப் போனதே அவதான்... வெரி நைஸ் ஃபிரெண்ட்!"

அந்த நிமிடம் அவளருகில் குனிந்தவன், "அப்போ... நம்ம காதல்கூட அவங்களுக்கு...?" தணிந்த குரலில் கேட்டான்.

ஒரு சீறலான மூச்சுடன் தலை குனிந்தவள், ''ம்... தெரியும்!'' என்றாள் தவிப்புடன்!

''தேங்க் காட்... அங்கே போயும் நான் உன்னை பாதிச்சிருக்கேன்னு நினைச்சா, ரொம்ப சந்தோஷமா இருக்கு... ஆனா... ரொம்ப க்ளோஸ்னு நினைச்சி கேதரின் கிட்ட எல்லா உண்மையையும் சொன்ன நீ, என்கிட்ட எல்லாத்தையும் மறைச்சிட்டியேன்னு நினைக்கறப்போ... நான் உன் மனசுல ஒரு ஓரத்துலயாவது இருக்கேனான்னு... சந்தேகமா... பயமா இருக்கு...!'' உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கூறினான்.

அவள் பதில் சொல்வதற்குள் காஞ்சனா காபியுடன் வந்துவிட, அதைப் பருகியவன் உடனே கிளம்பி விட்டான்.

''பை சவி... வரேன் ஆன்ட்டி!'' விடைபெற்றுச் சென்றவனிடம் சிறு சோகம் தெரிவதுபோல்...!

அவனுடைய கேள்விக்கு தான் பதிலொன்றும் கூறாததை எண்ணி மனம் உறுத்த, யோசனையாக அமர்ந்திருந்தாள்.

''என்ன சவி... இப்பவாவது உனக்கும் சபரிக்கும் நடுவில் எல்லாம் சரியாயிடுச்சா?'' அக்கறையுடன் கேட்டபடி அருகில் வந்து அமர்ந்தார் காஞ்சனா.

ஒரு திடுக்கிடலுடன் நிமிர்ந்து பார்த்தவளை, பாசத்துடன் அணைத்துக் கொண்டார்.

''எனக்கு எல்லாம் தெரியும்டா... சபரி, ஒரு நாள் என் கிட்ட எல்லாம் சொல்லிட்டாரு... முன்னாடியாவது உனக்குத் தடையா ராது இருந்ததா நினைச்சே... இப்பதான் யாருமே இல்லையே... ஏன் பிடிவாதமா இருக்கே...?'' செல்லமாகக் கடிந்து கொண்டார்.



அவள் பதில் கூறாமல் இருக்கும்போதே செல் ஒலித்தது... எடுத்தால் கேதரின்தான் பேசினாள்.

வெகு நாட்கள் கழித்து அவளுடன் பேசியதில், உற்சாகமும், நிம்மதியும் மனதில் பரவின.

காஞ்சனா சித்தியும் சமையலறையில் இருந்ததால், உடனே சபரீஷுடன் பேச வேண்டும் போல் ஒரு தவிப்பு!

மறுகணமே செல்லில் அவனுடைய எண்ணுக்குத் தொடர்பு கொண்ட போது, முதல் 'ரிங்'கிலேயே எடுத்தான் அவன்.

''சவி...! முதன் முதலா என் கூட இன்னிக்கு தான் நீயா போன்ல பேசியிருக்கே... தேங்க்ஸ்!... என்ன விஷயம்?'' ஆவலுடன் கேட்டான்.

''இல்லை... உங்க கேள்விக்கு நான் பதில் சொல்லலையே... ரொம்ப உறுத்தலா இருந்தது... அதான்...! சில நேரங்கள்லே நமக்கு ரொம்ப க்ளோஸா இருக்கறவங்க கிட்டதான் சில கஷ்டங்களைச் சொல்ல முடியாது...! ஏன்னா அவங்க அதனால பாதிக்கப்பட்டு வேதனைப்பட்டா அத நம்மால தாங்க முடியாது... இல்லையா?''

ஒரு நொடி மவுனித்தவன், ''ம்... எனக்குப் புரியுது சவி... தேங்க்ஸ்! மனசுக்குள்ளே எனக்கும் ரொம்ப உறுத்திட்டே இருந்தது... இப்ப கிளியராயிடுச்சு!''

''ஓகே! பை சபரீஷ்...!'' என்று போனை வைத்து விட்டாள் அவள்.

மனம் சலனங்களற்ற குளமாய்... அமைதியாக இருந்தது...

இனி விழுகின்ற எந்தச் சொல்லும் தன்னை சலனப்படுத்த முடியாதென்று தோன்றியது.

காதலில், கடந்து வந்த பாதையை மறப்பது, மிகவும் கடினமென்பதும் புரிந்தது.

## 22

மறு வாரமே கேதரின் இந்தியா வந்து விட்டாள்...

நாளை கொடைக்கானலுக்கு வருவதாகப் போன் செய்திருக்கிறாள்.

மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் காத்திருக்க ஆரம்பித்தாள் சவி.

அன்றிரவு போன் செய்தபோது, "சவி... என்னோட அங்கிளும் என் கூட வராங்க... உனக்குத்தான் ப்ரின்ஸ் அங்கிளைத் தெரியுமே... ரெண்டு பேருமா வரதால எனக்கு ஹோட்டல்லே அஞ்சு நாளைக்கு ரூம் புக் பண்ணிடு சவி... ப்ளீஸ்!" என்றாள் கேதரின்.

அரை மனதுடன் சம்மதித்துவிட்டு தங்களுடைய ஹோட்டலிலேயே அறையைப் பதிவு செய்துவிட்டு மூன்று நாட்கள் விடுப்பும் எடுத்தபடிக் காத்திருந்தாள் சவி.

ஹோட்டலின் முகவரியைக் கொடுத்திருந்ததால், சரியாகக் கண்டு பிடித்து வந்து காரிலிருந்து கேதரின் இறங்கியதுமே, ஓடிச் சென்று அணைத்துக் கொண்டாள் சவி.

பிறகு ப்ரின்ஸை வரவேற்றபோது, போனமுறை பார்த்ததற்கு இந்த முறை அவர் மிகவும் ஓய்ந்திருப்பது போல் தெரிந்தது.



பிறகு கிடைத்த தனிமையில், "சவி.. உன் ஹீரோ எப்படி இருக்காரு..? அவரும் இங்கேயே வந்துட்டதா சொன்னே...? இந்த ஹோட்டல்லே கூட அவரும் ஒரு டைரக்டர் இல்லை...? எனக்கு அவரை உடனே பார்க்கணும்போல இருக்கு...." ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஆமாம்... இன்னிக்கே கூடப் பார்க்கலாம்..." என்றாள் சவி புன்னகையுடன்....! பிறகு பிரிந்திருந்த நாட்களின் கதைகளைப் பேசுவதற்கே இருவருக்கும் பொழுது சரியாக இருந்தது.

***

அன்று மாலை அறைக் கதவு தட்டப்பட, 'ரூம் பாய்...' என்று நினைத்து அவள் "எஸ்... கமின்" என்று கூற, கம்பீரமாக உள்ளே நுழைந்தான் சபரீஷ்...!

"ஓ... நீங்களா... வாங்க..." பரபரப்புடன் அழைத்தபடி அவள் எழுந்த போது, கேதரினுடைய விழிகள் சுவாரசியத்துடன் அவன் மீது பதிந்தன.

"ஹலோ... ஐ யம் சபரீஷ்..." என்றபடி அவன் கை நீட்டினான்.

"ம்... அப்புறம் நான் சொல்றேன்... நீங்கதான் என் சவியோட ஹீரோ... சரியா?" என்றபடி அவனுடன் கை குலுக்கினாள் கேதரின்.

பளிச்சென்று விழிகள் மின்ன, அவளிடம் திரும்பியவனுக்கு சைந்தவியின் கண்களில் தெரிந்த சிறு கலக்கமும், தவிப்புமே, பதிலாய்!

சட்டென்று அவனைக் கலைத்தது கேதரினுடைய குரல்!

"அங்கே சவிக்கு எவ்வளவு ஃபேன்ஸ் தெரியுமா? அவகிட்ட ஃப்ரெண்ட்ஷிப் வெச்சுக்கணும்... டேட்டிங் போகணும்னு என்கிட்ட வந்து சிபாரிசு செஞ்சு வழிஞ்சவங்களை கௌண்ட் பண்ணவே முடியாது... அவ்வளவு பேர்! ஆனா இவ அசர மாட்டா!

"சின்னப் புன்னகையும், கம்பீரமான நிமிர்வோட கூடிய அவளோட மறுப்பும் எல்லாரையும் ஒதுங்கிப் போக வச்சிடும்...! ரொம்ப விசாரிச்ச அப்புறம்தான் என்கிட்டயே உங்களைப் பத்தி சொன்னா...! அதிலே இருந்து அவ 'ஆல் ரெடி எங்கேஜ்ட்'ன்னு எல்லார்கிட்டயும் சொல்லி சமாளிச்சு அனுப்பிடுவேன்...

"உங்களுக்காக அவ அங்க மூணு வருஷமா இருந்த தனிமைத் தவம் எனக்குத்தான் தெரியும்! ஏன் சவி...?" குறும்புடன் கண் சிமிட்டியபடிக் கேட்டாள் கேதரின்.

"உஷ் கேரி... போதும் என் புராணம்... உன்னைப் பத்தி சொல்லு..." சிணுங்கலாகத் தடுத்தாள் சவி.

அவன் விழிகள் ஒரு நொடி கூட இமைக்காமல் அவளையே ஊடுருவின.

அந்த நிமிடம், பார்வையால் நெஞ்சில் காயம் செய்தாலும் உடனே காதல் பஞ்சினால் ஒத்தடம் தந்தான் அவன்.

"ஆல் ரைட்! என்னைப் பத்தி என்ன சொல்றது...? இப்படி உன்னையே பாத்திட்டு இருக்கறவர்கிட்ட என்னைப் பத்தி சொல்லி போரடிக்கச் சொல்றியா?" அவள் கிண்டலாகக் கேட்க, இருவரின் பார்வையும் விலகின.

"ம்... அப்படி எல்லாம் இல்லை... சொல்லுங்க மிஸ் கார்ட்டர்... ஹௌ ஆர் யூ...? உங்க அங்கிள் எங்கே?"



"ஃபைன் சபரீஷ்...நான் உங்களை 'ஃபர்ஸ்ட் நேம்'லே கூப்பிடலாம் இல்லையா? நீங்களும் என்னை, 'கேதரின்'னே கூப்பிடலாம்... ஃபீல் ஃப்ரீ... ஓகே? உங்களுக்கு ஒண்ணும் ப்ராப்ளம் இல்லையே?" ஆவலுடன் கேட்டாள்.

அமெரிக்காவில் ஒருவரை மற்றவர் குடும்பப் பெயரிலேயே அழைப்பதால் அவனுக்கும் தயக்கமாக இருந்தது.

"ஓ... ஷ்யூர்! நான் உங்க அங்கிளை பாக்கணும்!... அப்புறம்... உங்களைப் பார்த்தப்புறம்தான் என் சவிக்கு முகமே சந்தோஷமா மாறி இருக்கு!"

ஓரக் கண்ணால் சவியையே ரசித்தபடி கூறினான்.

"ஓ... நோ! இங்க வந்தப்புறம்தான்... அதுவும் உங்களைப் பார்த்தப்புறம்னு நினைக்கிறேன்... ஷி இஸ் ஸோ ப்ரிட்டி! கண்ணிலே ஒரு ஸ்பார்க் தெரியுது!"

"சரி! அங்கிளை இன்ட்டிரடியூஸ் பண்ணலாம் கேரி... வா" பேச்சை மாற்றி அவளை அடுத்த அறைக்கு இழுத்துச் சென்றாள் சவி.

***

மூவரும் சென்று கதவைத் தட்டியபோது திறந்தவருக்கு நாற்பது வயதிருக்கும்....

அவர்களைக் கண்டதும் புன்னகையுடன் வரவேற்றவரிடம், "அங்கிள்! இவர்தான் சபரீஷ்... சவியோட ஸ்வீட் ஹார்ட்" குறும்புடன் அறிமுகப்படுத்தினாள்.

சட்டென்று சவியின் முகம் சிவக்க, அவள் கன்னங்களில் அழகாக வழிந்தது வெட்கம்!

ஒரு கணம் அதை ரசித்தபடி மெய் மறந்து நின்றவனிடம், "ஹலோ சார்... ஐ யம் சேவியர் பிரின்ஸ்

தேவசகாயம்'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் அவர்.

''ஐ யம் சபரீஷ்வர் ஜெகதீசன்... பட் என்னை நீங்க சபரீஷ்னே கூப்பிடலாம்...'' என்று அவர் கையைப் பிடித்துக் குலுக்கினான்.

பிறகு பேச்சு பொதுவான விஷயங்களில் செல்ல, மறுநாளிலிருந்து மூன்று பேருக்கும் ஊர் சுற்றிப் பார்க்கவே நேரம் சரியாக இருந்தது.

கொடைக்கானலைக் கேதரினுக்கு மிகவும் பிடித்து விட்டது.

எல்லா இடங்களையும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே ஒரு நாள் ''கேரி... உங்க ப்ரின்ஸ் அங்கிள் பெரிய புரபசர்... யுனிவர்சிட்டியில ரிசர்ச் எல்லாம் பண்றார்னு சொல்லி இருக்கே...? ஏன் இன்னும் கல்யாணமே பண்ணிக்கலை'' மெதுவாகக் கேட்டாள் சவி.

'தெரியலைடி... பொதுவா அங்கதான் மத்தவங்க ரவசியில நாம தலையிடறதில்லையே! எனக்குத் தெரியாது... நான் கேட்டதில்லை... மேபி அம்மாவுக்கு தெரிஞ்சிருக்கும்'' தோளைக் குலுக்கியபடி கூறினாள் கேதரின்.

## 23

அந்த ஞாயிறன்று தங்களுடைய வீட்டிற்கு அவர்களை விருந்திற்கு அழைத்திருந்தாள் சவி.



மதிய சாப்பாட்டிற்கு சபரீஷையும் வரச் சொல்லியிருந்த காஞ்சனா, தடபுடலாக சமைத்துக் கொண்டிருக்க, சவி உதவி செய்து கொண்டிருந்தாள்.

வாசலில் அழைப்பு மணி ஒலிக்கும் சப்தம் கேட்டதும் ஓடிச் சென்று கதவைத் திறந்தால், அங்கு மூவரும் நின்றிருந்தனர்.

சபரீஷே அவர்களை அழைத்து வந்திருந்தான்.

''வாங்க... வாங்க...'' என்று வரவேற்றபடி அவர்களை அமர வைத்தவள், உள்ளே சென்று காஞ்சனாவை அழைத்து வந்தாள்.

ஹாலுக்கு வந்தவுடன், ''வாங்க...'' என்றபடி நிமிர்ந்த காஞ்சனாவின் விழிகள் ஆணியடித்தாற்போல் உறைந்து நின்றன.

அவரைக் கண்டவுடனே ப்ரின்சும் பதட்டத்துடன் எழுந்து விட்டார்...!

''காஞ்சனா...'' அவருடைய முணுமுணுப்பான அழைப்பும்... தவிப்பைச் சுமந்த முகமும்... அவர் யார் என்பதை உடனே சவிக்கு உணர்த்தின.

அதை கவனிக்காமல் வேகமாக எழுந்து வந்த கேதரின் ''ஹாய் ஆன்ட்டி...'' என்றபடி காஞ்சனாவைப் பாசத்துடன் அணைத்துக் கொண்டாள்.

பனிப் பாறையாய் உறைந்து நின்றிருந்த காஞ்சனாவிற்கு அப்போது தான் நினைவே திரும்பியது.

சைந்தவிக்குள் பெரும் மகிழ்ச்சியும்... பரபரப்பும் ஒரே சமயம் மையம் கொண்டன.

சபரீஷ், முதல் பார்வையிலேயே இருவருக்கும் இடையில் நடந்த அந்த மொழி புரியாத ஒரு வித அனுபவத்தை என்னவென்று புரிந்து கொள்ள முடியாமல் யோசித்தபடி அமர்ந்திருந்தான்.

பிறகு அனைவரும் விருந்து சாப்பிட ஆரம்பித்தனர்.

கேதரினுடைய சலசலவென்ற அருவிப் பேச்சிற்கிடையே ப்ரின்ஸின் கனத்த மௌனமும், காஞ்சனாவின் அதிர்வும் மறைந்து போனாலும், இருவரையும் கூர்ந்து அளவெடுத்துக் கொண்டே இருந்தாள் சவி.

சாப்பிட்டு முடித்ததும் காஞ்சனாவின் கன்னத்தில் செல்லமாக முத்தமிட்ட கேதரின், "ஆன்ட்டி! சாப்பாடு ரொம்ப டேஸ்டியா இருந்தது... தேங்க் யூ!" என்றாள் மகிழ்ச்சியுடன்!

கேதரினுக்காக தான் வாங்கி வைத்திருந்த அழகிய பட்டுப் புடவையை, காஞ்சனாவிடம் தந்து கொடுக்கச் சொன்னாள் சவி.

ஒரு அழகிய கற்கள் பதிக்கப்பட்ட தங்க சிலுவை டாலரை ப்ரின்ஸிற்குப் பரிசளித்தாள்.

அவர்கள் விடைபெற்றுச் செல்லும் வரையில் அமைதியாக இருப்பது போல் காட்டிக் கொண்டார் காஞ்சனா.

பிறகு அவர்கள் கிளம்பியதுமே, "எனக்கு தலை வலிக்குது சவி! நான் கொஞ்ச நேரம் படுக்கறேன்... என்னை டிஸ்டர்ப் பண்ணாதே!" என்றபடி வேகமாகத் தன் அறைக்குள் சென்று கதவைச் சாற்றிக் கொண்டார்.

சவிக்கு எல்லாம் புரிந்தது!

இந்த சேவியர் ப்ரின்ஸ்தான் காஞ்சனாவின் முன்னாள் காதலரென்பதும் இருவருமே ஒருவர் அறியாமல் மற்றவருக்காக காத்திருப்பதும் புரிந்தது.



இவர்களுடைய காதல் எவ்வளவு வலிமையுடையதாக இருக்க வேண்டும் என்ற பெருமிதமும், பிரமிப்பும் வந்தன.

***

சிறிது நேரம் கழித்து அவளுடைய செல் ஒலிக்க ஆரம்பிக்க, எடுத்தால் சபரீஷ்தான் பேசினான்.

"சவி... இன்னிக்கு ஏன் ஆன்ட்டி ரொம்ப டல்லா இருந்தாங்க... அந்த ப்ரின்ஸ் அங்கிளைப் பாத்தப்புறம் அவங்க கிட்ட ஏதோ ஒரு சேஞ்ச்...என்னால புரிஞ்சுக்க முடியலை... என்ன ப்ராப்ளம்?" அக்கறையுடன் விசாரித்தான்.

"அதை போன்லே சொல்ல முடியாது... இன்னிக்கு ஈவினிங் நான் உங்களை மீட் பண்ணி பர்சனலா கொஞ்சம் பேசணும்... கேதரினையும் அழைச்சிட்டு வரேன்... உங்க வீட்டுக்கே வரவா?"

"ஏய்... என்ன... நம்ம வீட்டுக்கு வரதுக்கு என்கிட்ட பர்மிஷன் கேக்கறே? யு ஆர் ஆல்வேஸ் வெல்கம்.. சாயந்தரம் அஞ்சு மணிக்கு உங்களை எதிர்பார்த்து நான் காத்திருப்பேன்... எதுக்கும் கவலைப்படாதே கண்ணம்மா! உனக்கு நான் இருக்கேன்...!"

சட்டென்று, உடலும் உள்ளமும் சிலிர்த்தன.

கோடி பலத்தையும் தைரியத்தையும் தந்தது, அந்த ஒற்றை வார்த்தை!

அவனுடைய "கண்ணம்மா"வென்ற அழைப்பில் ஒரு கணம் மெய் சிலிர்த்துப் போனவளுக்குள், நிறைவேறாத விருப்பங்கள்... கரையேறாத கனவுகளாய்...!

தலையைக் குலுக்கி தன்னையே அமைதிப்படுத்தி யவள், தன் அறைக்குச் சென்று யோசித்தபடி படுத் திருந்தாள்.

சிறிது நேரத்தில், கதவைத் தட்டிவிட்டு அறைக்குள் வந்த காஞ்சனாவின் முகம் அழுதழுது சிவந்திருந்தது.

அலை பாய்ந்த விழிகளுடன், "சவி... கேதரினோட மாமா வுக்கு கல்யாணமாயிடுச்சா?" மெதுவாகக் கேட்டார்.

"ஏன் சித்தி கேக்கறீங்க...? ஆகலைன்னு தான் நினைக்கிறேன்.."

சவி மெதுவாகக் கூறியவுடன், அவருடைய விழிகளில் சந்தோஷப்பூக்கள் நட்சத்திரங்களாய்ச் சிதறின.

மனதின் எதிர்பார்ப்பு பலித்து விட்டதைப் போன்ற பெரும் நிம்மதி வந்தது... முகத்தில்!

சட்டென்று அதை மறைத்துத் திரும்பியவர், "என்னு தெரியுமா? கேதரின் அதப் பத்தி ஏதாவது சொல்லியிருக் காளா?" எங்கோ பார்த்தபடி ஆர்வமில்லாதவரைப் போல் கேட்டார்.

"ம்... அவளுக்குத் தெரியலை.. ஆனா எனக்குத் தெரியும்... இங்கே 'காஞ்சனா'ங்கிற அற்புதமான ஒரு தேவதையை விட்டுட்டு... அவங்களை மறந்துட்டு... அவரால வேற பொண்ணை நினைக்க முடியலையாம்... அதனால ரிசர்ச் பண்றேன்னு தொழில்லே மூழ்கி அவங்களை மறக்க முடியாமத் தவிச்சுட்டிருக்காராம்..." இதழோரம் குறும்பில் துடிக்கக் கூறினாள்.

அவசரமாகத் திரும்பியவரின் விழிகள் வியப்பின் உச்சியிலிருக்க, உதடுகள், "சவி...?" என்று கேள்வியாக முணுமுணுத்தன.



வேகமாக எழுந்து அருகில் சென்றவள், "எனக்கு எப்படித் தெரியும்னு ஆச்சர்யமா இருக்கு இல்லை... பட்சி சொன்னது சித்தி! ரெண்டும் ரெண்டும் நாலுன்னு சொல்லிச்சு! உங்க காதல் கதையும் சேவியர் ப்ரின்ஸ் அங்கிளோட அதிர்ச்சியான, "காஞ்சனா..."வும் எனக்கு எல்லாமே புரிய வச்சிடுச்சு... இப்ப ஒரே ஒரு விஷயம் தான் பாக்கி... உங்க ரெண்டு பேரையும் சேத்து வைக்க வேண்டியதுதான்!" உற்சாகத்துடன் கூறிவிட்டு பின்புற மிருந்து அவரை இறுக அணைத்துக் கொண்டாள்.

சிறிது நேரம் கழித்து மெதுவாக விலகியவர், "சாரி... சவி! அது நடக்காது... அதோட... உனக்கு தெரிஞ்ச இந்த விஷயத்தை, நீ யார் கிட்டயும் சொல்லாதே... ப்ளீஸ்! எப்படியும் ரெண்டு நாள்லே அவங்க ஊருக்குக் கிளம் பிடுவாங்க... வேண்டாம்... நான் இப்படியே இருந்துடு வேன்....!" விழிகள் கசிய, கம்மிய குரலில் கூறினார்.

"சித்தி..." தவிப்புடன் அழைத்தாள் சவி.

கண்ணீர் சுமந்த விழிகளுடன் அவர் குனிந்து கொண்டார்.

"ஏன் இப்படிப் பேசறீங்க... அங்கிளும்,நீங்களும், இத் தனை நாள் காத்திருந்ததுக்கு அர்த்தமே, நீங்க அவங் களுக்குத் தான்னு அந்தக் கடவுள் தீர்ப்பெழுதியது னாலதான்! இப்போ ஏன் மாட்டேன்றீங்க...? நல்லா யோசிச்சு சொல்லுங்க... ப்ளீஸ்!" மெல்லிய குரலில் கூறினாள்.

"இல்லை.. முடியாது சவி! எங்க ரெண்டு பேருக்குமே வயசாயிடுச்சு... இனிமே நாங்க கல்யாணம் பண்ணிக் கிட்டு... ப்ச்... வேண்டாம்... விட்டுடு...!"

"ஏன் சித்தி இப்படிச் சொல்றீங்க... உங்களுக்கு முப்பத்து மூணு வயசுன்னா யாராவது நம்புவாங்களா? அங்

இருக்கும் என்ன வயசாயிடுச்சி... மிஞ்சி மிஞ்சிப் போனா முப்பத்தெட்டு வயசிருக்கும்... சின்ன வயசுலக் கூட தனியா இருந்துடலாம்... இனிமே தான் ஒரு துணை வாழ்க்கையில வேணும்...

"நான் வேற விதமா சொல்லலை... மனசுக்கு துணையா நீங்க இதமா தோள்லே சாஞ்சுக்க... தாய் மடியாய் அரவணைச்சு உங்களை அமைதிப்படுத்த கட்டாயம் ஒருத்தர் வேணும்... நல்லா யோசிச்சு ஒரு நல்ல முடிவை எடுங்க சித்தி!"

உடனே நிமிர்ந்தவர், "இந்த அட்வைஸ் எல்லாமே எனக்கு மட்டும்தானா சவி...? உனக்கு....? என்னை விடச் சின்னவ நீ...! உனக்கும் இது பொருந்தும் தானே? எனக்கு நீ சொன்னதையெல்லாம் திரும்பவும் யோசிச்சுப் பாரு!

"உனக்காக காத்திட்டிருக்கற சபரீஷையும் நினைச்சுப் பாரு! நீ மட்டும் இப்படியேதான் இருப்பேன்னு பிடிவாதமா இருப்பே! நான் மட்டும் சுயநலமா கல்யாணம் செஞ்சிட்டுப் போயிடணும்.. அப்படித்தானே?" அழுத்தமான தொனியில் கேட்டார் அவர்.

சில்லென்று தன் முகத்தில் யாரோ பனித்துகள்களை வீசியதுபோல் பதறிப் போய்த் திடுக்கிட்டாள் அவள்.

அந்த நிமிடம் மனமும், உடலும், வெகுவாய் சோர்ந்து ஓய்ந்து போயின.

பிறகு என்ன சொல்வதென்று புரியாமல் தயக்கத்துடன் நிமிர்ந்தாள் சவி.

வார்த்தைகள்... தொண்டைக்குள் சிக்கித் தவித்து மெல்லச் சிறை மீண்டன.



"சித்தி... என் விஷயம் வேற... உங்க விஷயம் வேற! புரிஞ்சுக்கங்க... உங்களுக்கு இப்ப கட்டாயம் ஒரு துணை அவசியம்...! ப்ளீஸ்...!" மெதுவாகக் கேட்டாள்.

ஆனால், இதயம், பலமாய் முரசு கொட்ட, உணர்வுகள் தத்தளித்தன.

"சாரி... இந்த விஷயத்துலே நீ என்ன சொன்னாலும் நான் கேக்க மாட்டேன்.. சபரீஷை நீ கல்யாணம் பண்ணிக்க சம்மதிச்சப்புறம் வேணும்னா... நான் நீ சொன்னதைப் பத்தி யோசிக்க ஆரம்பிப்பேன்!"

முடிவாகக் கூறிவிட்டு எழுந்தவரை மெதுவாகத் தடுத்தாள்.

"சித்தி! நான் மறுக்கறதுக்கான காரணமே வேற... அது... சபரீஷுக்கும் இப்பத் தெரியும்... அவர் என்னைப் புரிஞ்சிக்கிட்டாரு!" மெல்லிய குரலில் கூறினாள்.

"சவி... அது என்ன அப்படி ஒரு காரணம்! இவ்வளவு பிடிவாதமா நீ இருக்கறதுக்கு! சொன்னா நானும் புரிஞ்சிப்பேனே! ப்ளீஸ்... சொல்லுடா!" தவிப்புடன் கேட்டார் காஞ்சனா.

அமைதியாய் கடந்த சில நிமிடங்களுக்குப் பிறகு. பெரும் தவிப்புடன், இதுவரை தன் மனதிற்குள் மறைத்து வைத்திருந்த அந்த கருப்பு அத்தியாயத்தைக் கண்ணீருடன் கூற ஆரம்பித்தாள் சைந்தவி.

உலகத்தின் குரூர முகத்தை... சில மனித மிருகங்களின் கோரமான, மன வக்ரத்தை... அது தன் வாழ்வில் ஏற்படுத்திய பெரும் பாதிப்பை... இன்று வரை அது தீக்கனவுகளாய், நிழலாய் தன்னை ஆறாத வலியுடன் தொடர்கின்ற அவலத்தை... மறக்கப்பட வேண்டிய அந்த

கொடூர அத்தியாயம் திரும்பத் திரும்ப ஆழ்மனவெளியில் விரைப்பட்டு இன்று நினைத்தாலும் இதயத்தில் குருதி பெருகி வழிவதை...

அதற்காகத் தான் இழந்து தவித்த காதலின் வலியை... தனிமையும் அமைதியும் விரும்பித் தான் இங்கு வந்ததை... உள்ளுக்குள் இன்றும் கனன்று எரியும் காலாக்கினி நெருப்பை... இதுவரை அது மீட்டுத்தராத தன் தைரியத்தை, தன்னம்பிக்கையை... தொண்டையை அடைத்த விம்மலுடன் பகிர்ந்தாள் சைந்தவி!

## 24

விழிகள் விரியக் கேட்டுக் கொண்டிருந்த காஞ்சனாவின் இதயம் ரத்தக் கண்ணீர் வடிக்க, முகம் இறுகி இருந்தது.

சவி பேசி முடித்தவுடனே தன் கைகளில் முகம் புதைத்து அழ ஆரம்பிக்க, சோகச் சிலைக்கு உயிர் வந்தாற்போல் விழித்தவர், அவளை அப்படியே அள்ளி அணைத்துக் கொண்டார்.

"என் கண்ணே... உனக்குள்ளே இப்படி ஒரு சோகமா? என் நெஞ்சே வெடிச்சிடும் போலருக்குடா... நம்ம குடும்பத்து மேல யார் கண்ணு பட்டுதோ... என்ன சாபமோ... அக்கா ரொம்ப நாள் அத்தானோட வாழலை... அண்ணனுக்கு குழந்தை இல்லை... என் கதை இப்படி... உனக்கும் இந்த நிலைமை...

"ஏன்...? எனக்கு ஒன்னுமே புரியலை! கடவுளே... எங்க குடும்பத்தை இந்த அளவுக்கு சோதிக்கிறயே...? உனக்கு இரக்கமே இல்லையா?" அரற்ற ஆரம்பித்தார்.



விழிகளில் நீர் குளம் கட்டி அருவியாய் சுரக்க, வெகுநேரம் ஆயிற்று. அவர், தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள....

பிறகுதான், தன்னை மறந்து தைரியம் இழந்து தான் புலம்ப ஆரம்பித்ததை உணர்ந்தார் அவர்.

உடலும், உள்ளமும் பெரும் பரிதவிப்புடன் சோர்ந்திருந்தன.

"சாரிடா... ஒரு நிமிஷம் ஆடிப் போயிட்டேன். உனக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய நேரத்துல, நம்ம குடும்ப கஷ்டத்தை நினைச்சிப் புலம்பிட்டிருக்கேன் பாரு... கவலைப்படாதே... நடந்ததை எல்லாம் ஒரு கெட்ட கனவா நினைச்சு மறக்க ட்ரை பண்ணு... நான் எப்பவுமே தைரியமா போல்டா இருக்கற சவியத்தான் பாக்கணும்... ப்ளீஸ்டா!

"வாழ்க்கையில நாம சந்திக்கிற பிரச்சனைகள் எல்லாம் நமக்கு ஒரு காலத்துல தாங்க முடியாத வலிகளைக் கொடுத்திருந்தாலும், அப்புறம் அதுவே பெரும் வலிமையைத் தரும்...

"முதல்லே சிறு துகளா இருந்து... நாளடைவிலே உறுதியா மாறுகிற வைரக்கல் மாதிரி! இது என் அனுபவம்! நீயும் அதுமாதிரி மாறணும் சவி!" என்றபடி கலங்கிய விழிகளுடன் ஆதரவாக அவள் முதுகை வருடிக் கொடுத்தார்.

வெகு நேரம் கழித்து, தன் மௌன விசும்பல்கள் அடங்கிய பிறகு மெல்ல எழுந்தவள், "சாரி சித்தி... உங்களுக்கு வேற கஷ்டம் குடுத்திட்டேன்... என் கஷ்டம் என்னோட போகட்டும்" என்றாள், வறண்ட குரலில்!

"இல்லை சவி... இதை நான் இப்படியே விடப் போறதில்லை... சபரீஷ் கிட்டப் பேசப் போறேன்... இந்த நிலைமையிலதான் உனக்கு சபரீஷோட துணை அவசியமா வேணும்... இனிமே என் முடிவு இதுதான்! உனக்காக நான் சேவியரை ஏத்துக்கறேன்... ஆனா அதுக்கு முன்னாடி நீ சபரீஷை கல்யாணம் செஞ்சுக்கணும்..!" தீர்மானமாகக் கூறிவிட்டு எழுந்து சென்றார்.

"சித்தி... ஒரு நிமிஷம்... இது சபரீஷுக்கும் தெரியும்னு சொன்னேனே!" என்றவுடன் சட்டென்று நின்றுவிட்டவர், தவிப்புடன் திரும்பினார்.

"அதுக்கு சபரீஷ் என்ன சொன்னாரு...?"

"ம்... அவர் என்னை ஏத்துக்கறேன்னு தான் சொன்னாரு... நான் தான் மறுத்திட்டேன்... எனக்குள்ளே உணர்வுகள் செத்துப்போச்சு சித்தி! உயிரோட புதைச்ச மாதிரி என் உணர்வுகளை குழி தோண்டிப் புதைச்சிடுச்சு... அந்த மழை நாளன்னிக்கு ராத்திரி நடந்த கொடூரம்!

"என்னால இனிமே ஒரு மனைவியா... தாம்பத்ய சுகத்தை சபரீஷுக்கு கொடுக்க முடியும்னு சத்தியமாத் தோணலை... என் சுய நலத்துக்காக அவர் வாழ்க்கையை என்னால பலியாக்க முடியாது... சத்தியமா நான் அதுக்கு சம்மதிக்கவும் மாட்டேன்!"

விரக்தியும், விம்புமாய் கூறிவிட்டு எழுந்து பின்புறம் சென்றுவிட்டாள் அவள்.

மதிய நேர வானம், இருட்டத் தொடங்கி இருந்தது!

வேதனைத் துளிகள், அவள் விழியோரங்களில் ஜனித்தன.



மெல்லிய இருளில், தூரத்தே மலை மேல் அசைகின்ற ஒற்றை விளக்கொளியாய்... அவன் நினைவு!

இருட்டில், நிழலைத் தேடி அலைவதைப் போல் மனம் அலை பாய்ந்தது.

***

அதே நேரம், தன்னுடைய அறையில் அமர்ந்து எங்கோ வெறித்துக் கொண்டிருந்த சேவியருக்குள், பழைய நினைவுகள் புதையலாய் மேலெழும்பின.

காஞ்சனாவை இங்கு பார்ப்போமென்று சத்தியமாக அவர் எதிர்பார்க்கவில்லை.

எத்தனை வருடத் தவம் இது...! பல யுகங்கள் வந்தாலும் பிரிக்க முடியாத மாதவம் போல்...!

பார்த்தவுடன், ஏனோ மனதிற்குள் சூரியோதயமாய்ப் பழைய ஞாபகங்கள்!

அவை... இளமை அத்தியாயத்தில் எழுதப்பட்ட இனிய கவிதைத் தொகுப்பாய்!

சவி தன் சித்தியுடன் தங்கியிருப்பதாக கேதரின் கூறியிருந்தாளேயொழிய, அவருக்குத் திருமணம் ஆகிவிட்டதா என்பதை அவள் கூறவில்லை.

ஆனால் அந்த வீட்டில் ஒரு ஆண் இருக்கின்ற அறிகுறியே தென்படவில்லை.

மனம் பலப்பல எண்ணி பேதலிக்க ஆரம்பித்தது.

ஒரு வேளை அவளுடைய கணவர் இறந்திருப்பாரோ... எப்படியும் அவளுடைய அண்ணன் காஞ்சனாவிற்கு திருமணம் முடிக்காமல் இருந்திருக்க மாட்டார்.

குழப்பமான எண்ணங்களில் குழம்பித் தவித்தது... உள்ளம்!

பிறகு, தாங்கமுடியாமல் கேதரினுடைய அறைக் கதவைத் தட்டினார் அவர்.

அவள் திறந்தவுடன், "கேரி... உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்... சாரி... தூக்கத்துல டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?" தர்ம சங்கடத்துடன் கேட்டார்.

"யெஸ்... ஆனா என்ன பேசணும்னு வந்தீங்களோ அதப் பேசிட்டே போகலாம்... ஏன்னா தூக்கம் கலைஞ்சிடுச்சி" அவள் சிறு முறுவலுடன் கூறினாள்.

"ம்... சவியோட சித்தி காஞ்சனாவுக்கு... கல்யாணம் ஆயிடுச்சா?" தயக்கத்துடன் கேட்டார்.

"இல்லை... அவங்க ஒருத்தரைக் காதலிச்சிருக்காங்க! ஆனா சவியோட மாமா அதுக்கு ஒத்துக்காததால, அவங்க ஒரு 'ஸ்பின்ஸ்டராவே' இருக்காங்க! நீங்க ஏன் அவங்களைப் பத்தி திடீர்னு கேக்கறீங்க அங்கிள்...?"

அதற்கு பதிலொன்றும் கூறாதவரின் விழிகளில், நூறு கோடி சூரியபிரகாசம்!

"தேங்க் யூ கேரி..." என்றபடி மகிழ்ச்சியுடன் எழுந்து செல்லும் ப்ரின்ஸை வியப்புடன் தொடர்ந்தன கேதரினின் விழிகள்!

"என்ன விஷயமாக இருக்கும்... காஞ்சனா ஆன்ட்டியை இவருக்கு முன்பே தெரியுமா?"

பல கேள்விகள் மனதை தேனீக்களாய் குடைய, யோசனையுடன் அமர்ந்திருந்தபோது, அவளுடைய அறையிலிருந்த டெலிபோன் ஒலிக்க ஆரம்பித்தது.



# 25

கேதரின் அதை எடுத்தபோது, சவிதான் பேசினாள்.

"கேரி... இன்னும் கொஞ்ச நேரத்துல... ஒரு ஃபேர் தர்ட்டிக்கு ரெடியா இரு... நீ மட்டும்தான்! எதுவும் கேக்காதே... நாம ரெண்டு பேரும் ஒரு இடத்துக்குப் போறோம்..." என்று கூறிவிட்டு வைத்து விட்டாள்.

யோசித்தபடி எழுந்த கேதரின், உடனே கிளம்ப ஆரம்பித்தாள்.

மனதிற்குள் பல கேள்விகள் கண்ணாமூச்சி ஆடின.

நாலரை மணிக்கு அவளை அழைக்க வந்த சவியுடன் கிளம்பியவள், "என்ன சவி! என்ன விஷயம்... எனி ப்ராப்ளம்?" ஆவலுடன் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை... நீங்க கிளம்பி வந்ததுக்கு அப்புறமா ப்ரின்ஸ் அங்கிள் எங்க சித்தியைப் பத்தி ஏதாவது விசாரிச்சாரா?"

"ஆமாம்... ஏன்?"

அதற்கு சவி கூறிய பதிலில், வியப்பின் உச்சிக்கே போனாள் கேதரின்.

"ஓ... இதை நான் எதிர்பார்க்கவேயில்லை சவி... ஓ காட்! அங்கிள் தொடர்ந்து படிக்கிறதாலயும், ரிசர்ச் பண்றதாலயும் தான் கல்யாணம் செஞ்சுக்கலைன்னு நான் நினைச்சிட்டிருந்தேன்... இட்ஸ் எ ஷாக்கிங் சர்ப்ரைஸ் ஃபார் மி!" பிரமிப்புடன் கூறினாள்.

அதற்குள் சபரீஷின் கெஸ்ட் ஹவுஸ் வந்திருக்க, காரிலிருந்து இறங்கிய இருவரையும் வாசலுக்கே வந்து ஆவலுடன் வரவேற்றான் அவன்.

பிறகு மூன்று பேரும் பேசியபோது, காஞ்சனா தன்னிடம் பேசியதைப் பற்றி தயக்கத்துடன் கூறிய சைந்தவி, சபரீஷை தவிப்புடன் ஏறிட்டாள்.

"சபரீஷ்... உங்களுக்கு என் நிலைமை புரியும்னு நினைக்கிறேன்... என்னால சித்தி சொன்னதுக்கு நிச்சயமா உடன்பட முடியாது... ஆனா இப்ப என்ன பண்றதுன்னும் தெரியலை!"

"சவி... நான் ஒரு யோசனை சொல்லவா? பேசாம நீ கல்யாணத்துக்கு ஒத்துக்கற மாதிரி சரின்னு சொல்லு... முதல்லே அவசரமா அவங்க கல்யாணத்தை முடிச்சிடலாம்! அப்புறம் பாத்துக்கலாம்" இடைமறித்துக் கூறினாள் கேதரின்.

"அப்படி எல்லாம் சித்தியை சுலபத்துல ஏமாத்த முடியாது கேரி! ஷி இஸ் ஸோ பிரில்லியண்ட்...! எங்க கல்யாணம் முடிஞ்சப்புறம்தான் அவங்க அங்கிளோட சேர்றதைப் பத்தியே யோசிப்பாங்களாம்!"

கூறியபோது கவலையின் ரேகைகள் அவள் முகத்தில் தெரிந்தன.

சிறிது நேரம் கழித்து "சவி... நான் யோசிச்சி ஒரு முடிவெடுக்கறேன்... காலையில அது என்னன்னும் சொல்றேன்" என்றபடி சபரீஷ் அவர்களுக்கு டிபன் வரவழைத்தான்.

பிறகு, சாப்பிட்டுவிட்டுத் திரும்ப வரும் வழியில் இருவரின் மனமும் பெரும் யோசனையில் ஆழ்ந்திருந்தன.

* * *



மறுநாள் காலையில் சவி ஹோட்டலுக்கு கிளம்பிக் கொண்டிருந்த போது, போன் ஒலித்தது.

பள்ளிக்குத் தயாராகி, வெளியில் செல்லத் தயாராக இருந்த காஞ்சனா தான் போனை எடுத்தார்.

மறுமுனையில் என்ன கூறினார்களோ... "சவி..." என்று கதறலாக அழைத்தார்.

"என்ன சித்தி...?" என்றபடி ஓடி வந்தாள் அவள்.

"நான் இத்தனை நாள் காத்திருந்ததுக்கு அர்த்தமே இல்லாமப் போயிடுச்சு சவி! கடவுளே... நான் சேவியரைப் பாக்காமலே இருந்திருக்கலாம்..." சரிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தார் அவர்.

"என்னாச்சு சித்தி.. ப்ரின்ஸ் அங்கிளுக்கு என்ன?"

"காலையில கார் எடுத்துக்கிட்டு அவங்க ரெண்டு பேரும் சுத்திப் பார்க்கப் போனாங்களாம்... அந்தக் கார் பள்ளத்துல உருண்டு... அதிலே சேவியர் மட்டும்...!"

"யார் சித்தி சொன்னாங்க?"

"ஹோட்டல்லே இருந்து போன் பண்ணினாங்க... உன்கிட்ட சொல்லச் சொன்னாங்க!" முகம் மூடி அழ ஆரம்பித்தார் அவர்.

அதிர்ச்சியும், கலக்கமுமாய் அவரை எழுப்பி அமர்த்தி அணைத்துக் கொண்ட சவியின் செய்கைகளை, காஞ்சனா கொஞ்சம் கூட உணரவேயில்லை!

"கடவுளே... சேவியர் எங்கேயோ இருக்காருன்ற தைரியத்துல இத்தனை நாள் வாழ்ந்திட்டிருந்தேனே... இனிமே... அவர் போனப்புறம் நான் யாருக்காக வாழணும்...?

"அவரைப் பாத்த மறு நிமிஷமே இந்த வேலையும் வேண்டாம்... ஒரு வீம்பும் வேண்டாம்னு ஓடியிருந்திருக்கணுமோ? அவர் எனக்காகத் தானே காத்திட்டிருந்தாரு! அந்த அற்புதமான மனுஷரோட உணர்வுகளைப் புரிஞ்சிக்காம, அவரோட ஆசைய நிறைவேத்த முடியாத ஒரு சுயநலப் பிறவியாயிட்டேனே சவி...?

"நான் சாகற வரைக்கும், என் மனசுல ஒரு மூலையில இருந்து என் மனசாட்சி என்கிட்ட ஆயிரம் கேள்வி கேட்டுட்டே இருக்கும்... நான் அதுக்கு என்ன பதில் சொல்லப் போறேன்..."

தனக்குள் புலம்பியபடி பரிதவித்த காஞ்சனாவைப் பார்த்தபோது, சவிக்கு காதல் என்பது எவ்வளவு தீவிரமான உணர்வென்று புரிந்தது... இதயம் பிளந்து விடும் போல் வலிக்க ஆரம்பித்தது.

அதே நிமிடம் "காஞ்சனா..." என்ற அழைப்பு அவரை உசுப்ப, விம்மல்களுக்கிடையே நிமிர்ந்தார்.

எதிரில் சேவியரைக் கண்டதும் ஒரு கணம் தான் உறைந்து நின்றார்.

மறு கணமே ஓடிச் சென்று அவருடைய மார்பில் தஞ்சம் புகுந்தவரை, சேவியர் நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் அணைத்துக் கொண்டார்.

பின்னாலேயே வந்து நின்று 'வெற்றி' என்பதுபோல் கட்டை விரலை உயர்த்திக் காட்டிய சபரீஷையும், கேதரினையும் கண்டவுடன், சவியின் விழிகள் ஆனந்தக் கண்ணீரில் நிறைந்தன.

மெதுவாக அவனருகில் வந்தவள், "தேங்க்யூ சபரீஷ்" என்றபோது, அவள் குரல் பெரிதும் நெகிழ்ந்திருந்தது.



பிறகு, அனைவரும் அங்கு இருப்பதை உணர்ந்து காஞ்சனா வெட்கத்துடன் விலக, சேவியரும் மனம் நிறைந்த புன்னகையுடன் மென்மையாகக் கேட்டார்.

"உன் மனசாட்சிக்கெல்லாம் நீ பதில் சொல்ல வேண்டாம் காஞ்சனா... என்னோட ஒரேயொரு கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு... என்னை உடனே கல்யாணம் செஞ்சிக்க சம்மதமா?"

"ம்" என்றபடி நாணத்துடன் தலையசைத்தார் காஞ்சனா.

அந்த நிமிடம், சபரீஷின் விசுவரூபம் சவியைப் பெரிதும் உடைப்பதாய்!

தனக்காக அவன் பார்த்துப் பார்த்து எவ்வளவு செய்கிறானென்பதை நினைக்கும்போதே, மனம் சபரீஷை நினைத்து உருகியது.

காஞ்சனாவின் பிடிவாதத்தை மையப்படுத்தியே அவன் தன் ஆசையை சவியின் விஷயத்தில் நிறைவேற்றிக் கொண்டிருக்கலாம்... அதை விட்டுவிட்டு சவியின் விருப்பத்திற்கு மதிப்புக் கொடுத்து, காஞ்சனாவைப் பிரச்சனையின்றி சேவியரிடம் சேர்த்த விதம், அவளைப் பெரிதும் நெகிழ வைப்பதாய்...!

வெகு நாட்களுக்குப் பிறகு, காதலின் சாரல் மனதில் அடிக்க ஆரம்பித்தது.

உடனே காட்சிப் பிழைபோல் தன் வாழ்க்கையில் நிகழ்ந்த அந்த இரவுப் போராட்டம் கண் முன்னால் வர, இயல்பாக இருக்க முடியாமல் துடித்துப் போனாள் அவள்.

முகம் சொல்லொணாத துயரத்தை கண்ணாடியாய்ப் பிரதிபலித்தது.

அவள் முகத்திலிருந்தே மனதைப் படித்த சபரீஷ், அவளை ஆறுதலான பார்வையால் வருடி, தன் தவிப்பை வார்த்தைகளால் கூறாமல், விழிகளால் உணர்த்தினான்.

வலியும், வேதனையும் அவளுடைய உயிர்த்துடிப்பைக் களவாடி விடுமோவென்ற பயம் அவனுக்குள்ளும் விரவிப் பரவியது. ஆனால் அவளைக் காக்க வேண்டுமென்ற உறுதி உடனே வந்தது.

"சரி... எல்லாம் நல்லபடியா முடிஞ்சிடுச்சி... எப்போ கல்யாணம்? ஒண்ணு சர்ச் வெட்டிங்... இன்னொன்று இந்து முறைப்படி திருமணம்... எது முதல்லே... சீக்கிரம் சொல்லுங்க" ஆர்வத்துடன் கேட்டாள் கேதரின்.

"முதல்லே சர்ச் வெட்டிங்தான்! ஆன்ட்டியோட அம்மா அண்ணனுக்குப் பேசிட்டு... அப்புறம் இங்க இருக்கற சேவியர் அங்கிளோட உறவுக்காரங்களுக்கும் சொல்லிட்டு நம்ம ஊரிலேயே சர்ச்லே ஏற்பாடு பண்ணிடலாம்..."

சபரீஷ் கூறியவுடன் காஞ்சனா, சேவியர் இருவரின் முகமும் மலர்ந்தது.

"ஒரு நிமிஷம்... எனக்காக காஞ்சனா மதம் மாறுறதில எனக்கு சம்மதமில்லை... அவ அவளாவே... நான் நானாவே இருக்கோம்... இதிலே மதம் குறுக்கிட வேண்டாம்... ரிஜிஸ்டர் ஆஃபீஸ்லே கல்யாணத்தை முடிச்சிட்டு, ஒரு சின்ன ரிசப்ஷன் குடுத்திடலாம்..."

அவர் கூறியதும், "வாவ்..." என்றபடி கை தட்டினாள் கேதரின்.

மறு நிமிடமே, அங்கு ஆனந்தமும் அமைதியும் கை கோர்க்க, காஞ்சனாவை உணர்ச்சிப் பெருக்குடன் இறுக அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள் சவி!



"மண்ணிலிருந்து வெளியில் வந்தால்தான் வைரத்திற்கு மதிப்பு... தோல்விகளிலிருந்து வெளி வந்தால்தான் மனிதனுக்கு மதிப்பு."

அம்பேத்கருடைய வரிகளின் நிஜம் புரிந்தது.

* * *

அன்றிரவு, வெகு நேரம் பேசிக் கொண்டிருந்த போது, அவளிடம் ஒரு உதவியைக் கோரினார் காஞ்சனா.

"சவி! எனக்கு இந்த ஊரை... இந்த அற்புதமான மனுஷங்களை... அந்தப் பிள்ளைகளை விட்டுட்டுப் போகவே மனசில்லைடா! ஆனா, இத்தனை வருஷம் சேவியருக்காக நான் காத்திருந்ததுக்கும் ஒரு அர்த்தம் வேணுமே! ஏதாவது ஒரு லட்சியத்தை அடையணும்னா, வேறு எதையாவது இழந்துதான் ஆகணும்கிற உண்மை எனக்கு இன்னிக்குத்தான் புரியுது! எனக்கு ஒரே ஒரு ஹெல்ப் பண்ணுவியா?" பெரும் சஞ்சலத்துடன் கேட்டார்.

"சொல்லுங்க சித்தி... நான் என்ன செய்யணும்? என்னை ஒரு முழு மனுஷியா உருவாக்கினது நீங்கதானே! என்னால முடிஞ்சதை நான் கட்டாயம் செய்வேன்."

"நீ கொடைக்கானல்லே இருக்கிற வரைக்கும், இந்த மலை ஜாதிப் பிள்ளைங்களுக்கு இலவசமா ட்யூஷன் எடுக்கணும்... முடியுமா? நான் பாதியில விட்டுட்டுப் போற இந்தக் கடமையை, அட்லீஸ்ட் இந்த வருஷக் கடைசியில எக்ஸாம் வரவரைக்குமாவது செஞ்சு முடிப்பியா சவி?"

"நிச்சயமா செய்வேன் சித்தி! நீங்க போனப்புறம் எனக்கும் பொழுது போகறது ரொம்ப கஷ்டம்! அதை இப்படிப் பயனுள்ளதா ஆக்கிக்கறது நல்லதாச்சே!"

அவள் உறுதியளித்த பிறகே நிம்மதியாக உறங்கினார் காஞ்சனா.

# 26

அடுத்த நாளே, காஞ்சனா விடுமுறை எடுத்துக் கொண்டு காரில் அம்பாசமுத்திரத்திற்கு கிளம்பினார்.

மலை ஜாதி மக்களும், பிள்ளைகளும் விஷயத்தை கேள்விப்பட்டு ஓடி வந்து விட்டனர்... தங்களால் இயன்ற பரிசுப் பொருட்களை அளித்து கண்ணீருடன் அவரை வழியனுப்பி வைத்தனர்.

கேதரினும் சேவியரும், அவர்களுடைய சொந்த ஊரான திருநெல்வேலிக்கு கிளம்பினார்கள்.

அங்கு சென்று எல்லாரிடமும் பேசி *சீக்கிரமே* திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் அவர்.

சேவியரின் அண்ணனும், தங்கையும் அங்கிருப்பதால் அவர்களின் வீட்டிற்கு சென்றனர்.

வெளிநாட்டுப் பயணிகளின் வருகை அதிகமிருக்கின்ற நேரம் என்பதால், சைந்தவியால் விடுமுறை எடுக்க முடியவில்லை.

ஆனால் அன்றிரவு போனில் பாட்டியிடமும் மாமாவிடமும் பேசியபோது, அவர்களிடம் பெரும் உற்சாகமும், பெரிய பாரம் இறங்கிய நிம்மதியும் தெரிந்தன.



"தேங்க் யூடா செல்லம்" என்ற சண்முகத்தின் குரல் வெகுவாய்க் கம்மியிருந்தது.

பிறகு அவள் மல்லிகாவிற்கும் போன் செய்து விபரம் கூறியபோது, அவரும் மிகவும் சந்தோஷப்பட்டார்.

"*சவி*... இந்த வாரக் கடைசியில நான் கட்டாயம் ஊருக்குக் கிளம்பிப் போறேன்... காஞ்சனா நல்ல மூடிலே இருக்கும்போதே அவ கல்யாணத்தை முடிச்சிடணும்... இந்த வீக் எண்ட் நீயும் வாயேண்டா!" என்றார் ஆவலுடன்.

"இல்லைம்மா... இப்ப நல்ல *சீசன்* டைம்... ஆனா ட்ரை பண்றேன்... முதல்லே பெரியவங்க எல்லாரும் பேசி முடிவு பண்ணுங்க... ப்ரின்ஸ் அங்கிளைப் பொறுத்த வரைக்கும் அவங்க ப்ரதர், சிஸ்டர்ஸ்னாலே எந்தப் ப்ராப்ளமும் வராது... *சீக்கிரமே* கல்யாணத்தை முடிவு பண்ணுங்க... நானும் சபரீஷும் வரோம்..."

"சவி... இப்ப சொன்னே பாரு... அதைக் கேட்டவுடனே ரொம்ப சந்தோஷமா இருக்கு... நீங்க ரெண்டு பேரும் பயணத்துல மட்டும் ஒண்ணா இல்லாம, வாழ்க்கையிலயும் ஒண்ணா இருந்தா நாங்க எல்லாரும் ரொம்ப சந்தோஷப்படுவோம்... நல்லா யோசிச்சு ஒரு நல்ல முடிவா எடுடா!"

ஒரு பெருமூச்சுடன், "அம்மா... முதல்லே சித்தி கல்யாணத்தை முடிங்க... எனக்கென்ன அவசரம்...? உடனே சித்தியோட பேசுங்க... ரொம்ப நாள் கழிச்சி நம்ப வீட்டில ஒரு நல்ல விஷயம் நடக்கப் போகுது... சந்தோஷத்துல வீடு நிறையப் போகுது... அதப் பாருங்க... குட் நைட்..." மழுப்பலாகக் கூறியபடி போனை வைத்து விட்டாள்.

அந்த வாரமே, இரு குடும்பத்தினரும் கலந்து பேசி ஒரு நல்ல நாளாக முடிவு செய்தனர்....

உடனே ரிஜிஸ்டர் ஆஃபீஸிற்கு சென்று பதிவு செய்து விட்டார் சண்முகம்.

திருநெல்வேலியிலேயே ரிஜிஸ்டர் அலுவலகத்தில் திருமணத்தை முடித்துவிட்டு, மாலையில் அம்பாசமுத்திரத்தில் ரிசப்ஷன் வைத்து விடலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது.

பாஸ்போர்ட் வாங்குவதற்கும், திருமணவேலைகளுக்கும், மகிழ்ச்சியுடன் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தார், சண்முகம்.

தினமும், போனில் காஞ்சனாவிடமும், கேதரினிடமும் பேசி கல்யாண ஏற்பாடுகள் நடப்பதைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள் சவி.

காஞ்சனா, பள்ளியில் விடுமுறையுடன் ஒரு மாத நோட்டீஸும் கொடுத்து விட்டார்.

சிறு பெண்ணைப் போல் நாணமும், திருமணக் களையும் சேர்ந்து, அவரை மேலும் அழகாக்கியிருந்தன.

பிரின்ஸும் காஞ்சனாவும் திருமணம் முடிந்து ஒரு மாதம் கழித்து அமெரிக்கா செல்லத் திட்டமிட்டிருப்பதாக சவியிடம் கூறினர்.

காஞ்சனா அவளிடம் ''சவிக்குட்டி! ப்ளீஸ்... சபரீஷோட மனசையும் உணர்வுகளையும் புரிஞ்சிக்கடா! நான் ஊருக்குப் போறதுக்குள்ளே உன் கல்யாணத்தைப் பார்த்துட்டேன்னா நிம்மதியாப் போவேன்...



"இப்ப இங்க எல்லாருக்கும் உன்னைப் பத்தின கவலை தான்! அதுவும் அண்ணா இன்னிக்கு என் கூட ரொம்ப நாள் கழிச்சி... ஒரு மணி நேரம் மனசு விட்டுப் பேசினாங்க! உன்னைப் பத்தியும் பேசினோம்...!"

அவர் கூறும்போதே இடைமறித்த சைந்தவி, "சித்து... அம்மா பாட்டிக்கெல்லாம் எதுவும்..."

"இல்லைடா... தெரியாது...! நம்ம ரெண்டு பேருக்காக வும் ரொம்ப கவலைப்பட்டுட்டு இருந்திருக்காங்க உங்க மாமா! இப்ப தான் அவங்களுக்கு பாதி பாரம் இறங்கின மாதிரி இருக்கு... நீயும் செட்டிலாயிட்டா, மீதி பாரமும் இறங்கிடும்னாங்க!"

கவலையும் வேதனையும், அவர் குரலில் மிகுந்து தெரிந்தன.

''ம்... சித்தி! பிரின்ஸ் அங்கிள் என்ன சொன்னாங்க... அதை முதல்லே சொல்லுங்க...''

''ஏய்... பேச்சை மாத்திறியா? நீ சபரீஷுக்கு எப்ப ஒரு நல்ல முடிவைச் சொல்லப் போறே... அத முதல்லே சொல்லு.. அப்புறம் ட்யூஷன் பிள்ளைங்கல்லாம் எப்படி இருக்காங்க...?''

''ம்... எல்லாருக்கும் உங்க ஞாபகம்தான்... நல்லாருக்காங்க! அப்புறம் என் முடிவு சித்தி... நான்தான் சொன்னேனே... சில விஷயங்களை வாழ்க்கையில மறக்கறது ரொம்ப கஷ்டம்! விட்டுருங்க... ப்ளீஸ்!''

இதயத்தின் வேதனை, பெரும் ஊழிக்காற்றாய்... நெடுமூச்சாய் வெளிவந்தது.

ஒரு நொடி அமைதிக்குப் பிறகு ''ம்.. சரி... நாளைக்குப் பேசறேன்'' என்று வைத்தார் காஞ்சனா.

அவர் மனதிலும், தாங்கமுடியாத வேதனையும், துயரமும் நிறைந்தன.

* * *

இப்போதெல்லாம் தனிமை பழகிவிட்டாலும், என்றாவது பெய்யும் அதீதமான இடிச் சப்தத்துடன் கூடிய மழை, சவியை விதிர்த்து எழச் செய்வதும், பழைய சம்பவங்களை ஞாபக நூலில் கோர்த்து சரமாய் மனதில் புகுந்து ஒரு வித நடுக்கத்துடன் விழித்திருக்கச் செய்வதும், வாடிக்கையாய்...!

மனம் திடீரென்று பலமிழந்தது போல், ஒரு பாதுகாப்பில்லாத உணர்வுடன் சோர்ந்திருந்தது.

ஆனால், மாலை நேரங்கள் பயனுள்ளவாய், அந்தச் சிறு பிள்ளைகளுடன் அற்புதமாய்க் கழிந்தன.

அந்த வாரக் கடையில், ஊரை விட்டுத் தள்ளி, தான் கட்டிக் கொண்டிருக்கும் ஒரு ரிசார்ட்டைப் பார்வையிட, அவளையும் அழைத்துச் சென்றான் சபரீஷ்.

இப்போதெல்லாம், இருவருக்குமிடையே நட்பின் இழை வலுவாக நெய்யப்பட்டிருந்தது.

இனம் புரியா பாச உணர்வும் அன்யோன்யமும் கை கோர்த்திருந்தன.

தன்னுடைய ப்ராஜக்டைப் பற்றி அவனும், அவளுடைய வேலையைப் பற்றி அவளும் உற்சாகமாகப் பகிர்ந்து கொள்வது, வழக்கமாகி இருந்தது.

அன்றும் வேலை நடந்த இடத்தை சுற்றிப் பார்த்து விட்டுக் கிளம்பும்போது வேகமாக இருட்டிய வானம், இடியுடன் கூடிய பலத்த மழையைப் பொழிய ஆரம்பித்தது.



அங்கு அருகிலேயே இருக்கின்ற கம்பெனி கெஸ்ட் ஹவுசிற்கு அவளை அழைத்துச் சென்றான் சபரீஷ்.

மழை விட்டதும் கிளம்பலாமென்று அவர்கள் காத்திருக்க... மழையும் விடவில்லை... திடீரென்று மின்சாரமும் நின்று போய் விட்டது.

அந்த கெஸ்ட் ஹவுசின் கேர் டேக்கர் ஏற்றி வைத்த மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில், இருவரும் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

தனிமையின் இறுக்கமும், மழை இரவின் மறக்க முடியா நினைவுகளும் அவளுக்குள் ஊடுருவின.

அப்போது சபரீஷின் செல் ஒலிக்க எடுத்துப் பேசினான் அவன்.

"ஓ! அப்படியா! சரி! நானும் சவியும் இங்கேயே தங்கிடறோம்... ஒண்ணும் ப்ராப்ளமில்லை... சாப்பாடு இருக்கு... ரெண்டு ரூம்ஸ் இருக்கறதால மேனேஜ் பண்ணிக்கறோம்... ஆமாம், இங்கேயும் கரெண்ட் இல்லை" என்றபடி செல்லை அணைத்தான்.

பதட்டத்துடன் அமர்ந்திருந்த சவியிடம், "வழியிலே பெரிய மரம் - ஒண்ணு விழுந்து நாம போக வேண்டிய ரோடு பிளாக் ஆகியிருக்காம்... அதக் க்ளியர் பண்ண மிட் நைட் ஆயிடுமாம்... நாம ரெண்டு பேரும் இங்கேயே தங்க வேண்டியதுதான்... வேற வழி இல்லை.. காலையிலக் கிளம்பலாம்...!" யோசனையுடன் கூறினான் சபரீஷ்.

"வேற வழி இல்லையா?"

அவள் தவிப்புடன் கேட்டபோது. "இல்லை... இந்த ரூட் கிளியராகி மிட் நைட் இந்த மழையிலப் போறது சேஃப்டி இல்லை... அதுக்கு இங்கேயே தங்கிட்டு காலையில் கிளம்பறது தான் நல்லது... நீ அந்த ரூமிலே தங்கிக்க...நான் பக்கத்து ரூமில படுத்துக்கறேன்..." என்று அவளுக்கான அறையைக் காட்டினான்.

புலியிடமிருந்து பயந்து ஓடும் மானைப் போல் வேகமாகச் சென்று அந்த அறைக்குள் பார்த்தவளை, ஒரு நட்சத்திர ஓட்டலின் அறையைப் போல் எல்லா வசதிகளும் பாதுகாப்பும் நிறைந்திருந்த அந்த இடம், அமைதியடையச் செய்வதாய்!

ஆனாலும், மனதிற்குள் ஏதோ ஒரு வித அலைப்புறுதல் இருந்து கொண்டே இருந்தது.

பனி படர்ந்த காலையின் அற்புத சிலிர்ப்பை உள்வாங்கியது போல், தான் காதலை உணர்ந்த அந்த ஆதி நாட்கள் பேரழகாய் உள்ளே பரவின.

## 27

அன்றிரவு, சாப்பிட்ட பிறகு சபரீஷுக்கு 'குட் நைட்' சொல்லிவிட்டு அறைக்குள் வந்து படுத்தவளுக்கு, பலமாய் கேட்ட இடி சப்தத்தினால் வெகு நேரம் உறக்கமே வரவில்லை.

பிறகு உறங்கியவளுக்குள், அந்த மழை நாளிரவின் ஞாபகங்கள் மெல்ல ஆக்ரமிக்க, யாரோ தன்னைத் துரத்துவதைப் போல் ஒரு உணர்வு!



மழை வெள்ளமாகிக் கரை புரண்டு ஒரு புறம் ஓட, தப்பிக்க முடியாமல் கரையில் அவள் நிற்க... பெரிய மரம் ஒன்று சரிந்து விழ... அவளைப்பிடித்து யாரோ கீழே தள்ளுகிறார்கள்... ஒரு கொடூரமான முகம் கண்களுக்கருகே விகாரமாய் வருகிறது...

பெரும் இடியோசையும், சோவென்ற மழையின் சப்தமும் அவளுக்குள் முரசு கொட்ட, கண்களைத் திறக்க முடியாமல் ஒருவித அவஸ்தை உணர்வுடன் கதற ஆரம்பித்தவள்... நிறுத்தவேயில்லை.

தன் அறையில் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த சபரீஷுக்கு ஏனோ விழிப்பு தட்டியபோது, எங்கிருந்தோ ஒரு தீனமான அலறல் கேட்க, மனதில் சட்டென்று ஒரு பதட்டம் பரவியது.

அந்த சப்தம் சவியுடையது போல் இருக்கவும், பதறிப் போய் ஓடியவன் அவசரமாகக் கதவைத் தட்டியபோது அது லாக் செய்யப்பட்டிருப்பது புரிந்தது.

ஓடிச் சென்று ஹால் ரிசப்ஷனில் மாட்டியிருந்த மாற்றுச் சாவியால் அறைக் கதவை திறந்து சபரீஷ் வேகமாக உள்ளே நுழைந்தான்.

அங்கு படுக்கையில் படுத்தபடியே முகத்தை மூடிக் கொண்டு அலைப்புறுதலுடன் புரண்டபடி கதறிக் கொண்டிருந்தாள் சவி.

அன்றைய இரவு உருவாக்கிய பொறி... அந்த இடி மழை ஊதி விட்ட நெருப்பு... பல ஆண்டுகள் கழிந்து விட்டாலும் இன்னும் அணையாமல் எரிந்த கனல்! அது அவளை இன்றும் உருக்குலைத்து சிதறடிப்பது புரிந்தது.

இதயத்தின் ஆழம்வரை யாரோ கத்தியைச் செலுத்தினாற்போன்ற வலியுடன், ஓடிச் சென்று அவளை அள்ளி

அணைத்து தன்னுடன் சேர்த்து ஒரு விலை மதிப்பில்லா பொக்கிஷத்தைப் போல ஏந்திக் கொண்டான் அவன்.

மனம் கழிவிரக்கத்தில் துடிக்க, அவள் நிலை கண்டு அவனுடைய இமைகள் நனைந்தன.

இயலாமையால் மனம் மௌனமாய்க் கதற, சிறு குழந்தையைப் போல் அவளை ஆதரவாக வருடி, மென்மையான குரலில் ஆறுதல் கூறியபடி சமாதானப் படுத்தினான் சபரீஷ்.

* * *

அன்று, அவள் தன் அலைப்புறுதல் குறைந்து சமாதானமடைய வெகு நேரமாயிற்று.

பருந்தின் சடசடப்புக்கு அஞ்சி தாயின் சிறகுகளுக்குள் இதம் தேடும் பறவையாய், அவன் பிடிக்குள் அடங்கியிருந்தாள் அவள்.

பிறகு மெதுவாக நிமிர்ந்தவளுக்கு, ஒன்றுமே புரியவில்லை.

"என்னடா கண்ணம்மா? நான் பக்கத்துல இருக்கும் போது இங்கே யார் உன்னை என்ன செஞ்சிட முடியும்? உன் மேல ஒரு தூசு கூடப் படாம என்னால பாத்துக்க முடியும்..ஏன் இவ்வளவு பயம்... எந்த நேரத்திலயும் உனக்கு நான் இருக்கேன்... இருப்பேன்!"

காதோரம் மயிலிறகாய் வருடி இதப்படுத்தின, அவன் வார்த்தைகள்!

"இல்லை... அந்தக் கனவு...நான்..."

அந்தத் தீக் கனவின் பாதிப்பிலிருந்து அவள் விடுபடவில்லை என்பதை மெலிதாய் நடுங்கிய குரலும், மிரட்சியுடன் அலை பாய்ந்த விழிகளும் கூறின.



"என் செல்லக் கண்ணம்மா! எல்லாம் சரியாயிடும்! அந்தக் கொடுமையான இழப்பை... அந்த இரவிலே நடந்த கொடூரத்தை... அதைத் தடுக்க முடியலையேங்கிற ஆத்திரத்தை... உனக்குள்ளே போட்டு அடக்கி வச்சு மறுகிட்டே இருக்கே பாரு... அது தான் இந்தக் கனவுகளுக்குக் காரணம்!

"அதுவும் அந்த மாதிரி ஒரு இடி மின்னலோட கூடிய ஒரு மழை நாளிலே, அந்த ரணங்கள் விசுவரூபம் எடுத்து உள்ளே முட்டி மோதி உன்னை அலைக் கழிக்குது!

"இதுவரைக்கும் அதைப் பகிர்ந்துட்டு ஆதரவா சாஞ்சுக்க ஒரு தோள் இல்லாமத் தனிமையில இருந்தே... இனிமே உனக்கு நான் இருப்பேன் கண்ணம்மா! உனக்கு உயிரா... துணையா... தாய் மடியா... எல்லாமுமா நான் இருப்பேன்.. இது சத்தியம்!

"இனிமேயும் உன்னைத் தனியா விட எனக்கு பயமா இருக்கு... போதும், இதுவரைக்கும் நீ பட்ட கஷ்டமெல்லாம்... இனிமே நான் உன்னைத் துன்பப் பட விட மாட்டேன்...

"இன்னிக்கு மாதிரியே என்னிக்கும் உன் கூடத் துணையா இருப்பேன்...!"

அவன் உறுதியாகக் கூறியவுடன் அவளுடைய தேகமெங்கும் சிலிர்த்தது.

"சபரீஷ்..." மென்மையாக ஆனால் தவிப்புடன் அழைத்தாள்!

"ப்ளீஸ்... எதுவும் சொல்லாதே சவி! இன்னிக்கு நான் உன்னைத் தொட்டது... அணைச்சு ஆறுதல் படுத்தினது... உனக்கு ஏதும் கஷ்டமா இருக்கா? அதாவது...

அருவெறுப்பா... பிடிக்காத மாதிரி... இப்படி எதுவும்..?'' வேதனையும் தவிப்புமாகக் கேட்டான்.

சற்று நேரம் யோசித்தவள் ''ம்... இல்லையே'' மெது வாகக் கூறியபோதுதான், தான் இன்னும் அவனுடைய கையணைப்பிலேயே இருப்பது நினைவிற்கு வர, ஒரு பட்டாம் பூச்சியின் படபடப்போடு அவனிடமிருந்து சிணுங்கலாக விடுபட்டு, கூச்சத்துடன் விலகினாள் அவள்.

''ஏய்... இப்பதான் கஷ்டமா இல்லைன்னு சொன்னே... உடனே பிடிக்காம விலகிப் போறே?'' ஆதங்கத்துடன் கேட்டான் அவன்.

''ஹூம்... பிடிக்காம இல்லை...'' பதறியபடி வேக மாக உதடு கடித்தாள்.

''அப்போ பிடிச்சிருக்கா!''

கண்களில் சிறு குறும்புடன் கேட்டவனையே இமைக் காது நோக்கியவளுக்குள், மெல்லிய சலனம்!

உடனே ''சாரி!'' என்று விலகிய சபரீஷ், ''நான் உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டேன் கண்ணம்மா! நீ எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கேன்னு எனக்குத் தெரியும்... சோ... வெளிப்படையாவே சொல்றேன்...

''எனக்கு மனைவின்னு, ஒரு துணையா, ஒரு தோழியா நீ இருந்தாப் போதும்... ஒன்னுமே இல்லாம இருக் கறதுக்கு, அரை ரொட்டித் துண்டு எவ்வளவோ மேல்... இல்லையா? அது மாதிரித்தான்!

''செக்ஷுவல் ரிலேஷன்ஷிப்பை நீ விரும்பலைன்னு எனக்குத் தெரியும்... அதுதான் உன்னோட ஆழ் மன உணர்வுகளை இவ்வளவு ஆட்டி வைக்குது...



''ஹூம்.. உடல்கள் இணையறதைவிட மனசு இணை யறதுதான் உன்னதமானதுன்னு நினைக்கிறவன் நான்...! அது நமக்கு எப்பவோ நடந்தாச்சு... என்னால முடியும்டா! உனக்குப் பிடிக்காத எதுவுமே எனக்கும் வேண்டாம்...!

''நான் மிருகம் இல்லை... மனுஷன் தான்... அதுவும் உன்னோட உணர்வுகளை நல்லாப் புரிஞ்சிக்கிட்ட ஒருத் தன்... உன்னை எதுக்கும் ஃபோர்ஸ் பண்ண மாட்டேன்... என்னை நம்பி எத்துப்பியா கண்ணம்மா?''

அவன் மிருதுவாகக் கேட்டபோது, அந்தக் கண்களில் தெரிந்த நம்பிக்கையும், ஆவலும், அவளுடைய மறுப்பைக் கட்டிப் போட்டன...!

காலம் காலமாய், அவன் தனக்காகக் காத்திருந்ததை... தன் மேல் உயிராய் இருப்பதைப் புரிந்து கொண்டவளின் இதயத்திற்குள், பெரும் போராட்டம்!

சிறிது நேரத்திற்குப் பிறகு ''ம்... சரி'' என்றபோது, எதிலிருந்தோ அவளைக் காப்பவன் போல, சட்டென்று அவளை இறுக அணைத்தவன், ''தேங்க் யூ'' என்றான் உணர்ச்சிகள் நிறைந்த குரலில்!

''ப்ளீஸ்...'' என்று அவள் விலக, ''சாரி கண்ணம்மா... இதுதான் கடைசி தடவைங்கறதால... சரி... நீ படுத்துத் தூங்கு... நானும் இந்த ரூம்லேயே கீழே படுத்துக்கறேன்...'' என்றவன் அருகிலிருந்த கம்பளியை எடுத்துக் கார்ப் பெட்டில் விரித்துப் படுத்துக் கொண்டான்.

அன்றைய இரவு, இருவருக்குமே உறங்கா இரவாய்!

உறங்கினால் கனவு வருமே என அவள் விழித்திருக்க... கனவு வந்தால் அவள் காயப்படுவாளே என இவன் விழித்தபடி துணையிருக்க... வெகு நேரம் கழித்து

இருவருமே சோர்ந்து போய்த் தூங்கும்போது லேசாக விடிய ஆரம்பித்திருந்தது.

அந்த பனிக்கால விடியல்... சைந்தவியின் வாழ்க்கையில் இனிய விடியலாய் ஒளி சேர்க்க ஆரம்பித்தது.

## 28

மறுநாள் காலையில், சூரியனின் மெல்லிய கிரணங்கள் ஜன்னல் வழியே சபரீஷின் மேல் படர்ந்து வருடி, அவனை எழுப்பின.

நேற்றைய இரவின் ஞாபகங்கள் கனவு போல் வர, தலையைக் குலுக்கி எழுந்து அமர்ந்தவன் திரும்பிய போது, மெத்தையில் சிறு குழந்தையைப் போல் உறங்கிக் கொண்டிருந்தாள் சவி.

மின்சாரம் வந்திருக்க, அவளின் முன்னுச்சியில் செல்லமாய் உறவாடிக் கொண்டிருந்த கூந்தல் சுருளை ஒதுக்கி விடத் தன்னையறியாமல் ஆசையுடன் நீண்ட விரல்களை அடக்கிக் கொண்டான் அவன்.

விடியலில், அப்போதுதான் மலர்ந்த மென்மையான மலரைப் போல் சயனித்திருந்தவளை எந்த நாளிலும் கலங்க விடக்கூடாது என்ற உறுதியுடன் தன் அறைக்குச் சென்றான்.

மனம் முழுவதும், குறிஞ்சி மலர்க் கூட்டமாய் அவள் நினைவுகள்!



அவன் குளித்துவிட்டுத் தயாராகி வரும்போது, அவளும் ஹாலில் அமர்ந்து பேப்பர் படித்தபடி காபி அருந்திக் கொண்டிருந்தாள்.

அவனைக் கண்டதும் "சபரீஷ்... ரெடியாயிட்டீங்களா! ஒரு நிமிஷம்... நானும் குளிச்சிட்டு வந்திடறேன்... ரோடு கிளியராயிடுச்சாம்... கேர் டேக்கர் மாதையன் சொன்னார்..." சிறு முறுவலுடன் எழுந்தாள்.

"ஒரு நிமிஷம் சவி!" மென்குரலில் அவளைத் தடுத்தவன் அருகில் வந்தான்.

"நேத்து நைட் நடந்ததெல்லாம் ஞாபகம் இருக்கா..? நேத்து நைட் எனக்கு ஒரு ஒப்புதல் தந்தியே... அது பயத்தினாலயோ... இல்லை என்னோ வற்புறுத்தல்னாலயோ நீ சரின்னு சொன்னதா இருக்கக்கூடாது... ஆழ் மனசில இருந்து வந்த தெளிவான முடிவா இருக்கணும்.." ஆழமான குரலில் கேட்டான்.

அவன் விழிகள், தவிப்புடனும் எதிர்பார்ப்புடனும் பளபளத்தன.

சட்டென்று நிமிர்ந்தவளின் விழிகளில், மெல்லிய நீர்த்திரையிடலோடு சிறு குழப்பமும் தெரிவது போல்!

"ஓ... குழப்பமா இருக்கா சவி... அப்போ வேண்டாம்..."

"இல்லை... தெளிவாத்தான் இருக்கேன் சபரீஷ்... உங்க முடிவுல எனக்கு சம்மதம்தான்... நான் உங்களை நம்பறேன்.."

மெல்லிய குரலில் தலை குனிந்தபடி கூறினாள் அவள்.

சட்டென்று அவளிடம் கசிந்த அந்த முதல் வெட்கம், பொக்கிஷமாய் அவனுள் நிறைந்தது.

உடனே ஒற்றை விரலில் அவள் முகத்தை நிமிர்த்தியவன், "அப்புறம் ஏன் இந்தக் கலக்கம்..?" மென்மையாகக் கேட்டான்.

"இல்லை... உங்க முடிவை நீங்க மறுபரிசீலனை செய்யறீங்களோ... மனசை மாத்திட்டீங்களோன்னு ஒரு நிமிஷம் தவிச்சுப் போயிட்டேன்.." மெல்ல முணுமுணுத்தாள் அவள்.

சட்டென்று, அவனுக்குள் ஏதுவோ மலர்வது போல...!

இரு கைகளாலும் அவளுடைய முகத்தை ஏந்தியவன் "சவி... எந்தக் காலத்துலயும் என் மனசு மாறாது.. எத்தனை வருஷமானாலும் நீ மாறுறதுக்காக அது காத்திட்டிருக்கும் கண்ணம்மா! ஐ ப்ராமிஸ் யூ."

ஆழமான குரலில் கூறிவிட்டு, சட்டென்று விலகி வெளியில் சென்று கார் தயாராக இருக்கிறதா என்று பார்த்தான்.

பிறகு, அவள் குளித்துவிட்டு டிபன் சாப்பிட்டு முடித்து கிளம்பிச் செல்லும்போது வழியில் ஒரு மரத்தடியில் காரை நிறுத்தினான்.

அவளிடம் திரும்பி, "சவி! இப்பவும்... உனக்கு எந்த செகண்ட் தாட்டும் இல்லைன்னா... நாம கல்யாணம் பண்ணிக்க முடிவெடுத்திருக்கறதைப் பத்தி முதல்லே மல்லிகா ஆன்ட்டிக்குச் சொல்லிடலாமா?" ஆவலுடன் கேட்டான்.

சிறு குறுகுறுப்புடன் "ம்... பேசலாம்" என்றவள் உடனே தன் செல்லை உயிர்ப்பித்து தன் அம்மாவின் செல்லுக்குத் தொடர்பு கொண்டாள்.



மல்லிகா எடுத்ததும் "அம்மா... எப்படி இருக்கீங்க..?" என்பதற்கு மேலாக ஏனோ எதுவுமே பேச முடியாமல் உடனே அவனிடம் கொடுத்து விட்டாள்.

அந்த நிமிடம் ஒவ்வொரு செல்லிலும் நேசப் பூக்கள் மலர்ந்து, சபரீஷைப் பற்றி நினைத்தாலே உடலெங்கும் பரவசமும் வெட்கமும் துளிர்க்க ஆரம்பித்தன.

"ஆன்ட்டி... உங்க எல்லாருக்கும் ஒரு குட் நியூஸ்... நானும் சவியும் கூடிய சீக்கிரமே கல்யாணம் செஞ்சுக்கலாம்னு முடிவெடுத்திருக்கோம்..."

அவன் கூறியவுடனே மறுமுனையில் ஒரு கணம் எந்த சப்தமும் இல்லை.

"ஆன்ட்டி..." அவர் லைனில் இருக்கிறாராவென்ற சந்தேகத்துடன், அவன் அழைத்தான்.

"ரொம்ப சந்தோஷம் சபரீஷ்... இந்த ஒரு நிமிஷத்துக்காகத் தான் நான் இத்தனை நாளா காத்திட்டிருந்தேன்" எனும்போதே அவர் குரல் உடைந்தது.

அவர் அழுவதும், வெகுவாய் நெகிழ்ந்திருப்பதும் புரிந்தது.

பிறகு வீட்டில் எல்லோரிடமும் அவள் பேச அவர்கள் அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் தத்தளித்தனர்.

காஞ்சனாவின் திருமணம் முடிந்த மறு வாரமே அம்பாசமுத்திரத்தில் சபரீஷ் சைந்தவியின் திருமணத்தை விமரிசையாக நடத்தி விடலாமென்று உடனே பேசி முடிவெடுத்தனர்.

ஜெகதீசனுக்கும் வள்ளிக்கும் விபரத்தைக் கூறிய போது, வள்ளி போனிலேயே அழுது விட்டார்.

அவர் வெகு நாட்களாக எதிர்பார்த்திருந்த இனிய செய்தி, மனதை ஆனந்த வெள்ளமாக்கி விழிகளைக் கசியச் செய்தது.

* * *

பிறகு வந்த நாட்கள், திருமண ஏற்பாடுகள் செய்வதில் செல்ல, சைந்தவியை ஒரு மாத விடுப்புடன் ஊருக்கு வரும்படிக் கட்டாயப்படுத்தினார் மல்லிகா.

அவள் சபரீஷுடன் கலந்து பேசியபோது, அவன் இரண்டு மாதங்கள் அவளுடைய வேலைக்குத் தற்காலிகமாக ஒருவரை நியமித்து, சைந்தவியை ஓய்வாக இருக்கும்படிக் கூறி அனுப்பி வைத்தான்.

அவளைத் தற்காலிகமாகப் பிரிவது அவனுக்கு உயிர் வேதனையாய்... ஆனாலும் அவளை எண்ணியே அனுப்பி வைத்தான்.

அவனைப் பிரிவது... அவளுக்கும் பெரும் கஷ்டமாய்!

ஆனால் மல்லிகாவும் விடுப்பு எடுத்துக் கொண்டு அம்பாசமுத்திரத்திற்கு வருவதால், எல்லோருடனும் ஒன்றாக இருக்கலாமென்று பாட்டி விருப்பப்பட, சைந்தவி கிளம்பினாள்.

அவளுக்காக டிராவல்ஸில் கார் ஒன்று ஏற்பாடு செய்திருந்தான் அவன்.

சபரீஷிடம் அவள் விடைபெறும்போது, அவனையறியாமலே விழிகளிரண்டும் காதல் பாடத்தை மௌன மொழியில் பேச, இளவேனிற் சாரலாய் மனதிற்குள் ஒரு சிலிர்ப்பு வர சட்டென்று தலை குனிந்து கொண்டாள் அவள்.



இப்போதெல்லாம் அவளுடைய பார்வை தீண்டினால் கூட அவன் உணர்வுகள் தீயாய் தகித்தன.

அவள் விடைபெற்றுச் செல்ல, தன் உயிரினிலொரு பகுதி தொலைந்தது போல் அவளையே பார்த்தபடி, ஏக்கத்துடன் விடை கொடுத்தான் சபரீஷ்!

அவள் பிரிந்தபிறகு சபரீஷுக்குத் தெரிந்தது... காதல் சாமான்ய விஷயமில்லை... உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்துப் போற்றப்பட வேண்டிய ஒரு பொக்கிஷமென்பது!

காதல், ஆண் பெண்ணுக்கிடையே விழிகளால் பாலம் கட்டுகிறது.. உணர்வுகள் அதை உறுதியாய் முழுமையடையச் செய்கின்றன!

அதில்... ஒரு பக்கம் ஆண் நிற்கிறான்... மறுபக்கம் பெண்! இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி... நேசித்தபடி... மற்றவரின் நினைவுகளை சுகமாய் சுவாசித்தபடி பிரிந்திருக்கின்றனர்.

இன்று தானும் அந்த நிலையிலிருப்பதை, சைந்தவி உணர்ந்தாள்.

பல நேரங்களில்... ஒரு வித முழுமை உணர்வையும், சில நேரங்களில் வெறுமை உணர்வையும் சிலிர்ப்புடன் அவளுக்குள் உணரச் செய்தது... காதல்!

## 29

காஞ்சனாவின் திருமணத்திற்கு இரண்டு நாட்கள் முன்பே, சவி ஊருக்குச் சென்று விட்டாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு அந்த வீட்டில் நிம்மதியும் மகிழ்ச்சியும் இணைந்து ஆட்சி செய்ய, திருமண ஏற்பாடுகள் விமரிசையாக நடந்து கொண்டிருந்தன.

திருநெல்வேலியில் ரிஜிஸ்தர் திருமணமும், அன்று மாலை அம்பாசமுத்திரத்தில் வரவேற்பும் நடத்த இருந்தனர்.

மறு வாரம் சபரீஷுக்கும் சவிக்கும் திருமணம் முடிவு செய்யப்பட்டிருப்பதால் அந்த வேலைகளும் நடக்க, எல்லோரும் ஆர்வத்துடன் ஒவ்வொரு வேலையாக எடுத்துச் செய்தனர்.

காஞ்சனாவிடமும், சவியிடமும் பெரும் மாறுதல் வந்திருக்க, திருமணம் என்ற மாயாஜாலம் இருவர் முகத்திலும் இனிய ரசவாதத்தைச் செய்திருந்தது.

காஞ்சனாவின் திருமணமும் வரவேற்பும் விமரிசையாக நடந்து முடிய, அடுத்து உடனே சவியின் திருமணத்திற்குத் தயாரானது அந்த ஊர்!

திருமணத்தன்று காலையில் ஒரு தேவதையைப் போல் மண மேடையில் வந்து அமர்ந்தவளை, எல்லோருடைய விழிகளும் தேனீக்களாய் மொய்த்தன.

சபரீஷ் இமை கொட்டி விழிக்க முடியாமல் உறைந்து போய் சிலையாகியிருந்தான்.

திருமணப் பெண்ணுக்கே உரிய வெட்கமும், தவிப்பும் அவளுடைய அழகைப் பலமடங்கு அதிகப்படுத்தியிருந்தன.

கேதரின் தான், அவளுக்குத் தோழியாக இருந்தாள்.



திருமணத்தின் போதும், பிறகு நடந்த சடங்குகளின் போதும், ஏதோ ஒரு வித சிலிர்ப்பும் கிளர்ச்சியும் சவியை ஆட்படுத்த, மௌனமாக இருந்தாள் அவள்.

அவனுடைய விலை மதிக்க முடியாத அன்பில், அப்படியே ஆடிப்போயிருந்தது நெஞ்சம்!

வாழ்க்கை முழுவதும், அவனுடைய காதல் தூறல் தன்னை நேசத்தால் நனையச் செய்யும் என்பது புரிந்தது.

சபரீஷுக்கோ பெரும் வெற்றிக் களிப்பு!

எப்போதுமே, தான் நினைத்ததை அடைந்து விட வேண்டுமென்ற வேகமும் முயற்சியும் நிறைந்தவன் அவன்.

படிப்பிலாகட்டும்... தொழிலிலாகட்டும்... எல்லாவற்றையும் வாழ்க்கையில் திறம்படச் செய்து இளமையிலேயே பெரும் தொழிலதிபராக விசுவரூபமெடுத்திருந்த அவனுக்குள், தன்னுடைய காதல் மட்டுமே பெரும் சவுக்கடியாய்...!

அதற்காக சவியை மறந்து வேறு ஒரு பெண்ணை மணப்பதும் முடியாதென்பதை உணர்ந்து பிடிவாதமாகக் காத்திருந்தவனுக்குப் பரிசாய்... இன்று சவி கிடைத்தது. இமயத்தையும் தொட்டு விட்டதைப் போல் ஒரு உணர்வைத் தோற்றுவித்தது.

தன்னை மறந்தாலும், அவளை மட்டும் மறவாத நெஞ்சோடு தான் இருப்பதை ஒரு ஆளுமை உணர்வுடன் உணர்ந்தான் அவன்.

''சபரீஷ்... நினைச்சதை சாதிச்சிட்டேடா...'' டெல்லியிருந்து வந்த பாலாஜியும் செல்வாவும் கை கொடுத்து

வாழ்த்தியபோது. அவன் முகத்தில் பெரும் மகிழ்ச்சிப் பரவசம்!

திருமண நிமிடங்கள், இனிதாய் கழிந்து கொண்டிருந்தன.

திடீரென்று அங்கு பெரும் சலசலப்பு எழ, என்னவென்று பார்த்தால் அங்கு சபரீஷின் நண்பன் நரேஷுடன் துரை. இனியாவைக் கையிலேந்தியபடி நின்றிருந்தான்.

வெகு நாட்களாய், மனைவியின் பிரிவால் தொலைந்து போயிருந்தவனின் வரவு... பெரும் ஆச்சர்யமும், மகிழ்ச்சியும் தருவதாய்!

எல்லோருக்கும் பெரும் வியப்பும்; உற்சாகமும் ஊற்றாய் பெருக்கெடுக்கும்போதே, வேகமாக முன்னால் வந்து சபரீஷை அணைத்து தன் வாழ்த்துக்களைத் தெரிவித்தான் அவன்.

''எங்கேடா போயிருந்தே இத்தனை நாளா?''

ஆதங்கத்துடன் கேட்டபடி கைகளைப் பிடித்துக் கொண்ட பாலாஜியையும் செல்வாவையும் தனியே அழைத்துச் சென்றான் அவன்.

பிறகு விழிகளில் தொலைதூரக் கனவுகளுடன் பேச ஆரம்பித்தான்.

''உலகமே வெறுத்துப் போய் ரிஷிகேஷ், பத்ரிநாத், ஹரித்வார்னு ஊர் ஊரா சுத்தினேன் பாலாஜி! அப்பதான் எனக்கு ஒரு குரு கிடைச்சார்...!

''என்னோட கடந்த காலத்தை தெரிஞ்சிக்கிட்டவர், ''உன் கடமைகளை எல்லாம் முடிச்சிட்டு சன்யாசம் வாங்கிக்க



லாம்... உனக்காக உன் மக அங்கே காத்திட்டிருப்பா... உன் மனைவி இறந்தது விதி... அதை யாராலும் தடுக்க முடியாது... உன் குழந்தையப் பாரு''ன்னு புத்திய தெளிவிச்சு என்னை அனுப்பி வச்சாரு...

''உடனே கிளம்பி ஊருக்கு வந்தா நம்ம ஃப்ரெண்ட் நரேஷ் சொல்றான்... இன்னிக்கு தான் சபரிக்கு கல்யாணம்னு!... உடனே ஓடி வந்தேன்... என் குழந்தையையும் சபரிதான் வளர்க்கிறான்னு கேள்விப்பட்ட உடனேயே ரொம்ப சந்தோஷமாயிருந்தது... இப்ப அவனுக்குன்னு ஒரு துணை வந்தாச்சு... இனியாவை நானே இனிமே வளர்க்கலாம்னு முடிவெடுத்திருக்கேன்... இனிமே அவளை விட்டுட்டு எங்கேயும் போக மாட்டேன்..'' கலங்கிய விழிகளுடன் கூறினான்.

அனைவரும் இணைந்ததில் அன்று வானமே மகிழ்ச்சி மிகுதியில் சாரலாய் பன்னீர் தூவியது.

* * *

முதலிரவு!

வெண் பட்டு அணிந்து ஒரு ஓவியப் பாவையைப் போல் அறைக்குள் வந்தவளை தன் விழிகளால் ரசனையுடன் வருடிய சபரீஷ், மெதுவாக அவளருகில் வந்தான்.

அவளுடைய அருகாமை பெரும் கிளர்ச்சியையும் கிறக்கத்தையும் ஏற்படுத்த அதைக் கட்டுப்படுத்தியபடி 'சவி!... இனிமே நீ எதுக்கும் பயப்பட வேண்டாம்... ஒரு நல்ல நண்பனா நான் உன் கூட எப்பவுமே துணையிருப்பேன்... நீ படுத்துத் தூங்கு... டயர்டா இருப்பே! நாம்

நாளைக்குப் பேசலாம்...'' என்றபடி தரையில் பாயை விரித்துப் படுத்து விட்டான்.

கண்மூடி இருந்தாலும், உள்ளே பொக்கிஷமாய் அவன் நினைவுகள்!

என்ன பதில் சொல்வதென்றே புரியாமல் தவிப்புடன் வெகு நேரம் விழித்திருந்த சவியும் பிறகு உறங்க ஆரம்பித்தாள்.

ஆனால், நித்திரையின் அணைப்புமின்றி வெகுநேரம் விழித்திருந்தான், சபரீஷ்!

மறுநாளே காஞ்சனா அமெரிக்காவிற்கு கிளம்புவதற்காக சென்னை செல்ல, கேதரினையும் காஞ்சனாவையும் ஒரே நேரத்தில் பிரிய நேர்ந்தது, சவிக்குப் பெரும் வேதனையாய்...!

கண்ணீருடன் அவள் விடை கொடுத்தபோது, காஞ்சனா அவளிடம் தனியே பேச வேண்டுமென்றார்.

அவருடைய நோக்கமும், விருப்பமும் புரிய, மறுக்க முடியாமல் உடன் சென்றாள் அவள்.

அறைக்குள் சென்றவுடன், ''சவி... முன்னே எல்லாம் எனக்கு தாம்பத்யம், இல்லறம்... அதைப் பத்தி எதுவுமே தெரியாது... ஆனால் இப்ப உணர்ந்தப்புறம்... இன்னிக்குக் காலையில் உன்னைப் பார்த்தப்பா... அந்த வித்தியாசம் என் முகத்திலே அறைஞ்சது!

''ஒரு புதுப் பெண்ணுக்கே உரிய வெட்கம், பயம், தவிப்பு எல்லாமே உன்கிட்ட மிஸ்ஸிங்னு புரிஞ்சது! சபரீஷ் ரொம்பப் பொறுமையானவரா இருக்கலாம்... காதலுக்காக



எதை வேணா தியாகம் செய்யறவரா இருக்கலாம்... ஆனா என்னிக்காவது வாழ்க்கையில் சின்னதா ஒரு அலுப்பு தட்டிட்டா அப்புறம் கஷ்டம்...! மனசில பெரிசா ஒரு விரிசல் விழுந்துடும்...

''மனசுக்குள்ளே இருக்கற பயத்தையும் தேவையில்லாத பழைய நினைவுகளையும் நம்மை பாதிக்கவிடாம... அதைக் கண்டு நாம பயந்து ஓடாம, அதை தைரியத்தோடவும் துணிவோடவும் எதிர்த்துப் ஃபேஸ் பண்ணப் பழகிட்டோம்னா, வாழ்க்கையில ஜெயிச்சிடலாம் சவி...!

''கொஞ்சம் கொஞ்சமா அதை மனதில் இருந்து விலக்கி, நீ இயல்பான மனைவியா சபரீஷோட சேர்ந்து வாழணும்! அதுதான் என் ஆசை...!

''நாம நினைச்சா முடியாததில்லை... அடுத்த தடவை நான் ஊருக்குத் திரும்பி வரும்போது, உன்னை வித்தியாசமானவளா, பழைய துணிச்சல்கார சவியா... சபரீஷோட மனசுல மட்டும் இல்லாம... எல்லா விஷயத்துலயும் துணையா இருக்கறதை நான் பாக்கணும்...!'' என்றார் காஞ்சனா.

''சித்தி... ஐ ஆம் நாட் அன் ஆப்டிமிஸ்ட்... நடந்ததெல்லாம் நல்லதுக்குத்தான்னு என்னால சத்தியமா இந்த விஷயத்துலே நினைக்க முடியலை...!'' இறுகிய குரலில் கூறினாள் சவி.

''பட்... யு மஸ்ட் பீ... இன் ஃப்யூச்சர்! அதான் எனக்கு வேணும்...'' என்ற கோரிக்கையுடன் விடைபெற்றார்.

அவள் மனம் குழப்பங்களையும், தவிப்பையும் தத்தெடுத்திருந்தன.

கேதரின் அவளைக்கட்டியணைத்துக் கலங்கியபோது, சவிக்கு ஏனோ அழுகையைக் கட்டுப்படுத்த முடிய வில்லை.

எல்லா ரகசியங்களையும் மனதாரப் பகிர்ந்த... தோழி களாய் எண்ணியிருந்த இருவரும் அவளை விட்டுப் பிரிந்து செல்லப் போகிறார்கள்... அவள் மனம் உடைந்து போனது.

காஞ்சனாவும் கேதரினும் ஒரே நேரத்தில் பிரிந்து செல்வது, அவளால் தாங்க முடியாத ஒன்றாய்!

''நல்ல நண்பர்கள் இல்லாத உலகம் ஒரு பாலை வனத்தைப் போன்றது'' என்ற கவிஞர் பேகனின் வரி களிலிருந்த உண்மையை அன்றுதான் உணர்ந்தாள் அவள்.

## 30

கொடைக்கானலுக்கு வந்து இருவரும், தனிக் குடித்தனம் நடத்த ஆரம்பித்து, ஒரு வாரமாகி விட்டது.

அந்த வீடும், அதன் நடைமுறைகளும் வெகுவாகப் பழகிவிட, வேலைக்குச் செல்லாமல் வீட்டிலிருப்பதுதான், சவிக்குக் கொஞ்சம் கஷ்டமாக இருந்தது.

மலைவாழ் மக்களின் பிள்ளைகளுக்கு பாடம் சொல் லித்தர நிரந்தரமாக ஒரு டீச்சரை சபரீஷ் தன் செலவில் ஏற்பாடு செய்துவிட்டான்.



சபரீஷுக்கு என்ன பிடிக்கும் என்பதைத் தெரிந்து வைத்துக் கொண்டு, சமையல்காரம்மாவுடன் சேர்ந்து சமைத்துக் கொடுத்து அவனுடைய பாராட்டைப் பெற ஆரம்பித்திருந்தாள் சவி.

அன்றும் அதுபோல் சமைத்துக் கொண்டிருந்தபோது, அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்தால், சபரீஷ் நின்றிருந்தான்.

வியப்புடன் ''என்ன சபரீஷ்... இந்த நேரத்திலே'' என்று கேட்டாள் அவள்.

''ம்... திடீர்னு பொண்டாட்டியப் பாக்கணும்னு ஒரே ஏக்கமா இருந்தது... அதான்...!''

குறும்புடன் கண் சிமிட்டியபடி அவன் கூறியபோது, சட்டென்று சவியின் இதயம் சிறு குட்டிக்கரணம் அடித்தது.

உடனே தலை குனிந்து கொண்டாள் அவள்.

''என்ன? சமையல் ரொம்ப வாசனையா இருக்கு..? இப்படில்லாம் செஞ்சு போட்டா அப்புறம் ஓவரா சாப் பிட்டு உசிலைமணி சைஸுக்கு வந்துடப் போறேன்...''

கிண்டல் செய்து கொண்டே உள்ளே வந்தவன், ''ஏன் சவி... தலைவலியா? டல்லா இருக்கே?'' அக்கறையுடன் விசாரித்தான்.

''ஊஹூம்... அதெல்லாம் இல்லை...'' என்று முணு முணுத்தவள்,

''உங்களுக்கு காபி போடவா?'' ஒரு கடமை மனைவி யாக விசாரித்தாள்.

''ம்... சரி... எடுத்துட்டு வா! இந்தப் பக்கம் ஒரு வேலையா வந்தேன்...

"அப்படியே ஒரு ஃபைலை எடுத்துட்டுப் போக வேண்டியிருந்தது... அதான்!" என்றபடியே உள்ளே சென்றான்.

அவள் முகத்தில் சுருண்டிருந்த முடிக் கற்றைகளும், புடவையை இழுத்துச் செருகியதால் வெண்மையாகத் தெரிந்த இடைப்பிரதேசமும், மெல்லிய தந்தங்களைப் போல் தெரிந்த கரங்களும், உதட்டுக்கு மேல் இயல்பாக அரும்பியிருந்த வியர்வைத் துளிகளும், அவனுக்குள் சிறு கிறக்கத்தை ஏற்படுத்த, மெலிதாக விசிலடித்தபடி சென்றான்.

பிறகு காபியுடன் அவள் ஹாலுக்கு வந்தபோது, நிஜமாகவே ஒரு ஃபைலில் ஆழ்ந்திருந்தவன், அவள் வருகையை உணர்ந்து நிமிர்ந்தான்.

"தேங்க் யூ" என்றபடி அதை வாங்கிப் பருக ஆரம்பித்தபோதும், அவன் விழிகள் அவள் மீதே பதிந்திருக்க, தர்ம சங்கடமாக உணர்ந்தாள் அவள்.

ஜன்னலருகே சென்று மலை முகட்டைப் பார்த்தபடி, "இப்படியே உக்காந்து என்னையே பார்த்திட்டிருந்தா... அப்புறம் பிசினஸ் அவ்வளவுதான்!" கேலியும் தவிப்புமாக வந்தது அவள் குரல்!

"ஏய்... போன வாரம்தான் கல்யாணமாகி இருக்கு... புதுசா கல்யாணமான கணவன், தன் மனைவிய சும்மா கூடப் பாக்கக்கூடாது அப்படின்னு ஏதாவது சட்டம் இருக்கா என்ன...ம்...?" குறும்புடன் கேட்டான்.

சட்டென்று, அவளுக்குள் புன்னகைப் பூவொன்று இதமாய் மலர்ந்தது.



அவளுடைய விழிகளின் பளிர்ச்சிடலிலிருந்தே அவளுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டவன், "இதுவே இந்நேரம் நாம ரெண்டு பேரும் எல்லாரையும் போல இயல்பான கணவன் மனைவியா இருந்திருந்தா, நான் சைட்டுக்கா போயிருப்பேன்...? ஊஹூம்... வீட்டை விட்டே கிளம்பியிருக்க மாட்டேன்" மெதுவாக முணுமுணுத்தான்.

"என்ன... இப்ப என்ன சொன்னீங்க?" புரியாதது போல் கேட்டாள் அவள்.

அவன் விழியோரங்கள் இடுங்கி குறுகுறுப்பில் கண்கள் பளபளத்தன.

"இல்லை... வேலை இல்லாம இருந்தா நான் வீட்டில தானே இருந்தாகணும்... அப்படி இருக்கிற பட்சத்துல நீ என்னை சில சமயங்கள்லே இருபத்து நாலு மணி நேரமும் சகிச்சாகணுமே... அத சொன்னேன்..." மழுப்பி விட்டுக் கிளம்பினான்.

அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலிலேயே அந்தப் பக்கம் வேலை விஷயமாக வந்தவன், அப்படியே வீட்டிற்கும் வந்ததை மறைத்து சைட்டுக்குச் சென்ற போதும், நினைவுகள் அவளையே சுற்றின..

தன் உலகமே அவளாய்... அந்த உலகைச் சுற்றும் சூரியனாய் அவன்!

* * *

அவனுடைய வார்த்தைகள் சவிக்குள் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியிருக்க, மனம் முழுவதும் அன்று சபரீஷே நிறைந்திருந்தான்.

அந்த நினைவுகளின் தாக்கத்தில், அவன் மதியம் சாப்பிட வந்தபோது கூட அவனை நேராகப் பார்க்கவே அவளால் முடியாது போயிற்று.

அவளிடம் தெரிந்த வித்தியாசத்தை கவனித்த சபரீஷ், அமைதியாகவே சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினான்.

காரில் ஏறுவதற்கு முன் மெல்லத் திரும்பி, ''என்ன கோபம் சவி... ரொம்ப அமைதியா இருக்கே... என் கிட்டப் பேசவே மாட்டேன்கிறே?'' மெதுவாகக் கேட்டான்.

உடனே தடுமாறியவள், ''ஒண்ணுமில்லையே... ஏதோ யோசனையா இருந்தேன்...'' சட்டென்று சமாளித்தாள்.

''ஏன் சவி...? ஆன்ட்டி ஞாபகமா? வேணும்னா, அவங்களை வி.ஆர்.எஸ். குடுத்துட்டு இங்கேயே வந்திடச் சொல்லலாமா?''

அவன் கனிவுடன் கேட்டபோது அவள் மனமும் விழிகளும் நிறைந்து போயின!

''வேண்டாம்... அவங்க வேலைக்குப் போறதுதான் நல்லது... அப்ப தான் ஏதாவது நினைச்சி மனசை குழப்பிக்காம இருப்பாங்க... அவங்களுக்கு ஒரு டைவர்ஷன் வேணுமில்லையா? ரிலாக்ஸ்டாவும் இருக்கும்!''

''ஓ... இப்ப புரியுது... இதுக்குத்தான் மனைவி புத்திசாலியா இருந்தா, ஆண்களுக்கு கஷ்டம்பாங்க போலிருக்கு...

* * *

''நானும் மனசைக் குழப்பிக்காம இருக்கணும்னா வேலைக்குப் போகணும்டா முட்டாள்னு பொட்டிலடிச்ச மாதிரி நேரிலேயே என்கிட்ட சொல்ல வேண்டியது



தானே? நாளையிலே இருந்து பொண்டாட்டியை வீட்டில் போட்டு வதைச்ச பாவம் எனக்கு வேணாம்... நீங்க ஆஃபீஸ் கிளம்புங்க மேடம்!'' கிண்டலாகக் கூறினான்.

''சபரீஷ்... நான் அந்த அர்த்தத்துல சொல்லலை...''

அவள் சிணுங்கலாக முனகியபோதும், அவன் ஒத்துக் கொள்ளவில்லை.

''இல்லை... ஒரு வாரம், எனக்கு சேவை செஞ்சு அலுத்துப் போச்சன்னு நினைக்கிறேன்... புருஷன்னா காலையில போயிட்டு சாயந்தரம் வந்தா பரவாயில்லை... நினைச்ச நேரத்துல வந்து தொல்லை குடுக்கறேனே... அதான்! ஓகே... நாளையிலிருந்து நீங்களும் வேலைக்கு கிளம்பலாம்...''

கிண்டலாகக் கூறிவிட்டு சட்டென்று காரை ஓட்டிச் சென்று விட்டான்.

இந்த ஒரு வாரமும், காலையில் எழுந்து இருவரும் தோட்டத்தில் அமர்ந்து காபி குடித்தபடி நாட்டு நடப்புகளை அலசுவதிலும்... பிறகு ஒன்றாக அமர்ந்து டிபன் சாப்பிடுவதிலும் ஒருவிதமான இதம் மனதில் படர ஆரம்பித்திருந்தது.

மதியம் சாப்பாட்டிற்கு இப்போதெல்லாம் அவன் வீட்டிற்கு வந்து விடுவதால் சமையல்காரம்மாவின் உதவியுடன், சபரீஷுக்கு பிடித்த மாதிரி சமைப்பதிலும்.. மாலை வேளையில் அவனோடு உலாவச் செல்லும் போது கிடைத்த இதமான தனிமையிலும் இனிமையை சுமக்க ஆரம்பித்திருந்தது இதயம்!

ஆனால் வேலைக்குச் செல்ல ஆரம்பித்து விட்டால், இவையெல்லாம் தொலைந்து விடுமோ என்ற சிறு பயம் கூடக் கிளர்ந்தது.

இரவு வெகு நேரம் கழித்தே உறங்கினாள் அவள்.

## 31

மறுநாளே, இருவருமாகக் கிளம்பி வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

ஆனால், காலை நேர இயல்பு வாழ்க்கை அதனால் பாதிக்கப்படுவதற்கு சபரீஷ் விடவில்லை.

அன்று காலையில், அவளை மெதுவாக உசுப்பி எழுப்பினான்.

"ஹாய் பொண்டாட்டி... குட்மார்னிங்... என்ன எழுந்திருக்கலையா? சரியான கும்பகர்ணியா இருப்பே போலருக்கு... இன்னிக்கு சமையல்காரம்மா லீவ்... நானே எழுந்து டிகாக்ஷன் போட்டு பால் காய்ச்சி எல்லாம் ரெடி பண்ணிட்டேன்... மகாராணி எழுந்து வந்து ப்ரஷ் பண்ணிட்டா, ரெண்டு பேருமா சேர்ந்து காபி குடிக்கலாம்..." சிறு முறுவலுடன் கூறினான்.

சட்டென்று ஒரு வித விதிர்ப்புடன் எழுந்தவளுக்குள், இத்தனை நேரம் தூங்கிவிட்டோமே என்ற கூச்சம் விரவிப் பரவியது.



"சாரி... ஒரு நிமிஷம்... இதோ வந்திடறேன்..." என்ற படி குளியலறைக்கு ஓடினாள்.

பிறகு, வேகமாக பல் துலக்கிவிட்டு விட்டு வரும் போது தோட்டத்தில் காபி ட்ரேயுடன் காத்திருந்தான் சபரீஷ்!

ஃப்ளாஸ்க்கிலிருந்து பாலையும் டிகாக்ஷனையும் கலந்து சர்க்கரை சேர்த்து அவனிடம் நீட்டியபோது, "மின்னல் வேகம்தான்... இல்லை?" கேலியாகக் கேட்ட படி வாங்கிக் கொண்டான்.

பிறகு டிபன் சாப்பிட்டு விட்டு இருவரும் கிளம்பிச் செல்ல, காரை ஓட்டும்போது அடிக்கடி அவன் அவளைத் திரும்பிப் பார்ப்பதை, கண்ணோரப் பார்வையில் உணர்ந் தாள் சவி.

"சபரீஷ்... ரோட்டைப் பாத்து காரை ஓட்டுங்க... என்னையே பாத்துட்டிருந்தா அவ்வளவுதான்... வழியில எவ்வளவு வளைவுகள் வருது... எனக்கு பயமா இருக்கு...!" செல்லமாகச் சிணுங்கினாள்.

"எனக்குக் கூட பயமாதான் இருக்கு...! அந்த வளைவு களை எல்லாம் கூடச் சமாளிச்சிடலாம் போலிருக்கு... ஹூம்... சில வளைவுகள் தான் மூச்சுத் திணற வைக்குது..." மென் குரலில் முணுமுணுத்தான்.

அவன் கூறியது காதில் விழாதது போல் சட்டென்று திரும்பிக் கொண்டாள் அவள்...

இதயம் பறக்க மறந்த பட்டாம் பூச்சியாய் தடதடத்தது.

அவளை ஹோட்டலில் இறக்கி விட்டவன், 'பை சவி... ஈவினிங் வந்து பிக் அப் பண்ணிக்கறேன்...'' கூறிவிட்டுக் கிளம்பினான்.

''அப்போ... லஞ்ச்...?'' அவள் கேள்வியாய் நோக்கினாள்.

''ம்... எனக்கு இன்னிக்கு வெளியே... உனக்கு இங்கே தான்! ஏய்... என்ன உன் மெனுவைச் சாப்பிட உனக்கே பயமா?'' குறுகுறுத்த பார்வையுடன் கேட்டான்.

''சபரீஷ்...!''

ஒற்றை விரலில் எச்சரித்து விட்டு, அவள் சட் டென்று திரும்பி உள்ளே செல்ல, அவனுக்குள் மகிழ்ச்சி யும் இனிமையும் இதமாய்க் கை கோர்த்தன.

அவள் தன் பெயரை உச்சரித்தபோது, முத்தமிட்டு மீண்ட இரு இதழ்கள் அவனைக் கிளர்ச்சியுறச் செய்தன.

ஏனோ அந்த நிமிடமே, அவள் கூடிய சீக்கிரம் மாறி விடுவாள் என்று தோன்ற, மெலிதாக விசிலடித்தபடி காரை எடுத்தான் அவன்.

* * *

வாழ்க்கை இயல்பாகச் செல்ல, தினமும் காலையில் அவனுடன் காபி சாப்பிட்டபடி மனதிலுள்ளவற்றை பகிர்ந்து கொள்வதையும், மாலையில் மெதுவாக வாக்கிங் சென்றபடி அன்றைய நடப்புகளைப் பற்றி அலசி, ஒருவர் மற்றவரிடம் கருத்துக் கேட்பதிலும் செல்லும் நேரத்தையும் இப்போதெல்லாம் ஆவலுடன் எதிர்பார்க்க ஆரம்பித்திருந்தாள் சைந்தவி!



ஏதோ, அந்த இனிமையான தருணங்களுக்காகவே மனம் ஏங்கித் தவமிருக்கும்! ஞாயிறுகளில் இருவருமாகச் சேர்ந்து ஊர் சுற்றிப் பார்க்க கிளம்பி விடுவார்கள்.

இப்போதெல்லாம் அவனுடைய அருகாமையே, அவளுக்குள் பெரும் பலம் தருவதாய்!

தினமும் ஊரிலிருந்து யாராவது பேசி விடுவார்கள், கேதரினும் காஞ்சனாவும், ஞாயிற்றுக் கிழமைகளில் பேசுவார்கள்.

மனம் பழைய நினைவுகளை மறந்து மெதுவாகத் தேறி அந்தக் கனவுகளை வர விடாமல் செய்திருந்தது.

ஒரு நாள் அதிகாலையில் உறக்கம் கலைந்து புரளும் போதே, யார் மீதோ இடித்துக் கொண்டவள், பதட்டத் துடன் எழுந்து அமர்ந்தாள்.

நிமிர்ந்து பார்த்தால் அங்கு இதழ்களில் கசிந்த முறு வலுடன், கட்டிலின் விளிம்பில் அமர்ந்திருந்தான் சபரீஷ்.

சட்டென்று சுடுகின்ற மழைச்சாரல் வேகமாக வந்து முகத்தில் மோதியதைப் போல் திகைத்து விழித்தவள் ''சபரீஷ்... என்ன விஷயம்?'' திக்கித் திணறியபடி வினவி னாள்.

''ஹேப்பி பர்த்டே கண்ணம்மா!... மெனி மோர் ஹேப்பி ரிடர்ன்ஸ்'' மென்மையாகக் கூறியவன், ஒரு சிறு அட்டைப் பெட்டியை அவளிடம் அளித்தான்.

அப்போதுதான், தன் பிறந்த நாளே அவளுக்கு நினைவு வர, ''ஓ... தேங்க்யூ சபரீஷ்... ஒரு நிமிஷம்! நான் குளிச் சிட்டு வந்திடறேன்...'' என்றபடி எழுந்து ஓடினாள்.

அவனைத் தவறாக நினைத்து விட்டதினால் எழுந்த கழிவிரக்கமும், அவனுக்கு முன்னால் மெல்லிய நைட்டி யுடன் நின்றிருந்த கூச்சமும் அவளை ஆட்படுத்த, வேகமாகக் குளித்து விட்டு வெளியே வந்தாள்.

உடை மாற்றிவிட்டு அந்த அட்டைப் பெட்டியைத் திறக்கும்போதே, ஏதாவது நகை பரிசளித்திருப்பானோ என்ற யோசனை!

ஆனால் உள்ளே ஒரு சாவிக் கொத்து இருக்க, யோசனை யுடன் வெளியே வந்தபோது, "ஒரு நிமிஷம் வெளியே வர முடியுமா பார்த்டே பேபி.." இடைவரை குனிந்து மேலை நாட்டில் அழைப்பதைப் போல் அவளை வாசலுக்கு கூட்டிச் சென்றான்.

வெளியே சிவப்பு ரிப்பன் சுற்றப்பட்டு அழகான சான்ட்ரோ கார் ஒன்று நின்றிருந்தது.

"பிடிச்சிருக்கா சவி?"

ஆழ்ந்த குரலில் அவன் கேட்க, அவள் மனம் சட் டென்று நிறைந்து போனது.

தனக்காக இவன் எவ்வளவு யோசித்து பார்த்துப் பார்த்து செய்கிறான்...

தன்னால் பதிலுக்கு எதுவுமே செய்ய முடியவில்லையே என்ற குற்றவுணர்வு பலமாய் ஆட்படுத்த, தவிப்புடன் நின்றிருந்தாள் சவி.

"எய்... என்ன பிடிக்கலையா? ஒண்ணுமே சொல்ல மாட்டேங்கிறே?"



ஆர்வத்துடன் கேட்டவனிடம், மெதுவாகத் திரும் பினாள்.

"தேங்க் யூ" என்றபடி, அவன் கையை எடுத்து மென்மையாக முத்தமிட்டாள்.

அவளுடைய அந்த செய்கை ஆயிரம் உணர்வுகளை வெளிப்படுத்தின.

"வெல்கம்... இப்படித் தெரிஞ்சிருந்தா இதவிடப் பெரிசா ஏதாவது ப்ரசண்ட் பண்ணி கன்னத்துலயே வாங்கியிருந் திருப்பேன்.. ம்... நம்ம அதிர்ஷ்டம் இவ்வளவுதான்...!" என்றான் சபரீஷ் முணுமுணுப்பான குரலில்.

அவன் கூறியது ஸ்பஷ்டமாக காதில் விழுந்துவிட, "அப்போ பஸ் தான் வாங்கித் தரணும்..." சுழித்த உதடு களுடன் அவள் கேலியாகக் கூறினாள்.

"நீ மட்டும் ஓகே சொல்லு... ப்ளேனே வாங்கித் தரேன்" ஒற்றைக் கண் சிமிட்டிக் கேட்டான் அவன்.

முகம் சிவக்க "ஊஹூம்... ஆசையைப் பாருங்க..." கூறிவிட்டு வேகமாக உள்ளே ஓடி விட்டாள் சைந்தவி.

எவ்வளவுதான் அதட்டினாலும் காலைச் சுற்றி சுற்றி வருகின்ற பூனைக்குட்டியாய்... அவனையே சுற்றியது அவள் இதயம்!

பிடிவாதமாய் மனம் பேசியது... 'நான் அவரை நேசிக் கிறேன்... நெஞ்சம் நிறைய... உணர்வுகள் உருக... ஒரு நொடி கூட மறக்க முடியாமல்... எந்த ஒரு விஷயத்துக் காகவும் விட்டுக்கொடுக்க முடியாமல்... உயிராய் நேசிக் கிறேன்...

'இது... ரெண்டு பேர் மனச மட்டுமே உணர்ற உன்னதமான நேசம்... காமம் இல்லாத, காதல் மட்டுமே நிறைந்த மெல்லிய ஆனால் வலுவான ஒரு பிணைப்பு!'

உள்ளுக்குள், லட்சம் பூக்கள் நேசமணத்துடன் மலர்ந்தன.

ஓராயிரம் உணர்வுகள், மவுனமாய் பிரவகித்து அவளை மென் சிலிர்ப்புடன் நனைத்தன.

மெல்லிய நடுக்கம் கலந்த சிலிர்ப்புடன், ஜன்னல் வழியே சாரலாய் பரவிய மழையையும், அது மென்மையாய் அரவணைத்துக் குளிப்பாட்டித் தலைகோதிய மலர்களையும் ரசித்தபடி அன்று வெகு நேரம் நின்றிருந்தாள் சவி.

## 32

மறுவாரமே, அவளைத் தன்னுடைய கன்ஸ்ரட்க்ஷன் ஆஃபீஸிற்கு அழைத்துச் சென்றான் அவன்.

எதற்கு என்று கேட்காமலே உடன் சென்றவள், அவன் நிறைய டாக்குமென்ட்களில் கையெழுத்து வாங்கவும், குழப்பத்துடன் நிமிர்ந்தாள்.

அவளுடைய முக மாற்றத்தை கவனித்தவன், ''உன்கிட்ட இருக்கிற சொத்தை எல்லாம் மிரட்டி எழுதி வாங்கிட்டிருக்கேன்..'' சிரிக்காமல் ஜோக்கடித்தான்.



''ஓகே! எடுத்துக்கங்க...''

அவள் இயல்பாகக் கூற, ''இதே மாதிரி எல்லாத்துக்கும் ஓகே சொன்னா நல்லாத்தான் இருக்கும்'' மெதுவாக அவன் தனக்குள் கூற, வேகமாக நிமிர்ந்தாள் அவள்.

அவன் கூறியது காதில் விழவில்லையென்றாலும், ஏதோ கிண்டல் செய்கிறான் என்பது மட்டும் புரிந்தது.

'உடனே பேச்சை மாற்றியவன் ''சவி... பயப்படாதே... நம்ம கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியில் உன்னையும் பார்ட்னராக்கி இருக்கேன்... இதுவரைக்கும் நானும் துரையும் தான் இருந்தோம்... இப்போ நீயும் இதிலே ஒரு பார்ட்னர்!'' சிறு முறுவலுடன் பகர்ந்தான்.

அந்தக் கணமே 'என்ன தவம் செய்தனை' என்று பாட வேண்டும் போல்!

சட்டென்று பனித்த விழிகளுடன், ''தேங்க் யூ சபரீஷ்..'' என்றாள் சவி.

''இதுக்கு எதுக்கு தேங்க்ஸ் சவி... நீ வேற நான் வேறன்னு நான் எப்பவுமே நினைக்கிறதில்லை...ரெண்டு பேரும் ஒண்ணுதானே?''

சட்டென்று அவள் இதயத்திற்குள் ஒரு மென் சிலிர்ப்பு!

அவனுடைய ஒவ்வொரு செய்கையும் தன்னைப் பெரும் கடன்காரியாக ஆக்குவதும் பதிலாக அவனுக்கென்று எதையுமே செய்யாததும், அவளை மூச்சு முட்டச் செய்வதாய்...!

அதே யோசனையுடன் அன்றிரவு பால்கனியில் அமர்ந்து வானத்தை வெறித்தபோது, வான முகத்தில் பருக்களாய் நட்சத்திரங்கள் சிதறித் தெரிந்தன.

மனதை ஏதோ ஒரு சூன்யம் வியாபிக்க, தன்னால் சபரீஷுக்கு எந்த சுகத்தையும் தர முடியவில்லையே என்ற குற்றவுணர்வு ஆக்ரமித்தது.

* * *

அன்றே ஒரு முடிவுடன் உறங்கச் சென்றவள், மறுநாள் அந்த ஊரிலிருக்கும் நல்ல மனநல மருத்துவரை நாடிச் சென்று, அவரிடம் அப்பாயின்ட்மென்ட் வாங்கிச் சந்தித்தாள்.

தீர்க்க முடியாத பிரச்சினை என்பதே இல்லை என்றார் அவர்.

அவரிடம் மனம் விட்டு பேசியபோது, மனதின் பாரமும் உள்ளே ஒளிந்திருந்த சுமைகளும் பெரிதும் குறைந்தன.

தொடர்ந்து ஒரு மாதம் வரும்படி கூறியவரிடம் கௌன்சிலிங்கிற்குச் செல்லச் செல்ல அவளிடம் பெரும் மாற்றம் வர ஆரம்பித்தது.

தாம்பத்ய உறவு என்பது கொடூரமான விஷயம் என்பது மனதிலிருந்து விலகி, உண்பது உடுத்துவதைப் போல் அதுவும் இயல்பான ஒன்றுதான் என்பதை உணர ஆரம்பித்தது மனது.

அன்றும், ஹோட்டலுக்கு அவளை அழைத்துச் செல்ல சபரீஷ் வந்திருந்தான்.

அவள் கிளம்பி விட்டதை அறிந்து வீட்டிற்கு வரவில்லை என்றதுமே பரிதவித்துப் போன மனதை அடக்கியவன், உள்ளே சென்று கேட்டான்.

சமையல்காரம்மா தினமும் அவள் தாமதமாகத்தான் வருவதாகக் கூறினார்.



இந்தப் பத்து நாட்களாக ஹோட்டலின் முன்னேற்றத்திற்கான பல விஷயங்களை தினமும் அவளுடன் கலந்தாலோசிப்பது வழக்கமாகி இருந்ததால் அவளுக்காகக் காத்திருந்தான்.

வாசலில் கார் சத்தம் கேட்டதும் எழுந்து வெளியே வந்தபோது, காரிலிருந்து இறங்கிய சவி ஓய்ந்து தெரிந்தாள்.

அவள் முகம் வாடியிருப்பதைக் கண்டதும், என்னவென்று கேட்காமலே அவளுக்கு காபி எடுத்து வரும்படி சமையல்காரம்மாவிடம் கூறினான்.

அவள் பருகி முடித்ததும், "சவி... நம்ம ஹோட்டலை விரிவுபடுத்தற விஷயமா நான் சென்னைக்கு ஒரு வாரம் போக வேண்டியிருக்கு... நீ இங்கே தனியா மேனேஜ் பண்ணிப்பியா?" மெதுவாகக் கேட்டான்.

ஏதோ யோசனையுடன் 'ம்' என்றவளை இடைமறித்தான்.

"இல்லைன்னா நீயும் சென்னைக்கு வரியா? ஆன்ட்டியப் பாக்கணும் போல இருந்தா சொல்லு... இங்கே துரையும், செல்வாவும் பாத்துப்பாங்க... நாம போயிட்டு வரலாம்..." என்றான்.

"இல்லை... இப்ப என்னால கிளம்ப முடியாது... வேலை இருக்கு... அடுத்த மாசம் பார்த்துக்கலாம்..." என்று கூறிவிட்டு எழும்போதே, ஒரு வாரம் சபரீஷைப் பிரிந்திருக்க வேண்டுமே என்று மனம் ஏங்கித் தவிக்க ஆரம்பித்தது.

சைக்யாட்ரிஸ்ட்டிடம் கௌன்சிலிங் இல்லையென்றால், அவனுடன் போய் வரலாமென்று தோன்ற, தன்

மனதை செப்பனிட்டுத் தரும் அந்த சிகிச்சைதான் முக்கியமென்று எண்ணி மனதை அடக்கிக் கொண்டாள்.

எப்போதும் போலில்லாமல் சற்று சோர்வுடன் தெரிய வளையே அவன் யோசனையுடன் நோக்கினான்.

"சவி! துரை வீட்டுக்குப் போய் இனியாவைப் பாத்துட்டு வரலாமா? உனக்கு ஒரு சேஞ்சா இருக்கும்" ஆவலுடன் கேட்டான்.

உடனே முகம் பளிச்சிட, 'ம்... போலாம்..!' என்றவளைக் கிளப்பி அழைத்துச் சென்றான்.

செல்லும் வழியிலேயே, "நேத்து கூட நீ லேட்டா வந்ததா அன்னம்மா சொன்னாங்க... ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே சவி...வேணும்னா இன்னொரு செஃப்பை ரெக்ருட் பண்ணிடலாம்..." என்றான் சபரீஷ் மெதுவாக.

"இல்லை... நான்... சைக்யாட்ரிஸ்ட்டைப் பாக்கப் போயிருந்தேன்..."

சட்டென்று அவன் பிரேக் அடித்ததில், கார் 'கிறீச்' என்ற சப்தத்துடன் நின்றது.

"ஏன் சவி...? என்னாச்சு.." அவன் பதறிப் போய்க் கேட்டான்.

"ஒன்னுமில்லை சபரீஷ்... என் மனசுல இருக்கிற ரணங்கள், தேவையில்லாத சஞ்சலங்கள், குழப்பங்கள் எல்லாத்தையும் தெளிய வச்சுக்கறதுக்காகத்தான் அங்கே போனேன்... கவுன்சிலிங் முடியப் போகுது... இன்னும் ரெண்டு நாள் தான் இருக்கு..." சிறு முறுவலுடன் கூறினான்.



தனக்காக அவள் படும் கஷ்டங்களும்... அனுபவிக்கின்ற சோதனைகளும் புரிய, மனம் லேசானாலும், யோசனையுடன் காரை எடுத்தான் அவன்.

அங்கு சென்றதும் அந்தக் குழந்தையுடன் விளையாடியதில் மனம் சிறிது தெளிய ஆரம்பித்தது.

சபரீஷ், அவளைப்பிரிய மனமின்றி மடியில் சுமந்து கொஞ்சிக் கொண்டிருந்தான்.

வாழ்க்கையில் இது போன்ற ஒரு மழலை தனக்கு பரிசாகக் கிடைக்குமாவென்ற ஏக்கமும் வேதனையும் சவியை அரிக்க ஆரம்பித்தன.

துரையிடம் பேசியபடியே திரும்பியவனின் மனதில் அவளுடைய ஏக்கப் பார்வை அழுத்தமாய் பரிந்து விட, அவனுக்கும் பெரும் சஞ்சலமாய்...!

மனம் பல கேள்விகளை சரம் கோர்ப்பதாய்!

பிறகு, அவர்கள் டிபன் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பும் போதுதான், அடி வயிற்றைப் பிடித்தபடி "அம்மா..." என்ற முனகலுடன் சரிய ஆரம்பித்தாள் சவி!

அருகிலிருந்ததால், அவளை உடனே தாங்கிய சபரீஷ் பதறி விட்டான்!

"என்னாச்சு சவி! என்ன பண்ணுது...?"

பதைப்புடன் அவன் கேட்க, உடனே வெளியில் ஓடி காரை ஸ்டார்ட் செய்து காத்திருந்தான் துரை.

இருவரும் அவளை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குக் கிளம்ப, அவ்வளவு நேரம் இனிமையாகக்

கழிந்த பொழுது இப்படியாகி விட்டதே என்று எண்
ணியபடி கவலையுடன் நின்றிருந்தார் துரையின் வீட்டு
சமையல்காரம்மாள்!

புயலின் வேகத்துடன் கார் விரைந்தது.

நேரே மருத்துவமனைக்குச் சென்றவுடன் துடித்துக்
கொண்டிருந்த சவியை இரு கைகளிலும் ஒரு குழந்
தையைப் போல் அள்ளித் தூக்கியவன், டாக்டரிடம்
ஓடினான்.

படுக்கையில் அவளைக் கிடத்தியபோது, அவனறி
யாமலே இரு விழிகளும் கசிந்தன.

உடனே அவளைப் பரிசோதித்த டாக்டர், 'அப்பெண்டி
சிடிஸ் இன்ஃபெக்ட் ஆகி பர்ஸ்ட் ஆகிற நிலைமையில்
இருக்கு... இவ்வளவு லேட்டாக் கொண்டு வந்திருக்
கீங்க... உடனே சர்ஜரி பண்ணியாகணும்...'' என்றபடி
அவசரமாகத் தியேட்டரை தயார் செய்யும்படிக் கூறினார்.

சபரீஷ் தான் உடைந்து போனான்.

சவிக்கு எதும் ஆகிவிடக் கூடாது... அவள் நன்றாகி
விடவேண்டும் என்று மனம் உருகி இறைவனிடம் மன்
றாடியது.

தனக்கு மனைவி என்று அவள் துணையாக இருந்தால்
மட்டும் போதும் என்று, இதயம் கதறலுடன் கண்ணீர்
வடித்தது.

அருகிலிருந்து அவனைத் தேற்றிய துரை, உடனே
மல்லிகாவிற்கு ஃபோன் செய்தான்.

அவர் உடனே கிளம்பி வருவதாகக் கூற, சபரீஷைத்
தேற்றுவதற்குள் பெரும்பாடுபட்டான் துரை.



''ஒண்ணுமில்லைடா! அப்பெண்டிசிடிஸ் தானே?
ஆபரேஷன் பண்ணினா சரியாயிடும்... இதுக்குப் போய்
ஏன் இவ்வளவு உடைஞ்சி போயிட்டே? எவ்வளவு
தைரியமா இருப்பே... எல்லோருக்கும் சொல்லுவே!
சவிக்கு ஒண்ணும் ஆகாது! நல்லாயிடுவாங்க.''

அவனுடைய கையைப் பிடித்து அழுத்தி ஆறுதல்
கூறினான்.

கலங்கிய விழிகளுடன் இறுகி உறைந்து போய் அமர்ந்
திருந்தவன், மெதுவாக நிமிர்ந்தான்.

''துரை... அவளுக்கு ஏதாவது ஆயிடுச்சின்னா அப்
புறம் நானும் இருக்க மாட்டேன்... கன்ஸ்டரக்ஷன்
யூனிட்டை நீயும், ஹோட்டலை செல்வாவும் பாத்துக்
கங்க... அப்பாவை ஒரு பார்ட்னராக்கிடுங்க... போதும்!''
கம்மிய குரலில் கூறினான்.

பயத்துடனும் தவிப்புடனும் அவனை அணைத்துக்
கொண்ட துரை. ''சபரீஷ்... என்ன பேச்சு பேசறே? நீயா
இப்படி எல்லாம் பேசறதுன்னு ஆச்சர்யமா இருக்கு... ராது
இறந்தப்போ எனக்கு எவ்வளவு தைரியம் சொன்னே?
ஏன்டா இப்படி? சவிக்கு ஒண்ணும் ஆகாது'' ஆறுதலாகக்
கூறினான்.

''ஹூம்... மத்தவங்களுக்கு சொல்றப்ப சுலபமா
இருக்கற எல்லா விஷயமுமே தனக்குன்னு வரப்பதான்
எவ்வளவு கஷ்டம்கிறது புரியுது... சாரிடா துரை... என்
னால முடியலை''

கசங்கிய முகத்துடன் கூறியவனை விட்டு துரை
நொடியும் விலகவில்லை.

விஷயத்தை கேள்விப்பட்டு செல்வாவும் பிரபாகரும் மருத்துவமனைக்கு விரைந்து வந்து துணையிருந்தனர்.

ஒரு மணி நேரம் கழித்து ஆபரேஷன் நல்லபடியாக முடிந்ததாக வந்து கூறினார் ஒரு நர்ஸ்.

அதுவரை, சபரீஷின் உயிர் அவனிடம் இல்லை... சவியையே சுற்றி வந்து கொண்டிருந்தது...

தவிப்புடன் அவளை நாடித் தவமிருந்தது.

அப்போது வெளியே வந்த டாக்டர். "மிஸ்டர் சபரீஷ்... உங்க ஒய்ஃப் இப்ப நல்லாருக்காங்க... இன்னும் ஒரு மணி நேரத்துல மயக்கம் தெளிஞ்சுடும்... அப்புறம் போய்ப் பார்க்கலாம்..." என்றபடி சென்றார்.

அவருக்கு நன்றி கூறிவிட்டு ஓய்ந்து போய் கண்களை இறுக மூடி அமர்ந்தவனைக் கண்டபோது, அக்னிப்பாறையாய், கம்பீரத்துடன் எதையும் தாங்கும் இதயத்துடன் இருந்தவனை, காதல் அக்னித் தூசாய் உடைத்திருப்பது அனைவருக்குமே புரிந்தது.

## 33

பிறகு வந்த ஒரு மணி நேரமும் ஒரு யுகமாகத் தெரிய, சவி கண் விழித்தவுடன் அவனை அழைத்தாள் ஒரு நர்ஸ்.

சபரீஷ் பதட்டத்துடன் வேகமாக உள்ளே சென்றபோது, படுக்கையில் சவி சோர்வுடன் கண் மூடிப் படுத்திருந்தாள்.



அருகில் சென்றதும், "சவி...!" மென்மையாக அழைத்தான் அவன்.

மெதுவாகப் பிரிந்த இமைகள், விழிகளுக்கு வழிவிட சிறு கீற்றாய் புன்னகை வந்தது அவளிடம்.

தனை நீங்கிப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது. சபரீஷுக்கு!

"என்ன பயந்துட்டீங்களா?"

கையை உயர்த்தி பலவீனமாக அவள் கேட்டவுடனே அந்தக் கையைப் பிடித்து தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டவன், "ம்... ரொம்ப" என்றான் தவிப்புடன்!

"கொஞ்ச நாளாவே அடிக்கடி வயித்து வலி இருந்தது... சாதாரணமா நினைச்சி விட்டுட்டேன்..." சோர்வுடன் கூறினாள்.

"இனிமே ஒரு சின்ன வலியா இருந்தாலும் சொல்லிடணும்... என்ன?"

சிறு குழந்தைக்கு சொல்பவனைப் போல் கூறியவனையே பரிவுடன் நோக்கினாள் அவள்.

அவள் கன்னத்தை அவன் மென்மையாக வருடும் போதே, உள்ளே வந்த துரையும் செல்வாவும் அவளிடம் கனிவுடன் நலம் விசாரித்தனர்.

மறுநாளே மல்லிகாவும் வந்துவிட, லேப்ராஸ்கோபிக் முறையில் ஆபரேஷன் செய்ததால் மூன்றாம் நாளே வீட்டிற்கு வந்து விட்டாள் சைந்தவி.

தானும் விடுப்பு எடுத்துக்கொண்டு அவளைப் பூவாய்த் தாங்கினான் சபரீஷ்!

தன் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் நடுவே இழை யோடிய அன்யோன்யத்தைக் கண்டபோது, அவர் மனம் நிறைந்து போனது.

பத்து நாட்கள் இருந்தவருக்கு ஊரில் செமஸ்டர் தேர்வு கள் வந்துவிட அவர் கிளம்பும் நாளும் வந்தது.

இப்போது சவி நார்மலாகி இருந்தாள்.

மல்லிகா வந்தவுடனேயே சபரீஷிடம் பேசினார்.

''மாப்பிள்ளை... நான் திரும்ப ஊருக்குப் போகும் போது சவியை என்னோட அழைச்சிட்டுப் போகவா?'' என்று கேட்டபோது சவி மறுத்து விட்டாள்.

''வேண்டாம்மா... நான் இங்கேயே இருக்கேன்!.. இவர் என்னைப் பாத்துப்பாரு...''

அவள் தீர்மானமாகக் கூறியபோது அவனுக்குள் பெரும் சிலிர்ப்புடன் மகிழ்ச்சிப் பூக்கள் மின்னலிட்டன.

மல்லிகா கிளம்பிச் சென்ற பிறகு, அன்று முழுவதும் அவள் அருகிலேயே இருந்தவன், கண்ணின் மணியைப் போல் அவளைக் கவனித்துக் கொண்டான்.

நிமிஷத்துக்கொரு தரம் ''என்ன வேணும் கண் ணம்மா?'' என்று கேட்டபடி அவளையே சுற்றி வந்த வனைப் பிரிய முடியாமல் மனம் தவிக்க, மல்லிகா சென்ற அன்றே அவனிடம் கேட்டு விட்டாள் சவி.

அன்று இரவு இடியாப்பத்தை பாலில் நனைத்து சாப் பிட்டு முடித்தவுடன், அன்னம்மா அந்த இடத்தை சுத்தம் செய்துவிட்டுப் புறப்பட்டார்.



''சவி! உனக்கு துணைக்கு வேணும்னா அவங்களைக் கூட படுத்துக்கச் சொல்லவா?'' மெதுவாகக் கேட்டான் அவன்.

''வேண்டாம் சபரீஷ்...'' என்றவளிடம், ''தனியா எப்படி? இத்தனை நாள் ஆன்ட்டி இருந்தாங்க... ஏதாவது ஹெல்ப் வேணும்னா?'' எனும்போதே அவனை இடை மறித்தாள்.

''ஏன்... நீங்க என் கூட துணையாகப் படுத்துக்க மாட் டீங்களா?''

அவள் கேட்டபோது அவனிடமிருந்து ஒரு சீறலான மூச்சு வெளிப்பட்டது.

''உனக்கு ஒண்ணும் ப்ராப்ளம் இல்லைன்னா எனக்கு ஓகே!'' என்றான் ஆழ்ந்த குரலில்!

''ஹூம்... எனக்கு என்ன ப்ராப்ளம்...? நீங்க இங்கே படுத்துக்கிட்டா எனக்கும் கொஞ்சம் தெம்பா இருக்கும்.''

அவள் இயல்பான குரலில் கூற, சபரீஷின் மனதிற்குள் பெரும் இதமும் மகிழ்ச்சியும் வந்தன.

பிறகு இருவரும் சிறிது நேரம் டி.வி. பார்த்தபடி அமர்ந் திருந்தனர்.

அந்த நிகழ்ச்சித் தொகுப்பாளினியின் அங்க அசைவு களையும், விரல்களின் சேட்டைகளையும் அதே பாவனை யில் இயல்பாக அவன் கிண்டல் செய்தபோது, அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது சவிக்கு!

சிரித்து முடித்து நிமிர்ந்தவள், ''சபரீஷ்... உங்களை என்ன பண்றது? சரியான வாலுப் பையன் நீங்க...!'' சலுகையுடன் அலுத்துக் கொண்டாள்.

அவனிடமிருந்து உடனே பதில் வந்தது.

''ம்.. என்னை என்ன செய்யறதுன்னா கேக்கறே? அப்படியே இறுக்கி கட்டிக்கோ... அப்புறம் ஒரு சின்ன முத்தம்! அது போதும்!''

குறும்புடன் கண் சிமிட்டியபடி கூறினான்.

சட்டென்று வெட்கம் கலந்த பதட்டத்துடன் அவள் தலை குனிய, ''ஏய்... ஜஸ்ட் ஃபார் ஃபன்'' என்று அவன் கூறினாலும், அவள் இதயம் சட்டென்று புலம் பெயர்ந்தது.

* * *

மறுநாள் இரவு கம்பளியை எடுத்துத் தரையில் விரிக்கப் போனவனைத் தடுத்தவள், ''ஏன் சபரீஷ்.. கீழே படுத்துக்கணும்? பெட் தான் பெரிசா இருக்கே? இதிலேயே படுத்துக்கங்க... நான் ஓரமாத்தானே படுத்திருக்கேன்'' என்றாள் பரிவுடன்.

சிறு யோசனையுடன் சரியென்று படுத்தவனுக்கு, வெகு நேரம் தூக்கமே வரவில்லை.

பூச்செண்டாய் அவள் அருகில் படுத்திருக்க, அந்த அனுபவமும் புது மணமும் அவனைப் பேதலிக்கச் செய்வதாய்...

அவளுடைய அருகாமை தந்த சுகமும் இதமும் அவனை உறங்க விடாமல் தடை செய்தன.

முழுவதும் நிரப்பப்படாத புதிர்ப் போட்டியைப் போல், ஒவ்வொருவருக்குள்ளும் முதல் காதல் புதைந்திருக்குமென்ற உண்மை தெரிந்தது.



இப்போது, சவியின் மனதில் ஏதோ ஒரு மாற்றம் வந்திருப்பது புரிய, எழுந்து சென்று பால்கனியில் நின்று யோசித்தபோது, அவனைப் போலவே விழித்திருக்கும் இரவுக்கு சாட்சியாய், நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது.

அவன் மனதிலும் சிறு மின்னல் ஒன்று எட்டிப் பார்க்க, இப்போதெல்லாம் இருபத்து நாலு மணி நேரமும்... உறங்கும் நேரம் கூட, அவளுடைய நினைவுகளே அவனை ஆளுமை செய்தன.

கனவுக்குள்ளும் காதலை விதைத்திருந்தது... உறக்கம்!

''சபரீஷ்... தூங்கலை?''

மென்மையான அழைப்பு அவனைத் திரும்பச் செய்ய, அங்கு வெண்ணிற இரவு உடையில் ஒரு தேவதை போல் நின்றிருந்தாள் சவி.

தன்னையறியாமலேயே ரேஸ் குதிரையாய் தடதடத்த மனதை அடக்கியவன், ''ம்.. நீ ஏன் பனியில வெளியே வந்தே சவி... உள்ளே போகலாம் வா...'' என்றபடி வேகமாக உள்ளே திரும்பினான்.

அவன் கையைப் பிடித்துத் தடுத்தவள், ''நான் உங்களை ரொம்பக் கஷ்டப்படுத்தறேனா சபரீஷ்...? நீங்க வேணும்னா... இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிறீங்களா? நான் முழு மனசோட சம்மதிக்கிறேன்... என்னால தானே உங்களுக்கு ரொம்ப...'' எப்படிச் சொல்வதென்று புரியாமல் தடுமாறியவளின் உதடுகளை, மெல்ல ஒரு விரலால் மூடினான்.

''உஷ்...! ரொம்ப ஏமாற்றமா இருக்கு சவி!'' அடிபட்ட வலி தெரிந்தது அவன் குரலில்!

"ஏமாற்றமா... ஏன் சபரீஷ்?"

"கண்ணம்மா! செக்ஸ் மட்டும்தான் வாழ்க்கைன்னு நினைச்சிருந்தா, நான் உன்னைக் கல்யாணம் செஞ்சுட்டிருந்திருக்க மாட்டேன்... அதுக்கும் மேல நேசம்னு ஒன்னு இருக்கு... அது எவ்வளவு உயர்ந்தது... புனிதமானதுன்னு உனக்கே தெரியும்! அப்படித் தெரிஞ்சிருந்தும் இப்படி ஒரு கேள்விய நீ ஏன் கேட்டேன்னு எனக்குத் தெரியலை... நிஜமாவே மனசுக்கு ரொம்பக் கஷ்டமா இருக்கு!

"சரி... எனக்கு வேற பொண்ணு வேணாம்... என் சவி மட்டும் போதும்.. உன் சஞ்சலத்துக்கு இன்னியோட ஒரு பெரிய முற்றுப்புள்ளி வைச்சிடணும்.. சரியா?.. ப்ளீஸ்!" கூறிவிட்டு வேகமாக உள்ளே சென்று படுத்து விட்டான்.

அவனுடைய கோபமும், வேதனையும் அவளை வெகுவாய் பாதித்து விட, இதைப் பற்றி சபரீஷிடம் ஏன் பேசினோம் என்று தன்னையே கடிந்து கொண்டாள் சவி.

அந்த நிமிடம், இப்படி ஒரு துணையைப் பெற தான் என்ன தவம் செய்திருக்க வேண்டுமென்ற நிறைவும், பரவசமும், பிரம்மாண்டமாய் எழுந்தன.

நெஞ்சம்... காதலில் ஊஞ்சல் கட்டி ஆடியது.

இதயம் மௌனமாய்... ஆனால் அழுத்தமாய் கீதமிசைத்தது.

"நான் நீயில் வேதும் போதும்...
ஓதிடும் மந்திரம்...
ஒன்றுதான்... ஒன்றுதான்!
ஐ லவ் யூ!"



# 34

அன்றிலிருந்து, நட்புணர்வுடன், உயிர்ப்பிக்கப்பட்ட காதலும் இணைந்து கொள்ள, சபரீஷுடன் இயல்பான அன்யோன்யத்துடன் பழக ஆரம்பித்தாள் சவி.

ஒரு நாள் தலை துவட்டியபடி அவன் மென்மையாகப் பாடிக் கொண்டிருந்தான்.

"லூசுப் பெண்ணே! இந்த லூசுப் பையன் உன் மேல தான் லூசா சுத்தறான்!"

அதைக் கேட்டபடி அறையை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தவள், சட்டென்று நிமிர்ந்தபோது, அவளைப் பார்த்துக் குறும்புடன் ஒற்றைக் கண் சிமிட்டிச் சிரித்தான் சபரீஷ்.

அவனுடைய அன்பு மழையில், இனிதாய் நனைந்தது மனது!

"அப்பாடா! ஒரு வழியா நீங்க லூசுப் பையன்ற உண்மையை ஒத்துக்கிட்டீங்க" குறும்புடன் கூறினாள்.

"ம்... அதோட நீயும் லூசுப் பொண்ணுங்கற உண்மையையும் புரிஞ்சிக்கிட்டேன் இல்லை?" கேலியுடன் வந்தது அவன் குரல்.

ஒற்றை விரலைக் காட்டி எச்சரித்தவள், "பாட்டு ஒரு மாதிரி இருந்தாலும் அத எழுதினவர் ஒரு உருப்படியான

காரியம் செஞ்சிருக்கார்! காதலிச்சாலே எல்லாரும் ஓசா மிடுவாங்க அப்படிங்கிற தத்துவத்தை சொல்லியிருக்காரு" கிண்டலாகக் கூறினாள்.

பிறகு இரண்டு வாரம் கழித்து அவளைப் பார்க்க வந்த துரை, அவளிடம் எல்லா விஷயத்தையும் போட்டு உடைத்து விட்டான்.

"சவி... ராது இறந்தப்ப சபரீஷ் என்னை எப்படி எல்லாம் ஆறுதல் படுத்தினான் தெரியுமா? பொண்டாட்டி இறந்துட்டா நாமும் சாகறதுக்கு இது என்ன புது உடன் கட்டை ஏறுற பழக்கமா? புத்தியோட இருன்னு அவ்வளவு திட்டினான்.

"ஆனா இப்ப நீ உடம்பு சரியில்லாம அட்மிட் ஆனவுடனே தானும் செத்துடுவேன்கிறான்... எல்லா சொத்தையும் எங்களைப் பாத்துக்கச் சொல்றான்.. அந்த ஒரு நொடியில அவன் எவ்வளவு உடைஞ்சு போயிட்டான் தெரியுமா? அவனைத் தேத்தறதுக்குள்ளே பெரிய கஷ்டமா விடுச்சி... நானும் செல்வாவும் அவன்கிட்ட இதை சத்தியமா எதிர்பார்க்கலை. உனக்கு சரியாகணும்னு வேண்டிக்கிட்டதைவிட, இவனுக்கு தைரியத்தைக் குடுன்னு தான் பிரார்த்தனை செஞ்சேன்... ஒரு பெரிய இமயமே சரிஞ்சா எப்படி இருக்கும்... அன்னிக்கு அப்படித்தான் உணர்ந்ததா அப்புறமா செல்வா சொன்னான்... பெரிய கனவு மாதிரி இருக்கு... அந்த ரெண்டு மணி நேரத்துல நாங்க எப்படி ஆடிப் போயிட்டோம் தெரியுமா?" என்றான் கண்களில் சிறு வலியுடன்!



எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டபடி அமர்ந்திருந்த சவியின் விழியோரங்கள் நீரில் பளபளத்தன.

அவனைப் பற்றிய சிந்தனை சிறகடிப்பில், சிதறிப் போனது, இதயம்!

மனதிற்குள் எழுதி வைத்த சித்திரமாய் சபரீஷின் உருவமே நிறைந்திருக்க, அவனை நினைத்தாலே நெஞ்சம் உருகிக் கசிந்தது.

* * *

அன்று அவன் வருவதற்காக மனம் ஏங்கிக் காத்திருக்க, விழிகள் வாசலிலேயே பதிந்திருந்தன.

காதலாகிக் கசிந்துருகி அவள் காத்திருக்க, சபரீஷிடமிருந்து போன் மட்டுமே வந்தது.

அவன் பேச ஆரம்பித்ததுமே, அந்தத் தோட்டத்து மலர்களெல்லாம் சட்டென்று இதழ் விரித்து மணம் பரப்பியது போல் ஒரு உணர்வு.

"சவி! நம்ம ஹோட்டல் ஒண்ணு டெல்லியிலயும் ஆரம்பிக்கணும்னு ப்ளான் போட்டிருந்தோம் இல்லையா! அதுக்கான ப்ளான் அப்ருவல் ஆகியிருக்கு... லோனும் சாங்ஷன் ஆகிற மாதிரி இருக்கு... என் பெயரிலே எல்லா டாகுமெண்ட்ஸும் இருக்கறதால நான் நாளைக்கு விடிகாலையில டெல்லி கிளம்பணும். அதனால இன்னிக்கு நைட்டே மதுரைக்குப் போறேன்.

"என்னோட திங்க்ஸ் எல்லாம் நான் வந்து பேக் பண்ணிக்கிறேன்... உனக்குத் துணையா யாரை வச்சிட்டுப்

போறதுன்னுதான் யோசிக்கிறேன்.. உங்க மாமாவை வரச் சொல்லலாமா?" அக்கறையாகக் கேட்டான்.

"வேணாம் சபரீஷ்... அன்னம்மாவை நைட் வந்து படுத்துக்கச் சொல்றேன்... ஏதாவது ப்ராப்ளம்னா, செல்வாவையோ இல்லை துரையையோ காண்டாக்ட் பண்ணிக்கறேன்... நீங்க தைரியமாப் போயிட்டு வாங்க..." என்றாள் சவி.

"ம்... சரி... நான் வீட்டுக்கு வரேன்" என்றபடி போனை வைத்தவனுக்குள், இங்கு அவளை எப்படித் தனியே விட்டுச் செல்வதென்ற யோசனை!

அவன் வீட்டிற்கு வந்தபோது, அவனுடைய உடைகளையும், ட்ராவல் பேக்கையும் தயாராக அடுக்கி வைத்திருந்தாள் அவள்.

அதைக் கண்டவுடன், "ஏன் சவி.. ஸ்ட்ரெயின் பண்ணிக்கறே? உன்னைத் தான் டாக்டர் ஒரு மாசம் கம்ப்ளீட் ரெஸ்டுல இருக்கணும்னு சொல்லியிருக்காங்க இல்லை.. சொன்ன பேச்சையே கேக்க மாட்டியா?" செல்லமாகக் கடிந்தபடி எல்லாவற்றையும் சரி பார்த்தான்.

அவள், ஒன்றும் கூறாமல் அவனையே கனிவுடன் நோக்கியபடி நின்றிருந்தாள்.

"என்னால முடிஞ்ச சின்ன ஹெல்ப் சபரீஷ்... ஒரு மனைவின்னு எதையுமே நான் உங்களுக்குச் செய்யறதில்லைன்னு மனசு ரொம்ப கில்ட்டியா இருக்கு... தடுக்காதீங்களேன் ப்ளீஸ்" என்றபடி அவனுக்கு உதவி செய்தாள்.



ஒரு கணம் அதிகமாகவே அவளைக் கூர்ந்தவன், உடனே குளித்து முடித்து சாப்பிட்டுவிட்டு, ஆயிரம் அறிவுரைகளுடன் அவளிடம் விடை பெற்றான்.

பிறகு "அன்னம்மா! சவியைப் பத்திரமா பாத்துக்கங்க... ஒரு செக்யூரிட்டிக்குச் சொல்லியிருக்கேன்... சாயந்தரம் வந்திடுவாங்க... டிரைவரையும் வரச் சொல்லியிருக்கேன்.. நம்ம கெஸ்ட் ஹவுசிலே படுத்துப்பான்.. ஏதாவது எமர்ஜென்சின்னா உடனே கூப்பிட வசதியா இருக்கும்..." என்றான்.

அருகிலேயே நின்று எல்லாவற்றையும் கேட்டிருந்த சவி, "என்ன சபரீஷ் இது? எதுக்காக இவ்வளவு ஏற்பாடு? நான் நல்லாத்தானே இருக்கேன்... எனக்கு எந்தப் பிரச்னையும் வராது... முதல்லே இந்த டென்ஷனை விட்டுட்டு நிம்மதியாப் போய் நல்லபடியா வேலைகளை எல்லாம் முடிச்சிட்டு வாங்க... ஆல் தி பெஸ்ட்!" கூறி விட்டு முறுவலித்தபடி அவனைப் பின்புறம் முதுகில் கைகளை வைத்து, சிறு குழந்தையாய் தள்ளியபடி வாசலுக்கு அழைத்து வந்தாள்.

"ஏய்... என்ன? என்னை வெளியே போன்னு விரட்டறியா?"

கேலியாகக் கேட்டு விட்டு, அவளுடைய கன்னத்தைச் செல்லமாகத் தட்டியவன்,

"சவி... டேக் கேர்... ஏதாவது ப்ரச்னைன்னா உடனே எனக்குக் கால் பண்ணு..." மிருதுவான குரலில் கூறி விட்டு விடைபெற்றான்.

அவன் பிரிந்து சென்றவுடன் சவியின் மனதில் காதல் பாரம் கனமாய்ப் பரவியது.

* * *

அன்றிரவு உறக்கமே வராமல் தவித்துத் தனித்திருந்த போது, அவனுடைய நெஞ்சோரம் அவனுடைய ஞாபக சஞ்சாரங்கள் அன்று அதிகமாய்...!

பிறகு வந்த நாட்களில் அவன் தினமும் பலமுறை போன் செய்து பேச, அவன் குரல் ஒன்றே பெரும் துணை யாய்... ஆறுதலாய்!

ஊரிலிருந்து தினமும் போன் செய்து பேசிய பாட்டியும், மாமாவை அனுப்பவாவென்று கேட்டபோது, மறுத்து விட்டாள் அவள்!

அந்த ஞாயிறு, கேதரினும் காஞ்சனாவும் அவளிடம் பேசினார்கள்.

''சவி... சபரீஷ் எப்படி இருக்காரு? உன் மனசை நீ இன்னும் மாத்திக்கலையா? எப்ப எனக்கு ஒரு பேரக் குழந்தையைப் பெத்துத் தரப் போறே?'' ஆதங்கத்துடன் கேட்டார் காஞ்சனா.

சிறிது நேரம் மௌனித்தவள் ''சித்தி! என்னவோ பய மாயிருக்கு.. இங்கயும் கவுன்சிலிங் போனேன். ட்ரீட் மெண்ட் முடியற நேரத்துலே இப்படி ஆயிடுச்சி... மனசுக் குள்ளே சபரீஷ் மேல இருக்கற மென்மையான காதல் அப்படியேதான் இருக்கு.. ஆனா கணவன் மனைவின்னு யோசிக்கிறப்ப என்னை அறியாம ஏதாவது வய லெண்ட்டா நான் ரியாக்ட் பண்ணிடுவேனோன்னு



ரொம்பத் தவிப்பா இருக்கு...'' கூறும்போதே, மன மெங்கும் அவன் பிம்பம் மூச்சுக்காற்றாய் நிரம்பியிருப்பது புரிந்தது.

தன் உணர்வுகளை சிறிது நாட்களாக யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் அடக்கி வைத்தவள், பட் டென்று கொட்டி விட்டாள்.

''அதெல்லாம் பயப்படக்கூடாது சவி... பருந்தோட நிழல் தீண்டினாலே பயந்து போய் தாயின் சிறகுகளுக் குள்ளே பதுங்கிட, நாம் கோழிக் குஞ்சுகள் இல்லை... ஆபத்துன்னு தெரிஞ்சதுமே எதிர்த்துப் போராடாம, ஓட்டுக்குள்ளே தலையைப் புதைச்சிக்கற நத்தையும் இல்லை.

''எதிர் வரும் ப்ரச்னைகள் நம்மைப் பந்தாடறதுக்கு முன்னாடி அதைப் பந்தாடத் துணியற ஆறறிவு மனு ஷங்க நாம எல்லாரும்...!

''சபரீஷ் ஒரு ஜெம் ஆஃப் எ பர்ஸன்... அவர் உனக்கு நல்லதே செய்வாருன்னு நினைச்சிக்க... எந்த கஷ்டத் துலயும் உன்னை வருத்தப்பட விடமாட்டாருங்கிற உறுதிய மனசுல வளர்த்துக்க... அவர் இல்லாம நீயில்லைன்னு உருப் போட்டுட்டே இரு...!

''எண்ணங்கள் எப்போதுமே வலிமையானவை! நாம எப்படி ஆகணும்னு நினைக்கிறோமோ அப்படி நிச்சயமா ஆகறதுக்கு நம்மைத் தயார்ப்படுத்தற வல்லமை கொண்டதே நம்மோட எண்ணங்கள் தான்!

''நம்பிக்கைகளுக்கும் சக்தி அதிகம்... பழைய கொடுமையான நினைவுகளை மறந்து இயல்பா புது

வாழ்க்கையைத் தொடங்க என்னாலயும் முடியும்னு ஒரு தீர்மானத்தோட இரு... மந்திரம் மாதிரி உனக்குள்ளே உச்சரிச்சிட்டே இருந்து பாரு... நான் மாறுவேன்... மாறுவேன்னு! நிச்சயமா உன் மனசும் மாறும்டா...!

''ஒவ்வொரு வலியும், பெரும் சாதனையை தன் கூட சேர்த்து சுமந்திருக்கிறதுங்கிறதை புரிஞ்சிக்கிட்டா எல்லாப் பிரச்னைகளையும் சுலபமா எதிர்கொள்ளலாம்...'' தெளிவும் தீர்மானமுமாகக் கூறினார்.

அவருடன் பேசிய பிறகு, மனதிற்குள் பெரும் தைரியமும் நம்பிக்கையும் கைவசப்பட்டது போலிருந்தது.

அடிக்கடி, துரையும் செல்வாவும் வந்து அவளைப் பார்த்துச் சென்றனர்.

''தினமும் உங்களை வந்து பார்த்து நீங்க எப்படி இருக்கீங்கன்னு டெய்லி ரிப்போர்ட் தரணும்னு பாஸோட உத்தரவு மேடம்'' என்று கேலி செய்தான் துரை.

இந்த ஒரு வாரப் பிரிவு, அவனுடைய அருகாமையையும் அன்பையும் வேண்ட, நெஞ்சிற்குள் புதிதாய் தெரிந்த ஏக்கமும் தாகமும் உள்ளுக்குள்ளேயே ஒளிந்திருந்தன.

துரையுடன் வரும் இனியாவைப் பார்த்தபோது, தானும் அவளைப் போன்ற ஒரு மழலையை மடியில் ஏந்த வேண்டுமென்ற வேகம் வந்தது.

மழலைகள்! பூமியை அழகாக்கவும், மனித வாழ்க்கையை ரம்மியமாக்கவும் ஜனித்த அற்புதப் பிறவிகளென்று தோன்றுவதாய்!



ஒரு பெண்ணின் முழுப் பரிணாமமே, ஒரு மழலையை மடியில் ஏந்தி, தாய்மையின் பரிபூரணத்துவத்தை உணர்வதுதானோவென்ற கேள்வி வந்தது.

## 35

ஒரு வாரம், சபரீஷை எதிர்பார்த்து ஒரு விதக் காத்திருப்புடன் சென்றது.

அன்றும், எப்போதும் போல் அவனிடமிருந்து போன் வந்தது.

''சவி... எப்படி இருக்கே... நான் இல்லாம ஜாலியா இருக்கியா?'' கேலியாக வினவியது அவன் குரல்!

''ம்... இல்லை! ரொம்பக் கஷ்டமா இருக்கு!''

அவள் தவிப்புடன் கூறியபோது ஆழ்ந்த மூச்சொன்று அவனிடமிருந்து சீறலாய் வெளிப்படுவது கேட்டது.

''ஓ! நான நாளைக்குக் காலையில ஃப்ளைட்டில் கிளம்பி மதுரைக்கு வந்துடுவேன்... மதியானம் அங்கே உன் முன்னாடி இருப்பேன்.. சரியா?''

''தேங்க் யூ..''

அளவிட முடியாத சந்தோஷத்துடன் கூறிய சவி, உடனே செல்லை 'இச்' என்று செல்லமாக முத்தமிட்டபோது, நேச உணர்வுகளைத் திறக்கும் சாவியாய்... அந்த ஒலி இதமாக அவனுள் உட்புகுந்தது.

"சவி.. நான் நேரில வரேன்... நீ கொடுத்த பரிசுக்கான பதிலை நேராவே வந்து தரேன்..." ஆழ்ந்த குரலில் கூறினான் அவன்.

அவனுடைய செவி மடலை சிலிர்க்கச் செய்து, முகத்தில் வெட்கத்தை மலரச் செய்தன, அவனுடைய வார்த்தைகள்!

* * *

மறுநாள் அவன் வருகையை எதிர்பார்த்து அவனுக்குப் பிடித்த விதமாகத் தானே சமைத்து எடுத்து வைத்தாள்.

மதியம், அழகாக அலங்கரித்தபடி அவள் காத்திருந்த போது, ஏனோ அவன் வரவில்லை.

திடீரென்று போன் அடிக்க, எடுத்தாள்.

"சவி... நான் நேரா அம்பா சமுத்திரத்துக்கு வந்திட்டேன்... ஒரு அவசரமான வேலை... அதனால வர வேண்டியதாப் போச்சு... நைட் எப்படியாவது கிளம்பி வந்திடறேன்... ஓகே..." என்று வைத்தான்.

சட்டென்று மனதிலிருந்த உற்சாகமெல்லாம் வடிந்துவிட, ஓய்ந்து போய் அமர்ந்தபோது அப்படி என்ன முக்கியமான வேலை என்று மனதில் கேள்வி எழுந்தது.

சிட்டுக் குருவியின் சிறகுகளை இரவல் வாங்கி, உடனே அவனிடம் செல்ல வேகம் வந்தது.

மெலிதான வருத்தத்துடன் வேறு உடைக்கு மாறியவள், மனமின்றி சாப்பிட்டுவிட்டுப் படுக்கச் சென்றபோது, திரும்பவும் போன் ஒலித்தது.



"ஹலோ... என்ன சபரீஷ்!... அப்படி என்ன முக்கியமான வேலை?" என்றாள் எடுத்தவுடனேயே!

"நான் மாமா பேசறேன்டா" என்ற சண்முகத்தின் குரல், பெரிதும் ஓய்ந்து தெரிந்தது.

"மாமா... நீங்களா! எப்படி இருக்கீங்க! சாரி... நான் சபரீஷ்னு நினைச்சிட்டேன்.. பாட்டி, மாமி எல்லாரும் நல்லாருக்காங்களா?"

"சபரீஷ் இப்பதாம்மா இங்கே எல்லாப் ப்ரச்னையையும் சரி பண்ணிட்டு வீட்டுக்குப் போறாரு... உன்னைப் பத்தியே தான் கவலையாப் பேசிட்டிருந்தாரு.."

"என்ன ப்ரச்னை மாமா? யாருக்கு... என்னாச்சு?" பதைப்புடன் கேட்டாள்.

"ஒண்ணுமில்லை சவி.. என் நண்பர் ஜம்புகேச நாடார் இருக்காருல்லையா? அவருக்கு நான் ஒரு ஜாமீன் கையெழுத்துப் போட்டுட்டேன்... அவரோட சொத்தெல்லாம் ஏலத்துக்கு வந்துடுச்சி... பாக்கி கடனுக்கு நம்ம பேக்டரிய ஜப்தி பண்ண ஆர்டர் போட்டுட்டாங்க... திடீர்னு அவ்வளவு பணத்துக்கு எங்கே போறது? தவிச்சிப் போயிட்டேன்..

"உன் பாட்டிதான் நேத்து உங்க மாமியார் வள்ளி கிட்ட புலம்பி இருப்பாங்க போலிருக்கு... அவங்க உடனே சபரீஷுக்கு சொல்லி வரவழைச்சிட்டாங்க... அவர்தான் உடனே பணத்தை ஏற்பாடு பண்ணி கட்டினாரு... அவருக்கு எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியலைடா... ஒரு நிமிஷம் என் உலகமே இருண்டு போன மாதிரி

ஆயிடுச்சி... இரு... பாட்டிகிட்டப் பேசு!" ரிசீவரைக் கொடுத்தார்.

"சவிக்குட்டி... மாப்பிள்ளை தான்டா ஆபத்பாந்தவனா வந்து நம்ம கஷ்டத்துக்கு உதவி பண்ணினார்... மாமா அதுக்குப் பதிலா இந்த வீட்டை உன் பெயருக்கு எழுத ஏற்பாடு பண்ணிட்டான்... உடனே அவனுக்கு விக்க முடியாதில்லை... அதான்! என்னவோ கஷ்டம் போ... நீ எப்படிடா இருக்கே?" என்று விசாரித்தார்.

"நான் நல்லாருக்கேன் பாட்டி... என் வீட்டை எல்லாம் மாத்திக்கிட்டு... இவரே அதை விரும்ப மாட்டார்... அது உங்க பெயரிலேயே இருக்கட்டும்... மாமியை விசாரிச் சேன்னு சொல்லுங்க..." என்று விசாரித்துவிட்டு வைத்தாள்.

மாமா கூறியதைக் கேட்டதில், மனம் நிறைந்திருந்தது.

தன்னிடம் கூடச் சொல்லாமல், தன் குடும்பத்திற்கு அவசரத்திற்கு உதவி இருப்பவனை நினைத்தால், நெஞ்சம் நன்றியுணர்வில் கசிந்தது.

தேய்ந்த நிலவாகியிருந்த வாழ்க்கை, அந்த நொடியே வளர்ந்து முழுமையாய் பிரகாசிப்பது போல் ஒரு உணர்வு.

உடனே அவனுடைய செல்லுக்கு தொடர்பு கொண்டாள் அவள்.

முதல் ரிங்கிலேயே எடுத்தவன், "சாரி சவி... முக்கியமான வேலையா இருந்தேனா, அதான் ரொம்ப நேரம் பேச முடியலை... இன்னும் ஒரு மணி நேரத்திலே கிளம்பிடுவேன்... நைட் அங்கே வந்திடுவேன்... நீ எப்படி இருக்கே?..." மென்மையாகக் கேட்டான்.



"ம்... தேங்க்ஸ் சபரீஷ்... தேங்க் யூ சோ மச்! பாட்டியும் மாமாவும் எல்லாம் சொன்னாங்க... இதுக்கு எப்படி நன்றி சொல்லப் போறேன்.. தெரியலை! என்னைப் பெரிய கடன்காரியா ஆக்கிட்டு வரீங்க!" நெகிழ்ச்சியுடன் நிறுத்தினாள்.

"ஏய்... உன் குடும்பம் வேற என் குடும்பம் வேறயா? நாம எல்லாரும் ஒண்ணுதானே? அன்னம்மா, கூட இருக்காங்க இல்லை?" அக்கறையாக விசாரித்தான்.

"ம்... நீங்க சீக்கிரம் வாங்க... அங்கே அத்தை மாமாவை விசாரிச்சதா சொல்லுங்க! ஒரு நிமிஷம்.. அத்தைகிட்டே கொடுங்க..."

பிறகு வள்ளியிடம் பேசி நன்றி கூறிவிட்டு வைத்தவளுக்குள், சபரீஷின் நினைவுகள் அதிகமாய்..!

தன்னை உயிராய் விரும்பி... வருடக் கணக்காய் காத்திருந்து.. தன்னுடைய உணர்வுகளுக்கு மதிப்பு கொடுத்து... உடல்நிலை சரியில்லாதிருந்தபோது ஒரு தாயுமானவனாய் கவனித்து... தன் குடும்பத்திற்கு ஒரு கஷ்டம் என்றாலும் ஓடிச் சென்று உதவி... அவன் செய்கைகளுக்கெல்லாம் தான் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம் என்ற குற்ற உணர்வு, விசுவரூபமெடுத்து வதைத்தது.

அவனை நாடித் தவம் புரிந்து இன்னும் அதிகமாக நேசிக்க ஆரம்பித்தது இதயம்!

* * *

அன்று முன்னிரவிலேயே பெய்ய ஆரம்பித்த மழை, நிற்காமல் இடி மின்னலின் துணையுடன் இன்னும் அதிகமாகியது.

ஜன்னல் வழியே பார்த்தபோது, இருட்டில் பெரிய அரக்கன் ஒருவன் படுத்துறங்குவதைப் போல், தொலை தூர மலைத் தொடர்கள் பயமுறுத்தின.

'உஸ்'ஸென்ற காற்றும் பலமாக ஒலித்த இடிச் சத்தமும், வான் திரையைக் கிழித்துக் கொண்டு உக்ரமாகப் பெய்த மழையும், அவளைப் பலமிழக்கச் செய்தன.

அன்னம்மா ஹாலில் படுத்து உறங்க, சவிக்குத்தான் உறக்கமே வரவில்லை.

ஆனால் இடியுடன் கூடிய மழை, இன்று அவளிடம் முன்பு போல் பெரிதாய் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை...

சபரீஷைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலை மட்டுமே, மகரந்தங்களை தன் மடியில் சுமக்கின்ற மலர்களைப் போல், மனம் சுமந்திருந்தது.

சபரீஷின் கார் வேகமாக மலையேறிக் கொண்டிருந்தது...

டிரைவர் காரை ஓட்ட, சவியைப் பார்க்கப் போகின்ற ஆவல் கலந்த சுகமான எதிர்பார்ப்புடன் பின்புறம் சாய்ந்து கண் மூடி இருந்தான் சபரீஷ்.

நேரமாக ஆக, மழையின் சீற்றம் அதிகமாக ஆரம்பித்தது.



இடியும் மின்னலும் அந்த பிராந்தியத்தையே ஆக்கிரமிக்க.. சுற்றிலும் விரவித் தெரிந்த கடுமை இருட்டு, பயமுறுத்தச் செய்வதாய்!

வேகமாகச் சென்று கொண்டிருந்த கார், ஒரு திருப்பத்தில் திரும்பி எதிரில் வந்த லாரிக்கு வழி விட விரும்பி ஒதுங்க, நிலை தடுமாறி தலைகுப்புறப் பள்ளத்தில் வீழ்ந்தது.

## 36

எங்கிருந்தோ, ஒரு இரவுப் பறவையின் ஒலி அந்த நிமிடத்து அமைதியைச் சிறகடிக்க... பதறி விழித்தாள் சவி.

நெஞ்சம் பயத்தில் குலுங்க, படபடப்புடன் எழுந்து அமர்ந்தபோதுதான், அது கனவென்று புரிவதாய்!

வெளியே மழை நின்றிருக்க.. திகிலுடன் சபரீஷிற்கு என்னவாகி இருக்குமோ என்ற பயமும், சேர, அவனுடைய செல்லுக்கு அவசரமாகத் தொடர்பு கொண்டாள்.

மனம் சில்லு சில்லாய்ச் சிதறி, உள்ளிருந்து சப்தமின்றி மௌனமாய் அழ ஆரம்பித்தது.

கண்ணீர் கலங்கலாய் கண்களை மறைக்கக் காத்திருந்தபோது, எதிர் முனையில் உடனே செல் அணைக்கப்பட்டது.

பதைப்புடன் அவள் எழுந்தபோது, அவளுடைய அறைக் கதவு மெதுவாகத் திறக்கப்பட, அங்கு புன்னகையுடன் சபரீஷ் நின்றிருந்தான்.

அவனைக் கண்டதும், உணர்வுகள் அவிழ்த்து விட்ட கன்றுக் குட்டியாய் துள்ளின.

அவன் வந்த பிறகு கால்கள் தன்னை மறந்து விண்ணில் பறந்தன.

பூக்கள் மலர்வதை எவரும் அறியாததைப் போல், அவள் மனதில் மலர்ந்திருந்த மாற்றத்தையும் சபரீஷ் அறியவில்லை.

உடனே ஓடிச் சென்று "சபரீஷ்..." என்றபடி அவனை அணைத்துக் கொண்டு விம்ம ஆரம்பித்தாள் அவள்.

"சவி... என்னாச்சு... உடம்பு சரியில்லையா?"

பதறிப் போய் கேட்டவனிடம், திக்கித் திணறி தன் கனவைப் பற்றி அவள் கூறியபோது அவனுக்குள்ளே பெரும் திகைப்பு!

பழைய தீக் கனவுகளின் பாதிப்பின்றி, சபரீஷின் நினைவுகள் மட்டுமே ஆழ்மன வெளியில் புதைந்திருப்பது அவனுக்கே சிலிர்ப்பூட்டுவதாய்!

சபரீஷும் பிரமிப்புடன் அவளை நோக்கினான்.

"அப்போ... அந்தப் பழைய கனவு... வரலையா?... ரொம்ப சந்தோஷமா இருக்கு சவி! அதை நீ கொஞ்சம் கொஞ்சமா மறக்க ஆரம்பிச்சிருக்கேன்னு நினைக்கி



றேன்" என்றான், அவளுடைய முகத்தை இரு கைகளிலும் ஏந்தியபடி!

இளவேனிற்காலத் தென்றலாய், அவன் பார்வை அவளைச் சுகமாய் வருடியது.

அப்படியே அந்தக் கைகளைப் பிடித்து அவள் முத்தமிட்டபோது, மெல்ல விடுவித்தவன், அவள் கன்னத்தை செல்லமாகத் தட்டி விட்டுக் குளிக்கச் சென்றான்.

பிறகு, உடை மாற்றிக் கொண்டு ட்ரெஸ்ஸிங் டேபிளின் முன் நின்று அவன் தலையை வார ஆரம்பித்த போதுதான், கண்ணாடி வழியாக, பின்புறம் சவி வந்து அருகில் நிற்பது தெரிந்தது.

கம்பனும், பைரனும் இணைந்து உருவாக்கிய இரு மொழிக் கவிதையாய், அவள் விழிகளில் காதலும், தாபமும் கசிந்தன.

அவன் பெரும் அலைப்புறுதலுடன் ஒற்றைப் புருவம் உயர்த்தி யோசிக்கும்போதே, அவளுடைய கரங்கள் அவன் இடுப்பைச் சுற்றி மென்மையாகத் தழுவின.

சவியின் முகம் பின்புறம் தோள் வளைவில் பதிய, அவளுடைய சுவாசச் சீறலால் இதயம் குறுகுறுத்தது.

சபரீஷின் கைகள், ஒரு நிமிடம் அசைவற்று நின்றன.

பிறகு அவள் கைகளை விலக்கி மெதுவாகத் திரும்பியவன், "சவி... நீ என்ன செய்யறேன்னு புரிஞ்சுதான் செய்யறியா?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

"ம்... ஆமாம்!"

"எதையுமே ஆரம்பிச்சு வச்சிட்டா. அதுக்கு ஒரு முடிவும் இருக்கும்... தெரியுமா?"

"தெரியும்..!"

"தெரிஞ்சும் ஏன் சவி...? நீ உண்மையாவே தான் சொல்றியா?"

"ஆமாம்...!"

"நோ! அவசரப்பட்டு முடிவெடுத்துட்டு அப்புறம் வீண் குழப்பங்களுக்கும் சஞ்சலங்களுக்கும் ஆளாகக் கூடாது... பின்னாடி நீ வருத்தப்படறது எனக்குப் பிடிக்காது."

"நான் வருத்தப்பட மாட்டேன் சபரீஷ்!" உறுதியாக வந்தது அவள் குரல்!

அப்போதும் அவனிடம் அசைவில்லை... அவன் கண்களில் பெரும் போராட்டம் தெரிந்தது!

மெதுவாக நிமிர்ந்தவள், "ஆச்சர்யமா இருக்கு சபரீஷ்... பயமாக் கூட...! நீங்க என்னை விரும்பலையா? என் ஹஸ்பெண்ட் நீங்க...! இவ்வளவு கேள்வி கேக்கறீங்க... யோசிக்கறீங்க...?" கண்களில் ஒருவித வலியுடன் கேட்டாள்.

கைகளைக் கட்டியபடி அவளையே ஒரு விரக்திப் புன்னகையுடன் ஊடுருவியவன், ஏனோ மௌனமாகவே இருந்தான்...!



'இன்பத்தில் பிறந்து... துன்பத்தில் தொடர்வதோ காதல்' என்று அவனுக்குள் நெருடலாய் ஒரு கேள்வி எழுந்தது- தவிப்புடன் கண்களை இறுக மூடினாள்.

எல்லாச் செயல்களையும் நீயே செய்து விடு என்று ஆணையிடுவது போல் செல்லமாய் சிணுங்கியபடிக் கண்மூடித் தவித்திருக்கும் அவளைக் கண்டபோது சபரீஷிற்கு கலவியின் இன்பம் புரிவதாய்!

ஆனால், இதுவரை கடந்த வழி முழுவதும் உணர்ந்த நேசமில்லா காதல் அடிச்சுவடுகளும், அவளைக் காயப் படுத்தி விடக் கூடாதென்ற பெரும் எச்சரிக்கை உணர்வும், அவனை அச்சுறுத்தி மவுனித்திருக்கச் செய்தன.

## 37

சபரீசுடைய மௌனமும், பொறுமையும் அவளுக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த, உயிரினில்... உணர்வினில் கலந்தது காதல்!

அந்த நிமிடம் மரித்தாலும் அவன் இதயத்தில் துளியாகவாவது விழுந்து மரிக்க வேண்டுமென்ற வேகம் அவளிடம்...!

சட்டென்று அவனிடம் கேட்டு விட்டாள்!

"எப்பவுமே விரும்பினதை வைராக்கியமா அடையறது தான் உங்க குணம்னு எனக்குத் தெரியும் சபரீஷ்... நானே சரிங்கறேன்... அப்புறம் ஏன் இப்படி...?" தவிப்புடன் கேட்டாள் சவி.

இது வரை தரிசாக உணர்ந்த மன வனத்தில், காதல் ஜனித்து வீரியமாய் உயிர்த்தெழ, அவளை இதயப்பூவாய் கொண்டது மனது!

ஒரு பெருமூச்சுடன், "ஹூம்... இந்த உலகத்துல இருக்கிற எல்லாத்தையும் விட அளவுக்கதிகமா... நான் உன்னை விரும்பறேன் கண்ணம்மா! அதான் இவ்வளவு யோசிக்கிறேன்... என்னையறியாம உன்னைக் காயப்படுத்திடப் போறேனோன்னு பயப்படறேன்... உருகிப் போறேன்... ஆனா உனக்காக நான்... எனக்குள்ளே எவ்வளவு ஏங்கித் தவிக்கிறேன்னு எனக்குத் தான் தெரியும்!" விழிகளில் பெரும் அலைப்புறுதலுடன் கூறினான்.

உடனே விலகிச் சென்று, ஒரு கணம் கண்களை இறுக மூடி உறைந்து நின்றவனையே, பார்த்தவளின் விழியோரங்கள் மெல்லக் கசிந்தன.

"அப்புறம் ஏன் இவ்வளவு தயக்கம் சபரீஷ்...?" மயிலிறகாய் வருடுகின்ற குரலில் கேட்டாள்.

மனதில் புதிய எதிர்பார்ப்பு மலர ஆரம்பிக்க, எதிலும் உணர்வு பூர்வமாக விலங்கிட்டுக் கொள்ளத் தயங்கிய மனம் தவித்தது.

சட்டென்று கண் விழித்தவன், "அப்போ.. உனக்கு முழு சம்மதமா சவி...? என்கிட்ட கொஞ்சம் கூட பயமோ... அருவெறுப்போ இல்லை... அப்படித்தானே!"

"இல்லை...!" உடனே வந்தது பதில்.



"ப்ராமிஸ்...?" தவிப்புடன் கேட்டான் சபரீஷ்.

"ப்ராமிஸ்..." உறுதியுடன் வந்தது அவள் குரல்!

அவன் மனதிற்குள் அதி அற்புதமான உணர்வொன்று ரம்யமாய் மலர்ந்தது.

"சவி... அப்புறம் என்னாலே என்னைக் கண்ட்ரோல் பண்ணிக்க முடியாது... என்னை ரொம்ப டெம்ப்ட் பண்ணாதே... வேண்டாம்... நான் இன்னிக்கு என் ரூமிலயே படுத்துக்கறேன்..."

வேகமாகத் திரும்பியவனை, சவியின் விரல்கள் செல்லமாகத் தடுத்தன.

"சவி... ப்ளீஸ்! நீ கஷ்டப்பட்டா என்னாலத் தாங்க முடியாதுடா... நீ எப்பவும் சந்தோஷமா இருக்கணும்..." எங்கோ பார்த்தபடி மெதுவாகக் கூறினான்.

ஒரு கம்பீரமான போர் வீரனை... மன உறுதி கொண்டவனை நினைவுபடுத்தியது... அவன் நின்றிருந்த தோற்றம்!

"இதுதான் எனக்கு சந்தோஷம்னா நம்புவீங்களா சபரீஷ்... உங்களோட இணையறதை தவிர வேற சந்தோஷம் எனக்கு என்ன இருக்க முடியும்...?"

அவள் கேட்டபோது, எந்த ஒரு பொறுமையும், காத்திருத்தலும், அதற்குண்டான வெகுமதியை நிச்சயம் ஒரு நாள் பரிசாக அடையும் என்பது, சபரீஷுக்கு இன்று புரிந்தது.

அந்த நிமிடம் அவன் முகத்தில்... கோடி சூரியப் பிரகாசம் தெரிவதாய்...! லட்சம் ஞாபகப் பூக்கள் மனதில் மலர்ந்து மணம் பரப்ப ஆரம்பித்தன!

வேறு வார்த்தைகளே தேவையின்றி, இதமாய் சிரித்த அவள் விழிகளில், ஒரு வித மயக்கமும் கிளர்ச்சியும் பரவின.

அவன் முகத்தில், ஒரு ஆனந்த வெளிச்சம் சட்டென்று சுடர் விட்டு எரிந்தது.

அன்பெனும் யாழ் ஆழ்மனதில் மீட்டப்பட, அமரத் துவம் வாய்ந்த இசையாய், நெஞ்சிற்குள் காதல் சிலிர்ப் பாய் பரவியது.

காற்றைக் கிழித்து வந்து ஊடுருவிய அவன் விழிகள், அவளுக்குள் மோகத் தீப்பொறியை ஏற்றின.

இதுவரை இல்லற ஓவியத்திற்குள் கருப்பொருளாய் சிறைப்பட விரும்பாத மனது, இன்று அவனிடம் தாபத் துடன் விழைந்தது.

வேகமாக அவனருகில் வந்த சவியின் இதழ்கள், சபரீஷின் கன்னத்தில் அழுத்தமாகப் பதிந்தன...

மறு கணமே, மழைச்சாரலின் இனிய வருடல் அவனை சிலிர்ப்புடன் நனைக்க ஆரம்பிக்க, காதல் தேன் மழை, இதயம் முழுவதும் சாரலாய்ப் பரவியது.

அவள் அணைத்து இதழ் பதித்தவுடன், தேவலோகத் தின் கதவுகள் தாழ்திறந்தாற்போல்!



அதற்கு மேல், அவனால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை.

மறு கணமே, அவனுடைய உதடுகள் அவளின் இதழ்களோடு காதல் கூட்டணி அமைத்தன.

அந்த முதல் முத்தத்தின் கதகதப்பான இனிய சிலிர்ப் பில் அவனுடைய சித்தம் சிதைந்து போனது.

''இதழ்களுக்கும், பற்களுக்கும் இடையே இதமாக இறங்கும் இனிமையான திராட்சை ரசம் போன்றவை உன் முத்தங்கள்!'' என்ற சாலமோனின் வரிகள் உண்மை யாய்...!

அவள் தன் தோள் சேர்ந்ததும்... உலகமே தனக்குள் அடங்கியதைப் போல் ஒரு உணர்வு!

மறு கணமே, ''என் கண்ணம்மா...'' என்று மென்மை யாக முணுமுணுத்தபடி, சவியைத் தன்னுடன் சேர்த்து தாபத்துடன் இன்னும் இறுக அணைத்துக் கொண்டான் சபரீஷ்.

எந்த சிப்பிக்குள் ஜனித்து... என்று சரமாய் கோர்க் கப்பட்டதென்பது தெரியாமலே விளைந்த முத்தைப் போல்... அவன் மனதிலும் விரகதாபமும், காதல் வேட்கையும் இதமாய் விரவிப் பரவின.

மனதிற்குள்... இதமான மழைச் சாரலாய், அவளின் இதய ஓசையும்... இனிமையாய் ஒரு இன்னிசையும், கேட்க ஆரம்பித்தன.

"கன்னத்தில் முத்தமிட்டால் - உள்ளம்தான்
கள்வெறி கொள்ளுதடி!
உன்னைத் தழுவிடிலோ - கண்ணம்மா
உன்மத்தமாகுதடி!
உன் கண்ணில் நீர் வழிந்தால் - என் நெஞ்சில்
உதிரம் கொட்டுதடி!
என் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா
என்னுயிர் நின்னதன்றோ?"